வெளியீடு 29-11-2002 Issued 29-11-2002

46

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஏப்ரல் 18, 2002 – தொகுதி 22 – எண் 1

**Thursday the 18th April, 2002 – Volume 22 – No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George, Chennai - 600 009**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

45/2003

**18-4-2002**

## உள்ளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | .. | iii–vii |
| Governor and Council of Ministers | .. | ix–xii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர் மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | .. | xiii–xvi |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | .. | xvii–xxvii |

**1. வினாக்கள்-விடைகள்—**

| | |
|---|---|
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 1–47 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (ஏழாம் பட்டியல்) | 47–91 |

**2. தகவல் கோரல்—**

| | |
|---|---|
| (அ) சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதி குறித்த ஆணை | 91-92 |
| (ஆ) கரூரில் தி.மு.க. இளைஞர் அணி உறுப்பினர் கோவிந்தராஜன் கொலை | 92 |
| (இ) விவசாயத் தொழிலாளர் நல வாரியம் | 92 |
| (ஈ) பண்ருட்டி தொகுதியில் 54 உயிர்கள் பலியானது | 92-93 |

**3. கவன ஈர்ப்பு—**

| | |
|---|---|
| (அ) புதுடெல்லியில் தேசிய நீர்க் கொள்கை குறித்து தேசிய நீர்வளக் குழு எடுத்த முடிவு | 93–101 |
| (ஆ) குமரி மாவட்டம், அழிக்கால் கிராமத்தைச் சேர்ந்த காணாமல் போன மீனவர்களைத் தேடுதல் | 101–109 |

| | பக்கங்கள் |
|---|---|
| **4. அறிக்கை அளித்தல்—** | |
| மதிப்பீட்டுக் குழு | 109-110 |
| **5. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி** | |
| கோரிக்கை எண் 12—கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | 110-208 |
| *மாண்புமிகு திரு. ப. தனபால் | 110, 127, 132-133, 169-202 |
| திரு. ஆர். சக்ரபாணி | 127-132, 133-135 |
| திரு. என். ரெங்கநாதன் | 134-140 |
| *திரு. க. பாரமலை | 141-147 |
| திரு. எஸ். நடராஜன் | 147-153 |
| திரு. போளூர் வரதன் | 153-160 |
| *திரு. டி. மணி | 160-165 |
| திரு. சோ. இராசேந்திரன் | 165-168 |
| **6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 209-210 |


224970



## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் — திரு. பெ. ஸ்ரீ. ராமமோகன் ராவ்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா :**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

**2. பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் :**

பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறுபாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு மற்றும் சிறைகள்.

**3. நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :**

நிதி, திட்டமிடல், தேர்தல் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள், நிறுவனங்களைப் பதிவு செய்தல் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல்.

**4. கல்வி அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:**

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், விளையாட்டுக்கள் மற்றும் இளைஞர் நலன், தொல்பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

5. சட்டத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் :

சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்.

6. இந்துசமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி :

இந்துசமய மற்றும் அறநிலையங்கள்.

7. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. செ. செம்மலை :

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி, குடும்ப நலன்.

8. உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சி. துரைராஜ் :

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

9. கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ப. தனபால் :

கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.

10. வருவாய்த் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம் :

வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத் தாள் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.



11. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம் :

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

12. சமூக நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி பா. வளர்மதி :

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

13. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி :

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

14. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன் :

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மின் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன் :

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

16. தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி :

தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள், மின்னணுவியல் மற்றும் வணிக வரிகள்.

17. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ப. மோகன் :

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

18. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன் :

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள், கதர் கிராமத் தொழில் வாரியம்.

19. வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் :

வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

20. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் :

கால்நடை பராமரிப்பு.

21. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே. சுதர்சனம் :

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்.

22. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வ.து. நடராஜன் :

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.



23. பால் வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன் :

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

24. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன் :

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு.

25. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம் :

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

26. மீன்வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன் :

மீன்வளம்.

27. சுற்றுலாத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அ. மில்லர் :

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR—THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Selvi J Jayalalithaa:**

   Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare.

2. **Minister for Public Works and Prohibition and Excise** .. **The Hon. Thiru O. Panneerselvam:**

   Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption and Prisons.

3. **Minister for Finance and Information Technology** .. **The Hon. Thiru C. Ponnaiyan:**

   Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on Money lending, Chits and Registration of Companies and Information Technology.

4. **Minister for Education** .. **The Hon. Dr. M. Thambidurai:**

   Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees.

5. **Minister for Law** .. **The Hon. Thiru D. Jayakumar:**

Law and Courts.

6. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru P.C. Ramasamy:**

Hindu Religious and Charitable Endowments.

7. **Minister for Health** .. **The Hon. Thiru S. Semmalai:**

Health, Medical Education and Family Welfare.

8. **Minister for Local Administration** .. **The Hon. Thiru C. Durairaj:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply.

9. **Minister for Co-operation, Food and Civil Supplies and Consumer Protection** .. **The Hon. Thiru P. Dhanabal:**

Co-operation, Food, Civil Supplies, Price Control and Statistics.

10. **Minister for Revenue** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery and Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports.

11. **Minister for Agriculture** .. **The Hon. Thiru R. Jeevanantham:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development.



12. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

13. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru S. Karuppasamy:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-servicemen.

14. **Minister for Transport** .. **The Hon. Thiru R. Viswanathan:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. **Minister for Electricity** .. **The Hon. Thiru Nainar Nagendran:**

Electricity, Non-conventional energy development.

16. **Minister for Industries and Commercial Taxes** .. **The Hon. Thiru Se. Ma. Velusamy:**

Industries, Iron and Steel Control, Mines & Minerals, Electronics and Commercial Taxes.

17. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru P. Mohan:**

Forests & Environment and Pollution Control.

18. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru R. Vilwanathan:**

Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board.

| | | |
|---|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன்,<br>பி.எஸ்.சி., பி.ஜி.எல்., | .. | கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன்,<br>பி.ஏ., பி.எல்., | .. | இணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா,<br>பி.ஏ., பி.ஜி.எல்., | .. | இணைச் செயலாளர் |
| திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார்,<br>எம்.ஏ., பி.ஜி.எல்., | .. | இணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| திருமதி வீ.நா. உமா, பி.ஏ., (விடுப்பு) | .. | குழு அலுவலர் |
| திரு. தி. திருமாவளவன்,<br>பி.எஸ்.சி., பி.எல்., | .. | துணைச் செயலாளர் |
| திரு. வெ. இராமகிருஷ்ணன்,<br>எம்.ஏ., பி.எல்., | .. | பேரவைத் தலைவரின்<br>சிறப்புத் தனிச் செயலர் |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ., | .. | பேரவைத் தலைவரின்<br>சிறப்பு நேர்முக<br>உதவியாளர் |
| திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| திரு. க. சம்பத்ராஜன்,<br>பி.ஏ., பி.ஜி.எல்., | .. | துணைச் செயலாளர் |
| திரு. எம். ஜோபாய்,<br>பி.காம்., பி.ஜி.எல்., | .. | துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம்,<br>பி.எஸ்சி., பி.எல்., | .. | துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., | .. | துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம்,<br>எம்.ஏ., பி.எல்., | .. | துணைச் செயலாளர் |



| | | |
|---|---|---|
| திரு. ஜி. அனீஸ் அகமத்,<br>எம்.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திருமதி சி. கனகவல்லி, டி.சி.பி. | .. | துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| திரு. மா. செல்வராஜ்,<br>பி.எஸ்.சி., பி.எல்., | .. | துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன்,<br>எம்.ஏ., பி.எல்., | .. | குழு அலுவலர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல்., | .. | குழு அலுவலர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ.,<br>(விடுப்பு) | .. | துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ., | .. | குழு அலுவலர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ.,பி.எல்., | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன்,<br>எம்.எஸ்சி., பி.எல்., | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன்,<br>பி.எஸ்.சி., பி.எல்., | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி,<br>எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல்.,<br>(விடுப்பு) | .. | தலைமை நிருபர் |
| திருமதி என். மீனாட்சி,<br>எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம்,<br>எம்.ஏ., பி.எல்., | .. | தலைமை நிருபர் |

| | | |
|---|---|---|
| திரு. தி. உமாபதி, பி.ஏ., | .. | தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல்., | .. | சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ., | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ., | .. | தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல்., | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ., | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்தரமணி, எம்.ஏ., | .. | சார்புச் செயலாளர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ., | .. | சார்புச் செயலாளர் |
| செல்வி தா. இந்திராபாய், பி.ஏ., | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம்., | .. | தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல்., | .. | தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ., | .. | தலைமை நிருபர் |
| செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல்., | .. | சார்புச் செயலாளர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. | ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. | தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. | தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. | திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | .. | அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | .. | வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | .. | புவனகிரி |
| 10. | அழகம்மாள், திருமதி வி. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆகு.சி. | .. | பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | .. | தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | .. | இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | .. | வேடசந்தூர் |
| 20. | ஆறுமுகம், திரு. கே. | .. | செங்கல்பட்டு |

21. ஆறுமுகம், திரு. த. .. திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. .. நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. .. திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. .. திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. .. கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
28. இராமசாமி, திரு. பி.சி. .. மொடக்குறிச்சி
29. இராமச்சந்திரன், திரு. எஸ். .. கலசப்பாக்கம்
30. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
31. இராமச்சந்திரன், திரு. கே.கே. எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்
32. இராமு, திரு. ந. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
33. இராம் பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)
34. இராஜசேகர், திரு. மா. .. ராஜபாளையம் (செ.வ.)
35. இராஜரெத்தினம், திரு. ப. .. பெரம்பலூர் (செ.வ.)
36. இராஜா, திரு. டி.கே. .. திருப்பத்தூர்
37. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. .. பத்மநாபபுரம்
38. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்
39. இலட்சுமணன், திரு. கே.என். .. மயிலாப்பூர்
40. இளவழகன், திரு. ப. .. அரியலூர்
41. இளையகண்ணு, திரு. கா.தி. .. ஏற்காடு (ஆ.வா.)
42. இன்பத் தமிழன், திரு. இரா.தா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்



43. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
44. உசேன், திரு. எஸ்.ஏ.எம். .. திருவல்லிக்கேணி
45. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
46. உமாதேவன், திரு. கே.கே. .. திருப்பத்தூர்
47. உலகரட்சகன், திரு. பி.எஸ். .. செய்யாறு
48. ஏழுமலை, திரு. வெ. .. செஞ்சி
49. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)
50. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
51. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
52. கண்ணன், திரு. ஏ.எஸ். .. பொன்னேரி (செ.வ.)
53. கந்தசாமி, திரு. க.ரா. .. சத்தியமங்கலம்
54. கந்தசாமி, திரு. கா. .. குன்னூர் (செ.வ.)
55. கருணாகரன், திரு. கே.சி. .. சிங்காநல்லூர்
56. கருணாநிதி, திரு. மு. .. சேப்பாக்கம்
57. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
58. கருப்பணன், திரு. கே.சி. .. பவானி
59. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. .. குளத்தூர் (செ.வ.)
60. கலாவதி, திருமதி கு. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
61. கனகதாரா, செல்வி சி. .. பேரணாம்பட்டு (செ.வ.)
62. கனிதா சம்பத், திருமதி எஸ். .. திருப்போரூர் (செ.வ.)
63. காசாம்பு பூமாலை, திருமதி .. சங்கராபுரம்
64. காமராஜ், திரு. மே.ப. .. தாரமங்கலம்
65. கார்த்தி, திரு. மு. .. சேலம்-2

66. காளிமுத்து, டாக்டர் கா. .. திருமங்கலம்
67. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. .. அரூர் (செ.வ.)
68. கிருஷ்ணன், திரு. ஆர். .. அந்தியூர் (செ.வ.)
69. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
70. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஆண்டிமடம்
71. கோதண்டராமன், திரு. ஜி. .. முகையூர்
72. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
73. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். .. விருத்தாசலம்
74. கோவிந்தராஜ், திரு. வெ. .. கிருஷ்ணகிரி
75. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
76. சக்திவேல் முருகன், திரு. எம். .. அம்பாசமுத்திரம்
77. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
78. சசிகலா, திருமதி ஆர். .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
79. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
80. சண்முகம், திரு. சி. .. பூந்தமல்லி
81. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
82. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
83. சந்தானம், திரு. லா. .. உசிலம்பட்டி
84. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். .. இராணிப்பேட்டை
85. சந்திரமோகன், திரு. நா. .. சீர்காழி (செ.வ.)
86. சந்திரன், திரு. வீ. .. சிவகங்கை
87. சம்பத், திரு. எம்.சி. .. நெல்லிக்குப்பம்
88. சரவணன், திரு. துரை. கி. .. சிதம்பரம்



89. சரோஜா, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆவா.)
90. சாமி, திரு. ஆர். .. மேலூர்
91. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
92. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்
93. சிவகாமி, திருமதி வி. .. தாராபுரம் (செ.வ.)
94. சிவசாமி, திரு. கே.கே. .. அருப்புக்கோட்டை
95. சிவசாமி, திரு. சி. .. திருப்பூர்
96. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். .. கரூர்
97. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
98. சிவபெருமாள், திரு. அ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
99. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
100. சின்னசாமி, திரு. மா. .. பழனி (செ.வ.)
101. சீனிவேல், திரு. எஸ்.எம். .. திருப்பரங்குன்றம்
102. சுதர்சனம், திரு. கே. .. கும்மிடிப்பூண்டி
103. சுதர்சனம், திரு. டி. .. திருவள்ளூர்
104. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
105. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்
106. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)
107. சுப்பையா பாண்டியன், திரு. எம். .. கடையநல்லூர்
108. சூரியகலா, திருமதி சி.எம். .. குடியாத்தம்
109. செம்மலை, திரு. செ. .. ஓமலூர்
110. செல்லையா, திரு. வி.ஏ. .. மருங்காபுரி
111. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி

112. செல்வராஜ், திரு. ஏ.கே. .. மேட்டுப்பாளையம்
113. செல்வி முருகேசன், திருமதி .. காங்கேயம்
114. சேகரன், திரு. கே.என். .. திருவெறும்பூர்
115. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
116. சோமசுந்தரம், திரு. வி. .. உத்திரமேரூர்
117. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
118. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. .. திருநாவலூர்
119. தமிழரசன், திரு. செ.கு. .. நன்னிலம் (செ.வ.)
120. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி .. மேல்மலையனூர்
121. தம்பிதுரை, டாக்டர் மு. .. பர்கூர்
122. தவமணி, திரு. க. .. திருவிடைமருதூர்
123. தளவாய் சுந்தரம், திரு. ந. .. கன்னியாகுமரி
124. தனபால், திரு. ப. .. சங்ககிரி (செ.வ.)
125. தாமோதரன், திரு. எஸ். .. விருதுநகர்
126. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
127. தாமோதிரன், திரு. ப.வெ. .. பொங்கலூர்
128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
129. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். .. காஞ்சிபுரம்
130. திருமாவளவன், திரு. இரா. .. மங்களூர் (செ.வ.)
131. துரைமுருகன், திரு. .. காட்பாடி
132. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி
133. தென்னரசு, திரு. கே.எஸ். .. ஈரோடு



134. நடராஜன், திரு. அ. .. குத்தாலம்
135. நடராஜன், திரு. எஸ். .. நாட்ராம்பள்ளி
136. நடராஜன், திரு. பி.கே.டி. .. ஆத்தூர்
137. நடராஜன், திரு. வது. .. இளையான்குடி
138. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி
139. நரசிம்மன், திரு. பி.எம். .. பள்ளிப்பட்டு
140. நளினி மனோகரன், திருமதி .. பேராவூர்
141. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு
142. நீலகண்டன், திரு. ப. .. ஆற்காடு
143. நெப்போலியன், திரு. து. .. வில்லிவாக்கம்
144. பச்சைமால், திரு. தா. .. குளச்சல்
145. பதினெட்டாம்படியான், திரு. க. .. முதுகுளத்தூர்
146. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
147. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
148. பவானி கருணாகரன், திருமதி கே. .. அரக்கோணம் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. கே.எஸ். .. பெருந்துறை
150. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனியப்பன், திரு. பெ. .. மொரப்பூர்
152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்
154. பாண்டுரங்கன், திரு. கே. .. அணைக்கட்டு
155. பாப்பா சுந்தரம், திரு. அ. .. குளித்தலை
156. பாரமலை, திரு. க. .. மானாமதுரை (செ.வ.)

157. பாரிமோகன், திரு. கி. .. தருமபுரி
158. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. கடலாடி
159. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். .. தொண்டாமுத்தூர்
160. பாலசுப்பிரமணியன், திரு. க.க. .. ஸ்ரீரங்கம்
161. பாலபாரதி, செல்வி க. .. திண்டுக்கல்
162. பாலன், திரு. எஸ்.எம். .. லால்குடி
163. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். .. சேரன்மகாதேவி
164. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
165. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
166. பூபதி மாரியப்பன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
167. பெருமாள், திரு. என்.கே. .. விளாத்திக்குளம்
168. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
169. பொன்னம்பலம், திரு. ப. .. சமயநல்லூர் (செ.வ.)
170. பொன்னையன், திரு. சி. .. திருச்செங்கோடு
171. போளூர் வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)
172. மகாலிங்கம், திரு. எஸ். .. அவினாசி (செ.வ.)
173. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)
174. மகேஸ்வரி, திருமதி எஸ். .. கோயம்புத்தூர் மேற்கு
175. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
176. மணி, திரு. டி. .. விளவங்கோடு
177. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
178. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்



179. மலையப்பசாமி, திரு. அ.இரா. .. கபிலர்மலை
180. மல்லிகா சின்னசாமி, திருமதி .. முசிறி
181. மாணிக்கராஜ், திரு. எஸ். .. நாங்குநேரி
182. மில்லர், திரு. அ. .. கூடலூர்
183. முரளிதரன், திரு. கே.வி. .. தளி
184. முருகவேல் ராஜன், திரு. க. .. வந்தவாசி (செ.வ.)
185. முருகேசன், திரு. ஆகு. .. ஆத்தூர்
186. முனுசாமி, திரு. கா.பூ. .. காவேரிப்பட்டினம்
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
188. மோகன், திரு. ப. .. சின்னசேலம்
189. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
190. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
191. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
192. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. கோபிசெட்டிப்பாளையம்
193. ராதாகிருஷ்ணன், திரு. எம். .. திருமயம்
194. ராமராஜ், திரு. ச. .. போடிநாயக்கனூர்
195. ராம்குமார், திரு. எம். .. பாபநாசம்
196. ராஜகோபால், திரு. ஆ. .. சிவகாசி
197. ராஜம்மாள், திருமதி எஸ். .. தூத்துக்குடி
198. ராஜா, திரு. எச். .. காரைக்குடி
199. ராஜாங்கம், திரு. வி.ஆர். .. சோழவந்தான்
200. ராஜு, திரு. எச்.எம். .. உதகமண்டலம்
201. ரெங்கநாதன், திரு. என். .. பூம்புகார்

| | | |
|---|---|---|
| 202. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. | .. | பேரூர் |
| 203. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 204. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. | .. | அரவக்குறிச்சி |
| 205. வளர்மதி, திருமதி பா. | .. | ஆலந்தூர் |
| 206. வளர்மதி ஜெபராஜ், திருமதி | .. | மதுரை மேற்கு |
| 207. வள்ளல் பெருமான், டாக்டர் பி. | .. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 208. வாசுதேவன், திரு. பெ. | .. | மதுராந்தகம் |
| 209. விசுவநாதன், திரு. இரா. | .. | நத்தம் |
| 210. வில்வநாதன், திரு. இரா. | .. | சோளிங்கர் |
| 211. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. | .. | பூங்கா நகர் |
| 212. விஜயபாஸ்கர், டாக்டர் சி. | .. | புதுக்கோட்டை |
| 213. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | .. | பனமரத்துப்பட்டி |
| 214. வீரபாண்டியன், திரு. ஜெக. | .. | மயிலாடுதுறை |
| 215. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 216. வெங்கடாஜலம், திரு. செ. | .. | சேலம்-1 |
| 217. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 218. வேலுசாமி, திரு. செ.ம. | .. | பல்லடம் |
| 219. வேலு, திரு. எ.வ. | .. | தண்டராம்பட்டு |
| 220. வேல் முருகன், திரு. தி. | .. | பண்ருட்டி |
| 221. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 222. வைத்திலிங்கம், திரு. ஆர். | .. | ஒரத்தநாடு |



| | | |
|---|---|---|
| 223. ஜீவானந்தம், திரு. இரா. | .. | நாகப்பட்டினம் |
| 224. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. | .. | ஆரணி |
| 225. ஜெயக்குமார், திரு. கு. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 226. ஜெயக்குமார், திரு. டி. | .. | இராயபுரம் |
| 227. ஜெயராமன், திரு. வி. | .. | பொள்ளாச்சி |
| 228. ஜெயலலிதா, செல்வி ஜெ | .. | ஆண்டிப்பட்டி |
| 229. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 230. ஹக்கீம், திரு. எம்.ஏ. | .. | மதுரை மத்தி |
| 231. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | .. | திருவட்டாறு |
| 232. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி | .. | (நியமனம்) |
| 233. (வெற்றிடம்) | .. | சைதாப்பேட்டை |
| 234. (வெற்றிடம்) | .. | வாணியம்பாடி |
| 235. (வெற்றிடம்) | .. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | | |
|---|---|---|
| திரு. என்.ஆர். சந்திரன் | .. | தலைமை வழக்கறிஞர் |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 5, சித்திரபானு - திருவள்ளுவர் ஆண்டு 2033**

**2002 ஏப்ரல் 18, வியாழக்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்*
*தொகுத்தவற்றுள் எல்லாந் தலை."*

இருப்போர், இல்லாதார் என்றில்லாமல் கிடைத்ததை பகிர்ந்து உண்டு எல்லா உயிர்களும் வாழ வேண்டும் என்ற சமநிலை கொள்கைக்கு ஈடானது வேறு எதுவுமே இல்லை.

## 1. வினாக்கள் - விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 155,* திரு. ப. இளவழகன், *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.*

**155—**

**தூர்வாரும் பணி**

***943—திரு. ப. இளவழகன்:**

*மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அரியலூர் தொகுதி, திருமானூர் ஒன்றியம், இலந்தைகுடம் பெரிய ஏரியில் ஆக்கிரமிப்பை அகற்றி தூர்வாரும் பணி மேற்கொள்ளப்படுமா?*

[2002 ஏப்ரல் 18

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வினாவிற்கான விடை. அரியலூர் தொகுதி, திருமானூர் ஒன்றியம், இலந்தை குடம் பெரிய ஏரியில் உள்ள ஆக்கிரமிப்பை 1997-1998 ஆம் ஆண்டில் ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் சுமார் 4 ஏக்கர் நிலங்களில் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டுள்ளது. அரசின் நிதிநிலைமையைப் பொறுத்து தூர்வாரும் பணி மேற்கொள்ளப்படும்.

**திரு. ப. இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் தொகுதி, திருமானூர் ஒன்றியத்திலுள்ள இலந்தை குடம் ஏரி 425 ஏக்கர் விஸ்தீரணத்தில் அமைந்துள்ள மிகப் பெரிய ஏரியாகும். இந்த ஏரியினால் பாசனம் பெறக்கூடிய நிலப்பரப்பு 4,750 ஏக்கர்; பல ஆண்டுகளாக தூர்வாரும் பணி மேற்கொள்ளப்படாமல், ஏரியிலே நீர்தேங்கி இருக்கக்கூடிய நிலையிலே பார்த்தால்கூட இந்த ஏரி ஆடு தாண்டக்கூடிய ஓர் ஏரியாகக் காட்சியளித்துக்கொண்டிருக்கிறது. எங்களுடைய பகுதி கடலால் சூழப்பட்டிருந்த பகுதி என்பதனால் நிலத்தடி நீரைப் பயன்படுத்துகிறபோது உப்பு நீராக இருப்பதனால் விளை நிலம் இன்றைக்கு உவர் நிலமாக மாறக்கூடிய நிலையிலே இருந்துகொண்டிருக்கிறது. இன்றைக்கு தரிசு நிலங்கள் எல்லாம் மேம்படுத்தப்பட்டு விளைச்சல் நிலங்களாக மாறக்கூடிய நிலை இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலே உருவாக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற நிலையில், விளை நிலமாக இருக்கக்கூடியவை தரம் கெட்டுப் போகாமல் காப்பாற்றப்பட வேண்டிய நிலை இருப்பதனால் இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவுர்களுடைய நல்லாட்சியில் இந்த ஏரி தூர் வாரப்பட்டு சுமார் 5 ஆயிரம் ஏக்கர் நிலமும் விளைச்சல் நிலமாக இருக்கும் நிலையிலிருந்து குறைந்து விடக்கூடாது, அதைக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர், பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் மாவட்டம் மற்றும் வட்டத்திலுள்ள இலந்தைகுடம் பெரிய ஏரி கந்திராதித்தன் ஏரி பொதுப் பணித்



2002 ஏப்ரல் 18]

துறையின் பராமரிப்பில் உள்ள ஏரியாகும். இந்த ஏரியின் மொத்தப் பரப்பு 413.73 ஏக்கராகும். இதில் ஆக்கிரமிக்கப்பட்ட பரப்பு 30 ஏக்கர். 1997-1998 ஆம் ஆண்டில் ரூபாய் 2 இலட்சம் மதிப்பீட்டில் சுமார் 4 ஏக்கர் நிலங்களில் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டுள்ளது. மீதமுள்ள 26 ஏக்கர் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களில் கரும்பு, நெல் பயிர் செய்யப்பட்டு அவை அகற்றப்படாமல் உள்ளன. வருவாய்த் துறையின் துணையுடன் அந்த ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பகுதி அகற்றப்படும் என்பதையும், போதுமான நிதியொதுக்கீடு இன்மையால் தூர்வாரும் பணியைச் செய்ய இயலவில்லை. ஏரியைத் தூர்வாருவதற்கும், கரையைப் பலப்படுத்தி அதன் மேல் கிராவல் பரப்புவதற்கும் தோராயமாக ரூபாய் 50 இலட்சம் செலவாகும் என கணக்கிடப்பட்டுள்ளது. சிறப்பு நிதியொதுக்கீடு கிடைக்கப்பெற்றால் மேற்கண்ட பணியைச் செய்து முடிக்க இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 156, திரு. ப. இராஜரெத்தினம், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.

**156—**

## அணை கட்டுதல்

**•970—திரு ப. இராஜரெத்தினம்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் தொகுதி, வேப்பந்தட்டை ஒன்றியம், மலையாளப்பட்டியில் சின்னமுட்லு அணை கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வினாவிற்குண்டான விடை. பெரம்பலூர் தொகுதி, வேப்பந்தட்டை ஒன்றியம், மலையாளப்பட்டியில் உள்ள ஆயக்கட்டுப் பகுதிகள் ஏற்கெனவே நன்கு அபிவிருத்தி அடைந்துள்ளன. எனவே புதிதாக நீர்த்தேக்கம் கட்டுவதால்

[2002 ஏப்ரல் 18

கூடுதல் பயனேதும் இல்லை என்ற அடிப்படையில் சின்னமுட்லு அணை கட்டும் திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

**திரு. ப. இராஜரெத்தினம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகத்தினில் பிறந்து ஜெகத்தினை ஆண்டுகொண்டிருக்கின்ற அன்னையை வணங்குகின்றேன். பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை ஒன்றியம், மலையாளப் பட்டியில் சின்னமுட்லு அணை கட்ட வேண்டும் என்பது, 40 ஆண்டுகளுக்கு மேலாக இப்பகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையாகவுள்ளது. இத்திட்டத்தினால் சின்னமுட்லு பகுதியிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப் போல அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகள் பயன்பட்டாலும்கூட, அந்த நீர்வரத்து முறைப்படுத்தப்பட்டு வரும் என்று சொன்னால் கிட்டத்தட்ட வழியோரக் கிராமங்கள், அதைத் தாண்டி கிட்டத்தட்ட வி.களத்தூர், தொழுதூர் வரை அந்த ஆற்றிலே இருக்கிற பாசனங்கள் முறைப்படுத்தப்பட்டு கிட்டத்தட்ட 5 ஆயிரம் ஏக்கருக்கு மேல் பயனடையக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வரும் ஆண்டிலாவது இத்திட்டத்தை நிறைவேற்றித் தர ஆவன செய்வார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை ஒன்றியம், மலையாளப்பட்டி கிராமத்தில், சின்னமுட்லூர் குக்கிராமத்தில் நீர்த்தேக்கம் மற்றும் கல்லாற்றில் அணைக்கட்டு கட்டுதல் ஆகியவை தற்போது கைவிடப்பட்டுள்ளது. மலையாளப்பட்டி கிராமம், சின்னமுட்லூர் குக்கிராமத்தில் நீர்த் தேக்கம் அமைக்க 1976 ஆம் ஆண்டு ஆய்வுக் கோட்டம், திருச்சியில், ரூ.165 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் தயார் செய்யப்பட்டது. அப்போதைய தலைமைப் பொறியாளர், ஆய்வு, சென்னை அவர்கள், இடத்தை தல ஆய்வு செய்து மேற்படி நீர்த்தேக்கத்தால் பயனடையும் ஆயக்கட்டுப் பகுதிகள் நன்கு அபிவிருத்தி அடைந்துள்ளதால் அங்கு புதியதாக நீர்த்தேக்கம் கட்டுவதால் கூடுதல் பயன் ஏதுமில்லை எனத் தெரிவித்து, மேற்கண்ட திட்டம் தேவையில்லை என கருத்து கூறியதால், திட்டம் கைவிடப்பட்டது. இதன்பின், மலையாளப்பட்டி கிராமத்தில் கல்லாற்றின் குறுக்கே புதிய ஏரி அமைக்கும் திட்டப் பணிக்கு அரசாணை எண் 197, பொதுப் பணித் துறை, எண் 2, நாள் 5-5-1997-ல் ரூ.310 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. திட்டப் பணிகளுக்கு கீழ்ப்புறம் உள்ள அரும்பாவூர் ஏரி பாசன ஆயக்கட்டுதாரர்கள் தெரிவித்த கடும் ஆட்சேபம் காரணமாக இத்திட்டமும் அரசு மட்டத்தில் விவாதிக்கப்பட்டு, அரசாணை (நிலை) எண் 1236, எண் 2/98-1, நாள் 30-11-1998-ல் மேற்கண்ட நிர்வாக ஒப்புதல் இரத்து செய்யப்பட்டு ஆணையிடப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



2002 ஏப்ரல் 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வினா எண் 137, திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

137—

## தமிழ்மொழிப் பாடத் திட்டம்

***85—திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் செயல்படும் மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் தமிழ் மொழிப் பாடத் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை தமிழ் அல்லது தாய்மொழியைப் பயிற்று மொழியாகக் கொண்டுவந்து 19-11-1999-ல் பிறப்பிக்கப்பட்ட அரசாணையை எதிர்த்து சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டதில் அவ்வாணையை இரத்து செய்து 20-4-2000 அன்று உயர் நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டது. இத்தீர்ப்பினை எதிர்த்து அரசால் உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு அனுமதி மனு தாக்கல் செய்யப்பட்டு விசாரணைக்காக நிலுவையில் உள்ளது.

**திரு. ப. ரங்கநாதன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்கைத் தள்ளுபடி செய்துள்ளார்கள். உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ததாக அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டுள்ளார்கள். அந்த வழக்கை எவ்வளவு கால கட்டத்திற்குள்

முடிவுக்குக் கொண்டுவர நினைக்கிறீர்கள்? அடுத்து இந்தியாவிலுள்ள வட மாநிலங்கள் எல்லாம் இந்தியை அந்தந்த மாநிலங்களில் கட்டாயப் பாடமாக அனைத்துப் பள்ளிகளிலும்— குறிப்பாக, 1 முதல் 5 ஆம் வகுப்பு வரையில் அந்த மாநிலங்களிலே. பயிற்று மொழியாகக் கற்றுக் கொடுக்க அரசாணை பிறப்பித்திருக்கின்றார்கள். அதேபோன்று, நமது அண்டை மாநிலமான ஆந்திராவிலும், கர்நாடகாவிலும், கேரளாவிலும் அதே நிலைதான் உள்ளது. தமிழகத்தில் மட்டும் இந்த நிலை உருவாவதற்கு என்ன காரணம்? மேற்கொண்டு அந்த வழக்கை எவ்வளவு கால கட்டத்திற்குள் முடிப்பதற்கு நீங்கள் முடிவு எடுத்துள்ளீர்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எந்தக் கால கட்டத்திற்குள் இந்த வழக்குகளை முடிக்க முடியும் என்று கேட்டிருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில் வழக்குகளை விரைவில் முடிப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுத்துக்கொண்டிருக்கிறோம். தாய் மொழி மூலமாக கல்வி தருவது என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. ஆகவே அந்தக் கொள்கையினுடைய அடிப்படையில் புரட்சித் தலைவி அவர்களுடைய அமைச்சரவை கூடியவுடனேயே இதைப்பற்றி விவாதித்து, அதற்கு என்ன நடவடிக்கை எடுக்க முடியும் என்று சொல்லி, அதன் பேரில் வழக்குகளுக்கு, அங்கே இருக்கின்ற நம்முடைய வழக்குரைஞர்களுக்கு வேண்டியவை அறிவுறுத்தப் பட்டிருக்கின்றன. பயிற்று மொழி வழக்கு உச்ச நீதிமன்றத்தில் 9-4-2000-ல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இவ்வழக்கில் எதிராணை உறுதி ஆவணங்களை நான்கு வாரங்களுக்குள்ளாகவும், அதற்குப் பதிலுரை இரண்டு வாரங்களுக்குள்ளாகவும் தாக்கல் செய்யுமாறு நீதிமன்றத்தால் அறிவுறுத்தப்பட்டு வழக்கு விசாரணை தள்ளி வைக்கப்பட்டது. அதற்கேற்ப தமிழ்நாடு மழலையர் தொடக்க மெட்ரிகுலேஷன் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் நிர்வாகிகள் சங்கம், தமிழ்நாடு, பாண்டிச்சேரி மெட்ரிகுலேஷன் பள்ளிகள் நிர்வாகிகள் மற்றும் முதல்வர்கள் சங்கம், தென்னிந்திய மழலைகள் தொடக்க மெட்ரிகுலேஷன் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் சங்கம், Chennai Mylapore Arch Diocese ஆகியோர் பயிற்சி மொழி வழக்கில் அரசு தாக்கல் செய்த சிறப்பு அனுமதி மனுக்களுக்கு எதிராக தாக்கல் செய்த எதிராணை உறுதி ஆவணத்திற்கு Counter Affidavit-அரசு





சார்பாக பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுவிட்டது. நாம் பதில் கொடுத்திருக்கிறோம். அதன்பேரில் வழக்கினைத் தொடர்ந்து நடத்த உச்ச நீதிமன்ற அரசு வழக்கறிஞருக்கு அறிவுரை செய்யப் பட்டிருக்கிறது. ஆகவே அரசைப் பொறுத்தமட்டில், விரைவிலே இந்த வழக்கை முடிக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுத்துக் கொண்டிருக்கிறது. உச்ச நீதிமன்றம்தான் விரைவில் வழக்கை இறுதி செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது. இது நம்முடைய கையில் இல்லை.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயே தமிழைப் பாதுகாக்க வேண்டிய ஒரு சூழ்நிலை வந்திருக்கிறது. குறிப்பாக, இந்தப் பிரச்சினைபற்றி சென்ற ஆட்சிக் காலத்திலேயும் விரிவாகப் பேசப்பட்டது. இது உயர் நீதிமன்றத்திலிருந்து இப்போது உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறது. தொடக்கப் பள்ளிகளிலே ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரை கட்டாயப் பாடமாக்கப்பட வேண்டுமென்பதற்கான ஆணை அது. அதுவே சட்டமாக்கப்பட்டிருந்தால், இந்தப் பிரச்சினை வந்திருக்காது என்பது அன்றைய கருத்து. ஆகவே இப்போது விரைந்து முடிப்பதற்கான முயற்சியை இந்த அரசு மேற்கொள்கிறது என்று சொன்னாலும், இப்படிப்பட்ட பிரச்சினைகளை ஒரு தனி சிறப்பு நேர்வாக எடுத்து, பரிசீலித்து விரைவாகத் தீர்வு காண்பதற்காக முயற்சி எடுத்து, உடனடியாக சட்டமாக்குவதற்கான நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் இருப்பதன் காரணமாக அரசு உடனடியாக ஒரு சட்டத்தைப் போட்டுவிட முடியாது. அதன் முடிவைத் தெரிந்த பிறகுதான் சட்டம் இயற்ற முடியும்; இல்லையென்றால் sub-judice ஆகும். ஆகவே அரசு வழக்கு முடிவுக்குக் காத்துக்கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. சி. ஞானசேகரன்.

[2002 ஏப்ரல் 18

**திரு. சி. ஞானசேகரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இயங்கிக்கொண்டிருக்கிற பல்வேறு மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இன்று தமிழ் மொழியை ஒரு பாடமாக வைத்துக்கொள்ளாமல், ஆங்கிலத்தை வைத்திருப்பதற்குக் காரணமே, அதிக fees வசூலிப்பதற்குத்தான். பல பள்ளிகளிலே கொஞ்சம்கூட கட்டுப்பாடு இல்லாமல், சில நேரங்களில் Medical College-லே வாங்கக் கூடிய அளவுக்கு fees-ஐ வாங்குகிறார்கள். ஆகவே அதற்காகவாவது நம்முடைய அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து ஒரு குறிப்பிட்ட அளவுதான் fees வாங்க வேண்டுமென்ற ஓர் உறுதியினை ஏற்படுத்தித் தருவாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றுகூட பத்திரிகையில் பார்த்திருப்பீர்கள். நம்முடைய புரட்சித் தலைவி பொறுப்பேற்ற உடனேயே கல்வியாளர் உயர்திரு சிட்டிபாபு அவர்கள் தலைமையில் ஒரு Committee-யானது நியமிக்கப்பட்டிருக்கிறது. வருகிற வாரத்தில் 22, 23 தேதிகளில் இதற்கான கருத்துகளை அறிந்துகொள்வதற்காக—பொது மக்களிடமிருந்து கருத்துகளைப் பெறுவதற்காகவும், இந்தக் கல்வி நிறுவனங்களை நடத்துபவர்களிடமிருந்து கருத்துகளைப் பெறுவதற்காகவும், அதிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களின் கருத்துகளைப் பெற்று நீங்கள் சொன்னதைப் போல இவ்வளவுதான் கட்டணம் இருக்க வேண்டுமென்ற ஒரு நிர்ணயத்தை அந்தக் குழுவினுடைய பரிந்துரையின்பேரில் செயல்படுத்த இருக்கிறோம் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையிலே உச்ச நீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறது என்று குறிப்பிட்டார். உச்ச நீதிமன்றத்தில் உள்ள வழக்கை வெகு விரைவாக முடிப்பதற்கு அரசு சிறப்பு வக்காலத்து அங்கே தாக்கல் செய்யுமா? அந்த வழக்கை சீக்கிரம் நடத்தி முடிவுக்குக் கொண்டு வருவதற்கு, நமது மாநில அரசின் சார்பிலே, அரசு சார்பிலே ஆஜராகின்ற வழக்கறிஞர்களுக்கு ஏதேனும் அறிவுரை வழங்கியுள்ளதா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.



2002 ஏப்ரல் 18]

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே குறிப்பிட்டிருக்கிறேன். வழக்கறிஞருக்கு இந்த அரசானது அறிவுறுத்தி இருக்கிறது. விரைவிலே முடிக்கச் சொல்லி இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே ஆரம்பக் கல்வியிலே தமிழ்ப் பாடம் வேண்டுமென்ற நிலையிலே உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று வாதாடிக்கொண்டிருக்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த அவலநிலையைப் போக்குவதற்கு சட்ட வல்லுநர்களைக் கலந்தாலோசித்து இந்த வழக்கினை விரைவாக முடித்து, நீதிமன்றத்திலே ஒரு நல்ல தீர்ப்பினைப் பெறுவதோடு மாத்திரம் அல்லாமல், இந்தத் தீர்ப்பினைப் பெற்ற பிறகு சட்டமாக்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன், அதே நேரத்திலே இன்று தமிழகத்திலே எல்லையோரப் பகுதிகளிலே தொடக்கப் பள்ளிகள் இருக்கின்றன. தமிழ்வழிப் பாடங்கள் நடக்கக் கூடிய தொடக்கப் பள்ளிகளிலே தமிழ் ஒரு பாடம் கூட கிடையாது. உதாரணத்திற்கு எங்களுடைய தருமபுரி மாவட்டம், வேலூர் மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம் போன்ற பல்வேறு மாவட்டங் களில் இருக்கக்கூடிய தொடக்கப் பள்ளிகளிலே கன்னட மொழிப் பாடங்கள் இருக்கின்றன. தெலுங்குப் பாடப் பிரிவுகள் இருக்கின்றன. ஆனால் ஒரு தமிழ்ப் பாடம் கூட அங்கே தமிழ் மொழியிலே இல்லை. மற்ற மாநிலங்களிலே அந்தந்த மாநிலத்தினுடைய மொழிப் பாடத்தை படித்துவிட்டுத்தான் தாய் மொழிப் பாடத்தைக் கற்க வேண்டுமென்ற ஒரு நிலை இருக்கிறது. ஆகவே இதுவரை தமிழுக்குத் தொண்டாற்றி வருகிற நம்முடைய அரசாங்கம் தமிழ்நாட்டிலே இருக்கிற அவலநிலைதளை எல்லாம் உணர்ந்து இந்தப் பள்ளிதளில் தமிழ்ப்பாடத்தை அவசியம் கொண்டுவருமா என்பதை அறிய விரும்புவதோடு, இப்படிப்பட்ட பள்ளிகள் தமிழ்நாட்டிலே இருக்கின்றனவா என்ற கேள்வியே எல்லோருக்கும் எழுகிறது என்ற செய்தியைச் சொல்லி, ஆகவே இது வலியுறுத்தப்படக்கூடிய செய்தி என்ற வகையில் தமிழ்ப் பாடத்தை அவசியமாக அரசு கொண்டுவருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழியை வளர்ப்பதற்கும், தமிழிலேயே பாடம்

சொல்லிக் கொடுப்பதற்கும் இந்த அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்ற நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். Fundamental rights—அவர்களுடைய தாய்மொழியிலேயும் படிப்பதற்குச் சில உரிமைகள் இருக்கின்றன. அதைத் தவிர்க்க முடியாத நிலைமையிலே இருக்கின்றோம். இந்த இக்கட்டான சூழ்நிலையில் தாய்மொழிக்கு, நீங்கள் சொன்னதுபோல், இந்த மாநில பார்டரில் இருக்கிற பள்ளிகளிலே அவர்கள் தாய்மொழியிலே கற்கும்போது, நீங்கள் தமிழைத்தான் கற்க வேண்டும் என்ற ஒரு கட்டாய நிலையைப் புகுத்தாத நிலையில் நாம் இருந்துகொண்டிருக்கிறோம். மற்ற மாநிலங்களில் இருக்கலாம். தமிழகத்தைப் பொறுத்தவரையில் அனைவருடைய உணர்வுகளையும் புரிந்து, அதற்கேற்றாற்போல செயல்பட்டுக் கொண்டிருக்கின்றோம். தமிழை வளர்க்க நீங்கள் சொன்னதுபோல் அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கன்னட மொழியிலோ, தமிழ் மொழியிலோ பாடத் திட்டங்கள் வைப்பதைக் குறையாகச் சொல்லவில்லை. அவரவர்களுடைய உரிமை, Rights இருக்கிறது; இருந்தாலும்கூட, தமிழ்ப் பாடம் வேண்டுமா, வேண்டாமா? தமிழ்ப் பாடம் கூட தமிழிலே இல்லை. தமிழ் மொழிக்கு ஒரு பாடப் பிரிவுகூட, ஒரு பாடம் கூட இல்லை என்று சொன்னால், எந்த மாநிலத்திலே, அந்தப் பள்ளிகள் இயங்குகின்றன என்பதற்காக அதைச் சொல்கிறேன். ஆங்கிலத்திலோ, கன்னடத்திலோ, தெலுங்கிலோ வைத்துக்கொள்ளட்டும். தமிழ்ப் பாடம் ஒன்று வேண்டுமா, வேண்டாமா என்பதுதான் என் கேள்வி.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்ப் பாடம் சொல்லிக் கொடுப்பது தேவையான ஒன்றுதான். அதைச் செயல்படுத்தும்போது சிக்கல்கள் இருக்கின்றன. அதைச் செயல்படுத்துவதற்கு, இந்தச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு இந்த அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கக்கூடிய வழக்கு சம்பந்தமாக தினமணி நாளேட்டில் வந்த செய்தியை ஏற்கெனவே





தெரிவித்திருக்கிறேன். மன்றமும் அறிந்திருக்கும். நம்முடைய வழக்கறிஞர் அதை நடத்துகிற விதம் குறித்து நீதிபதியே அறிவுறுத்தியிருக்கிறார் என்ற செய்தி வந்திருக்கிறது. நீங்கள் இப்படிப் பேசுவது சரியல்ல என்று நீதிபதி குறிப்பிட்டதாக அதில் இருக்கிறது. வழக்கை விரைவாக முடிக்க வேண்டும் என்கிற அந்த அவசரத்தில் சரியாக முடிக்க வேண்டும் என்கிற உணர்வு பின்னுக்குப் போய்விடக்கூடிய அபாயம் இருப்பதாக நான் உணர்கிறேன். இந்தச் செய்திக்குப் பின்னால் அரசு அதன்மீது தலையிட்டிருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகையிலே சில செய்திகள் வந்திருந்தாலும், இப்போது ஒரு சீனியர் அட்வகேட்டை நாம் நியமித்திருக்கின்றோம். மாண்புமிகு திரு. கே.கே. வேணுகோபால் அவர்கள் அரசின் சார்பாக appear ஆகிறார். ஆகவே அவர் நம்முடைய அரசாங்கத்தினுடைய அனைத்து கொள்கைகளைக் காப்பாற்றுவதில் சிறப்பாகச் செயல்படுவார் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுயேட்சை உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுயேட்சை உறுப்பினராக இருந்தாலும் உங்கள் உறுப்பினர்தான். ஏனென்றால் தலைவர் ஒரே ஆள் நீங்கள்தான். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகக் கல்விக் கொள்கையில் முதல் மொழி தாய்மொழி என்று இருக்கின்றதா அல்லது தமிழ் மொழி என்று இருக்கின்றதா? தாய்மொழி என்று இருக்கின்ற காரணத்தால்தான் சிலர் ஆங்கிலம் தாய்மொழியாக, கன்னடம் தாய்மொழியாக, தெலுங்கு தாய்மொழியாக, இன்னும் சொல்லப் போனால், வெளிநாட்டைச் சேர்ந்தவர் ஜெர்மன் தாய்மொழி என்று கூறுகின்றார்கள். அந்தப் பள்ளியிலே ஜெர்மன் தெரிந்த ஆசிரியரும் கிடையாது; அந்த ஆசிரியருக்கும் சொல்லிக் கொடுக்கத் தெரியாது; மாணவர்களுக்கும் தெரியாது. 95 மார்க் வாங்குகிறார்கள். கடந்த ஆட்சியிலே நான் இந்தக் கருத்தைச் சொன்னேன். ஆகவே முதல் மொழி தமிழ் மொழி என்று இருந்தால், தமிழகத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ் நிச்சயமாக, கட்டாயமாக ஒரு பாடம் படித்துக் கொடுக்க வேண்டும். அந்த அடிப்படையிலேதான் பிற மாநில எல்லையில் இருக்கின்ற, பிற மொழி தெரிந்த தாய்மொழியைக் கொண்டவர்களுக்கும் தமிழ் மொழி

[2002 ஏப்ரல் 18

கட்டாயமாக்கப்பட வேண்டும். அது ஆக்கப்படுமா என்று உங்கள் மத்தியிலே கேட்பதோடு, தமிழகத்தில் கட்டாயமாக முதல் மொழி தமிழ் மொழி என்று இருந்தால், ஏன் நாம் நம்முடைய நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டும்? எல்லாப் பாடங்களையுமே தமிழில்தான் நீங்கள் கற்றுக் கொடுக்க வேண்டும் என்ற ஒரு நிலையைச் சட்டமாக்க ஏன் முன்வரவில்லை? அரசு முன்வருமா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழி அல்லது தாய்மொழி என்றுதான் இருக்கிறது. எப்படி நீங்கள் கேட்பதுபோல், தமிழையும் அல்லது தாய்மொழிதான் என்று வைத்து இருக்கிறோமேயொழிய, தமிழ் மொழிதான் என்ற நிலைமை இன்றையதினத்திலே கிடையாது. அதுதான் உண்மை.

அடுத்தது, தமிழ் மொழியை வளர்ப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டிருக்கிறோம். சட்டங்கள் இயற்றுவதற்கு நமக்கு உரிமைகள் இருக்கின்றன. 162-லே நாம் செய்யலாம். ஆனால் Section-14 பிரகாரம், Constitutional rights பிரகாரம், மற்றவர்கள் Challenge பண்ணுகிறார்கள். அதைத்தான் Challenge பண்ணி, உச்ச நீதிமன்றத்திற்குப் போயிருக்கிறார்கள், Supreme Court-லே இருக்கிறது. ஆகவே கட்டாயமாக்கப்பட வேண்டும் என்பதைச் செய்வதற்கு உச்ச நீதிமன்றத் தீர்ப்பிற்குப் பிறகுதான் நாம் எவ்வாறு மேற்கொண்டு செயல்பட முடியும் என்ற நிலையில் இருந்துகொண்டிருக்கின்றோம்.

முற்பகல் *10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெட்ரிகுலேஷன் பள்ளிகளை regulation பண்ணுவதற்கு, முறைப் படுத்துவதற்கு சிட்டிபாபு தலைமையிலே ஒரு Committee அமைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதிலே அனைவரும் சென்னைக்கு வர வேண்டும், பெற்றோர்கள், ஆசிரியர் பெருமக்கள், நிர்வாகத்தினர் எல்லாம் என்று குறிப்பிட்டார்கள்...



2002 ஏப்ரல் 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: தமிழ் மொழிதான் இதிலே முக்கியம். உட்காருங்கள். திரு. கா. கந்தசாமி.

**திரு. எ.வ. வேலு**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொல்லியிருக்கிறார். அதை ஒட்டிய கேள்விதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: உட்காருங்கள். அதை ஒட்டிய கேள்வி இல்லை. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெட்ரிகுலேஷன் பள்ளிகள் குறித்த கேள்வியாக இருப்பதால், மெட்ரிகுலேஷன் பள்ளியைப்பற்றி ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மெட்ரிகுலேஷன் பள்ளியைப்பற்றிய கேள்வி அல்ல. தமிழைப் பற்றிய கேள்வி. கந்தசாமி உட்காருங்கள். திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக தொடங்கப்படுகின்ற மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலாவது தமிழ் வழிதான் கல்வி கற்பிக்கப்பட வேண்டுமென்று அரசு நிபந்தனை விதிக்குமா என்பதைத் தங்கள்மூலமாக மாண்புமிகு அமைச்சரிடத்திலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: புது மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலே தமிழை அறிவுறுத்துவீர்களா என்று கேட்கிறார்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை**: மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை அரசு சிந்திக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு மக்கள் எல்லோரும் ஒன்றாவது முதல் ஐந்தாவது வகுப்பு வரை தமிழ் மொழியில் கற்பதில் எந்தவிதமான தவறும் கிடையாது. தாய்மொழியில் விருப்பம் இருக்கிறவர்கள், அவர்களுடைய தாய்மொழியிலேயே அந்தப் பள்ளிக்கூடங்களிலே படிக்கலாம். இருந்தாலுங்கூட உச்ச நீதிமன்றத்திலே நிலுவையில் இருக்கும் இது குறித்த வழக்கானது—நமது சட்டமன்றத்திலே தமிழ்நாட்டு மக்களுடைய விருப்பங்களைத் தெரிவிப்பதன் மூலம் ஒரு தீர்மானம் நிறைவேற்றினால்

தவறு இல்லை என்ற ஒரு கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். சட்டம் இயற்றும்போது கண்டிப்பாக சப்ஜுடிஸ் ஆகும். தீர்மானமாக, தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வுகளைச் சொல்லும் வகையிலே ஒரு தீர்மானம் நிறைவேற்றலாம் என்று நினைக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுகுறித்து செயல்படுவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு அமைக்கப்பட்ட இந்தக் குழுவினுடைய கருத்துகளுக்கு ஏற்பதான் அரசானது தமிழை எந்தெந்த அளவுக்கு நாம் செயல்படுத்த முடியும், ப்ள்ளிகளிலே மாணவர்களுக்கு சொல்லிக் கொடுத்து பயன்படுத்த முடியும் என்பதற்காக நாம் முறைகளை வகுத்திருக்கிறோம். தமிழ் மொழி இருக்க வேண்டும், கட்டாயம் இருக்க வேண்டும் என்பதைத்தான் நாம் கொள்கையாக— தமிழையும் இதற்காகப் புகுத்தியிருக்கிறோம்—ஆனால் இதை எதிர்த்து நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். உயர் நீதி மன்றத்திலே இதற்கு சாதகமான தீர்ப்பு வரவில்லை. ஏனென்றால் அதில் அவர்கள் சில குறைபாடுகளைச் சொல்லி அரசானது இப்படி கட்டாயப்படுத்தக் கூடாது என்ற உணர்வின் மூலமாக இங்கே தீர்ப்பு கொடுத்ததன் காரணமாக நாம் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறோம். ஆகவே அரசைப் பொறுத்தவரையில் தமிழை வளர்ப்பதற்கும், தமிழைப் படிப்பதற்கும் நீங்கள் என்ன உணர்வோடு சொல்கிறீர்களோ, அந்த உணர்வுக்கு ஏற்ற வகையில்தான் நாம் சட்டங்கள் இயற்றியிருக்கிறோம். அதேபோல அரசாணைகள் மூலமாக உத்தரவுகள் தந்திருக்கிறோம். அதோடு உச்ச நீதிமன்றத்திலே இதே உணர்வைத்தான் நாம் சொல்லியிருக்கிறோம். ஆகவே எந்தவிதத்திலும் நாம் பின்வாங்கவில்லை. நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அந்த உணர்வு அரசாங்கத்திற்கு இருக்கிறது. அதை பிரதிபலிப்பதற்கு அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு எடுத்துக்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் வகுப்பிலிருந்து 5 ஆம் வகுப்பு வரை தமிழிலே வகுப்புகள் நடத்தப்பட வேண்டுமென்ற ஆணையின்மீது, கலைஞர் அரசு கொண்டுவந்த ஆணையின்மீது உச்ச நீதிமன்றத்திலே இருக்கின்ற



வழக்கு குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதிலே இப்போது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் சொல்லியதைப்போல, தமிழகத்தினுடைய மற்றைய மாநில எல்லையோரப் பகுதிகளில், அந்த மாநில மொழிகளுக்கான பள்ளிகள் இருப்பதுபோல, கர்நாடகம், ஆந்திரா, கேரளா போன்ற மாநிலங்களில் தமிழில் நடத்தக்கூடிய பள்ளிகள் இருக்கின்றனவா? ஒரு சினிமாவிலே தமிழ் வசனம் வருவதையே எதிர்க்கக்கூடிய கர்நாடகாவில் தமிழிலே வகுப்புகள் நடத்தப்படுகின்றனவா, பள்ளிகள் இருக்கின்றனவா, அதை அரசு பார்க்கிறதா, அல்லது இல்லாமல் இருந்தால், அரசு அதை வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாக ஒரு கேள்வியைக் கொடுத்தால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் தமிழ் மொழியை பாடமாக்குவதற்காக நாம் போராடிக் கொண்டிப்பதைப்பற்றி இங்கே கேள்வியும் பதிலும் வந்திருக்கின்றன. ஆனால் தனித் தமிழ் மழலையர் பள்ளிகள் இப்போது தமிழகத்தில் பல இடங்களில் இருக்கின்றன. ஆனால் தமிழிலே பாடம் சொல்லிக்கொடுப்பதற்கு இயலாத அளவில் பொருளாதார நெருக்கடியில் அவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். எனவே தமிழ் மொழியிலே, பாடம் கொண்டு வருவதற்கு அரசு முயற்சி எடுக்கிற இதே நேரத்தில், தமிழ் மொழியிலே மழலையர்களுக்கு பாடம் சொல்லித்தர வேண்டும் என்பதைக் கொள்கையாகக் கொண்டிருக்கிற பள்ளிகளுக்கு சிறப்புச் சலுகைகளையும், அனுமதியையும் அளித்து தனித் தமிழ் மழலையர் பள்ளிகளை அரசு ஊக்குவிக்க முன்வருமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழிலே மழலையர்களினுடைய பள்ளிகளைத் தொடங்குவதற்கு அனைத்து உதவிகளையும் இந்த அரசு செய்யும். ஆனால் இதற்காக சிறப்பானதொரு incentive-ஐத் தருவது என்பது, தேவையில்லாத ஒன்றைத் தருவதாகக் கருதுகின்றேன். காரணம் என்ன

என்றால், அரசானது பலர் செயல்படுத்துகின்ற திட்டங்களுக்கு அனைத்து உதவிகளையும் செய்யத் தயாராக இருக்கின்றது. Permission கேட்டால் உடனடியாகக் கொடுக்கிறோம். அதைத் தடை செய்வதற்கு எந்த நிலையும் கிடையாது. ஆகவே இத்தகைய பள்ளிகள் தமிழைச் சொல்லிக் கொடுப்பதற்குதான்; நம்முடைய அரசாணையும் அதுதான். அதில் ஒன்றும் மாற்றமே கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்ப் பாடத் திட்டத்தை அமல்படுத்துகின்ற பள்ளிகளுக்குத்தான் அரசினுடைய உதவிகளை வழங்குவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதையும், மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் தமிழ்மொழிப் பாடத் திட்டத்தைத் தொடங்குகிறவர்களுக்கு அனுமதி அளிப்பதிலே முன்னுரிமை வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்துதான் உச்ச நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்து இருக்கிறார்கள். இதுமாதிரியாக Compulsory-யாகப் பண்ணக் கூடாது என்பதற்காகத்தான் அவர்கள் நீதிமன்றத்திற்குப் போயிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடிய இந்தப் பதிலும் கேள்வியும் என்பது மிக முக்கியமான பிரச்சினை. எல்லா உறுப்பினர்களும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கக்கூடிய இந்தப் பிரச்சினையில் குறிப்பாகச் சொல்ல விரும்புவது—நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் புகழேந்தி அவர்கள்கூடச் சொன்னார்கள்—கர்நாடக, ஆந்திர மாநிலங்களுடைய எல்லையோரங்களிலே இருக்கக்கூடிய அந்த மாநிலப் பள்ளிகளிலே அந்த மாநில மொழிப் பாடங்கள் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. மணி, ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள், தனிக் கேள்வி போடவும் என்று. (குறுக்கீடு) சொல்லிவிட்டார்கள், விடுங்கள். (குறுக்கீடு) சொல்லிவிட்டார்கள், விடுங்கள். (குறுக்கீடு) அதுதான், தனிக் கேள்வி போட்டுக் கேளுங்கள். (குறுக்கீடு)



**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை**: திரு. மணி அவர்களே, இதற்கு தனிக் கேள்வி போடுங்கள், நான் பதில் சொல்கிறேன். ஏன் என்றால் இருமொழிக் கொள்கை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வினா எண் *158*, திரு. பி.ஆர். சுந்தரம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**158—**

### கல்வெட்டுகள்

**2227*—**திரு. பி.ஆர். சுந்தரம்**:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தமிழ்நாட்டில் பரவிக் கிடக்கும் கல்வெட்டுகளைக் கண்டுபிடித்து அவற்றின் தொன்மையையும், கருத்துகளையும் அரசு தொகுத்துள்ளதா?

*(ஆ)* இல்லை எனில், அவற்றைத் தொகுக்க அரசு ஆர்வம் காட்டுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

*(அ)* ஆம்.

*(ஆ)* எழவில்லை.

**திரு. பி.ஆர். சுந்தரம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் மிகச் சிறப்பாக ஆட்சி செய்திருக்கிறார்கள். அவர்களுடைய காலத்தில் பழங்காலக் கல்வெட்டுகளில் தமிழர்களுடைய கலாச்சாரம், பண்பாடு பற்றிய விவரங்கள், திருக்கோயில்களின் வரலாறு பற்றிய விவரங்கள் எல்லாம் கண்டுபிடிக்கப்பட்டு தொகுக்கப்பட வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். இதுவரை அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகளுடைய எண்ணிக்கை எவ்வளவு? எந்தெந்த ஆண்டுகளில் எந்தெந்த மாவட்டங்களில் இந்தக் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

[2002 ஏப்ரல் 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது ஒரு பெரிய சமுத்திரம் மாதிரி.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொல்லியல் துறை இதுவரை 7373 கல்வெட்டுகளைப் பதிவு எடுத்துள்ளது. 18 கல்வெட்டுத் தொகுதிகளை வெளிக் கொணர்ந்திருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தின் கல்வெட்டுகள் 5 தொகுதிகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. நன்னிலம் வட்ட கல்வெட்டுக்கள் 3 தொகுதிகளாக வெளியிடப்பட்டிருக்கின்றன. தருமபுரி மாவட்ட கல்வெட்டுகள் 2 தொகுதிகள், திருத்துறைப்பூண்டி வட்டக் கல்வெட்டுகள் ஒரு தொகுதி, திருவீழிமிழலைக் கல்வெட்டுகள் ஒரு தொகுதி, திருகோடிக்கா கல்வெட்டுகள் ஒரு தொகுதி, குடந்தை வட்டக் கல்வெட்டுகள் ஒரு தொகுதி, செங்கம் கல்வெட்டுகள் ஒரு தொகுதி, பெருமுக்கல் கல்வெட்டுகள் ஒரு தொகுதி, தாமரைப்பாக்கம் கல்வெட்டுகள் ஒரு தொகுதி, திருவலஞ்சுழி கல்வெட்டுகள் ஒரு தொகுதி, ஆக, 18 தொகுதிகள் இப்பொழுது வெளியிடப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்டை காலத்திய கல்வெட்டுகளில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகள் எந்தெந்த மாவட்டங்களில் என்று அமைச்சர் அவர்கள் இங்கே விளக்கியிருக்கின்றார்கள். அதிலே ஒன்று, இந்த கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகளில் பொருள் கொள்ளப்பட வேண்டிய கல்வெட்டுகள் ஒன்று; பொருள் கொள்ளப்படாத கல்வெட்டுகள் ஒன்று என்று இரண்டு வகைகளாகப் பிரித்திருக்கிறார்கள். அதிலே பொருள் கொள்ளப்பட்ட கல்வெட்டுகளைப்பற்றி பிரச்சினை இல்லை. பொருள் கொள்ளப்படாத கல்வெட்டுகள் என்ற விதத்திலே, அவை எல்லாம் பொதுமக்களுக்குப் புரிவதில்லை. ஆகவே அதை மனதில் வைத்து, உலகத் தமிழ் மாநாட்டை வெற்றிகரமாக நடத்திக் காட்டிய டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு, பொருள் கொள்ளப்படாத அந்தக் கல்வெட்டுகளை எல்லாம் கண்டுபிடித்து, பொதுமக்கள் பயனடையும் வகையில் அவற்றையெல்லாம், ஆராய்ச்சி செய்வதற்கு ஆவன செய்யுமா? அதேபோல, இவற்றையெல்லாம் தொகுத்து எல்லா



2002 ஏப்ரல் 18]

மாவட்டத் தலைநகர்களிலும் வைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொருள் கொள்ளாக் கல்வெட்டைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் தெரிந்துகொள்ள விரும்புகிறார்கள். இந்தப் பொருள் கொள்ளாக் கல்வெட்டுகளினுடைய பொருள்களைத் தெரிந்துகொள்வதற்கான பல்வேறு திட்டங்களை அரசாங்கம் வைத்திருக்கிறது. அவற்றையெல்லாம் புரிந்து கொள்கின்ற அளவிற்கு ஆராய்ச்சி வல்லுநர்கள் புத்தகங்களாக எழுதி வெளியிடுவதற்குத் திட்டங்களின் மூலமாகச் செயல்படுத்தவிருக்கின்றோம். இதைச் செயல்படுத்துவதற்கு சுமார் 1 கோடி ரூபாய்க்கு மேல் தேவைப்படுகிறது. நிதி ஆதாரத்தையும் பொறுத்து அந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் வரலாற்றையும் சித்த மருத்துவ முறைகளையும் தெரிந்துகொள்கின்ற வகையிலே கொல்லிமலைப் பகுதியிலே சித்தர்கள் வசித்த இடங்களிலேயும், அதைப்போல செஞ்சி பகுதிகளிலே சமணர்கள் வசித்த குகைப் பகுதிகளிலேயும் ஏராளமான கல்வெட்டுகள் இருக்கின்றன என்று அறிஞர்கள் தகவல்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அவற்றை ஆய்வு செய்தால் தமிழ்நாட்டின் வரலாற்றையும், அதைப்போல மருத்துவத்திலே தமிழ் மருத்துவ முறைகளையும் அறிந்துகொள்வதற்கான வாய்ப்புகள் உண்டு. அதிலே இந்த அரசு சிறப்புக் கவனத்தைச் செலுத்தி ஆய்வினை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்தவரையில் எல்லா துறைகளிலும் சிறப்புக் கவனம் செலுத்திக்கொண்டுதான் இருக்கிறது. அதுபோல், இந்தத் துறையிலும் மாண்புமிகு உறுப்பினர் கேட்டதற்கிணங்க சிறப்புக் கவனத்தை செலுத்தி அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2002 ஏப்ரல் 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களும், மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களும் பொருள் கொள்ளப்படும் கல்வெட்டுகள், பொருள் கொள்ளப்படாத கல்வெட்டுகள் என்று இங்கே சொன்னார்கள். அது என்னவென்றே எங்களுக்குப் புரியவில்லை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அதாவது அர்த்தம் தெரிந்தது, அர்த்தம் தெரியாதது. (சிரிப்பு) (குறுக்கீடு) தமிழையே தமிழுக்கு உங்களுக்கு மாற்றிக் கொடுக்க வேண்டியிருக்கிறது. (சிரிப்பு)

**திரு. சி. ஞானசேகரன்**: எங்களுடைய மாவட்டத்தில் நிறைய கல்வெட்டுகள் கண்டிபிடிக்கப்பட்டு இப்போது அருங்காட்சியத்திலே—வேலூரிலேகூட வைக்கப்பட்டிருக்கின்றன. அப்படி இருக்கிறபோது வேலூர் மாவட்டத்திலேயிருந்து மட்டும் எந்தத் தொகுதியும் வெளிவராதது ஏன் என்று நான் அமைச்சரிடம் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இல்லை, இல்லை. அரசுத் துறையின் மூலமாக பண்ணக் கூடியது ஒன்று. தனியார் துறையிலே பண்ணக் கூடியது ஒன்று.

**திரு. சி. ஞானசேகரன்**: இல்லை, அரசே பண்ணியிருக்கிறது. அப்படி பண்ணியிருந்தும்கூட பல கல்வெட்டுகளை என்னுடைய மாவட்டத்தில் கண்டெடுத்தும்கூட ஏன் ஒரு தொகுதிகூட இன்றுவரை வரவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை**: விளக்குவதற்கு இதில் ஒன்றும் இல்லை. எல்லோருக்கும் தெரியும். பணப் பற்றாக்குறைதான் காரணம் நிதி நெருக்கடி. அந்த நிதி நெருக்கடி தீர்ந்தால், அதற்கு நிதியமைச்சர் வேண்டிய பணத்தை ஒதுக்கித் தந்தால், மாண்புமிகு உறுப்பினர் கேட்ட அந்தக் கோரிக்கை விரைவில் செயல்படுத்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வெட்டுகள்பற்றி 18 தொகுப்புகள்பற்றி இங்கே



2002 ஏப்ரல் 18]

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதிலே குறிப்பாக பெருமுக்கல் பற்றிச் சொல்லப்பட்டது. அது அநேகமாக விழுப்புரம் மாவட்டப் பகுதியாக இருக்கும் என்று கருதுகிறேன். அந்தப் பகுதியிலே இருக்கிற கல்வெட்டுகள் மத்திய அரசாங்கத்தின் தொல்பொருள் இலாகாவின் மூலமாக பாதுகாக்கப்பட்டதாக ஒரு செய்தி. ஆனால் அந்த மலைப் பகுதியே கப்பிக்காகவும், ஜல்லிக்காகவும் உடைக்கப்பட்டு அந்தக் கல்வெட்டுகளைக்கூட சிதைக்கிற முயற்சி நடைபெற்றிருப்பதாக ஒரு செய்தி இருக்கிறதே, அப்படி ஏதாவது அதிலே பாதிப்பு வந்திருக்கிறதா, அதைத் தடுப்பதற்கான முயற்சியை அரசு மேற்கொண்டிருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இல்லை, பல கல்வெட்டுகளை ஜல்லிக்காக உடைத்துவிட்டார்கள். (சிரிப்பு)

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல் சில இடங்களிலே சிலர் அதைச் சிதைக்க பல முயற்சிகள் செய்யும்போது, அரசுக்குத் தகவல் வந்தால் அதைப் பாதுகாக்க அனைத்து முயற்சிகளையும் எடுத்துக்கொண்டு இருக்கிறோம். இந்த 18 தொகுதிகள் மட்டும் தமிழக அரசின் மூலமாக வெளியிடப்பட்டவை. மத்திய அரசும் சுமார் 20 தொகுதிகளை வெளியிட்டிருக்கிறார்கள். ஆகவே ஏதாவது நீங்கள் சொல்வதுபோல் தவறுகள் ஏற்பட்டால் அதைக் களைவதற்கு இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்துக்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: பெரும்பாலும் மத்திய தொல்பொருள் இலாகாதான் அதைப்பற்றி கவனித்துக்கொண்டிருக்கிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கல்வெட்டுகள் சம்பந்தமாக மதுரை பகுதியிலே ஆண்ட பாண்டிய மன்னர்கள்தான் நிறைய கல்வெட்டுகளைத் தீட்டி வைத்திருக்கிறார்கள். ஆனால் அந்த மாவட்டத்திலிருந்து ஒரு தொகுப்புகூட எடுக்கப்படவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிடுகிறார்கள். நமது பகுதியிலேகூட—நீங்கள்கூட அறிவீர்கள்—சித்தர்கள் மலை என்ற ஒரு மலை இருக்கிறது. அதிலே பழைய காலத்திலே நிறைய சித்தர்கள் எல்லாம் வசித்து, உயிரைக் காப்பாற்றக்கூடிய அரிய பெரிய மூலிகைகளையெல்லாம் கண்டுபிடித்து அந்த மலையிலே எழுதி வைத்திருக்கிறார்கள். அதை அறிவதன்

[2002 ஏப்ரல் 18

மூலமாக பல நல்ல மருத்துவப் பொருட்கள்கூட கிடைக்கின்ற வாய்ப்பு இருக்கின்றது. அதை ஆராய்ச்சி செய்வதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டுள்ள தொகுதிகள் மட்டும் தமிழக அரசால் வெளியிடப்பட்டது. நான் சொன்னதுபோல் மத்திய அரசும் சில தொகுப்புகளை வெளியிட்டிருக்கிறது. அதிலும் இல்லாவிட்டால் மாண்புமிகு உறுப்பினர் கேட்டதற்கிணங்க அந்தக் கல்வெட்டுகளை ஆராய்ந்து, அதை வெளியிடுவதற்கு இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை கோயிலிலும், படவேடு கோயிலிலும், படவேடு சுற்றியும் இன்றைக்கு அகழ்வாராய்ச்சியில் பல பொருட்கள் கிடைக்கின்றன. அங்கே சம்புவராயர் வாழ்ந்த காலத்து கல்வெட்டுகள் எல்லாம் கிடைக்கின்றன. ஆகவே அதைப் பற்றிய தொகுப்பை அரசு வெளியிட ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 159, திரு. எஸ்.எம். சீனிவேல், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**159—**

## பெண்கள் கல்லூரி

***18629—திரு. எஸ்.எம். சீனிவேல்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2002 ஏப்ரல் 18]

திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சார்பாக பெண்கள் கல்லூரி ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சார்பாக பெண்கள் கல்லூரி ஏற்படுத்த இந்து சமய அறநிலைய சட்ட விதிகளில் இடமில்லாததோடு, அவ்வாறான நோக்கம் ஏதும் திருக்கோயில் நிருவாகத்திற்கு இல்லை. அதற்கான போதிய நிதி வசதியும் இல்லை.

**திரு. எஸ்.எம். சீனிவேல்:** மாண்புமிகு அம்மாவின் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை புறநகர் மாவட்டம், மதுரை மாநகர் மாவட்டத்திற்குள்ளே சுமார் 40-க்கும் மேற்பட்ட மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. ஆனால் அவர்கள் மேல்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு கல்லூரிக்குச் செல்லுகிறபோது, கல்லூரியிலே மனுக்களைப் போடும்போது, அவர்களுடைய தாய்மார்களும், தந்தைமார்களும், அலையோ, அலையோ என்று அலையக்கூடிய ஓர் அவலநிலை ஏற்படுகிறது. 3 கல்லூரிகள்தான் மதுரை மாநகரத்தில் உள்ளன. அதிலே ஒன்றுதான் அரசு கல்லூரி. இந்த சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் நல்ல வருமானம் வருகிறது. இப்போதுகூட, 1½ கோடி ரூபாய் இருப்பு இருக்கின்றது. அதுமட்டுமல்ல, இட வசதி, கிட்டத்தட்ட 100 ஏக்கர் அகலத்தில், மெயின் ரோட்டிலே, பள்ளிக்கூடத்தைச் சுற்றி அங்கேயே இருக்கிறது. கோயிலைச் சுற்றியே இருக்கிறது. ஆகையினால் தாயுள்ளம் கொண்ட அம்மா ஆட்சியில், அதிலும் குறிப்பாக பெண்களுக்கு தனி முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய மாண்புமிகு எங்களுடைய அன்புத் தெய்வத்தினுடைய ஆட்சியில், பணம், பொருளாதாரம் இருக்கிறது. எங்கள் சாமி பணக்கார சாமி. ஆகையினாலே மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு, பணிவோடு, கனிவோடு, கட்டித்தர வேண்டுமென்று, கல்லூரியை நடத்த வேண்டுமென்று, அன்போடு கேட்டு விடைபெறுகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பணக்கார சாமியை ஏழையாக்கிடாதீங்க. (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் உதவி ஆணையர்/செயல் அலுவலரால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலில் தக்காராக மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் இணை ஆணையர் செயல் அலுவலர் செயல்படுகிறார். இத்திருக்கோயில் இந்து சமய அறநிலைய சட்டப் பிரிவு 46 (3)-ன்கீழ்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள், பெண்கள் கல்லூரி அமைக்கப்படுமா? முடியாதா?

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** அதைத்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** சட்டப் பிரிவு 46(3)-ன்கீழ் பிரசுரிக்கப்பட்ட கோயிலாகும். உதவித்தொகை நிர்ணய வருமானம் பசலி 1410-ல் ரூ.1,03,66,998/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலில் 1.62 கோடி ரூபாய் முதலீட்டுத் தொகை உள்ளது. இங்கு ஒரு பெண்கள் மேல்நிலைப் பள்ளி நடத்தப்பட்டு வருகிறது. இதில் 36 ஆசிரியர்களும் 1617 மாணவிகளும் உள்ளனர். இப்பள்ளி அரசு உதவி பெறும் பள்ளியாக இயங்கி வருகின்றது. இந்து சமய அறநிலையச் சட்ட விதிகளின்படி கல்லூரி தொடங்குவதற்கு வழிவகை இல்லை. இந்து சமய அறநிலையச் சட்டப் பிரிவு 66-ன்படி அர்ச்சகர்கள், அத்யாபாகர், வேதபாராயணர் மற்றும் ஓதுவார்களுக்கு பயிற்சி அளிக்கவும் மற்றும் திவ்வியப் பிரபந்தம், தேவாரம் போன்றவற்றைப் பயிற்றுவிக்கவும், அதனை ஒத்த கல்வியைப் போதிக்கவும், இந்து சமயம், தத்துவம், சாஸ்திரங்கள், இந்து திருக்கோயில் கட்டடக் கலைகள் போன்ற நிறுவனங்களை நிறுவவும் திருக்கோயில் உபரி நிதிகளைப் பயன்படுத்த வேண்டியுள்ள காரணத்தினாலே கல்லூரி அமைப்பதற்கு போதிய நிதியில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 160, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.



**160—**

## பெரிஃபெரல் மருத்துவமனை

***18462—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் சென்னை புறநகர் மருத்துவமனையான பெரிஃபெரல் மருத்துவமனையில் மருத்துவக் கருவிகள் மற்றும் மருத்துவர்களை அதிகப்படுத்தி மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னையில் உள்ள அரசு புறநகர் மருத்துவமனைகளில் டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, தண்டையார்பேட்டை புறநகர் மருத்துவமனையும் ஒன்றாகும். இம்மருத்துவமனையில் கூடுதலாகச் சில சிறப்புப் பிரிவுகள் தொடங்குவது குறித்தும் கூடுதல் மருத்துவர்கள் மற்றும் மருத்துவக் கருவிகள் வழங்குவது குறித்தும் இந்த நிதியாண்டில் நடவடிக்கை எடுக்க அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியிலுள்ள சென்னை புறநகர் மருத்துவமனையானது 1979 ஆம் ஆண்டு சுமார் 5½ ஏக்கர் நிலப்பரப்பில் தொலைநோக்கு சிந்தனையோடு டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் தொடங்கப்பட்ட மருத்துவமனையாகும். இது சென்னை மாநகர எல்லைக்குள் இருந்தும்கூட, இந்த மருத்துவமனை கவனிப்பாரற்று, கடந்த 5 ஆண்டுகால ஆட்சியில் மூடுவிழா செய்கின்ற நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றது. அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை இரண்டு முறை அந்த மருத்துமவனைக்கு அழைத்துச் சென்று அந்த மருத்துவமனையைப் பார்வையிடச் செய்து, சில பல வசதிகளைச் செய்து கொடுத்ததன் விளைவாக, 19-7-2001 அன்று உள்நோயாளிகளாக 10-க்கும் குறைவாக இருந்த நிலை, புறநோயாளிகளாக 400-க்கும் குறைவாக சிகிச்சை

பெற்றிருந்த நிலை தற்போது மாறியுள்ளது. இன்றையதினம் 100 படுக்கைகளிலும் உள்நோயாளிகள் அனுமதிக்கப்பட்டு மாதத்திற்கு சராசரியாக 45,000-த்திற்கும் மேற்பட்ட புற நோயாளிகள் சிகிச்சை பெறுகின்ற காரணத்தினாலும் ஏழைஎளிய மக்கள் அதிகமாக வசிக்கின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலும், இருதயநோய் சிகிச்சைப் பிரிவும், விபத்து நோய் சிகிச்சைப் பிரிவும் புதிதாக ஏற்படுத்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற மாநகர் பகுதிகளில் புறநகர் மருத்துவமனைகளை ஆரம்பித்ததன் நோக்கமே, மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் இருந்து வருகின்ற கூட்ட நெரிசலைக் குறைப்பதற்காகவும், அந்தப் புறநகர் மருத்துவமனைக்கு அருகிலே வசிக்கின்ற மக்களுக்கு அங்கேயே தேவையான, தரமான சிகிச்சைகளை அளிப்பதற்காகவும்தான் மருத்துவமனைகள் அங்கே ஆரம்பிக்கப்பட்டன. அந்தவகையிலே நம்முடைய சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் தண்டையார்பேட்டை, கே.கே.நகர், பெரியார் நகர், அண்ணா நகர் ஆகிய 4 இடங்களிலே புறநகர் மருத்துவமனைகளை ஆரம்பித்து இப்போது நடத்திக் கொண்டிருக்கிறோம். நம்முடைய தமிழகத்தின் முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த ஆண்டு அளித்த ஆளுநர் அறிக்கையிலேயும், நிதிநிலை அறிக்கையிலேயும் குறிப்பிட்டுள்ளபடி புறநகர் மருத்துவமனைகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கு சிறப்புக் கவனம் செலுத்தப்படும் என்ற கொள்கை முடிவினை எடுத்ததன் விளைவாக இன்றைக்கு புறநகர்ப் பகுதிகளிலேயே இதுபோன்ற மேம்பாடுகளைச் செய்து வருகின்றோம். நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் சொன்னதைப்போல தண்டையார்பேட்டை புறநகர் மருத்துவமனையிலே சென்ற ஆண்டு ஜுன் மாதம் நான் ஆய்வு செய்தபோது அங்கே உள்நோயாளிகளுடைய எண்ணிக்கையும் குறைவாக இருந்தது. புறநோயாளிகளுடைய எண்ணிக்கையும் குறைவாக இருந்தது. இன்னும் சொல்லப்போனால், டாக்டர்களும்கூட அங்கே நியமிக்கப்படாமல் இருந்த நிலைமை இருந்தது. எனவே நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு அமைந்தபின் அங்கே 18 டாக்டர்களை இப்போது நாங்கள் நியமித்து இருக்கிறோம்.





மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, திங்கட்கிழமை இருதய நோய், நீரிழிவு நோய்க்கும், செவ்வாய்க்கிழமை, வயிறு மற்றும் குடல்நோய் சிகிச்சைக்கும், புதன்கிழமை, அலர்ஜி, ஆஸ்துமா மற்றும் நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய்களுக்கும், வியாழக்கிழமை தோல் மற்றும் எஸ்.டி.டி. போன்ற நோய்களுக்கும், வெள்ளிக்கிழமை கண் சிகிச்சை நோய்க்கும் ஸ்டேன்லி மருத்துவமனையிலிருந்து மருத்துவர்களை வாரத்திற்கு ஒரு நாள் அந்தந்தப் பிரிவிற்கு மாற்றுப் பணியிலே அனுப்பிக்கொண்டிருக்கிறோம். எனவே அந்தவகையிலே இப்பொழுது அந்தப் புறநகர் மருத்துவமனை நல்லமுறையில் செயல்பட்டுக்கொண்டு வருகிறது. நான் அங்கே இரண்டாவது முறையாக ஆய்விற்குச் சென்றபோது அங்கே இருக்கின்ற டாக்டர்கள், குறிப்பாக அந்தப் பகுதியிலேயிருந்து வயிறு மற்றும் குடல் நோய் சிகிச்சைப் பிரிவு Gastroenterology-மற்றும் தோல் சம்பந்தமான Dermatology ஆகிய இந்த வகையான நோய்களுக்குத்தான் அதிகமான நோயாளிகள் சிகிச்சைக்கு வருகிறார்கள் என்று சொன்னதன் அடிப்படையில் அந்த இரண்டு சிகிச்சைப் பிரிவுகளும் அதாவது Gastro-enterology, Dermatology ஆகிய சிறப்புப் பிரிவுகளை அங்கே அமைப்பதற்குண்டான நடவடிக்கைகளை நாங்கள் எடுத்துக்கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகையில் அரசு புறநோய் மருத்துவமனைகள் தொடங்கப்பட்டதன் காரணத்தை விரிவாகவும், விளக்கமாகவும் எடுத்துக் கூறினார். ஸ்டேன்லியிலும், அரசு பொது மருத்துவமனையிலும் காலையிலே 8.00 மணிக்கு சிகிச்சைக்காகச் செல்கின்ற நோயாளிகள் மதியம் 12.00 - 1.00 மணி வரையிலும்கூட நீண்ட வரிசையிலே நின்று சிகிச்சை பெறுகின்ற ஒரு சூழ்நிலை தவிர்க்கப்பட வேண்டியதன் கட்டாயத்தின்பேரில் இந்த புறநகர் மருத்துவமனையை அரசு மருத்துவமனைக்கு இணையாக மேம்படுத்த வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த நேரத்தில் வைத்து, மேலும் அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது இந்த மருத்துவமனைக்கு வாரத்திலே 5 நாட்கள் மகப்பேறு, மகளிர் நோயியல், நீரிழிவு, குடல் இரைச்சல் நோய், ஒவ்வாமை, ஆஸ்துமா போன்ற நோய்களுக்கு சிறப்பு மருத்துவர்களை வைத்து முகாம்

[2002 ஏப்ரல் 18

நடத்தப்படுகின்றதாகத் தெரிவித்துள்ளார்கள். அதற்கு தொகுதி மக்களின் சார்பில் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்ற வேளையில், இப்படி சிறப்பு மருத்துவர்களை வைத்து முகாம்கள் நடத்தப்படுகின்றபொழுது நிரந்தரமாக அந்தப் புறநகர் மருத்துவமனையிலே அவர்களுக்குப் பணி நியமனம் செய்து தந்தால், அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் மேலும் பயனடைவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அரசின் நிதிநிலை நோயுற்றுள்ளது என்பதை அனைவரும் நன்கு அறிவோம்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது என்ன செய்ய வேண்டும்?

**திரு. பி.கே. சேகர்பாபு:** அதைத்தான் நான் சொல்ல வருகிறேன். அரசு நிதிநிலை நோயுற்றுள்ளது என்பதை அனைவரும் நன்கு அறிவோம். ஏழை மக்களின் நோயைப் போக்குவதையே இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு கடமையாகக் கொண்டு செயல்படுவதால், இந்த மருத்துவமனையை மேலும் மேம்படுத்த சிறப்பு நிதி ஒதுக்கீட்டை டாக்டர் புரட்சித் தலைவியிடம் பெற்று, இந்த மருத்துவமனையை மேம்படுத்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு புறநகர் மருத்துவமனைகளை மேம்படுத்த எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளின் பயனாகத்தான், நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, இன்றைக்கு 100 உள்நோயாளிகள் என்ற வகையிலும், கிட்டத்தட்ட 1000 புறநோயாளிகள் அங்கே சிகிச்சைக்காக வருகிறார்கள் என்ற நிலையையும் உருவாக்கியிருக்கிறது. இங்கே இன்னும் கூடுதலான வசதிகள் வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். கூடுதல் மருத்துவர்களும் நியமிக்கப்பட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அந்த மருத்துவமனையைப் பொறுத்தவரையில், அங்கே சிறப்புப் பிரிவுகளை ஏற்படுத்துகிறபோது



2002 ஏப்ரல் 18]

அதற்கான கூடுதல் கட்டடம், கூடுதல் மருத்துவக் கருவிகள், கூடுதல் டாக்டர்கள், நிச்சயமாக ஏற்படுகிற வாய்ப்பிருக்கிறது.

இன்னும் நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு பின்லாந்து நாட்டிலே இருக்கிற, Thermo Project என்ற நிறுவனத்தோடு, கடந்த ஆண்டு செய்துகொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், 86.00 கோடி ரூபாயை பின்லாந்து அரசு நமக்கு வழங்க இருக்கிறது. பின்லாந்து நாட்டிலேயிருந்து ஒரு குழுவினர் இந்த மாத இறுதியில் அல்லது மே மாதம் முதல் வாரத்தில் வரவிருக்கிறார்கள். அப்படி வந்து, இங்கே நம்முடைய தேவைகளை அறிந்து, நவீன மருத்துவக் கருவிகளை அவர்கள் வழங்க இருக்கிறார்கள். அப்படி 86.00 கோடி ரூபாய்க்கு பின்லாந்து அரசாங்கம் வழங்குகிற அந்த மருத்துவக் கருவிகள் முழுமையும், தமிழ்நாட்டிலேயிருக்கிற மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கே வழங்கப்படும். அப்படி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், புறநகர் மருத்துவமனைகள் ஆகியவற்றுக்குத்தான் வழங்கப்படவிருக்கின்றன. எனவே அந்த நிதியின் மூலமாக தண்டையார்பேட்டை அரசு புறநகர் மருத்துவமனைக்கு கூடுதலான நவீனக் கருவிகள் கிடைப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. அந்த வகையிலே நிச்சயமாக தண்டையார்பேட்டை அரசு புறநகர் மருத்துவமனை எதிர்காலத்திலே நல்ல விரிவாக்கத்திற்கு உட்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 161, டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**161—**

**குடிநீர் மாசுபடுதல்**

* *3754*—**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சியிலிருந்து புதுக்கோட்டைக்கு காவிரி குடிநீர் வரும் இடங்களில் திறந்தவெளித் தொட்டி அமைத்து இருப்பதால் குடிதண்ணீர் மாசுபடுவது அரசுக்குத் தெரியுமா?

[2002 ஏப்ரல் 18

*(ஆ) ஆம் எனில், அத்தொட்டியை உயர்த்திக் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருச்சியிலிருந்து புதுக்கோட்டைக்கு காவிரி குடிநீர் வரும் வழிகளில் திறந்தவெளித் தொட்டிகள் அமைக்கப்படவில்லை. சுமார் 100 இடங்களில் வெவ்வேறு வகையான வால்வுகள் அமைக்கப்பட்டுள்ளதால், அதற்கான தொட்டிகள் அமைத்து கான்கிரீட் மூடிகள் போடப்பட்டுள்ளன. இத்தொட்டிகளில் அமைந்துள்ள வால்வுகளின் போல்ட், நட்டுகளை அப்பகுதியிலே இருக்கக்கூடிய மக்கள் கழற்றி, அதிலே வடிகின்ற தண்ணீரை உபயோகத்திற்காக எடுத்து விடுகிறார்கள் என்பதால், அவ்வாறு எடுக்கக் கூடாது என்று அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய வாரியத்தினுடைய பணியாளர்கள் பலமுறை எச்சரித்தும் அவர்கள் அதை மீண்டும், மீண்டும் செய்து வருகிறார்கள். அவ்வாறு எடுக்கப்படுகின்ற இடங்களில், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்களுக்கு அறிவுரை கூறப்பட்டிருக்கிறது. மேலும், மீண்டும் அந்த இடங்களிலே போல்ட் நட்டுகளைக் கழற்றுவதால், அந்தப் பகுதிக்கு, அந்தக் குழாய்க்கு மீண்டும் தண்ணீர் செல்லாது என்பதையும் தெரிவித்து, மாசுபட சாத்தியம் இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-50*

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியிலிருந்து புதுக்கோட்டைக்கு காவிரி குடிநீர் வரும் இடங்களில், ஏறத்தாழ 100 இடங்களுக்கு மேற்பட்ட இடங்களிலே, அந்தக் குடிநீர்க் குழாய்களை இணைக்கின்ற இடத்திலே, அதாவது அந்த joint-களிலே air valve அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த air valve-ஐச் சுற்றிலும், அந்த air valveனுடைய பாதுகாப்பிற்காக சிறிய தொட்டி போன்று அங்கே சிமெண்ட் தொட்டி அமைத்திருக்கிறார்கள். அந்த air value-களிலிருந்து கசியக்கூடிய அந்தக் குடிநீரானது, அந்தத் தொட்டியிலே நிரம்பி, அந்தத் தொட்டியிலிருந்து வெளியே வழிந்து செல்லக்கூடிய நிலை ஏற்படுகிறது. இந்தக் குடிநீர்க் குழாய்க்காக அமைக்கப்பட்டுள்ள அந்த air valve தொட்டிகள் பெரும்பாலும் அந்தச் சாலை ஓரத்திலே இருக்கின்ற காரணத்தினாலே, சாலையிலே செல்கின்ற வாகனங்களை அங்கே



2002 ஏப்ரல் 18]

நிறுத்தி, அந்த வாகனங்களைக் கழுவுவதற்காக அந்த நீரைப் பயன்படுத்துகிறார்கள். ஆக, வண்டியில் செல்லக்கூடிய மக்களும் அதைத் தவறாக, துணிகளைத் துவைப்பது, போன்றவற்றிற்கெல்லாம் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்த வாகனத்திலிருந்து வெளியேறுகின்ற கிரீஸ் போன்றவை அந்தக் குடிநீரில் கலந்து குடிநீர்க் குழாய்க்குள்ளே சென்றுவிடுமோ என்று மக்கள் அச்சப்படுகின்றனர். ஆகையினாலே அமைச்சர் அவர்கள் கூறுகின்றதுபோல், மீண்டும் குடிதண்ணீருக்குள்ளே மாசு செல்லாது என்ற ஒரு கருத்தைக் கூறினாலும்கூட, மக்களுடைய பயத்தைப் போக்குகின்ற வகையிலே, அந்தத் தொட்டியை உயர்த்திக் கட்டாவிட்டாலும்கூட, அந்த covering slab என்று சொல்லக்கூடிய அந்த சிமெண்ட் தள மூடிகளைப் போட்டு, நம்முடைய குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக அதை முறையாக பராமரிக்க வேண்டும்; பராமரிக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

திருச்சியிலிருந்து பெறக்கூடிய இந்தக் குடிநீர் ஏறத்தாழ, திருச்சியிலே பம்பிங் செய்யப்பட்டு 86 கிலோமீட்டர் தூரம் தொடர்ந்து அந்த பம்பிங் குழாய் மூலமாக திருச்சியிலே குடி தண்ணீர் கிடைக்கப்பெற்று, மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. பம்பிங் செய்யக்கூடிய அந்த மின் மோட்டார்களுடைய செயல் திறன் இப்போது குறைந்துவிட்டது. 1993 ஆம் ஆண்டு முதன்முதலாக இந்த மின் மோட்டார் அமைக்கப்பட்டுள்ளது. இப்போது அதனுடைய செயல் திறனானது, அதிகாரிகளுடைய ஆய்வின்படி 11,000 எல்.பி.எம். திறனிலிருந்து, 8,500 எல்.பி.எம். திறனாகக் குறைந்துள்ள நிலையிலே 9 வருடங்களாக, சுமார் 22 மணி நேரமும் இயங்குகின்ற இந்த மின் குழாய்களின் மூலம், இந்த மின் மோட்டார்களுடைய செயல் திறன் குறைந்து விட்டதால், தற்போது குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. இதுபோன்று, இந்த air valve-கள் மூலமாக குடிதண்ணீர் வெளியேறுகின்ற காரணத்தாலும் குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. ஆகையினால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்றைக்கு இந்தக் குடிதண்ணீர் பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுத்து செயல்பட்டு வருகின்ற இந்த நேரத்திலே, சுமார் 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே இந்த மின் மோட்டார் மாற்றியமைக்கப்படுமா என்பதையும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள்.

[2002 ஏப்ரல் 18

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மோட்டாருடைய திறனைக் கூட்ட வேண்டுமென்று கூறியிருக்கின்றார். அந்த குறிப்பிட்ட இடங்களிலே தண்ணீர் வெளியே வராத அளவிற்கு துறையின் மூலமாக மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 162, திரு. ஐ. கணேசன் மற்றும் திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**162—**

**அச்சு இயந்திரங்கள்**

*2775—**திரு. ஐ. கணேசன்:**

**திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசினர் அச்சகங்களில் அச்சு இயந்திரங்கள் நவீனமயமாக்கப்படுமா?

(ஆ) அதில் கணினி முறையில் அச்சு வேலை செய்யப்படுகிறதா?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஆப்செட் முறை செயலாக்கம் செய்யப்பட்ட அரசு அச்சகங்களில் கணினி முறையில் அச்சு வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய அச்சு இயந்திரங்கள் ஆப்செட் முறையிலே, கணினி முறையிலே இயக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். வளர்ந்து வரக்கூடிய இந்த யுகத்திற்கு ஏற்ப, எங்கு பார்த்தாலும் கம்ப்யூட்டர்மயமாக ஆக்கப்பட்ட இந்தக் காலத்திலே, மிகச் சிறப்பான முறையிலே அரசினுடைய அச்சு இயந்திரங்கள் எல்லாம் இயங்க, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுபோல கணினிமயமாக்கப்பட்ட அச்சகத்தின் மூலமாக இந்த ஆண்டு எவ்வளவு தொகை அரசால் செலவு செய்யப்பட்டது என்பதனை அறிய விரும்புகிறேன்.



2002 ஏப்ரல் 18]

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே மொத்தம் 7 அரசு அச்சகங்கள் உள்ளன. சென்னையிலே ஓர் அரசு அச்சகமும், உயர்நீதிமன்ற வளாகத்திலே ஓர் அரசு அச்சகமும், விருத்தாசலத்திலே ஓர் அரசு அச்சகமும், திருச்சியிலே ஓர் அரசு அச்சகமும், மதுரையிலே ஓர் அரசு அச்சகமும், புதுக்கோட்டையிலே ஓர் அரசு அச்சகமும், சேலத்திலே ஓர் அரசு அச்சகமும் உள்ளன. இந்த அரசு அச்சகங்களுக்கு—சென்னையிலே உள்ள அரசு மத்திய அச்சகம் சுமார் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவிலே நவீனமயமாக்கப்பட்டிருக்கிறது. சென்னையிலுள்ள உயர்நீதிமன்ற வளாகத்திலேயும் ரூ.87.10 இலட்சம் தொகையிலே புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. சேலத்திலேயும் 58.35 இலட்சம் ரூபாயும் செலவு செய்யப்பட்டிருக்கிறது. மேலும், மதுரையிலே 45 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. ஆக, தமிழ்நாட்டிலுள்ள சேலம். மதுரை, சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் சென்னை மத்திய அச்சகங்களிலே Modernise பண்ணி, இப்போது கணினி முறை பயன்படுத்தப்படுகிறது என்பதைப் பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவிக்கிறேன்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் 7 அச்சகங்கள் கணினிமயமாக்கப்பட்டு இங்கே இயங்குவதாகச் சொன்னார்கள். இருந்தாலும்கூட, இன்றைய சூழ்நிலையிலே எங்கும், எதிலும், எல்லா நிலைகளிலும் அதிவேகமாக வளர்ந்து வரக்கூடிய தொழில்நுட்பம் இருக்கக்கூடிய காலகட்டம். இந்தக் காலகட்டத்திலே நவீனமயமாக்கப்பட்டு வந்தாலும்கூட, தற்போது அரசுக்குத் தேவையான அளவு இந்த ஏழு அச்சகங்களும் எல்லா

ஆவணங்களையும் தயாரிக்கக்கூடிய வகையிலே செயலாற்றக்கூடிய நிலையில் இருக்கிறதா? அப்படியிருக்கும் என்று சொன்னால் - இப்போது தமிழ்நாடு அரசு பாடப் புத்தகங்கள் எல்லாம் வெளியே அச்சகங்களிலே அச்சடிக்கப்படுகின்றன. அப்படி நவீனமயமாக்கப்பட்ட தேவையான அச்சகங்கள் இருக்கின்ற நேரத்திலே, மாணவர்களுக்கான பாடப் புத்தகங்கள் எல்லாம்கூட, இந்த அரசுக்குச் சொந்தமான அச்சு இயந்திரங்களைப் பயன்படுத்தி இந்த அச்சகங்களிலே அச்சடிப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களிலே நீதிமன்றங்களிலே வழக்குகளைப்பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் வழக்கறிஞரை நாட வேண்டும். இந்த அச்சகங்கள் எல்லாம் நவீனப்படுத்தப்பட்டவுடனே, உங்களுடைய கம்ப்யூட்டரை நீங்கள் 'on' செய்தால் எந்தெந்த வழக்குகள் எந்தெந்த நீதிமன்றத்திலே வருகிறது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆக, உயர் நீதிமன்றத்திலே இருக்கக்கூடிய அந்தக் கிளை அச்சகம் நவீன முறையிலே செயல்பட்டு வழக்கறிஞர்களுக்கு மட்டுமல்லாமல், பொது மக்களுக்கும் அது செயல்படும் திறன் வாய்ந்ததாக அமைந்து இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் அரசு அச்சகங்களிலே, நீங்கள் கூறியது போல் தமிழ்நாட்டிலே அநேக துறைகளில் உள்ள எல்லா செயல்பாடுகளும், குறிப்பாக சட்டமன்ற நடவடிக்கை மற்றும் பரிசுச்சீட்டுகள் எல்லாம் அங்கே அச்சிடப்படுகின்றன. தங்களுடைய கோரிக்கைகள், மாண்புமிகு அம்மா அவர்களுடைய பார்வைக்குக் கொண்டு செல்லபட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு அச்சகங்கள் நவீனப்படுத்தப்பட்ட பின்னாலும், அரசுப் பணிகளுக்குத் தேவையான சில புத்தகங்களை அச்சிடுவதிலே, இன்றைக்கு அரசுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய பொருளாதார நெருக்கடியில், தனியாருக்குக் கொடுக்கப்பட வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது? அப்படி எந்தெந்தத் துறையால் தனியாரிடத்திலே, தனியார் அச்சகத்திலே அச்சிடப்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவாரா? அதுபோன்று மணி அவர்கள்



எடுத்துச் சொன்னது போன்று அரசினுடைய பள்ளிப் பாடத் திட்டத்திற்கு அச்சிடுவதை தனியாருக்குக் கொடுக்க வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது? அரசு அதிகமான செலவு செய்து நவீனப்படுத்தியிருக்கிற அரசு அச்சகம் இவ்வளவு சிறப்பாகச் செயல்படுகிறபோது, தனியாருக்கு வழங்க வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவாரா என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கல்வித் துறையிலே கேட்க வேண்டிய கேள்வி இது.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அச்சகங்களைப் பொறுத்தவரையிலே நவீனமயமாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை ஒரு பக்கம் இருக்கிறது. அப்படி நவீனமயமாக்கும்போது, உங்களுக்கு நன்றாகத் தெரியும், துறையில் இப்போது இருக்கக்கூடிய ஊழியர்கள் எல்லாம் அதற்குத் தக்கவாறு அந்தத் தொழிலைக் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. இதற்கிடையில் நீங்கள் ஏன் இதை வெளியிலே கொடுக்கிறீர்கள் என்று ஒரு கேள்வியைக் கேட்கிறீர்கள். இதற்குத் தனியாகக் கேள்வியைக் கேட்டால் அதற்குத் தக்க பதில் அளிக்கக் காத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் போதுமான அளவிற்கு அச்சகங்கள் இயங்குவதாகச் சொன்னார்கள். உதாரணத்திற்கு நம்முடைய நிதிநிலை அறிக்கையின் மீதான இந்த மானியக் கோரிக்கைக்குத் தேவையான கொள்கை விளக்கக் குறிப்புகள்கூட அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்றன. அதிலே காலதாமதம். இன்று நடைபெறக்கூடிய இந்த மானியக் கோரிக்கைக்கான கொள்கை விளக்கக் குறிப்பு முந்தைய நாள் இரவு 10 மணி, 11 மணிக்குக் கொடுக்கப்படுகிறது. ஆக, இப்படி நவீனமயமாக்கப்பட்ட இந்த அச்சு இயந்திரங்கள் எல்லாம் இருக்கின்ற நேரத்தில் 2 நாட்கள், 3 நாட்களுக்கு முன்பாகக் கொடுத்தால் உறுப்பினர்களுக்கு அதைப் படிப்பதற்கும் கருத்துகளைச் சொல்வதற்கும் வாய்ப்பாக இருக்கும் என்ற காரணத்தினாலே இதையும் துரிதப்படுத்தி 2, 3 நாட்களுக்கு முன்பாக வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

[2002 ஏப்ரல் 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இதை சட்டமன்றத் துறையிலே கேட்க வேண்டும். அவரைப் போட்டுக் கொல்லாதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வினா எண் 163, திரு. ஆர். சக்ரபாணி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

163—

**உதவி இயக்குநர் அலுவலகம்**

***2114—திரு. ஆர். சக்ரபாணி**:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரத்தில் தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஒட்டன்சத்திரத்தில் தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகம் அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழ்நாட்டிலே மிகப் பெரிய காய்கறி மார்க்கெட் ஒட்டன்சத்திரத்திலேதான் உள்ளது. அங்கே, தினமும் 5 ஆயிரம் முதல் 10 ஆயிரம் டன்வரை காய்கறிகள் தமிழ்நாட்டின் பல பகுதிகளுக்கும், அதேபோல அண்டை மாநிலமான கேரளா, ஆந்திரா, கர்நாடகா போன்ற பகுதிகளுக்கும் கொண்டு செல்லப்படுகின்றன. அங்குள்ள விவசாயிகளுக்கு வேளாண் துறைபற்றி ஏதாவது சந்தேகம் ஏற்பட்டால் பழனி அல்லது திண்டுக்கல்லுக்குச் சென்று கேட்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒட்டன்சத்திரத்திலே அந்த அலுவலகம் கட்டுவதற்கு மறுபரிசீலனை செய்வார்களா என்பதை அறிவதுடன், எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே தமிழ்நாட்டிலே .... (மணியடிக்கப்பெற்றது)



*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஆர். சக்ரபாணி**: முதன்முதலாக வேளாண்மை விற்பனை வாரியத்தின் மூலமாக 3½ கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, குளிர்சாதனக் கிடங்கு கட்டுவதற்காக அரசாணை வெளியிடப்பட்டு, டெண்டர் கோரப்பட்டு, அடிக்கல் நாட்டுவிழா கூட அங்கே நடைபெற்று விட்டது. எனவே அந்தக் குளிர்சாதனக் கிடங்கு அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவிலே நடவடிக்கை எடுத்து அந்தப் பணியினைத் தொடங்குவார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத்திற்கு ஒரு தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகம் என்பதுதான் வரையறுக்கப்பட்டது. குறிப்பாக, திண்டுக்கல் மாவட்டத்தில் 2 தோட்டக்கலை இயக்குநர் அலுவலகங்கள் உள்ளன. காரணம், கொடைக்கானல் மலைப்பகுதியாக உள்ளதால், மலைப் பயிர்கள் அதிகமாக விளைகின்ற காரணத்தினால் அங்கு 2 அலுவலகங்கள் உள்ளன. அங்கு போதிய அலுவலர்கள் இருக்கின்றார்கள். ஒட்டன்சத்திரத்திலே புதிதாக தொடங்க வேண்டிய அவசியம் இல்லை.

அதுமட்டுமல்ல, அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் ஏதோ திட்டங்களைத் தீட்டிவிட்டுச் சென்றதாகச் சொன்னார். அங்கே நிதியைத்தான் காணோம்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அமைச்சர் சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) நீக்கியாச்சு, நீக்கியாச்சு.

வினா எண் 164, திரு. தி. வேல் முருகன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2002 ஏப்ரல் 18

164—

## பேருந்து வசதி

***6395—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, முத்தரசன்குப்பம் மற்றும் அன்னகாரன்குப்பம் கிராமங்களில் பயணிகள் வசதிக்காகப் பேருந்து வசதி செய்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, முத்தரசன்குப்பம் மற்றும் அன்னகாரன்குப்பம் கிராம மக்களுக்கு தற்போது அளிக்கப்பட்டுள்ள பேருந்து வசதி போதுமானதாகும். நிதி ஆதாரம் இல்லாத காரணத்தால் கூடுதல் பேருந்து இயக்க இயலாத நிலையில் உள்ளது என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பண்ருட்டி தொகுதி, முத்தரசன்குப்பம் மற்றும் அன்னகாரன்குப்பம் என்ற இந்த 2 கிராமங்களின் வழியாக கடந்த காலங்களில் இயங்கிவந்த பேருந்து, நம்முடைய அரசு வந்த சில நாட்களிலேயே நிறுத்தப்பட்டிருக்கின்றது. அப்படி நிறுத்திய அந்த வழித் தடங்களுக்கெல்லாம் மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பேருந்தை இயக்குவதற்கு வழிவகை செய்வாரா என்பதை இந்த நேரத்தில் தங்கள் மூலமாகக் கேட்க விரும்புகின்றேன். அதோடு அன்னகாரன்குப்பம் பகுதியிலிருந்து விச்சூர் என்ற கிராமத்திற்கு அந்த வழியாக பேருந்து வசதியே இல்லை. அங்கே ஆயிரக்கணக்கான மாணவ மாணவியர்கள் பண்ருட்டி மற்றும் அதை ஒட்டியுள்ள பகுதிகளிலே உள்ள பள்ளிகளுக்கு வந்து பயில வேண்டிய ஒரு சூழ்நிலை உள்ளது. ஆதலால் மாணவ மாணவியரும், அந்தப் பகுதி



2002 ஏப்ரல் 18]

மக்களும் பயன்பெறுகின்ற வகையில் அரசு நிதி ஆதாரம் இப்பொழுது இல்லை என்றாலும் கூட, கூடிய விரைவில் அப்படி பின்தங்கிய அந்தப் பகுதியினுடைய மாணவர்கள் கல்வியைக் கற்கின்ற வகையிலும், அந்தப் பகுதி மக்களுக்குப் பேருந்து வசதியை அரசு ஏற்படுத்தித் தருவதற்கும் முயற்சிக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருந்த அந்தக் கோரிக்கையின் அடிப்படையில் அரசு பரிசீலித்து தகுந்த முடிவினை எடுக்கும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 165; திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி, மாண்புமிகு தொழில் மற்றும் வணிகவரித் துறை அமைச்சர்.

165—

## எண்ணெய் சுத்திகரிப்பு

***5815—திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:**

மாண்புமிகு தொழில் மற்றும் வணிகவரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினத்தில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிகவரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினத்தில் புதிதாக எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஏற்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7 மாதங்களுக்கு முன்னால் கேட்ட கேள்விக்கு இன்றைக்கு பதில் வந்திருக்கிறது.

[2002 ஏப்ரல் 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அவரிடம் கேட்கக்கூடாது. என்னிடம்தான் கேட்க வேண்டும். (சிரிப்பு)

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி**: உங்களிடம் ஏற்கெனவே ஒரு கடிதம் கொடுத்து இருக்கிறேன். கேள்விக்குப் பக்கத்திலேயே கேள்வி கேட்கப்பட்ட தேதியையும் குறிப்பிட வேண்டும் என்று கேட்டிருக்கிறேன். அப்போதுதான் இலாகாவில் எவ்வளவு விரைவாக, துரிதமாகப் பணியாற்றுகிறார்கள் என்பதைத் தெரிந்துக்கொள்ள முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: நாகப்பட்டினத்திற்கு வாருங்கள்.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி**: நாகப்பட்டினத்திற்கு வருகிறேன். நாகப்பட்டினத்தைச் சுற்றி, நாகப்பட்டினம், கோவில்களப்பால், நரிமணம் என்ற இடங்களிலே கச்சா எண்ணெய் எடுக்கப்படுவதாக அறிகின்றேன். அவற்றை சுத்திகரிப்பதற்காக சென்னைக்கு கொண்டு வருவதாகவும் அறிகின்றேன். இதனால் செலவினம் அதிகரிக்கின்றது. இதைக் குறைக்கின்ற வகையிலே அங்கேயே ஓர் ஆலையை ஏற்படுத்தினால் அங்கே விவசாயத்தையே நம்பிக்கொண்டிருக்கின்ற அந்த மாவட்டத்தினுடைய இளைஞர்களுக்குக் கூடுதலாக வேலைவாய்ப்புத் தரமுடியும். ஆகவே அரசு இதை மீண்டும் பரிசீலனை செய்யுமா என்று கேட்பதோடு, அங்கே இல்லையென்றால் அதைச் சுற்றியிருக்கின்ற வேறு எந்த இடத்திலாகிலும் ஆலை தொடங்குவதற்கு அரசிடம் ஏதேனும் திட்டம் இருக்கின்றதா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 11-05

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம் பனகுடியில் வருடத்திற்கு 5 லட்சம் டன் உற்பத்தித் திறன் கொண்ட சுத்திகரிப்பு ஆலை மத்திய அரசினால் தொடங்கப்பட்டு, கடந்த பத்தாண்டுகளாக இயங்கி வருகின்றது. இதன் திட்டச் செலவு ரூ.104 கோடி ஆகும். இதன் உற்பத்தித் திறனை ஆண்டுக்கு 10 லட்சம் டன்களாக அதிகரிக்க ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் திட்டச் செலவு ரூ. 30 கோடி ஆகும். இப்பணி, இவ்வாண்டு இறுதிக்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



2002 ஏப்ரல் 18]

இந்நிறுவனத்தில் எல்.பி.ஜி., நாப்தா, மண்ணெண்ணெய், டீசல் போன்றவை தயாரிக்கப்படுகின்றன. மேலும் கடலூருக்கு அருகில் 2,000 ஏக்கர் பரப்பளவில் சுமார் ரூ.3480 கோடி மதிப்பீட்டுச் செலவில் பெட்ரோலியப் பொருட்களைச் சுத்திகரிப்பு செய்யும் நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகமும், ஐதராபாத்தில் உள்ள நாகார்ஜுனா உர உற்பத்தி நிறுவனமும் இணைந்து இத்திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றன. 1,000 ஏக்கர் நிலம், நிறுவனத்தின் பொறுப்பில் உள்ளது. எஞ்சிய 1,000 ஏக்கர் நிலம், சிப்காட் நிறுவனத்தின் மூலமாகக் கையகப்படுத்தும் பணி முடிவடைந்துவிட்டது. முக்கியத் தளவாடங்கள் இறக்குமதி செய்யப்பட்டு, திட்டம் அமல்படுத்தும் இடத்திற்கு வந்து சேர்ந்துள்ளன. பிற சாதனங்கள் வாங்குதல், திட்டத்தின் நிருவாகம், செய்முறை உரிமம் பெறுதல் போன்ற பணிகள் முடிவுற்றுள்ளன. இந்நிறுவனம் 2004 ஆம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்கும். இதன்மூலம் அப்பகுதி இளைஞர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்புள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வினா எண் 166, திரு. கா.பூ. முனுசாமி, மாண்புமிகு வனம், மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

166—

**வன வளர்ப்புத் திட்டம்**

***3326—திரு. கா.பூ. முனுசாமி**:

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த காலத்தில் வன வளர்ப்புத் திட்டத்தில் ஆண்டுக்கு ரூ.100 கோடி வீதம் 4 ஆண்டுகளுக்கு ரூ.400 கோடி ஒதுக்கப்பட்டதில், கிராமங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூ.40 இலட்சத்தில் ரூ.5 இலட்சம் மட்டுமே செலவிடப்பட்டு, மீதிப் பணம் முழுமையாக செலவு செய்யப்படாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது?

[2002 ஏப்ரல் 18

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இந்தத் திட்டத்தில் 1997-98 முதல் 2000-2001 வரை ரூ.350.34 கோடி ஒதுக்கப்பட்டது. இதில் ரூ.344.69 கோடி செலவிடப்பட்டது. இத்தொகையிலிருந்து வேலைகளுக்காக ரூ.293.32 கோடி செலவிடப்பட்டுள்ளது. மீதியுள்ள தொகை நிருவாகச் செலவுகளுக்காகச் செலவிடப்பட்டிருக்கிறது.

(ஆ) கடந்த நான்காண்டுகளில் சில முறைகேடுகள் நடந்தது கண்டுபிடிக்கப்பட்டு, அவற்றின்மேல் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 17 வன அலுவலர்கள், 2 மாவட்ட/கோட்ட வன அலுவலர்கள், 11 சரகர்கள் மற்றும் 4 வனவர்கள் பல்வேறு முறைகேடுகளுக்காகப் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் 198 வன அலுவலர்கள்மீதும், ஒரு வனப் பாதுகாவலர், 3 மாவட்ட கோட்ட வன அலுவலர்கள், 125 சரகர்கள், 69 வனவர்கள்மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதையும் தங்கள் வாயிலாக அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வினா எண் 167, திரு. ப. பொன்னம்பலம், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

167—

### பராமரிப்புக் கட்டணம்

***1385—திரு. ப. பொன்னம்பலம்**:

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை, ஆனையூரில் கட்டப்பட்டுள்ள வீட்டுவசதி வாரிய வீடுகளுக்குப் பராமரிப்புக் கட்டணம் மாதம் ரூ.60/-லிருந்து உயர்த்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், பழைய பராமரிப்புக் கட்டணமே வசூலிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



2002 ஏப்ரல் 18]

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மதுரை ஆனையூரில் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்குப் பராமரிப்புக் கட்டணம் ரூ.60/-லிருந்து ரூ.150/- ஆக உயர்த்தப்பட்டு மறுபடியும் வீட்டுவசதி வாரியக் குடியிருப்போர் நலச் சங்கங்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, ரூ.150/-லிருந்து குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு ரூ.80/-என்றும், நடுத்தர மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினருக்கு ரூ.100/- என்றும் பராமரிப்புக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. பொன்னம்பலம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் புரட்சிகரமான திட்டங்களைச் செயல்படுத்தும் பொதிகை மலைத் தென்றலாய் வலம் வந்துகொண்டிருக்கும் ஜீவநதி, மங்கையர்க்கரசி, மாசில்லா மாணிக்கம், எங்கள் அன்னையை வணங்கி, என்னுடைய வினாவைத் தொடங்குகின்றேன்.

நவம்பர், 1999 முதல் பராமரிப்புக் கட்டணம் ரூ.60/-லிருந்து ரூ.150- ஆக உயர்த்தப்பட்டு, ஜூலை 2001-ல்தான் ரூ.100-ஆகக் குறைக்கப்பட்டது. எனவே நவம்பர் 1999 முதல் ரூ.100 என நிர்ணயிக்க அரசு முன்வருமா?

மதுரை, ஆனையூரில், ஜெ.ஜெ. நகரில் இருக்கும் வீட்டுவசதி வாரிய வீடுகளைப் பராமரிக்க, பேரூராட்சி ஏற்க முன்வராததை அரசு அறியுமா? எப்போது பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்படும்? மதுரை கே.கே. நகர் என்ற பகுதி நல்ல வளர்ச்சி பெற்றுள்ளது. ஜெ.ஜெ. நகர் என்ற பெயர் வைத்துள்ளதன் காரணமோ, என்னமோ, அங்கு கடந்த ஆட்சியாளர்கள், ஐந்தாண்டு காலமாக எவ்வித வளர்ச்சியும் இல்லாமல் வைத்திருப்பது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுக்க உள்ளது? ....

முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இன்னும்எத்தனைக் கேள்விகள் உட்காருங்கள். அமைச்சர் அவர்கள்.

[2002 ஏப்ரல் 18

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, ஆனையூரில் இருக்கும் வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்பட்ட குடியிருப்புகளை பேரூராட்சி வசம் ஒப்படைக்க அரசு ஆவன செய்யும். மேலும், வீட்டுவசதி வாரிய திட்டப் பகுதிகளின் ஒதுக்கீட்டுதாரர்களிடமிருந்து பராமரிப்புக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. பராமரிப்புச் செலவு மற்றும் மின் கட்டண உயர்வினாலும், பணியாளர்களின் ஊதிய அதிகரிப்பினாலும், பராமரிப்புக் கட்டணம் அதிகரிக்கப்பட்டது; இவ்வுயர்வைத் தவிர்க்க இயலாது என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வினா எண் 168, திரு. வி.ஆர். ராஜாங்கம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

168—

**மருத்துவர் நியமனம்**

*6341—**திரு. வி.ஆர். ராஜாங்கம்**:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி ஒன்றியம், நீரேத்தான் பகுதியில், மருத்துவரின்றி மூடிக் கிடக்கும் கால்நடை மருத்துவமனைக்கு, நிரந்தரமாக மருத்துவர் நியமனம் செய்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்**: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே,

கழகத்தினுடைய சாதாரண தொண்டனாக இருந்த என்னை, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் பேரவையினுடைய மாவட்டச் செயலாளராக ஆக்கி, திருச்செந்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக ஆக்கி, பின்பு மாவட்ட கழகச் செயலாளராக ஆக்கி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய சீரிய தலைமையிலான அமைச்சரவையிலே, என்னை ஓர் அமைச்சராக ஆக்கிய, நான் நித்தம் வழிபடும் எங்கள் காவல் தெய்வம், மக்கள் போற்றுகின்ற மகத்தான தலைவியாக இருக்கின்ற, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, விடை அளிக்கின்றேன்.



2002 ஏப்ரல் 18]

சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி ஒன்றியத்தின் நீரேத்தான் பகுதியில் கால்நடை மருத்துவமனை, கால்நடை மருந்தகம், கால்நடை கிளை நிலையம் அல்லது பார்வைக் கிளை நிலையம் ஏதும் ஒப்பளிக்கப்பட்டு செயல்படவில்லை. எனவே அவ்விடத்தில், கால்நடை மருத்துவர் நியமனம் செய்யும் நடவடிக்கை ஏதும் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி.ஆர். ராஜாங்கம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் என் பணிவான வணக்கத்தைச் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதியான சோழவந்தானைச் சேர்ந்த நீரேத்தான் பகுதி, விவசாயிகள் நிறைந்த மலைப் பகுதி. அங்குள்ள ஆடுகள் மிகப் பிரபலமாக இறைச்சிக்கு விற்பனை செய்யப்படுகின்றன. அந்தப் பகுதியிலுள்ள ஆடுகள், அடிக்கடி நோய்வாய்ப்பட்டு இறந்து விடுகின்றன. அங்குள்ள மருத்துவர்கள் அடிக்கடி முகாமிட்டு சிகிச்சை அளிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே அருள்கூர்ந்து மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு, கால்நடை மருத்துவமனையை நிரந்தரமாக அங்கு அமைத்துத்தர முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்**: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி ஒன்றியத்திலுள்ள நீரேத்தான் பகுதியில், கால்நடை நிலையங்கள் அமைத்துத் தரப்படுமா என்ற கேள்விக்கு, நீரேத்தான் பகுதியிலேயிருந்து சுமார் 4 கிலோ மீட்டர் தூரத்தில், வாடிப்பட்டியில் கால்நடை மருந்தகம் அமைந்துள்ளது. நீரேத்தான் பகுதியிலிருந்து சுமார் 3 கிலோ மீட்டர் தொலைவில் கூதம்பட்டியில் உள்ள கிளை நிலையமும், சுமார் 6 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கச்சைகட்டியில் ஒரு கிளை நிலையமும், சுமார் 4 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள நாச்சிகுளத்தில் ஒரு கிளை நிலையமும் அமைந்துள்ளன. எனவே நீரேத்தான் பகுதியில், கால்நடை மருந்தகம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பேரவை மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வினா எண் 169, திரு. என்.கே. பெருமாள், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

[2002 ஏப்ரல் 18

முற்பகல் 11-15

169—

**தொழிற் பயிற்சி மையம்**

***11752—திரு. என்.கே. பெருமாள்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* விளாத்திக்குளத்தில் அரசு தொழிற் பயிற்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ)* மற்றும் *(ஆ)* தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள விளாத்திக்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் பச்சையபுரத்தில் வி.பி. ராமலிங்க நாடார் ஐ.டி.சி. என்னும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற் பயிற்சி நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. இதையும் சேர்த்து தூத்துக்குடி மாவட்டத்தில் 11 அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற் பயிற்சி மையங்களும், தூத்துக்குடி மற்றும் திருச்செந்தூரில் இரண்டு அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களும் இயங்கி வருகின்றன. இவை தூத்துக்குடி மாவட்டத்தின் தொழிற் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் என்பதால், விளாத்திக்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே ஒரு தனியார் தொழிற் பயிற்சி மையம் இயங்கி வருவதாலும், விளாத்திக்குளத்தில் புதிதாக மேலும் ஓர் அரசு தொழிற் பயிற்சி நிலையம் தொடங்குவது அவசியம் இல்லையென அரசு கருதுகிறது.

**திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாடு வகுப்பறையில்தான் உருவாகிறது என்பதை மனதில் பதித்து கல்வித் துறையில் இந்தியாவிலே தமிழகம் முதலிடம் பெற்றிட முத்தான நடவடிக்கைகளை எடுத்து வருகின்ற மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி என் வினாவைத் தொடங்குகிறேன். மிகவும் பின்தங்கிய மானாவாரி பூமியான



2002 ஏப்ரல் 18]

விளாத்திக்குளம் தொகுதியில் உள்ள தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஏழை எளிய விவசாயிகளின் பிள்ளைகள் தொழிற் கல்வி கற்றிட விளாத்திக்குளம் தொகுதியின் இதயமாக விளங்குகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியோடு அடுத்த நிதியாண்டிலேயாவது விளாத்திக்குளத்தில் அரசு தொழிற் பயிற்சி மையம் அமைத்திட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை யோசிக்கப்படும்.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

## @(ஏழாம் பட்டியல்)

1—

**மேல்நிலைப் பள்ளியாக்குதல்**

**வினா 10205—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி ஒன்றியம், திருமழிசை உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* 2001-2002 ஆம் கல்வியாண்டில் 125 அரசு/நகராட்சி/மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

@ இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதலளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தவையாகும்.

[2002 ஏப்ரல் 18

பூவிருந்தவல்லி ஒன்றியம், திருமழிசை உயர்நிலைப் பள்ளி குறித்து வரும் கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டால், உயர்மட்டக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு அரசின் நிதிநிலைக்குட்பட்டு மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.

2—

**நூலகம்**

**வினா 10207—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி நகரியத்திற்குட்பட்ட கன்னடபாளைய கிராமத்திற்கு நூலகம் அமைத்துத்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி நகரியத்திற்குட்பட்ட கன்னடபாளைய கிராமத்தின் மக்கள்தொகை சுமார் 1200 ஆகும். மக்கள்தொகையின் அடிப்படையில் அவ்வூரில் பகுதிநேர நூலகம் திறக்கலாம். ஆனால் அவ்வூர் மக்கள் கீழ்க்கண்ட நிபந்தனைகளை நிறைவு செய்யாததால் அவ்வூரில் நூலகம் திறக்க இயலவில்லை:—

(1) நூலகம் இயங்க வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்.

(2) எதிர்காலத்தில் நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை காலிமனை நூலக ஆணைக் குழு பெயருக்கு பத்திரப்பதிவு செய்துதரப்பட வேண்டும்.

(3) 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

(4) ரூ.2,000/- மதிப்புள்ள தளவாடங்கள் நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.

(5) தலா ரூ.1,000/- வீதம் செலுத்தி இரண்டு புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.



2002 ஏப்ரல் 18]

3—

**நூல் நிலையம்**

**வினா 10208—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி பேரூராட்சிக்கு உட்பட்ட செந்நீர் குப்பத்தில் பொது நூல் நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது செயல்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி பேரூராட்சிக்கு உட்பட்ட செந்நீர் குப்பத்தைச் சார்ந்த பொதுமக்கள் கீழ்க்கண்ட நிபந்தனைகளை நிறைவு செய்யாததால் அவ்வூரில் நூலகம் அமைக்க இயலவில்லை:—

(1) நூலகம் இயங்க வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்.

(2) எதிர்காலத்தில் நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை காலிமனை நூலக ஆணைக் குழு பெயருக்கு பத்திரப்பதிவு செய்துதரப்பட வேண்டும்.

(3) 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

(4) ரூ.2,000/- மதிப்புள்ள தளவாடங்கள் நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.

(5) தலா ரூ.1,000/- வீதம் செலுத்தி இரண்டு புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

4—

**சட்டக் கல்லூரி**

**வினா 2257—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சட்டக் கல்வித் துறையில் மூன்று ஆண்டு மாலை நேரக் கல்லூரி (இளங்கலை சட்டம்) மீண்டும் கொண்டுவர அரசு முயற்சி செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டத் துறை அமைச்சர்:**

இல்லை.

5—

**அண்ணா மருத்துவமனை**

**வினா 4770—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை, சென்னையுடன் இணைந்த மருந்து செய் நிலையத்தில் தயாரிக்கப்படும் மருந்துவகைகள் எத்தனை?

(ஆ) அவைகள் கடந்த 2000-2001-ல் செய்த விற்பனைத் தொகை எவ்வளவு?

(இ) அதில் மிக அதிக அளவிற்கு விற்பனை செய்யப்பட்ட மருந்து வகை என்ன?

(ஈ) அது எந்த நோய் தீர்க்கப் பயன்படுகிறது?



விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் இணைந்த மருந்து செய் நிலையத்தில் சித்த மருந்து வகைகள் 109-ம், ஆயுர்வேத மருந்து வகைகள் 76-ம், யுனானி மருந்து வகைகள் 60-ம் தயாரிக்கப்படுகின்றன.

(ஆ) ரூ.1.30 கோடி மதிப்புள்ள மருந்துகள் அரசு மருத்துவப் பிரிவுகளுக்கு (இலவசமாக பொதுமக்களுக்கு வழங்குவதற்கு) வழங்கப்பட்டுள்ளன.

(இ) தைலங்கள் மிக அதிக அளவில் அரசு மருந்தககங்களுக்கு வழங்கப்பட்டன (இலவசமாக பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன) அதன் மதிப்பு ரூ.40.45 இலட்சங்கள்.

(ஈ) தைலங்கள் வாத சம்பந்தமான அனைத்து வியாதிகளையும், தோல் சம்பந்தமான வியாதிகளையும் தீர்க்க உதவுகிறது.

6—

**மூலிகை மருந்து தயாரித்தல்**

**வினா 4774—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை (டாம்ப்கால்) தமிழ்நாடு மூலிகை மருந்துக் கழகம் தயாரிக்கும் மருந்து வகைகள் எத்தனை?

(ஆ) கடந்த 2000-2001ஆம் ஆண்டில் அவற்றின் விற்பனை எவ்வளவு?

(இ) அதில் அதிக அளவில் விற்பனையாகியுள்ள மருந்து வகைகள் என்னென்ன?

(ஈ) அதில் குணப்படும் வியாதிகள் எவை?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2000-2001 ஆம் ஆண்டில் சென்னை (டாம்ப்கால்) தமிழ்நாடு மூலிகை மருந்துக் கழகம் தயாரிக்கும் மருந்து வகைகள் மற்றும் விற்பனை ஆகியவற்றிற்கான விடை இணைப்பு 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

(இ) மற்றும் (ஈ) அதிக அளவில் விற்பனையாகியுள்ள மருந்து வகைகள், அவை குணப்படுத்தும் வியாதிகள் ஆகியவற்றிற்கான விடை முறையே இணைப்பு 2 மற்றும் 3-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## இணைப்பு-1

தமிழ்நாடு மூலிகை மருந்துக் கழகம் தயாரிக்கும் மருந்து வகைகள் மற்றும் 2000-2001-ல் அவற்றின் விற்பனை விவரம்

| வ.எண் | மருந்தின் பெயர் | 2000-2001-ல் விற்பனை (ரூ) |
|---|---|---|
| 1. | அமுக்குரா சூரணம்/மாத்திரை | 13,08,501.00 |
| 2. | ஏலாதி சூரணம்/மாத்திரை | 13,94,609.00 |
| 3. | தயிர் கண்டி சூரணம்/மாத்திரை | 2,32,733.00 |
| 4. | தாளிசாதி சூரணம்/மாத்திரை | 11,85,974.00 |
| 5. | திரிகடுகு சூரணம்/மாத்திரை | 2,66,832.00 |
| 6. | திரிபலா சூரணம்/மாத்திரை | 3,31,060.00 |
| 7. | நிலவாகை சூரணம்/மாத்திரை | 3,12,608.00 |
| 8. | பரங்கிப்பட்டை சூரணம்/மாத்திரை | 12,67,013.00 |
| 9. | பிண்ட தைலம் | 32,94,524.00 |
| 10. | வாத கேசரி தைலம் | 21,80,854.00 |
| 11. | புங்கன் தைலம் | 14,41,653.00 |
| 12. | அருகன் தைலம் | 13,24,290.00 |
| 13. | உளுந்து தைலம் | 6,73,940.00 |



| வ.எண் | மருந்தின் பெயர் | 2000-2001-ல் விற்பனை (ரூ) |
|---|---|---|
| 14. | கரப்பான் தைலம் | 11,60,645.00 |
| 15. | மத்தன் தைலம் | 8,25,190.00 |
| 16. | கையான் தைலம் | 4,88,545.00 |
| 17. | ஓமத்தீ நீர் | 1,28,619.00 |
| 18. | அஸ்வகந்தா லேகியம் | 34,64,268.00 |
| 19. | சயவனப்பிராஷ் லேகியம் | 14,99,929.00 |
| 20. | தேற்றான் கொட்டை லேகியம் | 7,43,519.00 |
| 21. | வெண்பூசணி லேகியம் | 7,02,802.00 |
| 22. | சிலாசித்து பற்பம்/மாத்திரை | 2,09,760.00 |
| 23. | ஆமை ஓடு பற்பம்/மாத்திரை | 50,350.00 |
| 24. | குங்கிலிய பற்பம்/மாத்திரை | 1,16,515.00 |
| 25. | முத்துச்சிற்பி பற்பம்/மாத்திரை | 1,61,422.00 |
| 26. | சங்கு பற்பம்/மாத்திரை | 2,10,321.00 |
| 27. | பலகரை பற்பம்/மாத்திரை | 46,149.00 |
| 28. | அன்ன பேதி செந்தூரம் எண் 1 | 2,84,672.00 |
| 29. | நிலவேம்பு குடிநீர் | 4,69,265.00 |
| 30. | மண்டூராதி குடிநீர் | 1,49,480.00 |
| 31. | அமிர்த வெண்ணெய் | 3,15,184.00 |
| 32. | டாம்ப்கால் பெயின் பாம் | 24,940.00 |
| 33. | டாம்பிடைசர் சிரப் | 1,830.00 |
| 34. | பெமி கியூர் சிரப் | 1,750.00 |
| 35. | லிவ் 2000 சிரப் | 2,150.00 |
| 36. | வல்லாரின் மாத்திரை | 1,15,830.00 |
| 37. | சுவாச குடோரி மாத்திரை | 44,304.00 |
| | மொத்தம் | 2,71,00,891.00 |

[2002 ஏப்ரல் 18

இணைப்பு-2

**டாம்ப்கால்**

2000-2001-ல் அதிக அளவில் விற்பனையாகியுள்ள மருந்து வகைகள்:

1. அஸ்வகந்தா லேகியம்
2. பிண்ட தைலம்
3. சயவனப்பிராஷ் லேகியம்
4. வாத கேசரி தைலம்
5. புங்கன் தைலம்
6. ஏலாதி சூரணம்
7. அருகன் தைலம்

| வ. எண் | மருந்தின் பெயர் சூரணங்கள் | உபயோகமும் அளவும் மற்றும் குணப்படுத்தும் வியாதிகள் |
|---|---|---|
| 1. | அமுக்கரா சூரணம் | 8 வகைப்படுத்தப்பட்ட குன்ம வயிற்று நோய்கள் இடப்பாட்டு ஈரல்நோய், குத்து வாய்வு, வெட்டை விக்கல், இரத்த சோகை, இரைப்பு நோய், இளைப்பு நோய், வறட்சி, கை கால் எரிவு தீரும், உடல் பெருக்கும், மூட்டுவாத நோய்கள், ஆண்மைக் குறைவு முதலியன குணமாகும். அளவு: 1-2 கிராம் தினம் 3 வேளை தேன், பால், இளம் வெந்நீர் இவற்றில் சாப்பிடலாம். |
| 2. | ஏலாதி சூரணம் | வாந்தி, தலைசுற்றல், வயிற்று |



2002 ஏப்ரல் 18]

| வ. எண் | மருந்தின் பெயர் சூரணங்கள் | உபயோகமும் அளவும் மற்றும் குணப்படுத்தும் வியாதிகள் |
|---|---|---|
| | | எரிச்சல், ஊறல், சிறு நச்சுக்கடி, பெரும்பாடு, எலும்புருக்கி நோய், சொறி, சிரங்கு, புண். அளவு: 1-2 கிராம். தினம் 2 வேளை தேன், நீர், பாலில் அருந்தலாம். |
| 3. | தயிர்கண்டி சூரணம் | நாட்பட்ட கழிச்சல், செரியாமை போன்றவை குணமாகும். அளவு: 2-லிருந்து 3 கிராம். இருமுறை தினமும் இளம் வெந்நீருடன். |
| 4. | தாளிசாதி சூரணம் | இருமல், சுரம், என்புருக்கி, தொண்டைக் கட்டு, வயிற்றுவலி, காமாலை, வயிற்று எரிவு, நீர்ச்சுருக்கு, வாயில் நீர் சுரத்தல், வெள்ளை தாகம், பொறுமல் மயக்கம், கை, கால் குடைச்சல், காதிரைச்சல், மருந்திடு 1/2 முதல் 1 கிராம்-தினம் 2 வேளை தேனுடன். |
| 5. | திரிகடுகு சூரணம் | பசியின்மை, இருமல், வயிற்றுப் பொறுமல், செரியாமை, வயிற்றுவலி, சுரம் போன்றவை குணமாகும். அளவு: 1-2 கிராம். தினமும் இருவேளை நீருடன். |

[2002 ஏப்ரல் 18

| வ. எண் | மருந்தின் பெயர் சூரணங்கள் | உபயோகமும் அளவும் மற்றும் குணப்படுத்தும் வியாதிகள் |
|---|---|---|
| 6. | திரிபலா சூரணம் | வயிற்று எரிச்சல், மலக்கட்டு போன்றவை குணமாகும், மேலும் தண்ணீரிலிட்டு வாய் கொப்பளித்தால் வாய்ப் புண் குணமாகும்.<br>அளவு: 1-2 கிராம் தினமும் இரு வேளை. |
| 7. | நிலவாகை சூரணம் | வாய்வு, விக்கல், மலக்கட்டு, வயிறு பொறுமல் போன்றவை குணமாகும்.<br>அளவு: 1-2 கிராம் தினமும் இருவேளை நீருடன் (சூடான) |
| 8. | பாங்கிப் பட்டை சூரணம் | தோல் நோய்கள், பசி மந்தம் போன்றவை குணமாகும். மேலும் மேனிக்கு பொலிவூட்டும்.<br>அளவு: 1-2 கிராம். தினமும் இரு வேளை தேன் அல்லது பாலுடன். |
| 9. | மத்தன் தைலம் | படை, சொறி, சிரங்கு மற்றும் ஆறாத புண்களும் குணமாகும், வெளிப் பிரயோகம் மட்டும். துணியில் தோய்த்து புண்களுக்குக் கட்டலாம். |
| 10. | வாத கேசரி தைலம் | பக்கவாதம், மூட்டு வாதம், திமிர்வாதம் முதலியன நீங்கும். (வெளிப்பிரயோகம் மட்டும்) |



2002 ஏப்ரல் 18]

| வ. எண் | மருந்தின் பெயர் சூரணங்கள் | உபயோகமும் அளவும் மற்றும் குணப்படுத்தும் வியாதிகள் |
|---|---|---|
| 11. | உளுந்து தைலம் | தசை கும்பல், இளம்பிள்ளை வாதம். நரம்புத் தளர்ச்சி, நடுக்கம் போன்றவை குணமாகும். (இது ஆயுர்வேத மருத்துவத்தில் மாச தைலம் என அழைக்கப்படுகிறது) (வெளிப் பிரயோகம் மட்டும்) |
| 12. | புங்கன் தைலம் | சொறி, சிரங்கு, புண்கள், புரையோடும் புண் போன்றவை குணமாகும். (வெளிப் பிரயோகம் மட்டும்.) |
| 13. | கரப்பான் தைலம் | கரப்பான் முதலிய தோல் சம்பந்தப்பட்ட வியாதிகள் குணமாகும். (வெளிப் பிரயோகம் மட்டும்) |
| 14. | பிண்ட தைலம் | பக்கவாதம், மூட்டு வாதம் முதலிய எல்லா வகையான வாத நோய்களையும் குணமாக்கும். (வெளிப் பிரயோகம் மட்டும்) |
| 15. | கையான் தைலம் | வெளிப் பிரயோகம்: (தலையில் தேய்த்தல்) கண்பார்வை மங்கல், உடம்பிலுள்ள அதிகச் சூடு போன்றவை குணமாகும்.<br>உள் பிரயோகம்: பித்தத்தினால் வரும் மயக்கத்தை நீக்கி கண்ணுக்குக் குளிர்ச்சியையும் கண் ஒளியூட்டவும் செய்யும். சளியுடன் கூடிய இருமல் நீங்கும்.<br>அளவு 5 மிலி- 10 மிலி. தினம் 2 வேளை. |

[2002 ஏப்ரல் 18

| வ. எண் | மருந்தின் பெயர் சூரணங்கள் | உபயோகமும் அளவும் மற்றும் குணப்படுத்தும் வியாதிகள் |
|---|---|---|
| 16. | லேகியம் அஸ்வகந்தா லேகியம் | குருதி நோய்கள், ஆண்மைக் குறைவு, நரம்புத் தளர்ச்சி போன்றவை குணமாகும். அளவு 6-12 கிராம் தினமும் இருவேளை பாலுடன். |
| 17. | தேற்றான் கொட்டை லேகியம் | என்புருக்கி நோய், பசிமந்தம், மூலம், பவுத்திரம், சுவையின்மை, வெள்ளை வெட்டை போன்றவை குணமாகும். உடலுக்கு குளிர்ச்சியைத் தரும். தினமும் இருவேளை. 5 கிராம் நாக பற்பத்துடன் உண்டால் ரத்த மூலம் குணமாகும். |
| 18. | சயவனப் பிராஷ் லேகியம் | மேகம், என்புச்சுரம், இளைப்பு நோய், இருமல் போன்ற நோய்கள் குணமாகும். இது ஓர் உயிர்ச்சத்து (விட்டமின் சி) நிறைந்த மருந்தாகும். வயிற்றுப் பொறுமல், தினக் கழிச்சல் குணமாகும். அளவு: 10-20 கிராம் தினமும் இரு வேளை பாலுடன். |
| 19. | வெண் பூசணி லேகியம் | மஞ்சள் காமாலை, உடம்பு வெளுத்து ஊதல், வெட்டை நீர்க்கடுப்பு போன்றவை குணமாகும். மேலும் இது குளிர்ச்சியை ஊட்டி ஆண்மைக் குறைவை சரிசெய்ய வல்லது. என்புச்சுரம் நீங்கும். மெலிந்த உடம்பைப் பருக்கச் செய்யும். அளவு: 5-10 கிராம். தினம் 2 வேளை. |



2002 ஏப்ரல் 18]

| வ. எண் | மருந்தின் பெயர் சூரணங்கள் | உபயோகமும் அளவும் மற்றும் குணப்படுத்தும் வியாதிகள் |
|---|---|---|
| 20. | பற்பம் சிலா சத்து பற்பம் | மூத்திர எரிவு, வெள்ளை சிறு நீர்க்கட்டு போன்ற சூட்டினால் வரும் வியாதிகள் குணமாகும். கால்சிய சத்துக் குறைவை நிவர்த்தி பண்ணும். அளவு: 125-325 மில்லி கிராம். |
| 21. | ஆமை ஓடு பற்பம் | வெண்ணெய், நெய்யுடன் உண்ணலாம். குழந்தைகளின் வயிற்று மாந்தம், கழிச்சல், கணச்சூடு போன்றவை குணமாகும். அளவு: 100-200 மில்லி கிராம். பாலுடன் அல்லது நீருடன். |
| 22. | குங்கிலிய பற்பம் | வெள்ளை, சிறுநீர் எரிச்சல், நீர்க்கட்டு போன்றவை குணமாகும். அளவு : 100-300 மி.கிராம். இளநீர், நெய், வெண்ணெய் இவற்றுடன் சாப்பிடலாம். |
| 23. | முத்துச் சிற்பி பற்பம் | இருமல், உடல் வெப்பம், மூலம், பவுத்திரம் போன்றவை குணமாகும். அளவு: 200-400 மி.கி. தண்ணீர், பால், சர்க்கரை, நெய், வெண்ணெயுடன் சாப்பிடலாம். |

[2002 ஏப்ரல் 18

| வ. எண் | மருந்தின் பெயர் சூரணங்கள் | உபயோகமும் அளவும் மற்றும் குணப்படுத்தும் வியாதிகள் |
|---|---|---|
| 24. | சங்கு பற்பம் | வயிற்றுவலி, வயிற்றுப்புண், கண் பார்வை மங்கல், கால்சியம் சத்துக் குறைவு போன்றவற்றை நிவர்த்தி பண்ணும்.<br>அளவு: 100-300 மி.கி. நெய்யுடன் தினமும் 2 வேளை. |
| 25. | பலகரை பற்பம் | வெள்ளைப் படுதல், நீர்க்கட்டு, சிறுவிடங்கள் குன்மம், போன்றவை குணமாகும்.<br>அளவு: 100-200 மி.கி. இருவேளை பாலுடன். |
| 26. | செந்தூரம் அன்னபேதி செந்தூரம் எண் 1 | இரும்புச் சத்துக் குறைவு, சோகை, செரியாமை, பசியின்மை, கடுப்புக் கழிச்சல் போன்றவை குணமாகும்.<br>அளவு: 100-200 மி.கி. வெண்ணெய் அல்லது தேனுடன். |
| 27. | நிலவேம்பு குடிநீர் | விஷ சுரம் மற்றும் பொதுவான சுரங்களும் குணமாகும்.<br>அளவு: 30-60 மி.லி. இரண்டு அல்லது மூன்று வேளை. |
| 28. | மண்டூராதி குடிநீர் | உடல் வெளுப்பு நோய், உடல் வீக்கம், காமாலை, கல்லீரல் வீக்கம், மண்ணீரல் வீக்கம் போன்றவை குணமாகும்.<br>அளவு: 30-60 மி.லி. |



2002 ஏப்ரல் 18]

| வ. எண் | மருந்தின் பெயர் சூரணங்கள் | உபயோகமும் அளவும் மற்றும் குணப்படுத்தும் வியாதிகள் |
|---|---|---|
| 29. | வெண்ணெய் அமிர்த வெண்ணெய் | நாள்பட்ட புண்கள், கண்டமாலை, பிளவை, நெறிக்கட்டு அரையாப்பு போன்றவை குணமாகும், (வெளிப் பிரயோகம் மட்டும்) |
| 30. | வங்க வெண்ணெய் | தோல் பூஞ்சை நோய்கள், காயங்கள், புண்கள் போன்றவை குணமாகும். (வெளிப் பிரயோகம் மட்டும்) |
| 31. | தீநீர் ஓமதீநீர் | வயிற்றுப்போக்கு, செரியாமை, பசியின்மை போன்றவை குணமாகும்.<br>அளவு: 15-30 மி.லி. |
| 32. | சிரப் டாம்பிடைசர் | பசியின்மை, குருதிக் குறைவு, உடல் பலக்குறைவு போன்றவை குணமாகும்.<br>அளவு: 10-20 மி.லி. இரு வேளை தினமும். |
| 33. | பெமி கியூர் | கருப்பை சம்பந்தப்பட்ட கோளாறுகள், பிறப்பு உறுப்பின் வீக்கம், சூட்டினால் வரும் தொண்டைக்கட்டு, சோபை, நீர்க்கட்டு போன்றவை குணமாகும்.<br>அளவு: 10-20 மி.லி. தினமும் இருவேளை. |

[2002 ஏப்ரல் 18

| வ. எண் | மருந்தின் பெயர் சூரணங்கள் | உபயோகமும் அளவும் மற்றும் குணப்படுத்தும் வியாதிகள் |
|---|---|---|
| 34. | பெயின்பாம் (வலி நிவாரணி) டாம்ப்கால் பெயின்பாம் | சளி, இருமல், மூக்கடைப்பு, தலைவேதனை, அடிபட்ட வேதனை, மூட்டுவலி, நரம்பு சுளுக்கு போன்றவை குணமாகும். (வெளிப் பிரயோகம் மட்டும்) |
| 35. | மாத்திரைகள் வல்லாரின் மாத்திரை | ஞாபகக் குறைவு, மூளை பலக்குறைவு, உடல் பலக்குறைவு போன்றவற்றை நிவர்த்தி செய்யும். சோர்வைப் போக்கும். அளவு: 1-2 மாத்திரை பாலுடன். |
| 36. | அருகன் தைலம் | அனைத்து சரும நோய்கள் |
| 37. | லிவ் 2000 சிரப் | கல்லீரலைப் பாதுகாத்தல், அனைத்து கல்லீரல் சம்பந்தப் பட்ட நோய்கள், மஞ்சள் காமாலை. |
| 38. | சுவாச குடோரி மாத்திரை | இரைப்பு, இருமல், காசம். |

7—

**ஆயுர்வேத மூலிகை**

**வினா 7263—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆயுர்வேத மூலிகையான சிறுகண்பிளைச் செடியின் மருத்துவப் பயனை மக்களிடையே பரப்புவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



2002 ஏப்ரல் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிறுகண்பிளைச் செடி, மருந்துகள் தயாரிக்கத் தேவைப்படும்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதனைத் தனிப்பட்ட மூலிகையாக அதிக அளவில் பயன்படுத்துவதில்லை. மற்ற மருந்துகளுடன் சேர்த்தே பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆகவே அச்செடியின் மருத்துவப் பயனை தற்சமயம் அதிகமான அளவில் மக்களிடம் பரப்பும் திட்டம் ஏதும் இல்லை.

8—

**சுற்றுச்சுவர்**

**வினா 4303—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஒன்றியம், கே.கே. நகர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த நடுநிலைப் பள்ளிக்குப் பொதுமக்கள் அளித்த நிதியில் நமக்கு நாமே திட்டத்தில் சுற்றுச்சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், கே.கே. நகர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி இடங்கணசாலை பேரூராட்சிப் பகுதியில் அமைந்துள்ளது. இப்பள்ளி தற்போது உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டுள்ளது. இப்பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டுவது அவசியமாகும். 2001-2002 ஆம் ஆண்டில் கிராமத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் சுற்றுச்சுவர் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

9—

## பாலம் அமைத்தல்

**வினா 5160—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், மழவராயநல்லூர் ஊராட்சி, கருப்பட்டி மூலை கிராமத்திற்குச் செல்லும் ஆற்றுப்பாலம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால், புதிய பாலம் அமைக்கும் திட்டம் அரசிடத்தில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், மழவராயநல்லூர் ஊராட்சி, கருப்பட்டி மூலை கிராமத்திற்குப் புதிய ஆற்றுப்பாலம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை. இந்தப் பாலம் கட்ட ரூ. 18 இலட்சம் தேவைப்படும். கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் பாலம் கட்டப் போதுமான நிதி வசதி தற்சமயம் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

10—

## கிணற்றினைத் தூர்வாருதல்

**வினா 6464—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், ஓடைமறிச்சான் கிராமத்தில் சர்ச் தெருவில் கிணற்றிலுள்ள குப்பையை அப்புறப்படுத்தி, கிணற்றிலுள்ள தண்ணீரைப் பயன்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?



(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், ஓடைமறிச்சான் கிராமத்தில் சர்ச் தெருவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து 5 நல்லிகள் மூலம் குடிதண்ணீர் நல்ல முறையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேல்நிலைத் தொட்டி மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்படுவதால் இத்தெருவிலுள்ள கிணறு பல ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படாமல் உள்ளது. இந்தக் கிணற்றினைத் தூர்வாரி தண்ணீரைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் தற்சமயம் எழவில்லை.

11—

## அடிபம்பு அமைத்தல்

**வினா 6608—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், ஓடைமறிச்சான் பேருந்து நிலையம் அருகே அப்புறப்படுத்தப்பட்ட அடிபம்பை மீண்டும் அவ்விடத்தில் நிறுவ அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், ஓடைமறிச்சான் ஊராட்சியில் பேருந்து நிலையம் அருகே நடப்பு நிதியாண்டில் வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் ரூ. 21,039/- செலவில் புதிதாக அடிபம்பு 29.8.2001 அன்று அமைக்கப்பட்டுள்ளது.

12— [2002 ஏப்ரல் 18

**தெருவிளக்கு அமைத்தல்**

**வினா 6616—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி மெயின்ரோடு, வடக்குத் தெரு, பிள்ளையார்கோயில் தெருக்களில் தெருவிளக்கு அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி மெயின்ரோடு, வடக்குத் தெரு மற்றும் பிள்ளையார்கோயில் தெருக்களில் ஏற்கெனவே 2 குழல் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. கூடுதலாகத் தெருவிளக்கு அமைக்க தற்போது சாத்தியமில்லை.

13—

**கூடுதல் தெருவிளக்கு அமைத்தல்**

**வினா 6617—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், தெற்கு மடத்தூர் ஊராட்சி, சங்கரலிங்கபுரம், பிள்ளையார்கோயில் தெருவில் தெருவிளக்கு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி, கடையம் ஊராட்சி ஒன்றியம், தெற்கு மடத்தூர் ஊராட்சி, சங்கரலிங்கபுரம், பிள்ளையார்கோயில்



2002 ஏப்ரல் 18]

தெருவில் 1 சோடியம் விளக்கும், 4 குழல் விளக்குகளும் ஏற்கெனவே அமைக்கப்பட்டு நல்ல முறையில் எரிந்து வருகின்றன. கூடுதலாக தெருவிளக்குகள் அமைக்க தற்போது சாத்தியமில்லை.

14—

**கிணறு தூர் வாருதல்**

**வினா 6737—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி பேரூராட்சி, சங்கராபுரம் காலனி குடிநீர்க் கிணற்றைத் தூர்வார அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செஞ்சி பேரூராட்சி, சங்கராபுரம் காலனி பகுதியில் குடிநீர் வடிகால் வாரியத் திட்டத்தின் மூலம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. அப்பகுதியில் உள்ள கிணறுகளில் நீர் ஆதாரங்கள் இல்லை என்பதால் குடிநீர்க் கிணறுகளைத் தூர் எடுக்கும் சாத்தியக்கூறு இல்லை.

15—

**புதிய தெருவிளக்கு அமைத்தல்**

**வினா 6796—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியம், தெற்கு மயிலாபுரம் கிராமத்தில் புதிதாகத் தெருவிளக்கு ஒன்று அமைத்துக் கொடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியம், தெற்கு மைலாபுரம் கிராமத்தில் 1 சோடியம் விளக்கு, 7 குழல் விளக்குகள் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளன. கூடுதலாகத் தெருவிளக்குகள் அமைக்க தற்போது சாத்தியமில்லை.

16—

**நல்லிகள் அமைத்தல்**

**வினா 6807—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியம், வெங்கடாம்பட்டி ஊராட்சி, கோவிலூத்து கிராமத்தில் இரண்டு நல்லிகள் அமைத்துக் கொடுக்கப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியம், வெங்கடாம்பட்டி ஊராட்சி, கோவிலூத்து கிராமத்தில் மூன்று ஆழ்குழாய்க் கிணறுகள் மற்றும் இரண்டு பொது நல்லிகள் ஏற்கெனவே அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. கூடுதலாக இரண்டு நல்லிகள் அமைக்க தற்சமயம் இயலாது.

17—

**கூடுதல் தெருவிளக்கு**

**வினா 6810—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



*(அ)* சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், அ.பெ. நாடாலூர் ஊராட்சி, முருகாண்டியூர் கிராமத்தில் விடுபட்ட தெருக்களுக்கு தெருவிளக்கு அமைத்துக் கொடுக்கப்படுமா ?

*(ஆ)* ஆம் எனில், எப்போது ?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், அ.பெ. நாடாலூர் ஊராட்சி, முருகாண்டியூர் கிராமத்தில் 1 சோடியம் விளக்கு மற்றும் 10 குழல் விளக்குகள் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளன. கூடுதலாகத் தெருவிளக்கு அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

18—

**நிழற்குடை அமைத்தல்**

**வினா 6817—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம் உலுப்பட்டிப்பாதையில் பஸ் பயணிகள் நிழற்குடை அமைக்கப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* இல்லை.

19—

**பொது விநியோகம்**

**வினா 2946—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டு வரை பொது விநியோகத்திற்கான மண்ணெண்ணெய் விநியோகத்தில் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) பொது விநியோகத் திட்டத்திற்கான மண்ணெண்ணெய் விநியோகத்தில் 2000 ஆண்டில் 26,691 குற்றங்களும், 2001 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை 13,949 குற்றங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

(ஆ) மேற்காணும் குற்றங்கள்மீது தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டதில் 2000 ஆண்டில் ஒரு கைவண்டி உரிமமும், 15 சில்லறை உரிமங்களும் ரத்து செய்யப்பட்டன. மேலும், பிற குற்றங்களுக்கு அபராதமாக ரூ. 29,51,940/- விதிக்கப்பட்டது. அதுபோல் 2001 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்களுக்கு ஒரு கைவண்டி உரிமமும், 3 சில்லறை உரிமங்களும் ரத்து செய்யப்பட்டன. மேலும் பிற குற்றங்களுக்கு அபராதமாக ரூ. 9,30,449/- விதிக்கப்பட்டது.

20—

## அமுதம் அங்காடி

**வினா 12851—திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, கொத்தட்டை கிராமத்திற்குப் புதிதாக அமுதம் அங்காடி கட்டடம் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம் வட்டம், புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் இயங்கும் சின்னக்குமட்டி நியாயவிலைக் கடையின்கீழ் கொத்தட்டை கிராமத்தில் ஒரு பகுதி நேர நியாயவிலைக்கடை 231 குடும்ப அட்டைகளுடன் இயங்கி வருகிறது. இக்கடை பகுதிநேரக் கடையாக உள்ளதால், அரசு விதிமுறைகளின்படி இதற்கு நியாயவிலைக் கடைக் கட்டடம் தனியாகக் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

21—

## சாலை அமைத்தல்

**வினா 5901—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரும்பு அபிவிருத்தி சாலைகள் காஞ்சிபுரம் மாவட்டத்தில் செங்கற்பட்டு, திருக்கழுக்குன்றம் வட்டங்களில் மிகவும் மோசமாக உள்ளதை அரசு அறியுமா/

(ஆ) பழுதடைந்துள்ள சாலைகள் எப்பொழுது சீரமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு வட்டத்தில் கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டத்தைச் சார்ந்த சாலைகள் ஏதும் இல்லை. திருக்கழுக்குன்றம் வட்டத்தில் நெரும்பூர்-கன்னிகோயில் கி.மீ. 0/0-8/2 என்ற ஒரு சாலை மட்டும் கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டத்தைச் சார்ந்ததாகும். இச்சாலையினை கடலூர் கோட்டத்திற்கு ஒதுக்கப்படும் ஆண்டு பராமரிப்பு நிதியின்கீழ் சீர்செய்ய கடந்த 1999-2000 ஆண்டில் தனிச்சீர் வேலைத் திட்டத்தின்கீழ் ரூ. 39.83 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் ஒப்புதல் அளிக்கப்பட்டு கி.மீ. 6/0-8/0-ல் மட்டும் ரூ. 10.55 இலட்சத்தில் சாலைச் சீரமைப்புப் பணி முடிக்கப்பட்டுள்ளது. அதில் எஞ்சியுள்ள சாலைப் பகுதிகளில் ரூ. 29.28 இலட்சத்தில் சீரமைப்புப் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளது.

22— [2002 ஏப்ரல் 18

## கசிவுநீர்க் குட்டை

**வினா 13604—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியம், அஜ்ஜனஅள்ளி ஊராட்சியில் கசிவுநீர்க் குட்டைகள் கட்ட அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) கசிவுநீர்க் குட்டைகள் கட்ட நிதி ஒதுக்கீடு இல்லாததால், தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியம், அஜ்ஜனஅள்ளி ஊராட்சியில் கசிவுநீர்க் குட்டைகள் கட்ட இயலவில்லை.

(ஆ) எழவில்லை.

23—

## நிலக்கடலை சாகுபடி

**வினா 7850—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியத்தில் நிலக்கடலை எவ்வளவு ஏக்கரில் பயிரிடப்படுகிறது?

(ஆ) அவ்வாறு பயிரிடப்படும் நிலக்கடலையின் மொத்த உற்பத்தி அளவு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியத்தில் நிலக்கடலை சாகுபடி இயல்பான பரப்பு 13.750 ஏக்கர். 2000-2001 ஆம் ஆண்டு இப்பகுதியில் 8.337 ஏக்கர் பரப்பில் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டது.

(ஆ) தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியத்தில் நிலக்கடலைப் பயிரின் இயல்பான மொத்த உற்பத்தி 8855 மெட்ரிக் டன்கள் ஆகும்.



கடந்த 2000-2001 ஆம் ஆண்டு இப்பகுதியில் 4116 மெட்ரிக் டன் நிலக்கடலை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

24—

## நிலக்கடலை உற்பத்தி

**வினா 11424—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, தருமபுரி ஒன்றியத்தில் நிலக்கடலை எவ்வளவு ஏக்கரில் பயிரிடப்படுகிறது?

(ஆ) அவ்வாறு பயிரிடப்படும் நிலக்கடலையின் மொத்த உற்பத்தி அளவு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி தொகுதி, தருமபுரி ஒன்றியத்தில் நிலக்கடலை சாகுபடி இயல்பான பரப்பு 12,500 ஏக்கர். 2000-2001 ஆம் ஆண்டு இப்பகுதியில் 5340 ஏக்கர் பரப்பில் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டது.

(ஆ) தருமபுரி தொகுதி, தருமபுரி ஒன்றியத்தில் நிலக்கடலைப் பயிரின் இயல்பான மொத்த உற்பத்தி 8125 மெட்ரிக் டன்கள் ஆகும். கடந்த 2000-2001 ஆம் ஆண்டு இப்பகுதியில் 3471 மெட்ரிக் டன் நிலக்கடலை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

25—

## கசிவுநீர்க் குட்டை

**வினா 13603—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியம், நாகமரை ஊராட்சியில் கசிவுநீர்க் குட்டைகள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) கசிவுநீர்க் குட்டைகள் கட்ட நிதி ஒதுக்கீடு இல்லாததால், தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியம், நாகமரை ஊராட்சியில் கசிவுநீர்க் குட்டைகள் கட்ட இயலவில்லை.

(ஆ) எழவில்லை.

26—

**பயிர்கள் சாகுபடி**

**வினா 13696—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடியில் காணப்படும் நவீன தொழில்நுட்பத்தை விவசாயிகளிடையே பிரபலமடையச் செய்ய அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில், தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடியில் காணப்படும் நவீன தொழில்நுட்பத்தை விவசாயிகளிடையே பிரபலமடையச் செய்ய ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம், மைய அரசுத் திட்டங்களின்கீழ் பழச்செடிகள், காய்கறிகள், மினி கிட்டுகள் வழங்கப்பட்டு உரிய தொழில்நுட்ப ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் முக்கிய பயிர்களுக்கு, செயல்விளக்கப் பாத்திகள் அமைக்கப்பட்டு, நவீன தொழில்நுட்பத்தை நேரடியாகக் காண்பதற்கு பயிற்சி மற்றும் விவசாயிகளுக்குச் சுற்றுலா போன்றவை ஏற்பாடு செய்து தரப்படுகிறது.



27—

**குட்டை அமைத்தல்**

**வினா 13753—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியம், சின்னம்பள்ளி, பிக்கில், தித்தியோப்பன அள்ளி, பெரும்பாலை, மஞ்சாரஅள்ளி, கெண்டையனஅள்ளி மற்றும் கஞ்சல்நத்தம் ஆகிய ஊராட்சிகளில் கசிவுநீர்க் குட்டைகள் அமைக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) கசிவுநீர்க் குட்டைகள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு இல்லாததால், தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியம், சின்னம்பள்ளி, பிக்கில், தித்தியோப்பனஅள்ளி, பெரும்பாலை, மஞ்சாரஅள்ளி, கெண்டையனஅள்ளி மற்றும் கஞ்சல்நத்தம் ஆகிய ஊராட்சிகளில் கசிவுநீர்க் குட்டைகள் கட்ட வாய்ப்பில்லை.

(ஆ) எழவில்லை.

28—

**பாசன வசதி**

**வினா 14233—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் 1999-2000, 2000-2001 ஆம் ஆண்டில் காவிரிப் பாசனப் பகுதியில் மத்திய, மாநில அரசுகளின் சம நிதி உதவியுடன் விவசாய பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்காக எவ்வளவு தொகை செலவிடப்பட்டது?

[2002 ஏப்ரல் 18

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் மத்திய, மாநில அரசுகளின் சம நிதியுதவியுடன் பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதில் காவிரிப் பாசனப் பகுதியில் 1999-2000 மற்றும் 2000-2001 ஆம் ஆண்டில் பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் செலவிடப்பட்ட தொகை வருமாறு:

| வருடம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1999-2000 | 2184.32 |
| 2000-2001 | 1455.38 |

| விவரக் கூறுகள் | | (ரூபாய் இலட்சத்தில்) | |
|---|---|---|---|
| வரிசை எண் | பணிகள் | 1999-2000 | 2000-2001 |
| 1. | பணியாளர் தொகுதி செலவினம் | 203.93 | 116.99 |
| 2. | சர்வே மற்றும் திட்டமிடல் செயல்படுத்துதல் செலவினம் | 642.39 | 629.34 |
| 3. | பண்ணை மேம்பாட்டுப் பணிகள் | 1119.230 | 519.02 |
| 4. | சுழற்சிமுறைப் பாசனப் பணிகள் | 145.54 | 113.420 |
| 5. | மேலாண்மை மானியம் | 73.23 | 76.610 |
| | | 2184.320 | 1455.380 |



2002 ஏப்ரல் 18]

29—

**கசிவுநீர்க் குட்டைகள்**

**வினா 14243—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மைத் துறையின் மூலம் தமிழ்நாட்டில் 2000-2001 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட கசிவுநீர்க் குட்டைகள் எத்தனை?

(ஆ) அதற்கு மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

(இ) அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நிதி உதவியினால் கசிவுநீர்க் குட்டைகள் வேளாண்மைப் பொறியியல் துறையால் அமைக்கப்பட்டு வந்தன. இவற்றில் 2000-2001 ஆம் ஆண்டில் பதின்மூன்று கசிவுநீர்க் குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) ரூ. 15.67 இலட்சம் செலவில் பதின்மூன்று கசிவுநீர்க் குட்டைகள் 2000-2001 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டன.

(இ) மாவட்ட வாரியாக அமைக்கப்பட்ட கசிவுநீர்க் குட்டைகள் பின்வருமாறு:

| வஎண் | மாவட்டம் | 2000-2001 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட கசிவுநீர்க் குட்டைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | திருவண்ணாமலை | 1 |
| 2. | சேலம் | 7 |
| 3. | நாமக்கல் | 5 |
| | மொத்தம் | 13 |

[2002 ஏப்ரல் 18

30—

## எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி

**வினா 14332—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001 ஆம் ஆண்டில் நாமக்கல் மாவட்டத்தில் நிலக்கடலை, சூரியகாந்தி, எள், ஆமணக்கு மற்றும் சோயா வித்து எத்தனை மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

நாமக்கல் மாவட்டத்தில் 2000-2001 ஆம் ஆண்டில் எண்ணெய் வித்துக்கள் கீழ்க்கண்டவாறு உற்பத்தி செய்யப்பட்டுள்ளன:

**நிலக்கடலை:**

98,441 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டு 373 மெட்ரிக் டன் விதைகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

**எள்:**

1,454 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டு 1.79 டன் விதைகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

**சூரியகாந்தி:**

581 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டு 446 கிலோ விதைகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

**ஆமணக்கு:**

3,517 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டு 1.1 மெட்ரிக் டன் விதைகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

**சோயா:**

39 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டு 106 கிலோ விதைகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.



2002 ஏப்ரல் 18]

31—

## சோயா மொச்சை உற்பத்தி

**வினா 14359—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001 ஆம் ஆண்டில் எடப்பாடி தொகுதியில் சோயா மொச்சை வித்து எத்தனை மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

2000-2001 ஆம் ஆண்டில் எடப்பாடி தொகுதியில் சோயா மொச்சை 74.250 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

32—

## கசிவுநீர்க் குட்டை

**வினா 14417—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியத்தில் கசிவுநீர்க் குட்டைகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) கசிவுநீர்க் குட்டை அமைக்க நிதி ஒதுக்கீடு இல்லை. எனவே சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியத்தில் கசிவுநீர்க் குட்டை கட்ட வாய்ப்பு இல்லை.

(ஆ) எழவில்லை.

[2002 ஏப்ரல் 18

33—

## தோட்டக் கலை

**வினா 14425—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியத்தில் விளைபொருளின் தரத்தை மேம்படுத்த தரமான நடவுச் செடிகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பாப்பாக்குடி ஒன்றியத்தில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சிமலை அபிவிருத்தித் திட்டத்தின் மூலம், தரமான ஒட்டுக் கன்றுகள் மற்றும் பதியன்கள் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளின் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு 50 சத மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

34—

## நீர்வடிப் பகுதித் திட்டம்

**வினா 15250—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சிகளில் தேசிய மானாவாரி நீர்வடிப் பகுதித் திட்டத்தினை அரசு செயல்படுத்துமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2002 ஏப்ரல் 18]

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், குறிப்பாக 2002-2003 ஆம் ஆண்டில் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட, திருத்தப்பட்ட புதிய வழிமுறைகளின்படி, நவப்ரா திட்டம் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. நீர்ப்பாசன வசதி 30 சதவீதத்திற்கும் குறைவாக உள்ள பகுதிகளில்தான் இத்திட்டம் செயல்படுத்தப்படும். மேலும் புதிய வழிமுறைகளின்படி, மாவட்ட நீர்வடிக் குழுதான் புதிய நீர்வடிப் பகுதிகளுக்கு ஒப்புதல் வழங்கும்.

(ஆ) சேரன்மகாதேவி பகுதியிலுள்ள பத்தமடைப் பேரூராட்சியில் உள்ள பகுதிகள் திட்ட வழிமுறைகளுக்குட்பட்டிருந்தால் மாவட்ட நீர்வடிக் குழு பரிசீலித்த திட்டத்தைச் செயல்படுத்த ஒப்புதல் அளித்தால், தேசிய மானாவாரி நீர்வடிப் பகுதித் திட்டம் செயல்படுத்தப்படும்.

35—

## மண் பரிசோதனை

**வினா 15253—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சியில் மண் பரிசோதனை நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில் திருநெல்வேலியைத் தலைமையிடமாகக்கொண்டு ஒரு மண் பரிசோதனை நிலையம் செயல்பட்டு வருகிறது. சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சியையும் உள்ளடக்கி இந்த மண் பரிசோதனை நிலையம் செயல்பட்டு வருவதால், தற்போது சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடைப்

[2002 ஏப்ரல் 18

பேரூராட்சியில் தனியே ஒரு மண் பரிசோதனை நிலையம் அமைப்பதற்கான உத்தேசம் ஏதும் இல்லை.

36—

**உழவர் பயிற்சி நிலையம்**

**வினா 15254—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சியில் உழவர் பயிற்சி நிலையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) ஏற்கெனவே ஓர் உழவர் பயிற்சி நிலையம், திருநெல்வேலி மாவட்டத்தில் இயங்கி வருவதால், புதியதாக ஓர் உழவர் பயிற்சி நிலையம் திருநெல்வேலி மாவட்டத்தில் தொடங்கிட கருத்துரு ஏதும் அரசிடம் இல்லை. மேலும் புதியதாக உழவர் பயிற்சி நிலையம் தொடங்குவதற்கான அவசியமும் எழவில்லை.

37—

**வேளாண் இயந்திரம் வாங்குதல்**

**வினா 15260—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சியில் டிராக்டர் மற்றும் அறுவடை இயந்திரங்கள் அரசால் வாங்கப்பட்டு விவசாயிகளுக்கு வாடகைக்கு விட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



2002 ஏப்ரல் 18]

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) பத்தமடை பேரூராட்சி அருகில் உள்ள சேரன்மகாதேவியில் இயங்கும் வேளாண்மைப் பொறியியல் துறை உபகோட்டத்தில் விவசாயப் பெருமக்களுக்குத் தேவையான டிராக்டர் மற்றும் அறுவடை இயந்திரங்கள் வாடகைக்கு விடப்படுகின்றன. புதிய இயந்திரங்கள் வாங்குவதற்கான திட்டம் ஏதுமில்லை.

(ஆ) வினா எழவில்லை.

38—

**விதைப் பரிசோதனை நிலையம்**

**வினா 15271—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, மேலச்செவல் பேரூராட்சியில் விதைப் பரிசோதனை நிலையம் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விதைப் பரிசோதனை நிலையம் ஒன்று தற்பொழுது திருநெல்வேலியில் அம்மாவட்டம் முழுமைக்கும் சேவை செய்ய செயல்பட்டு வருவதால், சேரன்மகாதேவி தொகுதி, மேலச்செவல் பேரூராட்சியில் தனியாக மற்றொரு விதைப் பரிசோதனை நிலையம் அமைப்பதற்கான அவசியமில்லை.

**39—** [2002 ஏப்ரல் 18

## மண் பரிசோதனை நிலையம்

**வினா 15275—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேரன்மகாதேவி தொகுதி, மேலச்சேவல் பேரூராட்சியில் மண் பரிசோதனை நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* திருநெல்வேலி மாவட்டத்தில் திருநெல்வேலியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு மண் பரிசோதனை நிலையம் செயல்பட்டு வருகிறது. சேரன்மகாதேவி தொகுதி, மேலச்சேவல் பேரூராட்சியையும் உள்ளடக்கி இந்த மண் பரிசோதனை நிலையம் செயல்பட்டு வருவதால், தற்போது சேரன்மகாதேவி தொகுதி, மேலச் சேவல் பேரூராட்சிக்கென தனியே ஒரு மண் பரிசோதனை நிலையம் அமைப்பதற்கான உத்தேசம் ஏதும் இல்லை.

**40—**

## விதை விநியோகம்

**வினா 15276—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேரன்மகாதேவி தொகுதி, மேலச்சேவல் பேரூராட்சியில் சான்று பெற்ற விதைகள் தடையின்றிக் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?



2002 ஏப்ரல் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேரன்மகாதேவி தொகுதி, மேலச்சேவல் பேரூராட்சியில் சான்று பெற்ற விதைகள் தடையின்றிக் கிடைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. ஒவ்வொரு பகுதியிலும் அதன் இயல்பு பரப்பிற்கு ஏற்றவாறு, வேளாண்மை விரிவாக்க மையம் மூலம் சான்று பெற்ற விதை விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. அதேபோல், சேரன்மகாதேவி தொகுதி மற்றும் மேலச்சேவல் பேரூராட்சிப் பகுதியிலும் அதன் இயல்பு பரப்பிற்கு ஏற்றவாறு விதை மாற்று விகிதம் அரசு கொள்கையின்படி ஒவ்வொரு பயிருக்கும் சான்று விதை வேளாண்மை விரிவாக்க மையம் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் இது தவிர தனியார் நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவும், விவசாயிகள் மாறுதல் மூலமும் தேவையான விதைகள் தடையின்றி விவசாயிகளுக்குக் கிடைக்கிறது.

**41—**

## கல்வி உதவித் தொகை

**வினா 2770—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மாநில அரசின் கல்வி உதவித் தொகை ஆதிதிராவிட மாணவர்கள் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டது?

*(ஆ)* தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* 2000-2001 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மாநில அரசின் போஸ்ட்மெட்ரிக் கல்வி உதவித் தொகை மொத்தம் 15,801 ஆதிதிராவிடர்/பழங்குடியின மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

*(ஆ)* இதற்காக மாநில அரசு ரூ. 202.95 இலட்சம் வழங்கியுள்ளது.

[2002 ஏப்ரல் 18

42—

**கல்வி உதவித் தொகை**

**வினா 2773—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் மைய அரசின் கல்வி உதவித் தொகை ஆதிதிராவிடர் மாணவர்கள் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2000-2001 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் மைய அரசின் கல்வி உதவித்தொகை 7958 ஆதிதிராவிட மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட மொத்த தொகை ரூ. 94.57 இலட்சம் ஆகும்.

43—

**உணவருந்தகம்**

**வினா 8383—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி ஆதிதிராவிடர் நலத் துறை மாணவர் விடுதிக்கு உணவருந்தும் கட்டடம் கட்டிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செஞ்சி ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதியில் உணவருந்தும் கட்டடம் கட்ட செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



2002 ஏப்ரல் 18]

44—

**பேருந்து வசதி**

**வினா 4982—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, கிராமப் பகுதிகளுக்கு நெய்வேலி-பண்ருட்டி பேருந்து வசதி செய்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டியிலிருந்து நெய்வேலி நகரம் வரையில் 5 நகரப் பேருந்துகள் நாளொன்றுக்கு 62 நடைகளில் இயங்கி வருகின்றன. இது தவிர பிற இடங்களிலிருந்தும் பண்ருட்டி வழியாக சிதம்பரம், கும்பகோணம் மார்க்கமாகச் செல்லும் விழுப்புரம் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக மற்றும் சகோதர போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் நெய்வேலி நகரம் தொட்டு இயக்கப்பட்டு வருகின்றன. அதாவது மொத்தம் 60 பேருந்துகள் மூலம் பண்ருட்டியிலிருந்தும், நெய்வேலியிலிருந்தும் தொகுதி கிராம மக்களுக்கு பேருந்து வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்து வசதிகளே போதுமானதாகக் கருதப்படுகின்றன.

45—

**சுயவேலைவாய்ப்புத் திட்டம்**

**வினா 8235—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பிரதமர் நிதி உதவித் திட்டத்தின்கீழ் சுயதொழில் தொடங்க கடன் பெற்ற படித்த இளைஞர்கள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

பாரதப் பிரதமர் சுயவேலைவாய்ப்புத் திட்டம் 1993 ஆம் ஆண்டு அக்டோபர் 2 ஆம் நாள் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்நாளிலிருந்து 31-1-2002 வரை 1,05,226 நபர்களுக்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

46—

**வேலைவாய்ப்புத் திட்டம்**

**வினா 11572—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வேலை கோரி பதிவு செய்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களது வேலைவாய்ப்புக்கு அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வேலை கோரி பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை 2,07,056 ஆகும்.

(ஆ) வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வேலையளிப்போரால் தெரிவிக்கப்படும் பணி காலியிடங்களுக்கு மனுதாரர்களின் பதிவு மூப்பு, வயது மற்றும் கல்வித் தகுதி ஆகியவற்றின் அடிப்படையில் வேலைவாய்ப்பு வேண்டி பதிவு செய்துள்ள மனுதாரர்களைப் பரிந்துரை செய்யும் பணியை மேற்கொள்கின்றன. வேலைவாய்ப்பு அலுவலகங்கள் தன்னிச்சையாகப் பணிக் காலியிடங்களை உருவாக்க வழியில்லை. எனவே இவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பது குறித்து இத்துறையில் திட்டங்கள் ஏதுமில்லை.



47—

**டெக்ஸ்டைல்ஸ் மில்**

**வினா 12992—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூரில் நீண்ட காலமாக மூடப்பட்டுள்ள மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் மில்லை உடனடியாகத் திறந்து தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் மில் நிர்வாகத்திற்கு எதிராக, கடன் கொடுத்தவர்கள் தாக்கல் செய்த மனுவில் சென்னை உயர்நீதிமன்றம் இந்நிறுவனத்தைக் கலைத்து விடும்படி ஆணை பிறப்பித்து கலைப்பு அதிகாரியை நியமனம் செய்ததை அடுத்து இவ்வாலை 9-9-1993 முதல் கலைப்பு அதிகாரியின் பொறுப்பில் உள்ளது. எனவே இவ்வாலையை மீண்டும் திறக்க இத்துறையில் நடவடிக்கை ஏதுமில்லை.

48—

**திரையரங்குகளில் கழிவறைகள்**

**வினா 14802—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள திரையரங்குகளில் கழிவறைகள் சுகாதார முறையில் பராமரிக்கப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க அரசு குழு அமைத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

[2002 ஏப்ரல் 18

விடை—

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்பிரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) விதிகள் பிரிவு 55(1)ல் திரையரங்குகளில் கழிவறைகள் சுகாதார முறையில் பராமரிக்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. மற்றும் 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) விதிகள் பிரிவு 8-ன்படி திரையரங்குகளை திடீர் ஆய்வு செய்யும் அதிகாரிகள் முறையே உரிமம் வழங்கும் அதிகாரி, சுகாதார அதிகாரி மற்றும் சார்நிலை அலுவலர்கள், பிரிவு 55(1)-ன்படி திரையரங்குகளில் கழிவறைகள் சுகாதார முறையில் பராமரிக்கப்படுகின்றனவா என ஆய்வு மேற்கொள்கின்றனர். அவ்வாறு ஆய்வு செய்யும்போது குறைகள் கண்டறியப்பட்டு உரிய தண்டனைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேற்கூறிய காரணங்களினால் தமிழ்நாட்டில் உள்ள திரையரங்குகளில் கழிவறைகள் சுகாதார முறையில் பராமரிக்கப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க குழு ஏதும் அமைக்கப்படவில்லை.*

49—

### கூட்டுறவுச் சங்கம்

**வினா 10284—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொடியம்பாளையம் தீவில் மீனவர்களுக்கு கூட்டுறவுச் சங்கக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மீனவர்களுக்கு கூட்டுறவுச் சங்கக் கட்டடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதும் தற்பொழுது இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.



2002 ஏப்ரல் 18]

50—

### திருமலை நாயக்கர் மகால்

**வினா 1121—திரு. எம். நன்மாறன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மன்னர் திருமலை நாயக்கர் மகாலை செவ்வனே பராமரிக்கத் திட்டம் உள்ளதா?

(ஆ) அத்திட்டங்கள் எவை?

விடை—

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்;**

(அ) மற்றும் (ஆ) மதுரை மன்னர் திருமலை நாயக்கர் மகாலைப் பராமரிக்கும் பணி தமிழ்நாடு அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறையை சார்ந்ததாகும். எனவே சுற்றுலாத் துறை பராமரிப்புப் பணியை மேற்கொள்ள இயலாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

## 2. தகவல் கோரல்

### (அ) சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதி குறித்த ஆணை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'பேரவை விதி 55-ன்கீழ்..... (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

[2002 ஏப்ரல் 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதி மேம்பாட்டு நிதியைப்பற்றி நாங்கள் பல பேர் அவையிலே ஏற்கெனவே பேசி இருக்கிறோம். நேற்று ஒரு ஜி.ஓ. பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது; ஜி.ஓ. 26-ல்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: ஏற்கெனவே என்னுடைய அறையில் பேசிவிட்டீர்கள்; முடிந்தது அந்தப் பிரச்சினை. (குறுக்கீடு) அப்புறம் பேசுவோம்; உட்காருங்கள். திரு. பரிதி சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்**: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதுபற்றி பதில் சொல்லட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: கவன ஈர்ப்பாக எடுத்துக் கொள்வோம். திரு. பரிதி.

### (ஆ) கரூரில் தி.மு.க. இளைஞர் அணி உறுப்பினர் கோவிந்தராஜன் கொலை

**திரு. பரிதி இளம்வழுதி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 11 ஆம் தேதி கரூரில் அரசு காலனியில் எங்கள் கட்சியினுடைய இளைஞர் அணித் தோழர் கோவிந்தராஜன் அவர்கள் கொடூரமான முறையிலே கொலை செய்யப்பட்டு இருக்கிறார்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அது என் ஆய்வில் இருக்கிறது. திரு. எ.வ. வேலு..

### (இ) விவசாயத் தொழிலாளர் நல வாரியம்

***திரு. எ.வ. வேலு**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12-3-2002-அன்று விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியம் குறித்து விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அது என் ஆய்வில் இருக்கிறது. திரு. வேல் முருகன்.

### (ஈ) பண்ருட்டி தொகுதியில் 54 உயிர்கள் பலியானது

**திரு. தி. வேல் முருகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் 54 உயிர்கள் பலியாகி இருக்கின்றன. அது சம்பந்தமாக ஒரு சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம்...



2002 ஏப்ரல் 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அதுவும் என்னுடைய ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன்.

***திரு. துரைமுருகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எ.வ. வேலு கேட்டதை, நானும் பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஆய்வில் இருக்கிறது; ஆய்வில் இருக்கிறது என்கிறீர்கள். தாங்கள் பெற்ற டாக்டர் பட்டத்திற்குக்கூட இவ்வளவு ஆய்வு செய்திருக்கமாட்டீர்கள் போல் இருக்கிறதே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: என்ன செய்வது? உங்களை எல்லாம் கட்டி ஆள வேண்டியிருக்கிறது. (சிரிப்பு)

## 3. கவன ஈர்ப்பு

### (அ) புதுடெல்லியில் தேசிய நீர்க் கொள்கை குறித்து தேசிய நீர்வளக் குழு எடுத்த முடிவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. துரைமுருகன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

**திரு. துரைமுருகன்**: பேரவைத் தலைவர் அவர்களே, "1-4-2002 அன்று புது டெல்லியில் நடைபெற்ற தேசிய நீர்க் கொள்கை குறித்து தேசிய நீர்வளக் குழு எடுத்த முடிவு குறித்த" அவ்சரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொருள் குறித்து அவைமுன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

#### விவர அறிக்கை

மத்திய அரசால் ஒரு தேசிய நீர்க் கொள்கை வகுக்கப்பட்டு 1987 ஆம் ஆண்டு தேசிய நீர் ஆதாரக் குழுமத்தால் விவாதிக்கப்பட்டு ஏற்றுக்

கொள்ளப்பட்டது. அதன் பின்னர் நீர் ஆதாரத் துறையில் ஏற்பட்டுள்ள மாறுதல்களைக் கருத்திற்கொண்டு, 1998-ல் புதிய வரைவு தேசிய நீர்க் கொள்கை ஒன்று தயாரிக்கப்பட்டது. புது டெல்லியில் 7-7-2000 அன்று நடைபெற்ற தேசிய நீர் ஆதாரக் குழுவின் நான்காவது கூட்டத்தில் இந்த வரைவு தேசிய நீர்க் கொள்கை விவாதிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில், இந்த வரைவுக் கொள்கையின்மீது மாறுபட்ட கருத்துகளை பல்வேறு மாநிலங்கள் தெரிவித்ததன் பொருட்டு, இக்கொள்கையின்மீது எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. வரைவுக் கொள்கையில் "இடம் பெற்றிருந்த "மாநிலங்களுக்கிடையே நீரை ஒதுக்கீடு செய்தல்" (Water Allocation amongst the States) மற்றும் அதற்காக ஏற்படுத்தப்படவுள்ள வழிமுறைக் கொள்கைகளை" (Policy Guidlines for Water Allocation amongst the States) இந்த வரைவுக் கொள்கையிலிருந்து நீக்க இவ்வரசு தொடர்ந்து பல்வேறு நிலைகளில் மத்திய அரசை வற்புறுத்தி வந்ததன் அடிப்படையில் இந்தக் கூட்டத்திலும் வற்புறுத்தப்பட்டது.

2. வரைவு தேசிய நீர்க் கொள்கை மற்றும் மாநிலங்களுக்கிடையே நதிநீர்ப் பங்கீடு குறித்த வழிமுறைகள் ஆகியவற்றின்மீது பல்வேறு மாநிலங்கள் அளித்த கருத்துகளை ஆராய்ந்து ஒரு முடிவு எடுப்பதற்காக மத்திய நீர் ஆதார அமைச்சரின் தலைமையில் ஒரு 'பணிக் குழு' (Work-ing Group) ஏற்படுத்தப்பட்டது. இந்தக் குழுவில் மாநிலங்களின் நீர்ப்பாசன மற்றும் நீர் ஆதார அமைச்சர்கள் உறுப்பினர்களாவார்கள்.

3. இந்தக் குழுவின் முதல் கூட்டம், 22-5-2001 அன்று புது டெல்லியில் கூடி விவாதித்தது. இக்கூட்டத்தில் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு தமிழ்நாடு ஏற்கெனவே எடுத்துள்ள முடிவு விவரங்களை இக்கூட்டத்தில் மீண்டும் வலியுறுத்திக் கூறினார். இக்கூட்டத்தில், வரைவு தேசிய நீர்க் கொள்கையின்மீது ஓர் ஒருமித்த கருத்தினை உருவாக்குவதன் பொருட்டு, ஒரு தனிக் குழு (Core Group) ஏற்படுத்த முடிவெடுக்கப்பட்டதற்கிணங்க நீர் ஆதாரத் துறையின் இராஜாங்க அமைச்சரை தலைவராகக் கொண்ட ஒரு தனிக் குழுவும் (Core Group) ஏற்படுத்தப்பட்டது. இதன் கூட்டம் 19-6-2001-ல் நடைபெற்றது. இக்கூட்டத்தின் முடிவில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் 21-9-2001 அன்று நடைபெற்ற 2-வது பணிக் குழுக் (Working Group) கூட்டத்தில் மீண்டும் இந்த வரைவு தேசிய நீர்க் கொள்கை விவாதிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட பின்னர், "2001 ஆம் ஆண்டு வரைவு தேசிய நீர்க் கொள்கை" இறுதியாக்கப்பட்டு, தேசிய



நீர் ஆதாரக் குழுவின் பரிசீலனைக்கும் ஒப்புதலுக்கும் அனுப்ப முடிவு எடுக்கப்பட்டது. மேலும், மாநிலங்களுக்கிடையே உள்ள நதிநீர் ஒதுக்கீடு குறித்த வரைவு தேசிய நீர் வழிமுறைக் கொள்கைகள் என்ற பொருளின் மீது தேசிய நீர் ஆதாரக் குழுவின் 4-வது கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் மற்றும் பணிக் குழுக் கூட்டங்களில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் ஆகியவற்றில் மாநிலங்களின் பிரதிநிதிகள் தெரிவித்த கருத்துகளின் அடிப்படையில் தேசிய நீர் வாரியத்தால் மீண்டும் பரிசீலிக்கப்படலாம் என்று தேசிய நீர் ஆதாரக் குழுவிற்கு பரிந்துரைக்கலாம் என்றும் முடிவு எடுக்கப்பட்டது.

4. பணிக் குழு மற்றும் தனிக் குழு ஆகிய கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் 2001 ஆம் ஆண்டு "வரைவு தேசிய நீர்க் கொள்கை" இறுதியாக்கப்பட்டது. இந்த வரைவு தேசிய நீர்க் கொள்கை 1-4-2002 அன்று விவாதிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் திருத்தப்பட்ட கொள்கையைப் பின்பற்றுவதாக ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. விவாதத்தின் முடிவில் பிரதமர் அவர்கள் கொள்கையை ஒப்புக் கொள்வதோடு மட்டும் அன்றி அதனைச் செவ்வனே செயல்படுத்த ஒவ்வொரு மாநிலமும் அம்மாநிலத்திற்கேற்ப நீர்வளக் கொள்கைகளைத் தயாரித்து ஒரு செயல் திட்டத்தையும் உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். எந்தக் கட்டத்திலும், மத்திய அரசு நீர்வள ஆதார மேலாண்மையில் மாநில உரிமைகளில் குறுக்கிடாது என்று திட்டவட்டமாக அறிவித்தார். இக்கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்பு மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

(1) மாநிலங்களுக்கிடையே நதிநீர் ஒதுக்கீடு/பங்கீடு, (2) நிலத்தடி நீர் அதிக அளவில் எடுப்பதைத் தடுப்பது மற்றும் (3) சர்க்காரியா கமிஷன் பரிந்துரையின்படி 1956ஆம் ஆண்டைய மாநிலங்களுக் கிடையேயான நதி நீர்த் தாவா சட்டத்திற்கு திருத்தம் வெளியிடுதல் ஆகியவை குறித்து 1998 மற்றும் 2001-ல் அதாவது தற்பொழுது தீட்டப்பட்ட தேசிய நீர்க் கொள்கையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

## (1) மாநிலங்களுக்கிடையே நதிநீர் ஒதுக்கீடு/பங்கீடு

ஏற்கெனவே மத்திய அரசு தீட்டிய வரைவு தேசிய நீர்க் கொள்கையில், (1998-ல்) ஒரு நதிப் படுகையில் கிடைக்கக்கூடிய நீர் மற்றும் நீர்த் தேவையின் அடிப்படையில் தேசிய நோக்கோடு படுகை

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2002 ஏப்ரல் 18

மாநிலங்களுக்கிடையே நீர் ஒதுக்கப்பட வேண்டும், மேலும் இதன் பொருட்டு ஒரு வழிமுறை கொள்கை உருவாக்கப்பட வேண்டும். (The water allocation amongst the basin States should be guided by a national perspective with due regard to water resources availability and demands within the river basin. Necessary guidelines may be formulated accordingly for allocation of water amongst the basin States) என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், தற்பொழுது திட்டப்பட்டுள்ள தேசிய நீர்க் கொள்கையில் (2001) கீழ்க்கண்டவாறு மாற்றம் செய்யப்பட்டுள்ளது:

ஒரு நதிப படுகையில் கிடைக்கக்கூடிய நீரை அந்தப் படுகைக்குள் தேசிய நலன் கருதி அப்படுகை மாநிலங்களுக்குள் பங்கீடு செய்து கொள்ள வேண்டும். எதிர்காலத்தில் படுகை மாநிலங்களுக்குள்ளாக ஒப்பந்தங்களை ஏறபடுத்தும் வண்ணம் ஒரு படுகையிலிருந்து நீர்ப் பற்றாக்குறை படுகைக்கு நீரைப் பங்கிடுவது குறித்து வழிமுறைகளை ஏற்படுத்தலாம். (The water sharing /distribution amongst the States should be guided by a national perspective with due regard to water resources availability and needs within the river basin. Necessary guidelines, including for water short States even outside the basin, need to be evolved for facilitating future agreements amongst the basin States) மேலும், படுகை மாநிலங்களுக்கிடையே நீர் ஒதுக்கீடு குறித்து வரைவு வழிமுறைக் கொள்கை (Draft National Policy Guidelines for Water Allocation amongst the States) ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது தற்பொழுதைய தேசிய வரைவு நீர்க் கொள்கையிலிருந்து நீக்கப்பட்டது.

**(2) நிலத்தடி நீர் அதிக அளவில் எடுப்பதைத் தடுப்பது**

நிலத்தடி நீரை, அதிக அளவில் பயன்படுத்துவதைத் தடுப்பதற்காக வழிவகைகளை மத்திய அரசும் மாநில அரசும் மேற்கொள்ள வேண்டும் என்று இவ்வரசு தெரிவித்த கருத்தை ஏற்று அக்கருத்து தற்பொழுது திட்டப்பட்ட தேசிய நீர்க் கொள்கையில் (2001) சேர்க்கப்பட்டுள்ளது.

**(3) சர்க்காரியா கமிஷன் பரிந்துரையின்படி 1956 ஆம் ஆண்டைய மாநிலங்களுக்கிடையேயான நதி நீர்த் தாவா சட்டத்திற்கு திருத்தம் வெளியிடுதல்**

மாநிலங்களுக்கிடையே நீரைப் பகிர்ந்துகொள்வதில் விரைவில் தீர்வு காண சர்க்காரியா கமிஷனின் பரிந்துரைப்படி 1956 ஆம் ஆண்டைய மாநிலங்களுக்கிடையேயான நீர்த் தாவா சட்டத்தைத் திருத்தியமைக்க வேண்டும் என்ற கொள்கையும் மேற்படி கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட



2002 ஏப்ரல் 18] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

தேசிய நீர் கொள்கையில் இடம் பெற்றுள்ளது. மேலும், சர்க்காரியா **கமிஷனின்** பரிந்துரை அடிப்படையில் 1956 ஆம் ஆண்டைய **மாநிலங்களுக்கிடையேயான நீர்த் தாவா சட்டத்திற்கான திருத்த மசோதா ஏற்கெனவே பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டு விட்டது.**

தமிழ்நாடு அரசு தொடர்ந்து வற்புறுத்தி வந்த கருத்துகளை மத்திய அரசு ஏற்றுக்கொண்டு அவற்றை தேசிய நீர் வரைவுக் கொள்கையில் சேர்த்துள்ளது.

முற்பகல் 11-20

**திரு. துரைமுருகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கமாக அமைச்சர்கள் என்ன சொல்வார்கள் என்றால், ஒரு விவர அறிக்கை வைக்கப்பட்டு இருக்கிறது என்று சொல்வார்கள். ஆனால், இதிலே விவரம் இல்லை. அதுதான். நொண்டிக்கு நடராஜன் என்று பெயர் இட்ட மாதிரி; சரி, பரவாயில்லை. ஏன் முடியவில்லை என்றால், அவர்கள் கொடுக்கக் கூடாது என்றல்ல. ஏனென்றால் அந்த meeting கினுடைய முழு details அவர்களுக்கு இன்னும் வரவில்லை என்று அவர்களே தெரிவித்து இருக்கிறார்கள். இது சாதாரணமான ஒரு பிரச்சினை போலத் தோன்றலாம். இது மிக முக்கியமான ஒன்று என்பதால்தான் நான் இதை கவன ஈர்ப்பாகக் கொண்டுவந்திருக்கிறேன். இது கட்சிக்கு அப்பாற்பட்டது. 1994 ஆம் ஆண்டிலேயிருந்து, அதற்குப்பிறகு, இன்றைக்கு இருக்கிற ஆளும் கட்சி இருக்கிறபோதும் நாங்கள் இருக்கிறபோதும் ஒரே கொள்கையை வற்புறுத்தி இருக்கிறோம். அப்படிக் கொண்டு வந்ததனுடைய ஒரு விளைவுதான் 7-7-2000 அன்று அந்தக் கொள்கையை—நம்முடைய தேசிய நீர் வளக் கொள்கையிலே நமக்கு இருக்கிற மாறுதலை அன்றைக்கு முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் இதிலே குறிப்பிட்டுள்ளதைப்போல 7-7-2000 அன்று கூட்டத்திலே விரிவாகப் பேசியிருக்கிறார்கள். அதிலே ஒரு கருத்து இந்த மாநிலங்களுக்கிடையே நீரை ஒதுக்கீடு செய்தல், Water allocation among the States—Policy guideline for water allocation among the States என்ற கொள்கையை இந்த வரைவுத் திட்டத்திலேயிருந்து நீக்க வேண்டுமென்று அன்றைக்கு கலைஞர் குரல் கொடுத்தார். அதைத் தொடர்ந்து இவர்களும் குரல் கொடுத்து இன்றைக்கு நீக்கிவிட்டு வந்திருக்கிறார்கள். ஆகையினால் அதிலே எனக்கு மகிழ்ச்சிதான். ஆனால் மற்றும் 8 amendment-களை அதிலே நாம் கொடுத்திருந்தோம். அந்த 8 amendment-களும் ஏற்றுக்கொள்ளப்பட்டதா,

இல்லையா என்று எனக்குத் தெரியாது. Non-conventional method for utilisation of water; the involvement and participation of beneficiaries exploitation of ground water resources should be regulated, integrated and co-ordinated development of surface water and ground water, irrigation planning either in individual projects or in basin as a whole should be taken into account for irrigability of the land என்று இப்படி 8 amendment-களை கொடுத்திருந்தோம், அந்த வரைவுத் திட்டத்திற்கு, 1998 ஆம் ஆண்டு வரைவுத் திட்டத்திற்கு. அந்த வரைவுத் திட்டத்தையும் ஏற்றுக்கொண்டார்களா, இல்லையா என்று எனக்குத் தெரியவில்லை. இதிலே மூன்றாவதாக ஒரு கேள்வி, ground water-ஐப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். Ground water என்பது நம்முடைய State subject. ஆனால். Central Ground water Authority-யும் மத்திய அரசும் இதிலே சேர்ந்து—ஆனால் அவர்கள் ஏற்கெனவே நாங்கள்தான் இதை control பண்ணுவோம் என்று சொன்னார்கள். ஏற்கெனவே நம்முடைய பஞ்சாயத்திலே, எல்லா உறுப்பினர்களுக்கும் தெரியும். சில பஞ்சாயத்து யூனியன்களிலே black area, grey area என்று பிரித்துவிட்டு அங்கேயெல்லாம் Ground water-ஐ tap பண்ணக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். அதை control பண்ணுவது, Central Ground Water Authority தான் செய்யும் என்று அவர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இல்லை. இது முழுக்க முழுக்க State subject. நாங்கள்தான் அதை control பண்ணுவோம் என்று நாம் சொல்லிக்கொண்டு இருக்கிறோம். அது என்ன ஆயிற்று? அதை ஏற்றுக்கொண்டார்களா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: துரைமுருகன், அன்றைக்கு நீங்கள் வந்து கேட்டீர்கள், அமைச்சர் இந்தக் கூட்டத்திற்கு போய் இருக்கிறாரே, இதுபற்றிய விவரத்தை தெரிவிப்பீர்களா என்று நீங்கள் கேட்டீர்கள் முதலில். அமைச்சர் அவர்கள் அதைத் தெரிவிப்போம் என்று உறுதிமொழி சொன்னார்கள். அந்த உறுதிமொழியை நிறைவேற்றக்கூடிய வகையிலேதான் உங்கள் மூலமாக கவன ஈர்ப்பு என்று வாங்கி, அங்கே நடைபெற்ற நிகழ்ச்சிகளை அப்படியே அறிக்கையாக வைத்திருக்கிறார்கள். ஆகவே உறுப்பினர் கேட்ட கேள்விகளுக்கு அமைச்சரிடத்திலே பதில் இருந்தால் சொல்லுங்கள்.



**மாண்புமிகு திரு ஓ. பன்னீர்செல்வம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடக்கத்தில் நொண்டிக்குப் பெயர் நடராஜன் என்று சொன்னார்கள். நடராஜப் பெருமான் ஒரு காலைத் தூக்கி நடனமாடும்போது அதை நொண்டி என்று எடுத்துக்கொள்ளக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) அவர் மீண்டும் அந்தக் காலை ஊன்றி இன்னொரு காலையும் தூக்கி நடனமாடுவார் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்று சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: எவ்வளவு பக்குவப்பட்டுவிட்டார் என்று பாருங்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்**: *4-4-2002* அன்று நம்முடைய தேசிய நீர் கொள்கையில் முக்கியமான *3* விவரங்களை அவர்கள் கேட்டிருந்தார்கள். அந்த *3* விவரங்களின் அடிப்படையில் கடந்தகால அரசாக இருந்தாலும் சரி, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசாக இருந்தாலும் சரி, Policy ஒன்றாகவே இருக்கிறது என்று அவரே சொல்லியிருந்தார்கள். அதன் அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவுகளை ஏற்கெனவே விவர அறிக்கையாக நான் இங்கு தந்திருக்கிறேன். அதன் அடிப்படையில் இன்னும் சில கருத்துகளை நான் இங்கு சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தேசிய நீர் கொள்கையில் நீரை ஒதுக்கீடு செய்வது குறித்து தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ள கருத்தினை ஏற்று தற்போது வழங்கப்பட்டுள்ள கொள்கையில் Water allocation among the States என்றிருப்பதை மறுத்து, நீர்ப் பங்கீடு மற்றும்—sharing and distribution இருக்க வேண்டும் என்று சொன்னோம். அந்த மாற்றத்தினை அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாநிலங்களுக்கிடையேயான நீர் ஒதுக்கீடு செய்வதற்கான வழிமுறைக் கொள்கைகள்—guidelines—தேசிய நீர் கொள்கையிலிருந்து நீக்க வேண்டுமென்பது ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது. இவ்வழிமுறைக் கொள்கைகளைப் பகுப்பது குறித்து மீண்டும் தேசிய நீர் வாரியத்தால் ஆய்வு செய்யப்பட்டு தேசிய நீர் ஆய்வுக் குழுவின் பரிந்துரைக்கு மீண்டும் வைக்கப்படலாம் என்று கருதப்பட்டிருக்கிறது.

முற்பகல் 11-25

நிலத்தடி நீரைப் பொறுத்தமட்டில் மத்திய அரசு அளித்துள்ள Model Bill-மாதிரி சட்டமுன்வடிவின் அடிப்படையில் தமிழ்நாடு அரசு நிலத்தடி நீரைக் கட்டுப்படுத்துதல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்துதல் போன்றவற்றிற்கான சட்டத்தை இயற்றுவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சர்க்காரியா கமிஷன் பரிந்துரையின் அடிப்படையில் மாநிலங்களுக்கிடையேயான நதிநீர்த் தாவா சட்டம் தற்போது திருத்தம் செய்யப்பட்டு உள்ளது. அதில் மேற்கொள்ளப்பட்டுள்ள முக்கியத் திருத்தங்கள் வருமாறு:

தீர்வு செய்வதற்கான கால வரையறை 3 வருடங்களும் அதற்கு மேல் 2 ஆண்டுகளாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நடுவர் மன்றத்தின் முடிவு உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு இணையானது என்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள் என்பதனைத் தெரிவித்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு விளக்கமாக நான் பதில் சொல்லியிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. துரைமுருகன்.

**திரு. துரைமுருகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர், நடராஜன் காலைத் தூக்குவது மாதிரி என்று சொன்னார். அது ஒரு 'விட்டு' தான். ஆனால் காளியோடு நடனம் ஆடும்போது காலைத் தூக்குவது மாதிரி இருந்துவிடக்கூடாது. அவ்வளவு தான். உங்களுக்குத் தெரியும். நான் கேட்டது 8 amendments பற்றி. அந்த amendment-களை ஏற்றுக்கொள்கிறீர்களா அல்லது மறுபடியும் குழு போட்டுக் கூட்டப் போகிறீர்களா என்று இப்போதுகூட சொல்லத் தேவையில்லை. ஏனென்றால் அவர்களிடம் இன்னும் full details இல்லை. அவருடைய மானியக் கோரிக்கையில் தெளிவாகத் தெரிவித்தால் போதும்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் 1-4-2002 அன்று நம்முடைய தேசிய நீர் கொள்கையில் இந்த 3 விவரங்கள் பற்றித்தான் கருத்து கேட்டு இருந்தார். அதற்கு விரிவான அறிக்கை கொடுக்கப்பட்டு இருக்கிறது. மற்றபடி 8 amendments பற்றி அவர் என்னென்ன என்று விவரமாக எழுத்துப்



பூர்வமாகத் தெரிவித்தால் மானியக் கோரிக்கையில் விடையளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. துரைமுருகன், திருப்தியா?

## (ஆ) குமரி மாவட்டம், அழிக்கால் கிராமத்தைச் சேர்ந்த காணாமல் போன மீனவர்களைத் தேடுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. டி. மணி, திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. தா. பச்சைமால், திரு. ஆஸ்டின், திரு. சி. ஞானசேகரன், திரு. ஜி.கே. மணி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் திரு. தா. பச்சைமால் அவர்களை அழைக்கிறேன்.

**திரு. தா. பச்சைமால்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டம், முட்டம் அருகே உள்ள அழிக்கால் கிராம மீனவர்கள் 12 பேர் 19-3-2002 அன்று கடலில் மீன் பிடிக்கச் சென்றவர்கள் இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

கன்னியாகுமரி மாவட்டம், அழிக்கால் மீனவக் கிராமத்தைச் சேர்ந்த "மகிமை மாதா" என்ற விசைப்படகில் (படகு எண். KKW 1018)

திருவாளர்கள்—

1. சிபு. த/பெ. வில்லியம் (19)

2. வில்லியம், த/பெ. சூசை (46)

224970
சென்னை-600 009

திருவாளர்கள்—

3. ராசய்யா த/பெ. ஜோசப் (52)

4. ராம்ஜி, த/பெ. வர்கீஸ் (22)

5. ஆன்டோனி, த/பெ. அல்போன்ஸ் (19)

6. முத்து, த/பெ. வர்கீஸ் (18)

7. பிரிட்டோ, த/பெ. ஸ்டீபன் (17)

8. குமார், த/பெ. பபியான் (16)

9. தாமஸ், த/பெ. அந்தோணிப்பிள்ளை (23)

10. எல்போன்ஸ், த/பெ. அந்தோணி (28)

11. லியோ, த/பெ. அந்தோணி (28) மற்றும்

12. அருள்தாசன், த/பெ. பணிப்பிள்ளை (35)

ஆகியோர் 19-3-2002 அன்று இரவு சுமார் 12 மணியளவில் மீன்பிடி தொழிலுக்குச் சென்று 25-3-2002 வரை கரை திரும்பாததால், தூத்துக்குடி மாவட்ட கடலோரப் பாதுகாப்புப் படையினர் கேட்டுக் கொள்ளப்பட்டதால் அவர்கள் 25-3-2002 அன்று காலை 9 மணி முதல் மதியம் 1 மணி வரை காணாமல்போன 12 மீனவர்களையும் வான்வெளியாகவும் கடல் வழியாகவும் தேடியும் அவர்களைக் காண முடியவில்லை.

2. 26-3-2002 அன்று கொச்சியிலுள்ள கடலோரப் பாதுகாப்புப் படையினரையும், காணாமல்போன மீனவர்களைத் தேடி மீட்கக் கேட்டுக்கொள்ளப்பட்டது. ஒருவேளை திசை மாறி கடலில் சென்றிருந்தால் இலங்கை அல்லது மாலத்தீவு அரசுகளின் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ளார்களா எனவும் அவ்வாறு சிறை வைக்கப்பட்டிருந்தால் அவர்களை விடுவித்துத் தாயகம் திருப்பியனுப்ப உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு மைய அரசின் வெளிவிவகாரத் துறை அமைச்சகமும், இலங்கை மற்றும் மாலத் தீவிலுள்ள இந்தியத் தூதரகங்களும் நிகரிச் செய்தி வாயிலாகக் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.



3. அதற்கு இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகம் அனுப்பிய நிகரிச் செய்தியில் அவர்களுக்கு இதுகுறித்து எந்தவிதமான தகவலும் இல்லையென்று தெரிவித்தனர். அதைப்போன்று மாலத் தீவிலுள்ள இந்தியத் தூதரக அதிகாரி திரு. அஸ்டோஸ் குமார் அவர்களுடன் 27-3-2002 அன்று காலை இத்துறையின் அரசுச் செயலர் அவர்கள் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு பேசியபொழுது இந்திய மீனவர்கள் மாலத் தீவு அரசாங்கத்தால் கைது செய்யப்பட்ட விவரம் குறித்து எந்தவிதத் தகவலும் இல்லையென்றும் மாலத் தீவு அரசாங்கத்துடன் தொடர்புகொண்டு தகவல்கள் சேகரித்து அனுப்புவதாகவும் தெரிவித்தார். இந்திய கடலோரப் பாதுகாப்புப் படையின் கிழக்குப் பிராந்திய கமாண்டர் திரு. இரகுவன்சி அவர்களுடனும், கொச்சி மேற்குப் பிராந்திய துணை கமாண்டன்ட் திரு. வர்கீஸ் அவர்களுடனும் இத்துறையின் செயலர் அவர்கள் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தேடுதல் நடவடிக்கையினைத் தீவிரப்படுத்தக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

4. 25-3-2002 முதல் நான்கு நாட்கள் வான் வழியாகவும் மூன்று நாட்கள் கடலோரக் காவல் படையினரால் கடல் வழியாகவும் காணாமல்போன மீனவர்களில் ஒருவரின் உறவினருடன் மீன்பிடி விசைப்படகில் மூன்று நாட்கள் தேடியும் கிடைக்கவில்லை.

5. 2-4-2002 அன்று இத்துறையின் செயலர் அவர்கள் மாலத் தீவிலுள்ள இந்தியத் தூதரகத்தின் செயலர் திரு. அஸ்டோஸ் குமார், இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத்தின் அலுவலர் திரு. பாஸ்கரன் ஆகியோருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசிய பொழுது அந்நாடுகளிலுள்ள அரசாங்கங்களிடமிருந்து காணாமல் போன மீனவர்கள் குறித்த தகவல்கள் ஏதும் கிடைக்கப் பெறவில்லையென தெரிவித்தனர். அதேபோன்று, இந்தியக் கடலோரக் காவல்படையின் கிழக்குப் பிராந்திய கமாண்டன்ட் திரு. அலோக்குமார் அவர்களுடனும், மேற்குப் பிராந்திய துணைக் கமாண்டன்ட் திரு. வர்கீஸ் அவர்களுடனும் இத்துறையின் செயலர் அவர்கள் தொலைபேசியில் தொடர்புகொண்டு நிலவரம் அறிந்ததில், காணாமல் போன மீனவர்களை இதுவரை கண்டுபிடிக்க இயலவில்லையென்றும் தீவிரமாகத் தேடி வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. தா. பச்சைமால் ஒரு கேள்வி கேளுங்கள். நிறைய பேர் பேச இருக்கிறார்கள்.

**திரு. தா. பச்சைமால்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் காணாமல்போன மீனவர்களை இதுவரையில் கண்டுபிடிக்க இயலவில்லை என்றும் தீவிரமாகத் தேடி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. என்னுடைய தொகுதியான குளச்சல் தொகுதியில் உள்ள அழிக்கால், பிள்ளைத் தோப்பு, வாணியக்குடி ஆகிய கிராமங்களிலிருந்து 12 மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கச் சென்றபோது காணாமல்போய் ஒரு மாதம் ஆகிறது. ஆனால் இலங்கை, மாலத் தீவு அரசுகளால் கைது செய்யப்படவில்லை என்று அறிக்கை வந்திருக்கிறது. கடந்த காலங்களில் நடந்தது போன்று பாகிஸ்தான் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. மக்கள் நலம் காக்கும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு மைய அரசுடன் பேசி உடனடியாக காணாமல்போன மீனவர்களை மீட்க, விரைவாக நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன். மேலும், கடலில் காணாமல்போன 12 மீனவக் குடும்பங்களும் பசி பட்டினியால் வாடுகின்றன. அவ்வாறு பசி பட்டினியால் வாடும் மீனவக் குடும்பங்களுக்கு மீனவச் சமுதாய மக்களின் பாதுகாவலராக விளங்கும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு உடனடியாக நிவாரணம் அளிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், அழிக்கால் மீனவக் கிராமத்தைச் சேர்ந்த 12 பேர் 'மகிமை மாதா' என்ற விசைப்படகில் படகு எண் கே.கே.டபிள்யூ.1018, 19-3-2002 அன்று இரவு சுமார் 12.00 மணியளவில் மீன்பிடி தொழிலுக்குச் சென்று 25-3-2002 வரை கரை திரும்பாததால், தூத்துக்குடி மாவட்ட கடலோரப் பாதுகாப்புப் படையினர் கேட்டுக்கொள்ளப்பட்டதால் அவர்கள் 25-3-2002 அன்று காலை 9.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை காணாமல்போன 12 மீனவர்களையும், வான் வழியாகவும், கடல் வழியாகவும் தேடியும் அவர்களைக் காண முடியவில்லை. 26-3-2002 அன்று கொச்சியில் உள்ள கடலோரப் பாதுகாப்புப் படையினரையும் காணாமல்போன மீனவர்களைத் தேடி மீட்கக் கேட்டுக்கொள்ளப்பட்டது. ஒருவேளை திசைமாறி கடலில் சென்று இருந்தால் இலங்கை அல்லது மாலத் தீவு அரசுகளின் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு, சிறை வைக்கப்பட்டுள்ளார்களா எனவும், அவ்வாறு சிறை வைக்கப்பட்டு இருந்தால் அவர்களை விடுவித்து, தாயகம் திருப்பி அனுப்ப உடனடி



நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு மைய அரசின் வெளி விவகாரத்துறை அமைச்சகமும், இலங்கை மற்றும் மாலத் தீவில் உள்ள இந்தியத் தூதரகமும் நிகரிச் செய்தி வாயிலாகக் கேட்டுக்கொள்ளப்பட்டனர். அதற்கு இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம் அனுப்பிய நிகரிச் செய்தியில் அவர்களுக்கு இதுகுறித்து எந்தவிதமான தகவலும் இல்லை என்று தெரிவித்தனர்.

*முற்பகல் 11-30*

அதைப்போன்று, மாலத் தீவில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரி திரு. அசுதோஷ்குமார் அவர்களுடன் 27-3-2002 அன்று காலை துறையின் அரசுச் செயலாளர் அவர்கள் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு பேசியபோது, இந்திய மீனவர்கள் மாலத் தீவு அரசாங்கத்தால் கைது செய்யப்பட்ட விவரம் குறித்த எந்தத் தகவலும் இல்லை என்று கூறியுள்ளார். 25-3-2002 முதல் 4 நாட்கள் வான் வழியாகவும், 3 நாட்கள் கடலோரக் காவல் படையினரால் கடல் வழியாகவும், காணாமல்போன மீனவர்களில் ஒருவரின் உறவினருடன் மீன்பிடி விசைப்படகில் 3 நாட்கள் தேடியும் கிடைக்கவில்லை. 5-4-2002 அன்று வான்வழியாகத் தேடப்பட்டது. புதுடெல்லியில் உள்ள இந்திய வெளி விவகாரத் துறை அமைச்சகத்திற்கு 25-3-2002 மற்றும் 2-4-2002 அன்று Fax மூலம் தெரிவித்து பாகிஸ்தான் அரசை தொடர்பு கொள்ளவும் கேட்டுக்கொள்ளப்பட்டது. 6-4-2002 அன்று Phonogram மூலம் கடலோர மாநிலங்களான கேரளா, மகாராஷ்டிரா, கோவா, குஜராத், அந்தமான் மற்றும் இலட்சத் தீவு ஆகிய மாநிலங்களுக்கும் செய்தி அனுப்பப்பட்டு, தகவல் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. தகவல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. 'தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்' என்று சொல்வார்கள். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, நீங்கள் கேட்காமலேயே செய்ய வேண்டிய காரியங்கள் அனைத்தையும் செய்துகொண்டிருக்கிறது என்பதை உங்கள் மூலம் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. டி. மணி.

***திரு. டி. மணி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் முட்டம் பகுதியிலிருந்து காணாமல்போன மீனவர்கள் சம்பந்தமாக ஏற்கெனவே இந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் பல

நாட்களுக்கு முன்னால் கொடுக்கப்பட்டு, அதற்கு இன்றைக்கு மாண்புமிகு மீன் வளத்துறை அமைச்சர் அவர்கள் தெளிவான ஒரு பதிலைத் தந்திருக்கிறார்கள். இதுவரையிலும் அவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று சொன்னால், நமக்கு ஒரு சந்தேகம் இன்னும் இருப்பது, ஏற்கெனவே 3 ஆண்டுகளுக்கு முன்னால் காசிமேட்டில் உள்ள மீனவர்கள் பாகிஸ்தானில் போய்ச் சேர்ந்து பெரிய துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டார்கள். இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில் பாகிஸ்தானில் போய்ச் சேர்ந்து இப்படி நம்மை மறைக்கிறார்களா என்றுகூட ஒரு சந்தேகம் அதற்குள்ளே எழுகின்றது. இருந்தாலும், மீனவர் குடும்பங்களைப் பாதுகாக்க வேண்டிய ஒரு தலையாய கடமை நம்முடைய மாநில அரசுக்கு உண்டு என்பதை உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவந்து, சுமார் 1 மாத காலமாகியும், அவர்களை மீட்டு வர இயலாத நிலையில், அந்தக் குடும்பங்களைப் பாதுகாக்க வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் இந்த மாநில அரசுக்கும் உண்டு என்பதை கவனத்திற்குக் கொண்டுவந்து, அந்தக் குடும்பங்களைப் பாதுகாக்க அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காணாமல்போன மீனவர்களைத் தேடுவதற்கு, கண்டுபிடிப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் மாநில அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதைப்பற்றியெல்லாம் மாண்புமிகு அமைச்சரவர்கள் தெளிவாக இங்கே இந்த அவைக்குத் தெரிவித்தார்கள். இப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மணி அவர்கள் பேசுகிறபோது, ஒருவேளை அவர்கள் பாகிஸ்தான் அரசால் சிறைப்பிடிக்கப்பட்டு அங்கே கைது செய்து வைக்கப்பட்டிருக்கிறார்களோ என்ற ஐயப்பாடை இங்கே எழுப்பினார். இதுகுறித்தும் மத்திய அரசுக்கு நாங்கள் கடிதம் எழுதி, மத்திய அரசோடு தொடர்புகொண்டு பாகிஸ்தானில் ஒருவேளை இந்த மீனவர்கள் இருக்கிறார்களா என்பதையும் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு, காணாமல்போன மீனவர்களின் குடும்பங்கள் பசி, பட்டினியால் வாடுவதாக இங்கே தெரிவிக்கப்பட்டதால், அவர்களுக்கு நிவாரண உதவி வழங்க இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



**திரு. டி. மணி**: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வேறொன்றுமில்லையே திரு. சி. ஞானசேகரன், ஏதாவது கேட்க வேண்டுமா? சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வரவர்கள் அந்தக் குடும்பத்தாருக்கு நிவாரணம் அளிப்பதாக இங்கே கூறியிருக்கின்றார்கள். நன்றி. அதிலே பல குடும்பங்கள் ஒருமாத காலமாக துடித்துக்கொண்டிருக்கிறார்கள். இதில் இன்னொரு செய்தி. கடலோரப் பகுதிகளிலே மீன் பிடிக்கப் போகிறவர்கள், விடுதலைப் புலிகளாலேகூட இப்போது அவர்கள் கடத்தப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்கிற செய்தி நிறைய இருக்கிறது. (குறுக்கீடு) இருக்கிறது. ஏற்கெனவே அது குறித்தும்—

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அமைச்சர் அதுசம்பந்தமாக எல்லாம் சொல்லிவிட்டார். எல்லாவகையான முயற்சிகளும் எடுக்கப்படுகின்றன என்று சொல்லிவிட்டார்.

**திரு. சி. ஞானசேகரன்**: ஏற்கெனவே பல தடவை பிடித்துக்கொண்டு போய் அவர்களுக்கு டீசல் கொடுக்கவில்லையென்று சொன்னால், அவர்கள் மீன் பிடிக்கக்கூடிய எல்லைக்குள்ளே இவர்கள் யாரும் போகக்கூடாது என்பதற்காக, ஏன் மீனவர்களின் அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்கூட தீர்மானத்தைப்போட்டு, எங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று பல இடங்களில் கேட்டிருக்கிறார்கள். அதுகுறித்தும் அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோல, இப்போது மீன் பிடிக்கச் செல்கின்ற மீனவர்கள் கடற்காற்றின் மூலமாகவும், அதோடு அவர்கள் தங்கள் எல்லைக்கோடு தெரியாமலும் அந்த இடத்தைக் கடந்து செல்கிறார்கள் என்ற அடிப்படையிலே இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனைப்படி அங்கே ஒளிரும் மிதவைகளை அமைப்பதற்கான திட்டங்களைத் தீட்டுவதாக

இருக்கிறார்கள். அந்த ஒளிரும் மிதவைகள் இருந்தால், அந்த எல்லைக்கோடு எந்த இடத்தில் இருக்கிறது என்று மீனவர்கள் தெரிந்துகொண்டு நிச்சயமாக நமது எல்லைக்கோட்டைத் தாண்டிச் செல்ல முடியாது. அவர்களை இதிலிருந்து காப்பாற்ற முடியும் என்பதை அவைத் தலைவரின் மூலமாக இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் அடிக்கடி இப்படி காணாமல் போவதற்கும், பல இன்னல்களுக்கு ஆளாக்கப்படுவதற்கும் முக்கியமான காரணம் என்னவென்றால், இந்தியாவில் கடல் எல்லையிலிருந்து கிட்டத்தட்ட 30 கி.மீ. தூரம் வரை, அதாவது தமிழ்நாட்டில் கடற்கரையோரத்திலிருந்து கிட்டத்தட்ட கடலுக்குள் 30 கி.மீ. வரை மீன்வளம் இல்லை. இருக்கின்ற மீன்வளம், இருந்த மீன்வளம் எல்லாம் தீர்ந்து போய்விட்டன. அதிகப்படியான Trawlers Mechanised Boats, Trawlers மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளதால் fish density மீன்வளம் மிகவும் குறைந்துவிட்டதால்தான் நமது மீனவர்கள் ஆழ் கடலுக்குள் செல்கிறார்கள். அப்படிச் செல்லும்போது அவர்களுக்கு சர்வதேச எல்லை எங்கேயிருக்கிறது என்று தெரிவதில்லை. அதனால் பல நேரங்களில் அவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படுகிறார்கள். இன்னும் சிலபேர் ஆந்திராவை நோக்கிச் செல்லும்போது, ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த மீனவர்கள் அவர்களைப் பிடித்துச் சென்றுவிடுகிறார்கள். அவர்களை மீட்டு வர நம்முடைய காவல் துறை செல்ல வேண்டியதாக இருக்கிறது.

ஆகவே இத்தகைய நிகழ்வுகள் இனி வருங்காலங்களில் நிகழாமல் இருப்பதற்கு இங்கே தமிழகக் கடற்கரையோரத்தில் இருக்கின்ற கடலிலேயே மீன் வளத்தைப் பெருக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதலமைச்சரின் 15 அம்சத் திட்டத்தில் தெளிவாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே நம்முடைய கடலோரத்திலேயே இங்கிருந்து 30 கி.மீ. தொலைவிற்குள் மீன்வளத்தைப் பெருக்குவதற்கு fish density-யை அதிகப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ஜி.கே. மணி.





**திரு. ஜி.கே. மணி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டம், முட்டம் பகுதியிலே, அழிக்கால் கிராமத்தைச் சேர்ந்த 12 மீனவர்கள் காணாமல்போய் இன்னும் கிடைக்காத நிலையிலே, அவர்களைத் தேடுகின்ற பணியிலே ஈடுபட்டிருக்கக்கூடிய அதே நிலையிலே, அவர்களின் குடும்பங்களுக்கு நிவாரண உதவி வழங்குவதாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அவர்களுக்கு மனமார்ந்த நன்றியை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு கடந்த 10 நாட்களுக்கு முன்பு சிங்களக் கடற்படையினர் நம்முடைய எல்லைக்குள்ளே வந்து, ஏறக்குறைய 15 இலட்சம் மீன்களை, நம்முடைய மீனவர்களை அடித்து விரட்டி மீன்களையெல்லாம் எடுத்துச் சென்றிருக்கிறார்கள். இந்தச் சம்பவம் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது.

இந்தத் தொடர் சம்பவத்தைக் கட்டுப்படுத்துவதற்காக, எச்சரிக்கை செய்வதற்காக, கடலிலே, தமிழ்நாட்டினுடைய எல்லையை, இந்திய எல்லையை வரையறுப்பதற்காக இங்கே சிவப்பு விளக்குடன் கூடிய மிதவை அமைக்கப்படும் என்று கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே சொன்னீர்கள். நம்முடைய அமைச்சரவர்கள் இப்போது விளக்கம் சொன்னார்கள். ஆகவே இதன் அத்தியாவசியத் தேவையை உணர்ந்து, உடனடியாக அந்தச் சிவப்பு விளக்கு மிதவை அமைக்கப்படுமா? எவ்வளவு நாட்களுக்குள் அமைக்கப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்துகளுக்கு, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனைப்படி ஒளிரும் மிதவைகளை விரைவில் அமைப்பதற்கு இந்த அரசு சிந்திக்கும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. அறிக்கை அளித்தல்

### மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அறிக்கை அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. சி. சிவசாமி, மதிப்பீட்டுக் குழுத் தலைவர்.

[2002 ஏப்ரல் 18

**திரு. சி. சிவசாமி**: மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி வணங்கி, மதிப்பீட்டுக் குழுத் தலைவராகப் பணியாற்ற வாய்ப்பளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு முதற்கண் நெஞ்சார்ந்த நன்றியை சமர்ப்பித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவின் ஒன்று முதல் ஐந்து வரையிலான அறிக்கைகளை, குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

(முற்பகல் 11-40)

## 5. மானியக் கோரிக்கைகள், 2002–2003, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

### கோரிக்கை எண் 12 - கூட்டுறவு, உணவு, மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மானியக் கோரிக்கை எண் 12, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. ப. தனபால்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கை எண் 12-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.10,64,24,000 ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 2158, திரு. ஆர். சக்ரபாணி.



2002 ஏப்ரல் 18]

**திரு. ஆர். சக்ரபாணி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஒட்டன்சத்திரம் தொகுதியில் மகளிர் நியாய விலைக் கடைகளை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து ' விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,64,24,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வெட்டுத் தீர்மானம் எண் 689, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்டம், வேலூரில் கூட்டுறவு கற்பகம் சூப்பர் மார்க்கெட்டில் முறைகேடுகள் செய்து நட்டம் உண்டாக்கியவர்கள்மீது கிரிமினல், சர்சார்ஜ் நடவடிக்கை எடுத்து இழப்பீட்டுத் தொகையை அவர்களிடமிருந்து வசூலிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,64,24,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வெட்டுத் தீர்மானம் எண் 569, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,64,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

[2002 ஏப்ரல் 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2379, திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கட்டி தயாராகவுள்ள பாபநாசம் தொகுதி - ஆதனூர் சரபோஜி ராஜபுர தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக் கட்டடத்தை உடனடியாகத் திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,64,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 994, திரு. என். நன்மாறன்.

**திரு என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,64,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 108, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,64,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 185, திரு. எச்.எம். ராஜு*.



2002 ஏப்ரல் 18]

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,64,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 62, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,64,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1348, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,64,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1604, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதியில் உள்ள சக்கரமல்லூர், நார்த்திவாடா, கொண்டாபுரம், தாசி ரெட்டிகண்டிகை, விடையூர் அடிகல்பட்டு, செஞ்சி மதுரா கண்டிகை ஆகிய கிராமங்களில் பகுதி

நேர நியாய விலைக் கடைகள் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,64,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1666, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,64,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1946, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1606,78,84,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,64,24,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2534, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,64,24,000-ல் ரூ. 100- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2787, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,64,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3412, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,64,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3575, திரு. அ.இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 873, திரு. க. சிவராஜ்.

**திரு. க. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,64,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1891, திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,64,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2191, திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரைத் தொகுதி, கட்டிக்குளம் கிராமத்திற்கென தனிக் கூட்டுறவுச் சங்கம் அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,64,24,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1006, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,64,24,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1086, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,64,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1771, டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3055, திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குடிமைப் பொருட்களை வழங்கும் பொறுப்பையும், மதுபானம் விற்பனை செய்யும் பொறுப்பையும் கூட்டுறவுச் சங்கப் பணியிலிருந்து நீக்கிவிட வேண்டியது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,64,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1493, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,64,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2673, திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,64,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1154, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,64,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1307, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரும்பு பயிர் செய்ய கடன் பெற்றவர்கள் சர்க்கரை ஆலைகளில் கரும்பு ஒப்படைத்தவுடனே பணப்பட்டுவாடா செய்யப்படாததால், கடனுக்கான வட்டியை கரும்பு ஒப்படை செய்த தினம் வரை மட்டுமே வசூலிக்கும் முறை கொண்டுவர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,64,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1535, திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவெறும்பூர் பகுதியில் மண்ணெண்ணெய் பங்குகள் அமைக்க வேண்டியது பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,64,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4609, திரு. எஸ்.ஏ.எம். உசேன்.

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,64,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2420, திரு. துரை. கி. சரவணன்

**திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நியாயவிலைக் கடைக்காரர்களிடம் பொருட்களைக் கொடுக்கும்போது சரியான எடையுடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,64,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 421, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் உள்ள விவசாயிகளுக்கு கூட்டுறவு வங்கிகள் மூலம் நிபந்தனையற்ற கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,64,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8195, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3208, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் மற்றும் நாட்ராம்பள்ளி ஆகிய தொகுதிகளில் விண்ணப்பித்துள்ள குடும்ப அட்டை இல்லாதவர்களுக்கு விரைந்து அவற்றை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,64,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3503, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு வழங்கும் நியாயவிலைக் கடைகளில் தரமான அரிசி, கோதுமை சரியான எடையில் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,64,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3757, திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராமப்புறங்களில் கூட்டுறவுத் துறை மூலம் வழங்கப்படும் மண்ணெண்ணெய் அளவு தற்போது வழங்கும் 3 லிட்டரிலிருந்து 5 லிட்டராக உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,64,24,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1200, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரும்பு ஆலைகளை ஊக்குவிக்கின்ற வகையில் கரும்புச் சக்கையிலிருந்து மின்சாரம் தயாரிக்கின்ற நிலையை எல்லாக் கூட்டுறவு மற்றும் பொது நிறுவன ஆலைகளிலும் மேற்கொள்ள வேண்டிய அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,64,24,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 432, செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொது விநியோக முறையில் வழங்கப்படும் அரிசி, கோதுமையோடு பருப்பு, காய்கறி மற்றும் எண்ணெய்ப் பொருட்கள், துணிவகைகள் உட்பட 14 வகைப் பொருட்களை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,64,24,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2077, திரு. பி.எஸ். உலகரட்சகன்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,64,24,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4485, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாம்பரம் தொகுதியில் உள்ள பல கிராமங்களில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகள் உள்ள கடைகளைப் பிரிப்பதற்கு திட்டம் தீட்டி, அரசு சார்பில் அவற்றுக்குச் சொந்தக் கட்டடம் கட்டிக்கொடுத்த பின்பும் கடைகளைப் பிரிக்காததால் மக்கள் அவதிப்படும் நிலையினைப் போக்க வேண்டியது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,64,24,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1926, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நியாய விலைக் கடைகளின் மூலம் வழங்கப்படும் அரிசியின் விலையைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,64,24,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 393, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டத்தில் உள்ள நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் மண்ணெண்ணெயின் அளவு குறையாமல் இருக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,64,24,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2339, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,64,24,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1179, திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி] [2002 ஏப்ரல் 18

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1606,78,84,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,64,24,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2611, திரு. அ. அசோகன்.

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள அனைத்து நியாய விலைக் கடைகளிலும் ரேஷன் பொருட்கள் எந்தவிதத் தடையுமின்றி மக்களுக்குக் கிடைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,64,24,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1554, திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை சிந்தாமணி கூட்டுறவுப் பண்டகசாலையிலும், நீலகிரி மாவட்டத்திலுள்ள இண்ட்கோ கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளிலும் வி.ஆர்.எஸ். திட்டத்தில் ஆட்குறைப்பு செய்யப்பட்ட பணியாளர்களுக்கு ஆட்குறைப்புக்கான ஈட்டுத் தொகையும், இதர சட்டரீதியான தொகைகளும் உடனடியாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,64,24,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2445, திரு. ஜெ. அன்பழகன்.



2002 ஏப்ரல் 18]

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,64,24,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1521, திரு. அன்பில் பெரியசாமி.

**திரு. அன்பில் பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அளவுக்கு அதிகமான குடும்ப அட்டைகள் உள்ள நியாய விலைக் கடைகளில் மக்கள் நெரிசலைத் தவிர்க்க (மண்ணெண்ணெய் விநியோகத்தின்போது) மண்ணெண்ணெய் பங்க்குகள் அமைப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,64,24,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2176, திரு. கு. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2129, திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதியில் குடும்ப அட்டை பெறுவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,64,24,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1099, திரு. சோ. இராஜேந்திரன்.

[2002 ஏப்ரல் 18

**திரு. சோ. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒரே வகையான கூட்டுறவுச் சங்கங்களில், நிர்வாகத்தால் துணை விதிகள் ஏற்படுத்துவதில், சங்கத்திற்குச் சங்கம், வேறுபாடுகள் உள்ளதைப் போக்கும் வகையில் ஒரே மாதிரியான துணை விதிகள் ஏற்படுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,64,24,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2062, திரு. இரா. திருமாவளவன்.

***திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓய்வூதியம் பெறும் முதியோர்கள் மற்றும் விதவைகளுக்கு நியாய விலைக் கடைகள் மூலம் இலவசமாக வழங்கப்படும் அரிசியின் அளவை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,64,24,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 921, திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு மைய வங்கிக் கிளையை சாத்தனூரில் துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1606,78,84,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,64,24,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன.



2002 ஏப்ரல் 18] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிவுசெய்துகொள்ள வேண்டுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் மேலான கருத்துகளை மானியக் கோரிக்கையின்மீது தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்குரிய விளக்கத்தை அளிக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையின்மீது விவாதம். திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கூடிச் சுமந்தால், மகிழ்ச்சியோடு சுமந்தால், எந்தச் சுமையும் சுமையாக இருக்காது. பாரமாகவும் தோன்றாது. சுமக்க இலகுவானதாக, சுமக்கும்போது கிடைக்கும் பயனைப் பகிர்ந்து சமதர்ம சமுதாயம் என்ற குறிக்கோளை அடையக்கூடியது கூட்டுறவு. நமது தமிழகத்தைப் பொறுத்த அளவிலே, இன்றைக்கு கூட்டுறவு வங்கியானது மூன்று அடுக்கு முறையிலே செயல்பட்டு வருகின்றது. ஒன்று, தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி என்று மூன்று வகையிலே செயல்பட்டு வந்தாலும், அவை குறுகிய காலக் கடனாகவும், மத்திய காலக் கடனாகவும் கொடுக்கப்பட்டு வருகிறது. அது மூன்றடுக்கு முறையிலே செயல்பட்டு வந்தாலும், இப்போது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியைப் பொறுத்த அளவிலே தமிழகத்திலே 4,595 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் உள்ளன. இவை பயிர் செய்கின்ற விவசாயிகளுக்கு குறுகிய காலக் கடனாக, 15 மாதத் தவணையாக கடன் தருகின்றன.

---

@ 211 முதல் 291 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளன.

அதேபோல, 3 ஆண்டு முதல் 5 ஆண்டு வரை மத்திய காலக் கடனாக ஆடு வளர்த்தல், பால் பண்ணை வைத்தல், கோழிப் பண்ணை அமைத்தல் போன்ற தொழில்களுக்கும் இந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி கடனாகத் தந்து வருகின்றது. அதேபோல, விவசாயிகளுக்கு சொந்த ஜாமீனிலும், நபர் ஜாமீனிலும், நில அடமானத்தின் பெயரிலும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த காலத்திலே பல்வேறு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் வாடகைக் கட்டடத்திலே இயங்கி வந்தன. அதனால் அதை உணர்ந்த எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞருடைய அரசு, கடந்த காலத்திலே 400 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு ரூ. 10 இலட்சம் வீதம் நிதி கொடுத்து ஒரு நவீனக் கட்டடத்தை வணிக வங்கிக் கட்டடத்திற்கு ஒப்பாக கட்டிக்கொடுத்து பெருமை சேர்த்தார்கள். ஆனால் இன்றைய அரசு கடந்த காலத்திலும் சரி, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலும், இந்த நிதிநிலை அறிக்கையிலும், அந்தக் கட்டடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்காதது வருத்தம் அளிக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, 1995-96 முதல் கிராமத்தில் இருக்கின்ற ஏழையெளிய மக்கள், நடுத்தர மக்கள், விவசாய மக்கள், ஆதிதிராவிட மக்கள் எல்லாம் தங்கள் நகைக் கடனுக்கு வட்டிக் கடைக்காரர்களிடமும், அடகுக் கடைக்காரர்களிடமும் செல்ல வேண்டிய சூழ்நிலை இருந்தது. அப்போது எல்லாம் 25 ஆயிரம் ரூபாய்தான் ஒரு நபருக்கு வழங்கப்பட்டது. ஆனால் எங்களுடைய தலைவர் கலைஞருடைய அரசு பொறுப்பேற்ற பின்பு 6-9-1996 முதல் அந்த நகைக் கடன், ஒருவருக்கு ரூ.50,000 எனவும், அதேபோல, 27-5-1998 முதல் ரூபாய் ஒரு இலட்சமாகவும் உயர்த்திக் கொடுத்தார் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு அந்த நகைக் கடனானது, 16 விழுக்காடு வட்டியோடு அங்கே வழங்கப்படுகிறது. ஒரு பொருளை வைத்துக்கொண்டு 16 விழுக்காடு வட்டிக்குக் கடன் தருகிறார்கள். எனவே, 16 விழுக்காடு வாங்குகிறார்கள். இன்றைக்கு தேசிய உடைமையாக்கப்பட்ட வங்கிகளிலே எல்லாம் வட்டி 12 விழுக்காடு அளவிலே நகைக் கடன் தருகிறார்கள். எனவே இந்த அரசு நகைக் கடனிலே விதிக்கின்ற வட்டி விகிதத்தைக் குறைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-50

அதேபோல, கிசான் அட்டை. முதன் முதலாக 1999 ஆம் ஆண்டு முதல் தமிழக விவசாயிகளுக்கு கிசான் அட்டை, தொடக்க வேளாண்மைக்



கூட்டுறவு வங்கிகள் மூலமாக 31-10-2000 வரை 1,64,834 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. இதன்மூலம் 606 கோடியே 29 இலட்சம் ரூபாய் கடன் வழங்கப்பட்டிருக்கிறது, கலைஞருடைய அரசு தந்தது என்பதை இந்த நேரத்திலே பெருமையாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, கடந்த காலத்திலே பல்வேறு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் பெரிய வங்கிகளாக இருந்தன. அதையெல்லாம் நாங்கள் பிரித்துத் தர வேண்டுமென்று இந்த மாமன்றத்திலே கேட்ட சமயத்திலே, கடந்த, எங்களுடைய தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்திலே, 33 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளைப் பிரித்துக் கொடுத்தார்கள். அதேபோல, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக் கிளைகள் பல்வேறு இடங்களிலே வேண்டுமென்று சொன்ன கோரிக்கையை ஏற்று, அந்தச் சமயத்திலே 64 கிளைகளை ஆரம்பிப்பதற்கு உதவினார்கள் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, மகளிர் சிறு வணிகக் கடனானது 1-1-1999 முதல் சேமிப்புடன் இணைந்த மகளிர் சிறு வணிகக் கடன் திட்டம் என்று ஒரு திட்டத்தை டாக்டர் கலைஞருடைய அரசு கடந்த காலத்திலே கொண்டு வந்தது. அந்தத் திட்டத்திலே கிராமங்களில் வேளாண் சார்ந்த தொழிலுக்கும், வேளாண் சாராத தொழிலுக்கும் கடன் வழங்கப்பட்டது. ஆனால் மகளிர் எங்குமே கடன் வாங்க முடியாத நிலையை உணர்ந்த எங்களுடைய தலைவர், அந்த நகர வங்கிகளிலே ஒவ்வொரு சேமிப்புடன் கூடிய கடனாக ரூ.100, 200, 500, 1500 என்று 5 ஆயிரம் வரை அந்தக் கடன் வழங்கு திட்டத்தை அறிவித்து, அந்த ஏழை எளிய மக்கள் அந்தப் பணத்தின் மூலம் தங்களுடைய தொழிலைச் செய்து தினந்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகை செலுத்தினால் போதும். 100 ரூபாய் வாங்கியிருந்தால் ஒரு ரூபாய் செலுத்தினால் போதும். அதிலே 85 பைசா சேமிப்புக் கணக்காகவும், 10 பைசா சேவைக் கணக்காகவும், 5 பைசா வட்டியாகவும் வரவு வைத்துக்கொண்டு அந்த ஏழை எளிய பெண்களுக்கு சிறு வணிகக் கடனைத் தந்தார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியானது தமிழகத்திலே 181 வங்கிகள் இருக்கின்றன. அதிலே 50 தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கு கடந்த காலத்திலே கட்டடங்கள் கட்டிக்கொடுக்கப்பட்டன. நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம், அந்த வங்கி வேளாண் சாராத தொழிலுக்கு வழங்குகிற கடனை கூடுதலாகக் கொடுக்க வேண்டும். அந்த நிலவள

வங்கியிலே, அங்கே இருக்கின்ற மக்கள் அதிகமாகக் கடன் கேட்கின்றார்கள்.
இந்த அரசு அதற்கு அதிகமான நிதியை ஒதுக்கித் தர வேண்டுமென்று
இந்த நோத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தமிழகத்தில் இருக்கின்ற 385 வட்டாரங்களிலும் அந்தக்
கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியைத்
தொடங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு
கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, திண்டுக்கல் மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே,
அங்கே உள்ள நிலைமை, வறட்சி நிலைமை மிகவும் கோரமாக
இருக்கிறது. அங்கே கடந்த இரண்டு ஆண்டு காலமாக மழை பெய்யாத
காரணத்தால், அங்குள்ள மக்கள் குடிநீருக்காக மிகவும்
கஷ்டப்படுகிறார்கள். 500 அடி, 1000 அடிக்கு போர் போட்டாலும்,
ஆழ்குழாய்க் கிணறு அமைத்தாலும் குடிநீர் கிடைப்பதில்லை. எனவே
இந்த அரசு குடிநீருக்காக முக்கியத்துவம் கொடுத்து, அந்த மாவட்டத்திற்கு
சிறப்பு நிதி ஒதுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே உங்களைக்
கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த பொருளை,
விளைச்சலைப் பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. அந்த விளைச்சல்
எல்லாம் மிகவும் காய்ந்து, கருகிய நிலையிலே இருக்கின்றன. எனவே
இந்த அரசு அந்தக் கூட்டுறவுக் கடனைப் பெற்ற விவசாயிகளுக்கெல்லாம்,
குறுகிய காலக் கடனாகவும், குறுகிய காலக் கடனை மத்திய கால
கடனாகவும், மத்திய கால கடனை நீண்ட காலக் கடனாகவும் மாற்றித்
தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, விவசாயிகள் செலுத்த வேண்டிய நிலவரி
அனைத்தையும் தள்ளுபடி செய்ய வேண்டும். அங்கு இருக்கின்ற ஏழை
எளிய மக்கள், நடுத்தர மக்கள், பாட்டாளி மக்கள் எல்லாம் இன்றைக்கு
வேலைவாய்ப்பு இல்லாமல் வேறு மாநிலங்களுக்குச் செல்ல வேண்டிய
சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே இந்த அரசு அந்த ஏழை எளிய
மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும்
வேலைவாய்ப்பை உருவாக்கக்கூடிய வகையிலே சிறப்பு நிதி கொடுத்து
வேலைவாய்ப்பை உருவாக்கித் தந்து, திண்டுக்கல் மாவட்டத்தை வறட்சி
மாவட்டமாக அறிவிக்க வேண்டுமென்று இந்தச் சபையிலே
கேட்டுக்கொள்கிறேன்.



அதைப்போல, இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு 310 கோடி ரூபாய்க்கு
விவசாயிகளுக்கு வரிச் சலுகை அறிவித்தது. அரசாணை எண் G.O. Ms.
No. 230, நாள் 21-6-2000-ன்படி, தொடக்க கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினர்
அளவில் வட்டி தள்ளுபடி செய்யப்பட்டு மேற்படி தொடக்க கூட்டுறவு
வங்கிகளுக்கு இதுவரை அரசால் பணம் கொடுக்கப்படவில்லை.
திண்டுக்கல் மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே, 10 கோடியே 58
இலட்சம் ரூபாய் நிதி இன்று வரை தரப்படவில்லை.

முற்பகல் 11-55

அதேபோல, முந்தைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்
எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்ட
அரசாணை எண் 146 மற்றும் மாநில பதிவாளர் அவர்களின் ந.க. எண்
17306/2001/ஏஜிஎஸ்/14, நாள் 26-2-2001-ன்படி கடனை, தவணை தவறிய
தேதிக்கு முன் திருப்பிச் செலுத்துவதற்கு ஊக்குவிப்புத் தொகையாக 7%
ஊக்கத் தொகை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் மூலம்
உறுப்பினர்களுக்கு வழங்கிய தொகை, இதுவரை வழங்கப்படவில்லை.
அந்த வகையில் திண்டுக்கல் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், சுமார்
80 லட்சம் ரூபாய் பாக்கி இருக்கிறது. இதை நான் சொல்வதற்குக் காரணம்,
இன்றைக்கு நீங்கள் வட்டிச் சலுகைகளை அறிவித்திருக்கின்றீர்கள். 310
கோடி ரூபாய் அறிவித்து, 226.56 கோடி ரூபாய் வட்டி தள்ளுபடி
செய்யப்பட்டுள்ளது. 2001-2002-ல் 80 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.
ஏற்கெனவே வழங்கியது போக, எஞ்சிய தொகையை கூட்டுறவு
வங்கிகளுக்கு வழங்க 2002-2003 வரவு-செலவுத் திட்டத்தில் 146 கோடி
ஒதுக்கப்பட்டுள்ளது என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டு
இருக்கிறீர்கள். இருந்தாலும், அந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு
வங்கிகள் அப்போதே அந்த வட்டியைச் செலுத்தி விவசாயிகள்
பயனடைந்து இருக்கிறார்கள். அந்த வங்கியானது இதுவரை அந்தப்
பணத்தைப் பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஒவ்வொரு தொடக்க
வேளாண்மைக் கூட்டுறவு வங்கியும், இன்றைக்கு ரூ.10 லட்சம், ரூ. 5
லட்சம், ரூ. 15 லட்சம் நிதியை—அவர்கள் சொந்த நிதியைப்
போட்டிருக்கின்றார்கள். 7, 8 மாதங்களாக அந்த நிதியைக்
கொடுக்காததனால் இன்றைக்கு அந்தத் தொடக்க வேளாண்மைக்
கூட்டுறவு வங்கிகள் எல்லாம் மிகவும் நஷ்டத்தில் இயங்கக் கூடிய
சூழ்நிலையை இன்றைக்கு இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது. எனவே
காலம் தாழ்த்தாமல் அந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு
வங்கிகளுக்கு எல்லாம் நிதியைக் கொடுக்க வேண்டுமென்று இந்த
நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்த அளவிலே, இந்த அரசு இப்போது ஓர் ஆணையை வெளியிட்டிருக்கிறது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் 31-3-2002-ல் சொந்த நிதி ரூ. 15 லட்சமும், 3-9-2002-க்குள் ரூ. 20 லட்சமும், 31-3-2003-க்குள் ரூ. 25 இலட்சமும் இருந்தால் மட்டும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி டெபாசிட் வாங்க வேண்டுமென்று பதிவாளர் கடிதம் ந.க.எண் 184617/மவகோ/14, நாள் 22-11-2001 மற்றும் 3-1-2002-ன்படி தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தமிழகம் முழுவதும் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் இந்த ஆணையை செயற்படுத்தாமல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் செயற்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதைத் தெரிவிப்பதற்குக் காரணம், இன்றைக்கு தமிழகம் முழுவதும் இருக்கின்ற 4,500 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலும் வைப்புத்தொகை, சொந்த நிதி ரூ. 15 லட்சம் இருந்தால்தான் நீங்கள் டெபாசிட் வாங்க வேண்டுமென்று ஓர் ஆணை வெளியிட்டிருக்கிறீர்கள். கடந்த காலத்திலே 1996-க்கு முன்பாக, Non-Banking Financial Companies எல்லாம் அதிலே முதலீடு செய்தவர்கள் எல்லாம் கிராமப்புறங்களில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் போட்டால்தான் துங்களுடைய பணத்திற்கு பாதுகாப்பு என்று கருதி அங்கே பணத்தைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு இந்த அரசாங்கம் ஒரு சட்டத்தைப் போட்டிருக்கிறது என்றால், அந்தச் சட்டத்தின் மூலமாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே, இந்த அரசு போட்ட அரசாணையின் காரணமாக அங்கே வைப்புத் தொகை வாங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். அப்படி அந்த...

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறுக்கிடக்கூடாது என்றுதான் இருந்தேன். உறுப்பினர் தவறான தகவலைக் கொடுத்து இந்த அவையை திசை திருப்புகிற காரணத்தினாலே, உண்மையை நான் சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். இந்த டெபாசிட் தொகையை வசூலிப்பதற்கு வெளியிலே சீட்டு கட்டுகிறவர்கள், சீட்டு நடத்துகிறவர்கள் எல்லாம் தவறான முறையிலே வசூலித்து, அதை மாற்றப்போகிற காரணத்தினாலே, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் அரசாங்கத்தின் கூட்டுறவு வங்கியாக இருக்கிறதனாலே, மக்களின் நம்பிக்கை பெற வேண்டும் என்பதற்காக ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குள் வசூலிக்க வேண்டுமென்ற நிபந்தனையை விதித்து இருக்கிறோம். அதற்கு மேலும், டெபாசிட்



தொகைகளை தாராளமாக P.A.C.B.-லே கொண்டுவந்து கொடுத்தால், அந்த வங்கி தன்னுடைய சொந்த நிதி இல்லையென்று சொன்னாலும், மத்திய கூட்டுறவு வங்கியின் சார்பாக டெபாசிட்களை வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மக்களுக்கு இந்த அரசினாலே பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி. ஒரு நிமிஷத்தில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்படி ஒவ்வொரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கும் அரசாங்கத்தினுடைய பங்குத் தொகை ரூ.15 லட்சம், ரூ. 20 லட்சம் கொடுத்தால் கண்டிப்பாக அதை வரவேற்கிறோம். இந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி கிராமப்புறங்களில் நலிவடைந்து விடாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த ஆலோசனையை வழங்கியிருக்கிறோம். எனவே மாநில அரசு அந்த நிதியைக் கொடுத்தால் மிகவும் சந்தோஷம். அதேபோல் இந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளானது, இன்றைக்கு கிராமங்களில் இருக்கின்ற மக்களுக்கு நல்லமுறையில் பயன்பட்டு வருவதால், வணிக வங்கிக்கு ஒப்பாக எளிய முறையிலே அந்தச் சீர்திருத்தத்தைக் கொண்டுவரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், இன்றைக்கு பொது விநியோகத் திட்டத்தைப் பொறுத்த அளவிலே கடந்த அரசு 2000, 2001-லே அன்றைக்கு கலைஞருடைய அரசு 1,700 கோடி ரூபாய் ஒதுக்கியிருந்தது. ஆனால் இன்றைக்கு இந்த அரசு அதை 1,240 கோடி ரூபாயாகக் குறைத்து இருப்பது எங்களுக்கு அச்சமாக இருக்கிறது. பொதுமக்கள் பொது விநியோகத் திட்டத்தில் ஏதாவது மாறுதல் ஏற்படுமா என்று சந்தேகப்படுகிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை பதிலுரையிலே தெரிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, நியாய விலைக் கடைகளைப் பொறுத்த அளவிலே....

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள், நிறைய பேர், இன்னும் 8 பேர் பேச வேண்டும்.

**திரு. ஆர். சக்ரபாணி:** நெல் கொள்முதலைப் பொறுத்த அளவிலே, 1995-96 முதல், 1996 ஆம் ஆண்டு, ஒரு குவிண்டாலுக்கு, பொது ரகத்திற்கு 360 ரூபாய் கொடுக்கப்பட்டது. அதேபோல, சன்ன ரகத்திற்கு 375 ரூபாய் கொடுக்கப்பட்டது. 2000-2001 ஆம் ஆண்டிலேயும் ஒரு குவிண்டாலுக்கு 510 ரூபாயும், சன்ன ரகத்திற்கு 540 ரூபாயும் கலைஞருடைய அரசு பொறுப்பேற்றவுடனேயே, மத்திய அரசு அறிவித்த விலையைக் காட்டிலும், இணை கொள்முதல் செய்கிற நேரத்தில் இடைநிகழ்வு பொதுவாக 5 ஆண்டு ஆட்சிக் காலத்திலே 228 கோடியே 30 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. ஆனால் இன்றைக்கு இந்த அரசு, தஞ்சை, கடலூர், அதேபோல நாகை, திருவாரூர் மாவட்டங்களிலே தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், அதேபோல, சேமிப்புக் கிடங்குகளின் மூலமாக நெல் கொள்முதல் செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டு, கடந்த 15 ஆம் தேதியோடு இந்த நெல் கொள்முதலை நிறுத்திவிட்டது. இன்றைக்கு அந்த மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்; போராட்டம் நடத்துகிறார்கள். எனவே இந்த அரசு அங்கே விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்திருக்கின்ற அத்தனை நெல்லையும் கொள்முதல் செய்ய வேண்டும். ஒரு காலத்திலே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஆர். சக்ரபாணி:** ஒரு காலத்திலே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. என். ரெங்கநாதன். (குறுக்கீடு) 10 நிமிடங்களுக்கு மேலே ஆகிவிட்டது.

**திரு. என். ரெங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சக்ரபாணி, கடைசி வாக்கியத்திற்கு வாருங்கள். (குறுக்கீடுகள்) பரிந்துரை பண்ணுவதற்கு எவ்வளவு பேர் இருக்கிறார்கள்? அடேயப்பா? இன்னும் ஒரு நிமிடத்திலே உரையை முடியுங்கள்.

**திரு. ஆர். சக்ரபாணி:** அதேபோல, இன்றைக்கு இந்த அரசு விவசாயிகள் உற்பத்தி செய்த நெல்லை கொள்முதல் செய்ய வேண்டும். அதேபோல விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த நெல்லை கண்டிஷனாக எங்களுக்குத்தான் கொடுக்க வேண்டுமென்று அரசு கடந்த காலத்திலே இருந்தது. ஆனால், இன்றைக்கு தாங்கள் உற்பத்தி செய்த



உபரி நெல் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், இந்த அரசு 15-4-2002 வரை இருந்த கெடுவை இன்னும் இரண்டு மாத காலத்திற்கு நீட்டிப்புச் செய்து, அங்கு உற்பத்தி செய்த அனைத்து நெல்லையும் கொள்முதல் செய்ய வேண்டுமென்று உங்களை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள். அடுத்து, திரு. என். ரெங்கநாதன்.

**திரு. என். ரெங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோதனைகளையே சாதனைகளாக்கி, வேதனைகளையே வெற்றிப்படிகளாக்கி, வீணர்களின் வீண் புரளிகளை முறியடித்து, மக்கள் பலம் ஒன்றையே நம்பி நாட்டை நல்வழிப்படுத்த அரியணையில் வீற்றிருக்கும் எங்கள் அன்னையே, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் மானியக் கோரிக்கையில் உரையாற்றுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாத மலர்களைத் தொட்டு வணங்கி என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு"

அதாவது, பொருள் வரும் வழிகளை மேன்மேலும் இயற்றலும், வந்த பொருள்களைச் சேர்த்தலும், சேர்த்த பொருளைக் காத்தலும், காத்தவற்றை வகுத்துச் செலவு செய்தலுமே ஒரு வல்லமை கொண்ட அரசன் ஆவான் என்னும் வள்ளுவன் கூற்றைச் சொல்லி, வடலூர் அருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகளார் தனது அபூர்வ சக்தியாலும், பக்தியாலும் எண்ணெய் இல்லாமல் தண்ணீரிலேயே விளக்கு எரியச் செய்ததைப்போல, பற்றாக்குறை பட்ஜெட்டோடு, பணம் இல்லாமல் கஜானாவைக் காலி செய்துவிட்டுச் சென்ற கடந்த ஆட்சியாளர்களின் செயல்பாடுகளை முறியடித்து, தங்களின் அபூர்வ மதிநுட்பம் மற்றும் ஆளுகைத் திறனால் இந்த அரசை நடத்தி, இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் தமிழகத்தை மாற்றிக்காட்டுவேன் என்று சூளுரைத்து, தமது செயல்திறனால் 15 அம்சத் திட்டத்தின் மூலம் தமிழகத்தை தலைநிமிரச் செய்ய பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்து மாற்றாரை மிரளவைக்கும் செயல் திறன் கொண்டது மாண்புமிகு அம்மா அவர்களின் இந்த வரவு-செலவுத் திட்டமாகும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கூட்டுறவுத் துறையைப் பொறுத்த அளவில், கூட்டுறவு வங்கிகளின் மூலம் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட கடன் தொகையில் காலம் கடந்த நிலுவை, தவணை தவறிய தொகைகளின் மீதான அபராத வட்டி மற்றும் வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட அனைத்து எதிர்க்கட்சிகளும் கோரியபோது, அன்றைய முதல்வராக இருந்த திரு. கருணாநிதி அவர்கள் இன்றைய முதல்வர் தானைத் தலைவி புரட்சித் தலைவி அம்மாமீது அவதூறாகச் சொன்னதையும் இந்த அவை மறந்துவிடவில்லை.

தான் ஆட்சிப் பொறுப்பேற்ற முதல் மாதத்திலேயே, விவசாயிகளின்பால் பற்றுகொண்ட அம்மாவின் அரசு, வட்டி, அபராத வட்டி என ரூ.310.50 கோடியைத் தள்ளுபடி செய்து, சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் அறிவித்தார்கள். 6 இலட்சத்து 11 ஆயிரத்து 193 விவசாயிகள், ரூபாய் 226 கோடி அளவிற்கு நிவாரணமும் பெற்றனர். அதனைத் தொடர்ந்து நடப்பாண்டிலும், இத்திட்டத்திற்காக ரூபாய் 80 கோடியை மாண்புமிகு அம்மாவின் அரசு வழங்கியுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடர வேண்டுமெனவும், விடுபட்டுப்போன விவசாயிகள் நலன் கருதி வரவு-செலவுத் திட்டத்தில் மேலும் ரூபாய் 146 கோடியை ஒதுக்கியுள்ளது காவிரி கடைமடைப் பகுதி விவசாயிகளின் வயிற்றில் பால் வார்த்ததைப்போல் உள்ளது.

பிற்பகல் 12-05

நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில் கூட்டுறவுத் துறை மூலம் கடன் பெற்றவர்களுக்கு நிவாரணம் அளிக்க, நீண்ட காலமாக உள்ள நிலுவைத் தொகைகளை வசூலிக்க ஒரே தவணையில் கடனைத் தீர்க்கும் சலுகைத் திட்டம். One time Settlement Scheme என்ற திட்டத்தை அறிவித்திருப்பது எந்த அரசும் அறிவிக்காத திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் சுமார் 4.5 இலட்சம் கடனாளிகள் பயன்பெறும் வகையில் ரூ.110 கோடி செலவாகும் என்பதைக்கூட பொருட்படுத்தாமல் இத்திட்டத்தை உடனடியாக செயல்முறைப்படுத்தி 30-6-2002 வரை செயலில் இருக்கச் செய்திருப்பது அனைவராலும் பாராட்டத்தக்க ஒன்றாகும்.

"கூட்டுறவே நாட்டுயர்வு" என்பதைத் தாரக மந்திரமாகக் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு ஒருங்கிணைந்த



கூட்டுறவு வளர்ச்சித் திட்டம், கூட்டுறவு மூலம் வேளாண் இடுபொருட்கள் விநியோகம் செய்தல், ஒருங்கிணைந்த மகளிருக்குக் கடன் வழங்கும் திட்டம் போன்ற திட்டங்களுடன் வேளாண்மை விளைபொருட்கள் விற்பனைக்கு 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.725 கோடியை குறியீடாக நிர்ணயிக்கலாம் என முடிவு எடுத்திருப்பது மிகவும் போற்றுதற்குரிய ஒன்றாகும்.

உணவுப் பாதுகாப்பைப் பொறுத்த அளவில் அனைத்துப் பிரிவு மக்களுக்கும் சரிவிகித உணவு கிடைப்பதற்கான பொருளாதார சமூக வழிமுறைகளை உருவாக்குதல் என்ற முற்போக்கு சிந்தனை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மட்டுமே உரித்ததாகும். ஆண், பெண், குழந்தைகள், கருவுற்ற தாய்மார்கள், சிசுக்கள் மற்றும் முதியோர் ஆகியோருக்கு சத்துணவுத் தேவைகளில் சிறப்புக் கவனம் செலுத்தும் வகையில் முன்னாள் முதலமைச்சர், மறைந்த டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 4 வயது குழந்தைக்கும் சத்துணவுத் திட்டம் என அறிவித்ததுபோல், 4 மாத கருவிற்கும் உணவு அளிக்கும் திட்டம் என்று கொண்டு வந்த திட்டம் 'தாய் எட்டடி பாய்ந்தால், குட்டி பதினாறு அடி பாயும்' (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைப் போல் உள்ளது.

வாழ்நாள் முழுமைக்கும் சத்துணவுப் பாதுகாப்புத் திட்டம் என்று அறிவித்து, அத்திட்டத்திற்கு ரூ.286 கோடியை ஒதுக்கீட்டில் மேற்கொண்டிருப்பது நாட்டிலேயே முதல் மாநிலமான தமிழகத்தில் தான் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். கெடுமதியாளர்களின் அரிசி விலை உயரும் என்ற அவதூறு பிரச்சாரத்தை முறியடிக்கும் வண்ணம் ஏழை மக்களின் நலனை என்றென்றும் பாதுகாத்திடும் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பொது விநியோக முறை மூலம் வழங்கப்படும் அரிசியின் விலை தன் ஆட்சிக்காலம் முழுவதும் ரூ.3.50 தான் என்று அறிவித்ததும், உணவு மானியத்திற்காக ரூ.1,240 கோடி வழங்கியுள்ளதும், இதுவரை எந்த அரசும் செய்யாதது மட்டுமல்ல மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மட்டுமே செய்துள்ள மிகப் பெரிய சாதனையுமாகும்.

போலி குடும்ப அட்டைகளை ஒழிக்க கூப்பன் முறையை அறிமுகப்படுத்தி, ஏழையெளிய மக்களுக்குத் தடையின்றி அரிசி கிடைக்கும் வகையில் கூப்பன் புத்தகங்கள் வழங்கி குடும்ப அட்டையில் அச்சிடப்பட்டுள்ள புகைப்படத்தில் உள்ள நபரிடம் மட்டுமே அரிசி வழங்கப்படும் என்று அறிவித்திருப்பது ஏழையெளிய, நடுத்தர, பாட்டாளி வர்க்கத்தினருக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும்.

விவசாயிகளின்பால் பற்றும், பரிவும் கொண்ட மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு டி.கே.எம். 9 ரக நெல்லையும், வெளி மாநிலத்திற்கு எடுத்துச் செல்லலாம் என்ற ஆணையினையும், அனைத்து வகை நெல், அரிசியை வெளி மாநிலத்திற்கு எடுத்துச் செல்வதற்கு ஏதுவாக 100 விழுக்காடு லெவி செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்து ஆணை வெளியிட்டிருப்பதும், அனைவராலும் போற்றப்படக்கூடியதாகும். குறிப்பாக, ஒன்றுபட்ட தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்குப் பெரிதும் பயன்படும் திட்டமாகும். அதைப்போல, அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் சில்லறை, மொத்த வியாபாரிகள் இருப்பு வைத்துக்கொள்ளும் நெல் மற்றும் அரிசியின் அளவு உச்சவரம்பை இரண்டு மடங்காக உயர்த்தியிருப்பது அரிசி, நெல் வியாபாரிகள் மற்றும் மொத்த விற்பனையாளர்கள் மத்தியில் சிறப்பான வரவேற்பைப் பெற்றுள்ளது.

2001-2002 ஆம் ஆண்டில் அரசுக்கு நிதி நெருக்கடி இருந்தபோதிலும், 8 இலட்சம் மெட்ரிக் டன்தான் நெல் கொள்முதல் செய்ய வேண்டுமென அரசு நிர்ணயம் செய்தபோதும்கூட, 13 இலட்சம் மெட்ரிக் டன் நெல்லை கொள்முதல் செய்ததும், மத்திய அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஆதார விலையுடன் இடைநிகழ் செலவாக குவிண்டால் 1-க்கு ரூ.40 விவசாயிகளுக்கு வழங்கியதும் அம்மாவின் அரசுதான். மேலும், காவிரிப் பாசனப் பகுதிகளான தஞ்சை, நாகை, திருவாரூர், திருச்சி, புதுக்கோட்டை மற்றும் கடலூர் மாவட்டங்களில் பிப்ரவரி மாதம் பருவம் தவறி பெய்த பெரும் மழையின் காரணத்தினால் ஏற்பட்ட இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு ரூ.49 கோடி நிவாரணம் அளித்தது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசுதான். 2002-ல் சம்பா நெற் பயிர்கள் பாதிக்கப்பட்டதைக் கருத்திற்கொண்டு இந்திய உணவுக் கழகத்தின் விதிமுறைகளின்படி 18 சதவிகிதம் ஈரப்பதம் உள்ள தரம் 1 ரக நெல்லை மட்டும் கொள்முதல் செய்வதற்குப் பதிலாக 22 சதவிகிதம் ஈரப்பதம் உள்ள தரம் 3 ரக நெல்லை கொள்முதல் செய்து, அதிகமாக ஈரப்பதத்தால் ஏற்படுகின்ற இழப்பிற்காகத் தொகை ஏதும் பிடித்தம் செய்யாமல் செய்தது டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவின் அரசுதான் என்பது குறிப்பிடத்தக்கது. 15-3-2002 வரை நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் தேவைக்கு அதிகமான நெல் கொள்முதல் செய்யப்பட்டபோதிலும் விவசாயிகளின் நலன் கருதி, காவிரிப் பாசனப் பகுதிகளில் 15-4-2002 வரை கொள்முதல் ஆதார விலைக்குக் கூடுதலாக குவிண்டால் ஒன்றுக்கு போக்குவரத்துச் செலவாக ரூ.15 அளித்து நெல் கொள்முதல் செய்ய அரசு ஆணையிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.



பிற்பகல் 12-10

மத்திய அரசு மண்ணெண்ணெய் விலையை 1-3-2002 முதல் லிட்டர் ஒன்றுக்கு ரூ.9 முதல் ரூ.9.60 வரை என்று உயர்த்தியுள்ளபோதிலும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு, ஏழையெளியோர்பால் பற்று கொண்டுள்ள இந்த அரசு ஏழையெளிய மக்கள் பயன்பெறும் வகையில் லிட்டர் ஒன்றுக்கு ரூ.8.40 முதல் ரூ.9.00 வரை என விற்க ஆணையிட்டு, அதன்படி மானிய விலையில் பொது விநியோகத் திட்டத்தில் மண்ணெண்ணெய் விற்பனை செய்யப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். சுயநல இலாபத்திற்காக தி.மு.க. ஆட்சியில் ஊட்டி தேயிலைத் தொழிலை, மத்திய தொழில் துறையின், முரண்பாடான கொள்கையால் நசிந்திடச் செய்திருந்த நிலையில், ஊட்டி சிறு தேயிலை விவசாயிகளின் துயர் துடைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு ஊட்டி டீ என்ற பெயரில் 100 கிராம் கொண்ட பாக்கெட் ரூ.9.00 என கூட்டுறவு அங்காடிகள் மூலம் விற்பனை செய்து, தேங்கிக் கிடந்த தேயிலையை விற்பனை செய்ததும், மலிவு விலையில் ஏழையெளிய மக்களுக்குத் தரமான டீ தூள் கிடைக்க ஆவன செய்ததும் புரட்சித் தலைவி அம்மாவின் அரசு செயல்படுத்தும் சீரிய திட்டமாகும் என்பதைச் சொல்லி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை நானும் ஒரு கூட்டுறவாளன் என்ற முறையிலே கூட்டுறவுச் சங்கங்களின் Ad hoc செயலாளராகப் பணிபுரிபவர்களை வட்ட அளவிலோ அல்லது மாவட்ட அளவிலோ பணி மாறுதல் செய்ய ஆணை பிறப்பித்தால், கடந்த ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற ஊழல்களையும் முறைகேடுகளையும் வெளிக்கொணர்வதற்கு ஏதுவாக இருப்பதுடன், நிருவாகச் சீர்திருத்தத்திற்கும் வாய்ப்பாக அமையும் என பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், வட்ட அளவிலோ அல்லது வட்டார அளவிலோ Taluk or Union அளவிலோ (மணியடிக்கப்பெற்றது) சுமார் 10 இலட்சம் நெல் மூட்டைகளைச் சேமித்து வைப்பதற்கான சேமிப்புக் கிடங்குகளும், நெல் உலர்த்தும் ஓர் ஆலையும் அமைத்தால் உணவுப் பொருட்கள் கெட்டு அரசுக்கு ஏற்படும் இழப்பைத் தவிர்க்கலாம் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

எனது தொகுதியான பூம்புகார் தொகுதியில் ஏற்கெனவே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த பூம்புகார் மீன்பிடித் துறைமுகத்தை விரைவில் அமைத்து செயல்படச் செய்ய வேண்டுமாயும், அப்பகுதி மீனவர்களின் நலன் காத்து உதவிட வேண்டுமாயும் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. என். ரெங்கநாதன்] [2002 ஏப்ரல் 18

பூம்புகார் - மேலையூர் கல்லூரியில் புதியதாக, வருகின்ற கல்வி ஆண்டில் B.C.A.—Bachelor of Computer Application - வகுப்பு தொடங்க ஆவன செய்ய வேண்டுமாயும் 1991-96 ஆம் ஆண்டில் தானைத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் சர்வே செய்யப்பட்டு, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கிடப்பில் போடப்பட்ட பூம்புகார்-மேலையூர் தொழிற்பேட்டையை - SIPCOT - மீண்டும் தொடங்க ஆவன செய்யுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

பூம்புகார் தொகுதியில் 25 கிலோமீட்டர் தொலைவில் உள்ள 15 மீனவ கிராமங்களுக்கு அதிக அளவில் தொகுப்பு வீடுகள் கட்டித்தர ஆவன செய்ய வேண்டுமாயும் மேற்கண்ட 15 மீனவ கிராமங்களுக்கு, ஒவ்வொரு கிராமத்திற்கும் மீன் உலர் களம் ஒன்றை அமைத்துத் தர வேண்டுமாயும் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குப் பக்கத்தில் உள்ள கொள்ளிடம் ஆற்றில் அதாவது அணைக்கரை, கீழ் அணைக்கும் கொள்ளிடம் பாலத்திற்கும் இடையே ஏதாவது ஒரு இடத்தில் மழை, வெள்ளக் கால உபரி நீரைச் சேமித்து வைக்கும் வகையில் தடுப்பு அணை Check Dam ஒன்று கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டுமாயும் கேட்டுக்கொள்கிறேன்.

பூம்புகார் தொகுதிக்குட்பட்ட திருவெண்காடு அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் சுவாமி திருக்கோயில் ஆண்கள் உயர்நிலைப் பள்ளி மற்றும் கீழப்பெரும்பள்ளம் அரசு உயர்நிலைப் பள்ளி ஆகியவற்றை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தித் தர ஆவன செய்ய வேண்டுமாயும் கேட்டுக்கொள்கிறேன்.

இத்தனைக்கும் மேலாக மயிலாடுதுறை கோட்டத்தை, மயிலாடுதுறையைத் தலைமையிடமாகக் கொண்ட மாவட்டமாக அறிவிக்க வேண்டுமாய் தமிழகத்தின் விடிவெள்ளி, தானைத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

பூம்புகார் சுற்றுலா மையத்தை மேம்படுத்திட ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாரமலை அவர்கள்.



2002 ஏப்ரல் 18]

***திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு, உணவு, நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

'கூட்டுறவே நாட்டுயர்வு'. இது வெறும் அலங்கார வார்த்தை அல்ல. இதுவே அறிவார்ந்த உண்மை. நிதர்சனம். இந்தக் கூட்டுறவு இயக்கத்தின் பிறப்பிடம் ஜெர்மன் நாடு. ஜெர்மனியில் 19-ம் நூற்றாண்டினுடைய இடைக் காலத்தில் ஏற்பட்ட மிகப் பெரிய பஞ்சம், அந்தப் பஞ்சத்தின் காரணமாக ஏழையெளிய மக்கள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் எல்லாம் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, வீடுகள், சொத்துக்கள் எல்லாவற்றையும் இழந்து நிற்கின்ற நேரத்தில் அந்த நாட்டிலே, Pioneer of Co-operative Movement என்று சொல்லப்படுகிற, F.W. Reiffeisen, Herr. Franz Schulze என்ற இரண்டு சிந்தனையாளர்கள் சேர்ந்து தொடங்கியதுதான் இந்தக் கூட்டுறவு இயக்கம். அந்தக் கூட்டுறவு இயக்கம் நமது நாட்டிலும் சிறப்பாக நடைபெறுவதற்காக நமது மத்திய அரசு அங்கே ஃபிரடெரிக் நிக்கல்சன் என்பவரை அனுப்பி அந்தத் திட்டத்தைத் தெரிந்துகொண்டு வந்து நமது நாட்டிலே அதை அறிமுகப்படுத்தினார்கள். கூட்டுறவு என்பது ஒரு புனிதமான இயக்கம் என்று சொன்னால்கூட மிகையாகாது. அதற்குக் காரணம் அதனுடைய தலையாய கொள்கை என்பது The important principles of co-operation is 'self-help through mutual aid and its motto is each for all and all for each'. ஒருவர் எல்லோருக்குமாக, எல்லோரும் ஒருவருக்காக என்ற இந்த சித்தாந்தத்தின் அடிப்படையில் செயல்படுகிற ஓர் அருமையான இயக்கம். இந்தக் கூட்டுறவு இயக்கம் என்பது Co-operation is a golden via-media between capitalism and socialism என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட புனிதமான இயக்கம் மனித சமுதாயத்திற்கு மிக மிகத் தேவை என்பதை நாம் உணர வேண்டும். பொதுவாக சமுதாயத்திற்குத் தேவைப்படுகின்ற உண்ண உணவு, உடுக்க உடை, குடியிருக்க வீடு, இந்த மூன்று தான் சமுதாய அடித்தளத்து மக்களுக்கு மட்டுமல்ல, சமுதாயத்திற்கு அடிப்படையான தேவைகள். இந்தத் தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றித் தரும் பொறுப்பில் மற்ற எந்த இயக்கத்தைக் காட்டிலும் கூட்டுறவு இயக்கத்திற்குத்தான் அளவிட முடியாத பங்கு இருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். உணவு என்று சொல்கிறபோது, இந்தக் கொள்கைக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிற ஒரு கோடியே 47 இலட்சம் ரேஷன் கார்டு வைத்திருப்பவர்களுக்கு பொது விநியோகத்

திட்டத்தின் மூலமாக உணவு வழங்குகிறோம். அதோடு அந்த உணவு உற்பத்திச் செய்கின்ற விவசாயிகளுக்கும் குறுகியகால, மத்திய காலக் கடன் கொடுத்து, அதோடு உரம், இடுபொருள் கொடுத்து அந்த உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு நாம் ஏற்பாடு செய்கின்றோம். உற்பத்தியான அந்த நெல்லை வாங்கி, விற்று அதன்மூலமாக விவசாயிகள் பயன் அடைவதற்கும் நாம் ஏற்பாடு செய்கின்றோம். ஆகவே, உணவு என்று சொல்கிறபோது அதிலே, கூட்டுறவினுடைய பங்கு மிக மிக இன்றியமையாத பங்கு என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போல, உடுக்க உடை என்று சொல்கிறபோது கூட்டுறவு மில்கள், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், நெசவாளர் கைத்தறி உற்பத்தியாளர் சங்கங்களின் மூலமாகத் துணிகள், சேலைகள், வேட்டிகள் இவற்றையெல்லாம் உற்பத்தி செய்து, சங்கங்களின் மூலமாக நாம் விற்பனை செய்து அதிலே ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் பயன்பெறுவதற்காகவும், சமுதாயத்திற்குத் தேவையான துணியை உற்பத்திச் செய்வதற்கும் நாம் உரிய செயல்களிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

அதைப்போலவே வீடு என்று சொல்கின்றபட்சத்திலும்கூட கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் வீடு கட்டி வழங்குவது, வீட்டுமனை வழங்குவது போன்ற பல அடிப்படைக் காரியங்களை நாம் செய்து கொடுக்கிறோம். ஆக, இப்படிப்பட்ட புனிதமான இயக்கம் வளர்க்கப்பட வேண்டும். அதிலே முழுமையான கவனம் செலுத்தப்பட வேண்டும். அதன் காரணமாக நாட்டில் வேலைவாய்ப்பு பெருகும். வேலைவாய்ப்பு இல்லாமையைக்கூட ஒழிப்பதற்கு ஒரு அடிப்படையாக அமையும் என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் இன்று ஒரு தேக்க நிலையைச் சந்தித்துக்கொண்டிருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது ஒன்றைச் சொன்னார்கள். வெளிநாட்டிலிருந்து பால் பவுடரை மத்திய அரசு வாங்குகிறது. அதன் காரணமாக இங்கு இருக்கின்ற பால் பவுடர் விற்பனையிலே தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. இதனால் தமிழகத்திலே 150 கோடி ரூபாய் பெறுமானமுள்ள பால் பவுடர் தேங்கி இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். தேயிலைத் தொழிலிலும்கூட மத்திய அரசினுடைய கொள்கை காரணமாக இப்படிப்பட்ட ஒரு மந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்று நாம் சந்தித்துக்கொண்டிருக்கிற



சிக்கல்களுக்கெல்லாம் மத்திய அரசின் கொள்கைதான் காரணமாக இருக்கிறது. இவற்றையெல்லாம் நீக்கி தொழிலாளர்களுக்கு நல்வாழ்வு கிடைப்பதற்கு நாம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு இந்தக் கூட்டுறவிலே இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்று கேட்டீர்களேயானால் மன்னர்கள், ஜமீன்தார்கள் எல்லாம் ஒரு காலத்திலே ஆண்டு கொண்டிருந்தார்கள். சுதந்திரத்திற்குப் பின்னாலே அவர்களெல்லாம் ஒழிக்கப்பட்ட பின்னாலே, ஏழைகள், சமுதாயத்தின் அடித்தளத்திலே உள்ள மக்கள் மீண்டும் கஷ்டப்படுகிறபோது அல்லது அவர்களுக்கு சோதனை ஏற்படுகிறபோது அல்லது பஞ்சம் ஏற்படுகிறபோது தனியாரிடம் கடன் வாங்கி, மீண்டும் ஒரு புதிய ஜமீன்தாரி முறை உருவாக்கப்படாமல் தடுத்துக்கொண்டிருப்பது நம்முடைய கூட்டுறவு இயக்கம்தான் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்படிப்பட்ட இயக்கம் சிறந்த முறையிலே செயல்படுவதற்கு எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதோடு சில கோரிக்கைகளையும் இங்கே நான் முன்வைப்பதற்கு விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-20*

வேலூரிலே பஸ் ஸ்டாண்டில் கூட்டுறவுத் துறையின் மூலமாக ஒரு பழத் தொழிற்சாலை நடைபெற்றுக்கொண்டு வந்தது. அது தற்போது மூடப்பட்டிருக்கிறது. அதைத் திறக்க வேண்டுமென்று அரசாணை பிறப்பிக்கப்பட்டும்கூட, Enter-upon Permission கொடுப்பதற்கு, அங்கேயிருக்கிற பஸ் நிர்வாகம் அனுமதி வழங்கவில்லை என்று சொல்கிறார்கள். அதன் காரணமாக அந்தப் பழத் தொழிற்சாலை திறக்கப்படாமல் இருக்கிறது. அதை மீண்டும் விரைவிலே திறப்பதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். ஆணையிட வேண்டுமென்று நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் தேர்தல் குறித்து நாம் கோரிக்கைகள் சொல்கிறபோது, கூட்டுறவுத் தேர்தல் நடப்பது கட்டாயமாக்கப்பட வேண்டும். ஊராட்சிகள், நகராட்சிகள் தேர்தலை நடத்த எப்படி தனி ஆணையம் இருக்கிறதோ, அதைப்போலவே கூட்டுறவுத் தேர்தல் நடத்துவதற்கும் தனி

ஆணையம் இருக்க வேண்டும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதோடு 1983 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சட்டத்திலே சொல்லியிருக்கிற 77-வது பிரிவில், Common Selection Board — 74-வது பிரிவு இல்லை—75-லே Common Cadre of Service, இந்த இரண்டும் சட்டமாக இயற்றப்பட்டு, 18 ஆண்டுகளுக்குப் பின்னாலும்கூட, அந்தத் துறையிலே இப்போது அமல்படுத்தப்படாமல் இருக்கிறது. அதை அமல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நியாய விலைக் கடைகளில் பொருட்கள் வாங்க மக்கள் 2 கிலோ மீட்டருக்கு மேல் செல்ல வேண்டிய இடங்களிலும், அதிக அளவில் குடும்ப கார்டுகள் உள்ள பகுதிகளிலும், மகளிர் குழுக்களால் நடத்தப்படும் நியாய விலைக் கடைகள் தொடங்கப்படும் என அறிவித் திருப்பது பாராட்டுக்குரியது. இந்த முயற்சியிலே அரசு விரைவாக ஈடுபட்டு, 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேல் செல்ல வேண்டிய இடங்களிலும், அதிக கார்டுகள் உள்ள பகுதிகளிலும் விரைவாக மகளிர் குழுக்களை அமைத்து அவற்றைச் செயல்படுத்துவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அரசு செலவிலேயே கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சிப் பட்டயப் படிப்பு படித்த தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 210 பேர் 3 ஆண்டுகளாக வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்குவதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

Model Co-operative Act என்று சொல்லி மத்திய அரசாங்கம் ஒரு கூட்டுறவு மாதிரிச் சட்டத்தைத் தயார் செய்து, அனைத்து மாநிலங்களுக்கும் அனுப்பி வைத்திருக்கிறது. பல மாநிலங்கள் அதை நிறைவேற்றியிருக்கின்றன. நமது மாநிலம் நிறைவேற்றவில்லை. அதை மொத்தமாக நிறைவேற்றவில்லை என்று சொன்னாலும், அதில் இருக்கிற சில தேவையான முக்கிய பகுதிகளையாவது எடுத்துக்கொண்டு, அதை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இப்படிச் சொல்வதற்குக் காரணம் ஏற்கெனவே இருக்கிற சட்டத்தைப்பற்றி என்ன சொல்வார்கள் என்றால் Registrar of Co-operative Societies is the Brahma, Vishnu and Siva of Co-operative Institutions என்று சொல்வார்கள். ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகியவற்றுக்கு எல்லாம் அதிகாரம் உடையவர் அவரேதான். ஆனால் அந்த Model Co-operative Act-லே தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு அதிக



அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அப்படிப் பட்ட பகுதிகளையாவது எடுத்து, புதிய சட்டத்தை உருவாக்குவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1983 ஆம் ஆண்டு சட்டத்திலே, அன்றைக்கு 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கீடு இருந்த காரணத்தினாலே அந்த சட்டத்திலே 18 சதவிகிதம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதாவது கூட்டுறவு இயக்கங்களிலே இருக்கிற நிர்வாகக் குழுக்களில் தாழ்த்தப் பட்ட மலைவாழ் மக்களுக்கு 18 சதவிகிதம் கொடுக்க வேண்டுமென்று அந்தச் சட்டத்தில் இருக்கிறது. அதிலே இப்போது ஒதுக்கீடு 19 சதவிகித மாக இருக்கின்ற காரணத்தினாலே, அதற்கு ஒரு சட்டத் திருத்தம் கொண்டுவந்து அதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுக் கொள்கை விளக்கத்தையும் மற்றும் செயலாக்கத் திட்டம் பற்றியும் படித்துப் பார்த்தேன். அதில் செய்திகள், சாதனைகள், வரவு-செலவு எல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன. இன்றைய நிலைமைகள் எல்லாம் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், பல கூட்டுறவு இயக்கங்கள் கடன் பெறும் தகுதியை, borrowing power-ஐ இழந்திருக்கின்றன. நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, சமுதாயத்தின் அத்தனை பகுதிகளிலும் செயல்பாட்டை வைத்துக்கொண்டிருக்கின்ற கூட்டுறவு இயக்கம் (மணியடிக்கப் பெற்றது) வலுப்பெற வேண்டும் என்பதற்காக நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த borrowing capacity-யை இழந்த அடிப்படிப்பட்ட கூட்டுறவு இயக்கங்களுக்கு விரைவாக அந்த சக்தியைக் கொடுப்பதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதன்பிறகு இந்தக் கூட்டுறவுத் துறையிலே பல இடங்களிலே—ஊழல்கள்—கையாடல்கள் நடைபெறுகின்றன. அதற்குக் காரணம் பல ஆண்டுகளாகப் பணியில் தொடர்ந்து இருக்கிற தொழிலாளர்கள்தான். நான் ஏற்கெனவே கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களோடு பேசியபோது ஒரு குறிப்பைத் தருகிறேன் என்று சொன்னேன். கூட்டுறவுச் சங்கங்களில் செயலாளர்களைப் போடுகிறார்கள். அவர்கள் நிரந்தரமாக அப்படியே இருக்கிறார்கள். அந்தக் காலத்திலே சொல்வார்கள்—நான் ஏற்கெனவே அதைச் சொன்னேன். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இல்லை; அதனால் தெரியுமோ, என்னவோ எனக்குத் தெரியாது. அதாவது அந்தக் காலத்திலே சொல்வார்கள்—கூட்டுறவிற்குத் தலைவராக வந்துவிட்டால் ஒன்று அவர் சாக வேண்டும் அல்லது ஒரு கையாடல்

வழக்கிலே ஜெயிலுக்குப் போக வேண்டும். இதில் எது முந்துகிறதோ, அதுவரை அவர்தான் தலைவர் என்று சொல்வார்கள். இப்போது செயலாளர்கள் அப்படி மாறியிருக்கிறார்கள். இந்தச் செயலாளர்களாக இருக்கின்றவர்கள், ஒன்று சாகணும் அல்லது கையாடல் செய்த குற்றத்திற்காக ஜெயிலுக்குப் போக வேண்டும். இதில் எது முந்துகிறதோ அதுவரையிலும் அவர்தான் செயலாளர் என்று சொல்கிற நிலை இருக்கிற காரணத்தாலேதான், நான் ஏற்கெனவே சொல்லி இருக்கிற அந்த Common Cadre, Common Selection Board—இது செயல்படுத்தப்பட்டால் அவர்களை மாற்றுகிற அதிகாரம் அரசுக்கு வந்துவிடுகிறது. அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-25*

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

வாணியம்பாடி நகரக் கூட்டுறவு வங்கியில் பல இலட்சக்கணக்கான ரூபாய் கையாடல் செய்யப்பட்டிருக்கிறது. அதிலே சிவாஜி கணேசன் என்று சொல்கிற ஒருவர்தான் தலைவராக இருந்திருக்கிறார். பல பொறுப்பாளர்கள்—கூட்டுறவு சம்பந்தமாகப் படித்தவன் என்ற முறையில் சொல்கிறேன்—Error of Commission, Error of Omission—Compensating error என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட அத்தனை குற்றங்களையும் சேர்த்துச் செய்திருக்கிறார்கள். செய்துவிட்டு யாரையோ அதில் சம்பந்தம் இல்லாத சிலரை, அதிகாரத்தைப் பயன்படுத்தி மாட்டிவிடுகிற முயற்சியில் பொறுப்பிலே இருக்கின்ற பாலசுப்பிரமணியம், முருகன் போன்ற, அங்கேயே இருக்கிறவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அப்பாவிகளை மாட்டிவிடுகிற சூழ்நிலை இருக்கிறது. அதைத் தனியாக விசாரணை செய்து, உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தண்டிக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் ஊரிலே ஒரு Co-operative Society இருக்கிறது. சின்ன கண்ணனூர் என்ற ஊர். ஒரு செயலாளர் குற்றம் புரிந்தார். நடவடிக்கை எடுக்கப்பட்டு, நமது கூட்டுறவுத் துறை அமைச்சருக்குக்கூட தகவல் வந்தது. அவரை suspend பண்ணினார்கள். உடனே கோர்ட்டிலே போய் stay வாங்கிக் கொண்டு வந்துவிட்டார். அவர் ஊழல் செய்ததிலே 1¾ இலட்சம் ரூபாய்தான் கண்டுபிடிக்கப்பட்டது. அதற்காக suspend பண்ணினார்கள். Court-லே stay வாங்கி விட்டதால், அதே ஊரிலே மறுபடியும் போட்டு, இப்போது 37 இலட்சம் ரூபாய்க்கு மேலே கையாடல் பண்ணியிருக்கிறார்.



ஆகையினாலே, இவற்றை எல்லாம் தடுப்பதற்கு நாம் சட்டத் திருத்தம் கொண்டுவருவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு சொசைட்டியிலே கையாடல் பண்ணிய குற்றத்திற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு, தண்டிக்கப்பட்டால் அல்லது பதவிநீக்கம் செய்யப்பட்டால், அல்லது Suspension செய்யப்பட்டால், மீண்டும் அதே சொசைட்டியில் போடக்கூடாது என்ற ஒரு சட்டத் திருத்தம்கூட கொண்டுவந்தால் சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன். (மணியடிக்கப் பெற்றது) ஒரு நிமிடம்.

கிராமத்திலே இருக்கிற பல சொசைட்டிகளிலே கையாடல்கள் நடைபெற்றிருக்கின்றன. எங்கள் ஊரிலே, மானாமதுரை தொகுதியிலே மட்டும், எனக்குத் தெரிந்த தகவலின் அடிப்படையிலே, பல கோடி ரூபாய் கையாடல் செய்யப்பட்டிருக்கிறது. பல கோடிக்கணக்கான ரூபாய் கையாடல் செய்யப்பட்டு, மிக, ரொம்ப சௌகரியமாக கட்டடங்கள், சொத்துக்களெல்லாம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் கேஸ் நடத்துவதிலேதான் அக்கறையாக இருக்கிறோம். அந்தச் சொத்துக்களைப் பிடுங்குவதற்கு, பறிப்பதற்கு ஒரு Special Team தனியாகச் செயல்பட வேண்டும். இந்தக் கூட்டுறவுத் துறையிலே C.C.W. Wing என்றுகூட நாம் போட்டு வைத்திருக்கிறோம். சொத்துக்களைக் கண்டறிந்து, அதைப் பறிமுதல் செய்வதற்கும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, கூட்டுறவுத் துறையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றிகூறி முடிக்கின்றேன். வணக்கம், ஜெய்ஹிந்த்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002-2003 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கோரிக்கை எண் 12, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்தமைக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஓர் ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை இந்த மாமன்றத்தின் உறுப்பினராக்கி எங்களை வழி நடத்திவரும் இயக்கத்தின் நிறுவனரும், சமூகநீதிக் காவலருமாகிய டாக்டர் ஐயாவை வணங்கி என்னுடைய பேச்சைத் தொடங்குகின்றேன்.

“கூடி வாழ்ந்தால் கோடி நன்மை”, “கூட்டுறவே நாட்டுயர்வு” என்ற தத்துவத்தின் அடிப்படையில் கூட்டுறவு இயக்கம் இயங்கி வருகின்றது. இன்றைய சூழ்நிலையில் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கு ஓர் அடிப்படைக் கருவியாகக் கருதப்படுவது கூட்டுறவுத் துறையாகும்.

[திரு. எஸ். நடராஜன்] [2002 ஏப்ரல் 18

விவசாயிகளின் துயர் துடைக்க ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு இயக்கமானது, இன்று மக்களின் அனைத்துத் துறைகளிலும் ஆழமாக வேர் ஊன்றி, விழுதுபற்றி, செழுமையுடன் உறுதியாக ஓங்கி வளர்ந்திருக்கின்றது; இது நமக்கு பெருமையூட்டக்கூடிய காரியமாகும். இன்று தமிழகத்தில் ஏறக்குறைய 28,863 கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு, மக்களுக்குப் பலவிதமான நன்மைகளை அளித்து வருகின்றன. இதன் வளர்ச்சிக்கு தமிழக அரசு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டும். கூட்டுறவுத் துறைக்காகச் சென்ற நிதியாண்டில் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.173.48 கோடி ஒதுக்கப்பட்டு, இந்த நிதியாண்டில், இது ரூ.210.16 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது வரவேற்கக்கூடியது.

கூட்டுறவு வங்கிகளிடமிருந்து கடன் பெற்று திருப்பிச் செலுத்தாமல் உள்ள, தவணை கடந்த நிலுவைத் தொகையைத் திருப்பிச் செலுத்த விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், அவர்கள் செலுத்த வேண்டிய வட்டி மற்றும் அபராத வட்டித் தொகையான ரூ.310.50 கோடியைத் தள்ளுபடி செய்த அரசின் நடவடிக்கை பாராட்டத்தக்கது. இத்திட்டத்திற்காக வரும் நிதியாண்டில் ரூ.146 கோடி ஒதுக்கப் பட்டதையும் நாங்கள் வரவேற்கிறோம்.

பிற்பகல் 12-30

மேலே குறிப்பிட்டுள்ள திட்டத்தின்கீழ் வராத விவசாயப் பெருமக்களுக்கும் கடன் பெற்ற ஏனையோருக்கும் நிவாரணம் அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அறிவிக்கப்பட்டுள்ள ஒரே தவணையில் கடனைத் தீர்க்கும் சலுகைத் திட்டத்தையும் One Time Settlement Scheme-ஐ வரவேற்கிறோம். ஆனால், அதற்காக ஆகும் செலவான ரூ.110 கோடியையும் கூட்டுறவு வங்கிகள் ஏற்றுக்கொள்ளும் என்ற கருத்து சரியானது அல்ல. ஏனெனில் ஏற்கெனவே பல கூட்டுறவு வங்கிகள் நிதிப் பற்றாக்குறையாலும் நிலுவையில் உள்ள காலம் கடந்த கடன்களாலும் உந்தப்பட்டு பல சிக்கல்களில் தவிக்கின்றன. அவை எவ்வாறு இந்த நிதியை அளிக்க முடியும்? எனவே சென்ற ஆண்டில் தள்ளுபடித் திட்டத்திற்கு அரசு நிதி ஒதுக்கியது போல, இந்தத் திட்டத்திற்கு ஆகும் என்று எதிர்பார்க்கக்கூடிய ரூ.110 கோடி செலவையும் மாநில அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும். அரசின் செலவு அதிகமாக இருக்கும் என்று கருதப்பட்டால் இந்தத் திட்டத்தின் பயன் பணக்காரர்களுக்கும் வசதியுள்ளவர்களுக்கும் செல்லாமல் ஏழையெளிய கூட்டுறவு உறுப்பினர்களுக்கு மட்டும் இந்தத் திட்டத்தின் சலுகையை



2002 ஏப்ரல் 18] [திரு. எஸ். நடராஜன்]

அளித்து, செலவைக் குறைத்துக் கொள்ளலாம். எந்தச் சூழ்நிலையிலும் இத்திட்டத்தால் ஏற்படும் நிதிச் சுமையை கூட்டுறவு வங்கிகளின்மீது திணிக்கக்கூடாது.

கிராம அளவில் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களும், உள்ளாட்சி அமைப்புகளும், கிராமங்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் மிக முக்கியமான காரணிகளாக இருக்கின்றன என்பதை அரசு உணர வேண்டும். தமிழகத்தின் 56 விழுக்காடு மக்கள் கிராமங்களில் வசிப்பதால் அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் கூட்டுறவு நிறுவனங்களை வலுவான நிலையில் வைத்து அவை நலிவடையாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அரசின் கடமையும், பொறுப்புமாகும். தமிழகத்தில் உள்ள கூட்டுறவு நிறுவனங்கள் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கச் சட்டம் 1983 விதிகளின்படி செயல்பட்டு வருகின்றன. இச்சட்டம், கூட்டுறவுச் சங்கங்களின் ஜனநாயக குணாதிசயத்திற்கும், மேலாண்மை தன்னாட்சித் தத்துவத்திற்கும் எதிராக இருப்பதாகக் கருதப்படுகிறது. இச்சட்டத்தின் மூலம் எந்த நேரத்திலும், எந்தச் சங்கத்தையும் கூட்டுறவுத் துறை கலைக்கலாம் என்ற விதி இருப்பதால் பெரும்பாலான சங்கங்கள், உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படாத, ஆனால், கூட்டுறவுத் துறையினால் நியமிக்கப்படும் சிறப்பு அலுவலர்களால் பராமரிக்கப்படுகின்றன. இதனால் கூட்டுறவுத் துறையின் ஜனநாயகக் கோட்பாடு காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளது. எனவே தற்போதுள்ள 1983-ஆம் ஆண்டு சட்டத்தை உடனடியாக மாற்றி கூட்டுறவுச் சங்கங்களை மக்களின் நிறுவனங்களாக மாற்ற அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் பாட்டாளி மக்கள் கட்சி சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிகரான எண்ணிக்கையில் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. இவற்றிற்கான தேர்தல்களை கூட்டுறவுத் துறை நடத்தும்போது பலவிதமான இடர்ப்பாடுகளும், சிக்கல்களும், தலையீடுகளும் ஏற்படுகின்றன. இதுவும் கூட்டுறவு ஜனநாயகத் தத்துவத்திற்கு எதிராக அமைகின்றது. எனவே, உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒரு தனித் தேர்தல் ஆணையம் இருப்பதுபோல, கூட்டுறவுச் சங்கங்களுக்கென்று ஒரு தனித் தேர்தல் ஆணையத்தை அரசு உடனடியாக உருவாக்கி, கூட்டுறவு நிறுவனங்களுக்கு எந்த அரசியல் நிர்பந்தமும் குறுக்கீடும் இன்றி சுயமான, நேர்மையான, உண்மையான தேர்தலை நடத்த வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி வற்புறுத்துகிறது.

தற்போது நடைமுறையில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள், தமிழகத்தில் உள்ள 66 விழுக்காடு விவசாயக் குடும்பங்களையும், 55.7 விழுக்காடு நலிவடைந்த குடும்பங்களையும்தான் உறுப்பினர்களாகச் சேர்த்துள்ளது. எனவே, கூட்டுறவு நன்மைகள், தமிழக விவசாயிகள் அனைவருக்கும் பரவலாக்கப்படவில்லை என்பதைத்தான் இப்புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. எனவே, அனைத்து விவசாயக் குடும்பங்களையும் உறுப்பினர்களாகச் சேர்ப்பதற்கு கூட்டுறவுத் துறை ஒரு விரிவான திட்டத்தை உருவாக்கிச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்போதுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் கீழ்க்காணும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்வகையில், தங்களது நடவடிக்கைகளை மாற்றி அமைக்க வேண்டுமென்று அரசு வலியுறுத்த வேண்டும்:

வசதியில்லாத ஏழ்மை குடும்பங்களைச் சார்ந்த அட்டவணை இன மற்றும் பழங்குடியினர், சிறு மற்றும் குறு விவசாயிகள் மற்றும் மகளிர் ஆகியோருக்கு குறித்த நேரத்தில் கிடைக்கக்கூடிய நிதி உதவியை அளிக்க வேண்டும். ஒவ்வொரு சங்கத்தின் மொத்த கடன் தொகையில், 60 விழுக்காடு இந்தப் பிரிவினருக்கு அளிக்க வேண்டும் என்று வற்புறுத்த வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்கள், விவசாயம் இல்லாத துறைகளில் முதலீட்டினைப் பெருக்கி, வேலைவாய்ப்பையும் வருமானத்தையும் பெருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். நிதி உதவியை கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க வேண்டும். விவசாயப் பொருள்களைப் பதப்படுத்தும் தொழில்கள், தரிசு நில மேம்பாடு, மீன் பதப்படுத்தும் தொழில் போன்ற தொழில்களுக்கும் நிதி உதவி அளிக்கும் வகையில் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகளை மாற்றி அமைக்க வேண்டும்.

காய்கறிகள், பழங்கள், பருத்தி போன்ற விவசாயப் பொருள்களைப் பயிரிடுவதற்குத் தேவையான கூடுதல் அங்காடி மற்றும் அகக் கட்டுமான வசதிகளை கூட்டுறவுத் துறை உருவாக்க, அரசு அதிக நிதியினை ஒதுக்க வேண்டும்.

தற்போதுள்ள பல கூட்டுறவு நிறுவனங்களில் திறமையான பயிற்சி பெற்ற அலுவலர்கள் இல்லாததனால் கூட்டுறவு நிறுவனங்களின் மேலாண்மை மிகவும் மோசமான நிலையில் உள்ளது. கூட்டுறவுச் சங்கங்களின் நலிவுக்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்துள்ளது. எனவே இந்நிறுவனங்களுக்குத் தேவையான மனித வளத்தை, பயிற்சி பெறுவதற்கோ



அல்லது தொழில்நுட்பம் வாய்ந்த மேலாண்மை அனுபவம் உள்ள நபர்களையோ கூட்டுறவு நிறுவனங்களில் பணியமர்த்தலாம். நான் ஏற்கெனவே கூறியதுபோல, பல கூட்டுறவு நிறுவனங்கள், நிதிப் பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்டுள்ளன. அவற்றின் சொத்துக்களைவிட கடன்கள் அதிகமாக இருப்பதனால் இந்நிறுவனங்கள் நலிவடைந்து வருகின்றன. நிதிநிலையை மேம்படுத்தும் வகையில், அரசு "ஒரே கால கடன் தீர்க்கும் முறை" என்றவகையில் ஒரு சலுகைத் திட்டத்தைக் கூட்டுறவுத் துறையில் அறிவித்து, கூட்டுறவு நிறுவனங்களைப் புனரமைக்க வேண்டும். அதேநேரத்தில் நிலுவையில் உள்ள நீண்ட கால வாராக் கடனைப் பெறுவதற்குத் துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக, வசதி படைத்தவர்களிடமிருந்து வரவேண்டிய கடனை வசூலிக்க வேண்டும்.

*பிற்பகல் 12-35*

உணவுப் பாதுகாப்பு, மக்களின் மூன்று அத்தியாவசியத் தேவைகளில் மிக முக்கியமானது உணவு. எனவே, மக்களுக்கு, குறிப்பாக அடித்தட்டு மக்களுக்கு உணவுப் பாதுகாப்பு அளிப்பது, அரசின் அடிப்படைக் கடமையாகிறது. அந்த வகையில் முதலமைச்சரின் 15 அம்சத் திட்டத்தில் உணவுப் பாதுகாப்பு ஒரு முக்கிய அம்சமாக அமைந்துள்ளது மகிழ்ச்சியை அளிக்கிறது.

வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்களின் சத்துணவுத் தேவைகளில் சிறப்பு கவனம் செலுத்தும்வகையில் "வாழ்நாள் முழுமைக்கும் சத்துணவுப் பாதுகாப்புத் திட்டம்" என்ற திட்டத்தைக் கொண்டு வந்துள்ளதற்கும் இதற்காக இந்த ஆண்டில் ரூ.286 கோடி ஒதுக்கியுள்ளதற்கும், பொது விநியோக முறை மூலம் விற்கப்படும் அரிசியின் விலையை ரூ.3.50-ல் நீடிப்பதற்கும், உணவு மானியத்திற்கு ரூ.1240 கோடி ஒதுக்கியுள்ளதற்கும் எங்களது பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இருப்பினும், இத்தகைய ஒரு சில திட்டங்களால் மட்டும் தமிழக மக்களின் உணவுப் பிரச்சினை தீர்ந்து விடும் (மணியடிக்கப்பெற்றது) என்று நம்ப முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நடராஜன், ஒரு மணித் துளிக்குள் முடியுங்கள். கடைசி பக்கத்திற்கு வந்துவிடுங்கள். (சிரிப்பு)

**திரு. எஸ். நடராஜன்:** எனது நாட்ராம்பள்ளி தொகுதி மிகவும் வறட்சியான பகுதியாகும். இங்குள்ள மக்கள் பெரும்பாலும்

விவசாயத்தையே நம்பியும், நிலத்தடி நீரை வைத்து கிணற்றுப் பாசனம் செய்தும் வருகின்றார்கள். நிலப் பகுதி, மேட்டுப் பகுதி என்பதால் மழைக் காலங்களில் மழைநீர் வீணாகச் சென்றுவிடுகிறது. ஆகவே ஆரம்பப் பகுதியான பாலாற்றின் குறுக்கே ஆவாரக்குப்பம், தொடையாஞ்சி ஆகிய இரண்டு இடங்களில் தடுப்பு அணைகள் கட்டிக் கொடுக்கும்படியும், தொகுதியில் ஆங்காங்கே கசிவுநீர்க்குட்டைகளைக் கட்டித்தரவும் ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதி 4 ஊராட்சி ஒன்றியங்களையும், ஒரு பேரூராட்சியையும் உள்ளடக்கியது. தொகுதியில் அரசு மருத்துவமனையே கிடையாது. நாட்ராம்பள்ளி வழியாக தேசிய நெடுஞ்சாலை 4 வழிச்சாலை செல்வதால், சாலை விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சை அளிக்க உதவிடும் வகையிலும், பொதுமக்களுக்கும் சேர்த்து நாட்ராம்பள்ளி, குளிச்சி ஆகிய இடங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்தி, 30 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையாக்க, இந்த நிதியாண்டிலேயே ஆவன செய்ய வேண்டும் என்று அரசை மிக்க பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதிக்கு பக்கத்தில் உள்ளவர் மாண்புமிகு கல்வி அமைச்சர் என்பதாலும், பெண்கள் மேல்நிலைப் பள்ளியே என்னுடைய தொகுதியில் இல்லாததாலும், இந்தக் கல்வியாண்டில் ஒரு மகளிர் மேல்நிலைப் பள்ளி தொடங்க ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்ற பிரச்சினைகளை அமைச்சரிடம் எழுதிக் கொடுங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை, 11 நிமிடம் ஆகிவிட்டது.

**திரு. எஸ். நடராஜன்:** தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் குட்டி இராஜாக்களைப்போல் சர்வாதிகாரியைப் போல் ஆதிக்கம் செய்துவரும், நிறைய தவறுகள் செய்துவரும், செயலாளர்கள் அவ்வப்போது மாறுதல் செய்யப்பட வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களில் தற்காலிகப் பணியாளர்களாக பணிபுரிந்து வருபவர்களை பணிநீக்கம் செய்யாமல் அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு வழங்க வேண்டும். அரசாணை எண் 86, 12-3-2001-ன்படி அவர்களையும் நிரந்தரம் செய்ய வேண்டும். மத்திய நிதித் துறை இணை அமைச்சர் திரு. பாலா சாகேப், திரு. வி.கே. பட்டீல் தலைமையிலான குழு தனது அறிக்கையை மத்திய நிதியமைச்சர் திரு. யஷ்வந்த் சின்ஹா அவர்களிடம் சமர்ப்பித்துள்ளதுபோல், கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்பட வேண்டிய மறுமுதலீட்டு நிதியுதவித் தொகையை மத்திய அரசு 60 விழுக்காடும்,



மாநில அரசு 40 விழுக்காடும் வழங்க வேண்டும். கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் ஓய்வூதியம் வழங்க வேண்டும். தமிழக அரசு "சீரமைப்புக் குழுவின்" அறிக்கையின்படி கடந்த மே மாதம் 2000 முதல் கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும். கூட்டுறவு வங்கிகளில் வட்டி, அபராத வட்டி தள்ளுபடி செய்தது போல், கூட்டுறவு நிலவள வங்கிகளிலும் கடன் பெற்ற அனைவருக்கும் இந்தச் சலுகையை அளிக்க வேண்டும். சில கூட்டுறவுத் துறைகளில் இரண்டுவிதமான ஊதியம் வழங்குவதை அரசு சீரமைக்க வேண்டும் என்று கேட்டு எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன்.

பிற்பகல் 12-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. போளூர் வரதன்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கூட்டுறவு என்று வருகின்றபொழுது, நிறைய சொல்ல வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. அம்மா அரசு வந்தவுடனேயே, அரிசி விலை உயர்வு, அரிசி விலை உயர்வு என்று சொல்லி, ஊர் பூராவும் கொடி பிடித்தார்கள். நான்கூட ஒரு நிமிடம் யோசனை பண்ணினேன், 3½ ரூபாய்க்குத்தான் ஒரு கிலோ அரிசி கொடுக்கிறார்களே, ஏன் அரிசி விலை உயர்வு, உயர்வு என்று அவர்கள் சொல்கிறார்கள் என்று. இதிலே ஏதோ something பின்னாலே இருக்கிறது என்ற எண்ணம் மட்டும் எனக்குத் தோன்றியது. அப்பொழுது, இது சம்பந்தப்பட்ட சில முக்கியஸ்தர்கள், அந்த சம்பந்தப்பட்ட முக்கியஸ்தர்கள், அதாவது இந்த கூட்டுறவுத் துறையில் இருக்கக் கூடியவர்கள், ஆர்வமுள்ள சில பெரியவர்களை எல்லாம் பார்த்து, இதற்கு என்ன காரணம் என்று கேட்டேன். ஒன்றும் இல்லை தம்பி. காரணம், அதற்குப் பின்னாலே ஒரு பெரிய கதையே இருக்கிறது, அது தெரியுமா உங்களுக்கு என்று சொன்னார்கள். தெரியவில்லை சொல்லுங்கள் என்றேன். குடும்ப அட்டை என்று சொன்னார்கள். என்னங்க குடும்ப அட்டை, ஏற்கெனவே ரேஷன் அட்டை கொடுத்து எல்லாக் கடைகளிலும் அரிசி வழங்கிக்கொண்டு இருக்கிறார்களே, அதில் என்ன பிரச்சினை இருக்கிறது, அரசாங்கத்தில் இருக்கிற அதிகாரிகள் எல்லாம் சரிபார்த்துத்தானே கொடுத்திருப்பார்கள் என்று சொன்னேன். பட்டியலைப் பார்த்தாயா என்று கேட்டார்கள். என்ன பட்டியல் என்று கேட்டேன். உங்களுடைய

தொகுதியிலாவது எவ்வளவு அட்டை இருக்கிறது என்று விசாரியுங்கள் என்றார்கள். அங்கே போய்க் கேட்டால் ஒழுங்கான தகவல் இல்லை.

நம்முடைய அமைச்சர் ஒரு புக்லெட்டை போட்டுக் கொடுத்த பின்னாலே அதைப் படித்துப் பார்த்தேன். இப்பதாங்க எனக்கே உண்மை தெரிகிறது. ஏன் தெருத் தெருவாகக் கத்தினார்கள் என்று, ஒன்றும் இல்லை, 1 கோடியே 67 இலட்சத்து 14 ஆயிரத்து 555 குடும்ப அட்டைகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன என்று சொல்லி, கடந்த கால ஆட்சியிலே ரூ.3.50 விலைக்கு அரிசி கொடுத்து இருக்கிறார்கள். அதில் என்னங்க பிரச்சினை என்று பார்த்தால், முப்பது இலட்சம் கார்டு போலியான கார்டு இருப்பதுதான். அந்த போலியான கார்டுகளை வைத்துக்கொண்டு, கடந்த கால ஆட்சியில்தான் - நான் சின்னப் பையனாக இருக்கும்போது பார்த்து இருக்கிறேன், எங்கள் ஊரில் எல்லாம் மாட்டு வண்டிகளில்தான் அரிசி எடுத்துக்கொண்டு வருவார்கள் - கடந்த கால ஆட்சியில் தூத்துக்குடியிலிருந்து பெங்களூருக்கு ரயிலில் (மேசையைத் தட்டும் ஒலி) அரிசி போச்சுங்க. ஏன் ரயிலில் போகிறது என்று பார்த்தால் - ரயில் கவிழ்ந்தது. ரயில் கவிழ்ந்தது, அரிசி கொட்டுச்சு என்று சொன்னார்கள். விஷயம் இப்போதுதான் தெரிகிறது. அந்த 30 லட்சம் கார்டுகளுக்கு உண்டான அரிசியை கடைகளிலேயும் கிட்டங்கிகளிலேயும் சேர்த்து வைத்து எத்தனையோ வெளிமாநிலங்களில் கள்ளத்தனமாக விற்றுவிட்டு வந்து. அரிசி விலை உயருது, உயருது என்று இங்கே சொன்னால் எப்படி? ஜனங்கள் இப்போது புரிந்துகொண்டார்கள். அம்மா, புதிய கூப்பன் முறை கொண்டு வந்திருக்கிறார்கள். உண்மையிலே வரவேற்கத்தக்க ஒன்று. இந்த போலியான கார்டுகளை ஒழித்தாலே தமிழகத்திற்குத் தேவையான அரிசியை, இன்னும்கூட விலை குறைத்துக் கொடுக்கலாம். நீங்கள் நிறைய நிதியை மானியமாகக் கொடுத்திருக்கிறீர்கள், இந்த மொத்த கார்டுகளுக்கும் சேர்த்து. இப்படி முப்பது லட்சம் கார்டுகளை ஒழித்துவிட்டாலே அந்த மானியத்தை வேறு துறைகளுக்குப் பயன்படுத்தலாம். அல்லது இந்தத் துறைக்கு மானியத்தைக் குறைத்துக் கொடுக்கலாம்.

அதுமட்டுமல்ல. பலர் பேசுகின்றபோது பல சமாச்சாரங்களைச் சொல்ல வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். அந்த அரிசியைக் கடத்தி எடுத்துக்கொண்டு போகும்போது, ஒரு மந்திரியினுடைய தம்பியே - சேலத்திற்குப் பக்கத்தில் - இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்று சொல்லி வழக்குத் தொடர்ந்தார்களே, அது என்ன ஆயிற்று? ஒரு ரயிலில் போச்சு, கண்டுபிடித்தார்கள். மற்றபடி லாரியில் போனது. வேகன்களில் போனது



எல்லாம் இருக்கலாம். கப்பலில் கூட போயிருக்கலாம். அந்த அரிசியை எல்லாம் நீங்கள் கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்தால், கூட்டுறவு என்பது உண்மையிலேயே நாட்டுயவர்வாக இருக்கும். கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்ற அளவில் கோடிக்கணக்கான ரூபாய் அரசு கஜானாவுக்கு நிச்சயமாக வரும். அதில் மாற்றுக் கருத்து இல்லை.

அதுமட்டுமல்ல. மத்திய சர்க்கார் விவசாயிகளுக்கு கொப்பரைத் தேங்காய் வாங்குவதற்கு மானியம் கொடுத்தார்கள். அந்த மானியத்தைக் கொடுக்கும்போது தேங்காய், தேங்காய் என்று ஒரு பிரச்சினை ஏற்பட்டது. எனக்கு தென்னை மரம் எல்லாம் கிடையாது. நானும் ஒரு விவசாயிதான். நான் போய் விசாரித்தேன். வெளிமாநிலத்தில் போய் விவசாயிகள் என்ற பெயரில் பினாமியாக தேங்காய் வாங்குவது, அப்படி வாங்கிக் கொண்டுவந்து அரசியல்வாதிகளும் வியாபாரிகளும் சேர்ந்துகொண்டு போலியான விவசாயி அட்டைகளை வைத்து கூடுதலான விலையைச் சேர்த்து, தேங்காய் வியாபாரம் பண்ணினார்கள். அரசுக்கு கோடிக்கணக்கில் நஷ்டத்தை உருவாக்கி இருக்கிறார்கள். இது சம்பந்தமாக கோர்ட்டில்கூட கேஸ் இருக்கிறது என்று நினைக்கிறேன். கோர்ட்டில் கேஸ் இருப்பதால் நான் அதற்குள் ஆழமாகப் போக விரும்பவில்லை. ஒரு இடத்தில் மட்டும் கண்டுபிடித்திருக்கிறீர்கள். தமிழகத்தில் எத்தனை சொசைட்டிகள் இந்தமாதிரி ஊழல்கள் செய்திருக்கின்றன, யார் காலத்தில் செய்திருக்கிறார்கள், எந்த அரசியல்வாதி, எந்த சட்டமன்ற உறுப்பினர், எந்த மந்திரி, எந்த அதிகாரி இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்பதைக் கணக்கிட்டு நீங்கள் தண்டிக்க வேண்டும். தண்டிக்க வேண்டும் என்று சொன்னால், சிறைத் தண்டனை வரவேண்டும். என்றைக்கு சிறை தண்டனை வருகிறதோ அன்றைக்குத்தான் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் துறையிலே ஊழல் என்பது ஒழியும். ஊழல் இருக்கின்ற வரையில் சரியாக வராது.

நம்முடைய பெரியவர், சட்டமன்ற உறுப்பினர் திரு. பாரமலை அவர்கள் கூட்டுறவு சம்பந்தமான படிப்பு படித்தவர்; அவர்கள் சொன்னார்கள், இந்தத் துறையில் தற்போது இருக்கும் கடுமையான சட்டம் மாற்றப்பட வேண்டும். தற்போது யாரெல்லாம் பதவிக்கு வந்தாலும், ஒன்று சாகிற வரைக்கும் இருக்க வேண்டும் அல்லது ஜெயிலுக்குப் போகிற வரைக்கும் இருக்க வேண்டும் என்று சொன்னார். அரசாங்கத்தின் துட்டு. ஒரு வருடத்தில் எவ்வளவு ஒதுக்கீடு பண்ணுகிறார்களோ, அதை எத்தனை மாதத்தில் சீக்கிரம் கொள்ளையடிக்க முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் பினாமி பெயர்களில் கொள்ளையடித்துக்கொண்டு போகிற வரைக்கும்

அவர்கள் இருப்பார்கள். அதன்பிறகு பதவியை மாற்றிக்கொண்டு வேறு இடத்திற்குப் போய்விடுவார்கள். இந்த நிலைமைகள் மாற வேண்டும். இப்போது அப்படியில்லை.

இந்த மாற்றத்திற்கு கரூர் கூட்டுறவு வங்கி; அங்கிருந்த அந்தக் கூட்டுறவு வங்கியின் தலைவர் - அவரை நீங்கள் பணிநீக்கம் செய்து, கைது செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள்; அதற்கும் ஒரு கேஸ் இருக்கிறது. ஒவ்வோர் இடத்திலும் ஒன்றுதான் சொல்கிறீர்கள். ஆயிரக்கணக்கான பகுதிகளிலே, கடைகள், வங்கிகள் இருக்கின்றன; மோசடிகள் நடந்திருக்கின்றன. அதற்கு இந்த அரசு எந்த வழிகளிலே நடவடிக்கை எடுத்திருக்கிறது? இந்த நடவடிக்கை என்பது, சிறைத் தண்டனையாக இருக்க வேண்டும். ஏதோ partiality பார்த்து, விட்டுக்கொண்டே போனால், ஆயிரக்கணக்கான கோடி ரூபாயை இந்த அரசு இழக்க வேண்டி வருமே தவிர, ஏழைகளுக்கு அது போய்ச் சேராது. மக்கள் இன்றைக்கு, முதலமைச்சர் அம்மா அவர்களை நம்புகிறார்கள். நிச்சயம் தமிழகம் முன்னேறும் என்று எதிர்பார்க்கிறார்கள். அந்த உணர்வுகள், எதிர்பார்ப்பு நிச்சயம் இப்போது மக்கள் மத்தியிலே வந்துகொண்டிருக்கிறது.

*பிற்பகல் 12-45*

அதுமட்டுமல்ல. போன மாதம்கூட, தஞ்சாவூரிலே, நெல் வாங்கவில்லை, நெல் வாங்கவில்லை என்று போகிற இடங்களிலெல்லாம் வண்டியை மறிப்பது; பொதுமக்களுக்கு இடைஞ்சல் கொடுப்பது எனப் பெரிய போராட்டம் நடந்தது. நான் யோசித்துப் பார்த்தேன். ஏன், நெல்லை வாங்கமாட்டேன் என்கிறார்கள்? சட்டமன்றத்திலேகூட, பல பேர் அம்மா நீங்கள் இன்னும் 10 நாட்கள் extend செய்து, 4 நாட்கள் extend செய்து, இந்த நெல்லை வாங்கிக்கொள்ளுங்கள், வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். அதிலே என்ன இருக்கிறது என்று யோசனை செய்து பார்த்தோம் என்றால் புரிகிறது; விவசாயிகளிடம் நேரடியாக நெல் கொள்முதல் செய்வதற்கு அரசும் ஏற்கெனவே பணம் ஒதுக்கீடு செய்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு இலாபம் கிடைத்திருக்கிறது. விவசாயிகள் மூலம் வாங்கிய வியாபாரிகள், நெல்லை வாங்க வேண்டும் என்பதற்காக வேண்டி அந்த ஊரிலே இருக்கிற ஆட்களைச் சேர்த்துக்கொண்டு வியாபாரிகளும், அரசியல்வாதிகளும் அரசுக்குக் கூடுதலான செலவை உருவாக்க வேண்டும்; வியாபாரிகள் பணம் பெற வேண்டும் என்ற நோக்கோடு இப்படி ஒரு பிரச்சினையை



உருவாக்கி, விவசாயிகளுக்குக் கிடைக்கின்ற இலாபத்தைக் குறைத்து ஒரு குறிப்பிட்ட கும்பல் கொள்ளையடிக்க வேண்டும் என்பதற்காக இந்தச் செயலைச் செய்திருக்கிறார்கள் என்பதை இப்போது நாடு உணர்ந்திருக்கிறது.

அம்மாவினுடைய அரசு, ஏழைகளின், விவசாயிகளினுடைய அரசு என்பதை இன்றைக்கு நிரூபித்திருக்கிறார்கள் என்பதை மக்கள் உணருகிறார்கள். அதுமட்டுமல்ல. ஒரு கணக்கைச் சொன்னார்கள்; பல உறுப்பினர்கள் பேசுகின்றபோது சொன்னார்கள்; வட்டி தள்ளுபடி என்று அம்மா சொன்னார்கள்; செய்யவில்லை, செய்யவில்லை என்றார்கள். கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லும்போது, 2001-2002-லே 80 கோடி ரூபாயும், 2002-2003-லே 146 கோடி ரூபாயும் வட்டி தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். உண்மைதான். இப்படிச் சொல்கிறபோது, அந்த வட்டிகள் போய்ச் சேருவது, கடந்த காலங்களிலே, பினாமி பெயரிலே அட்டைகளை வைத்திருந்தவர்கள்தான் வாங்கிக்கொண்டிருந்தார்கள். பினாமியிலே கடன் பெற்றவர்கள்தான் வங்கிகளுக்குச் சென்றார்கள். அந்த வங்கியிலே இருந்தஅட்டை எப்படி என்றால், உண்மையான விவசாயி, உறுப்பினராக இருக்கிறவருக்குத்தான் கடன் தர வேண்டும். நான் சொன்னமாதிரி, 20 இலட்சம் ரேஷன் கார்டுகள், 30 இலட்சம் ரேஷன் கார்டுகள் பினாமி பெயரிலே இருக்கின்றன. அந்த பினாமி பெயரிலே இருக்கிற அட்டைகளைப் பயன்படுத்தித்தான் வங்கிகளிலே கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கடன் யாரிடத்திலே இருக்கிறது? யார் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்று ஒரு விசாரணையைப் போட்டாலே, பினாமிகள் ஒழிந்துவிடுவார்கள்; இந்தக் கூட்டுறவு வங்கிகளும் உருப்பட்டுவிடும்.

அதுமட்டுமல்ல. இப்போது வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள், மேலே இருப்பவர்கள் என்று பிரித்து, அம்மா அவர்கள் கொண்டுவந்திருப்பது ஒரு நல்ல திட்டம். ரேஷன் கார்டுகளைக் கொண்டுவருவதற்கு வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள், வறுமைக் கோட்டிற்கு மேலே இருப்பவர்கள் என்று பிரித்து, இப்போது அளவுகோல் செய்திருக்கிறார்கள். அது பாராட்டுக்குரியது. வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள் என்று நான் சொன்னது யார் என்றால், கடந்த கால ஆட்சியிலே யார் தெரியுங்களா? எம்.எல்.ஏ., எம்.பி., ஐ.ஏ.எஸ். ஆபீஸர், ஐ.பி.எஸ். ஆபீஸர், Income Tax கட்டக்கூடியவர்கள்தான் அந்த வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள். நான் தமாஷுக்குச் சொல்லவில்லை. நீங்கள் போய் verify செய்யுங்கள்; verify செய்து பார்த்தீர்கள் என்றால்,

bogus card-கள் எல்லாம் அங்கே இருக்கும். அந்த மாதிரி ஆட்கள் போய், ரேஷன் கடைகளில் அரிசியை வாங்க மாட்டார்கள். அந்த card-ஐ எடுத்துக்கொண்டு போகமாட்டார்கள்; அப்படியே idle-ஆக இருக்கும். idle-ஆக இருக்கக்கூடிய அந்தக் card-னுடைய எண்ணிக்கையை measure செய்துவிட்டு, அதைத்தான் அவர்கள் கடத்தினார்கள். கடத்தியதை எப்படியும் கண்டுபிடித்து விடுவார்கள் என்பதற்காக இப்போது குரல் கொடுக்கிறார்கள். நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும் நான் சொல்லியதை இந்த ஆட்கள் எல்லாம் அதிலே இருக்கிறார்களா, இல்லையா என்பதை verify செய்யுங்கள். எப்படி bogus card வந்தது? இரயிலிலே எப்படி அரிசி போனது? அந்த அரிசியை எப்படி Civil Supplies-லே permit செய்தார்கள்? எந்தக் கடையிலேயிருந்து போனது? யாருக்குக் கொடுக்கிறார்கள் என்று பார்த்தால், இந்த Ration Card, bogus அட்டை இவைதான் அனுப்பிக்கொண்டிருக்கிறது. அதைத் தடுப்பதன் மூலம் ஒட்டுமொத்தமான நன்மை தமிழகத்திற்குக் கிடைக்கும் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. 20 ஆயிரம் நியாயவிலைக் கடைகள் தமிழகத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்த நியாயவிலைக் கடைகளிலே இருப்பவர்களுடைய நிலைமையை நீங்கள் பார்க்கிறபோது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு நிமிடங்களிலே முடித்துவிடுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** *7 நிமிடங்கள்கூட ஆகவில்லையே?*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *11* நிமிடங்களுக்கு மேலே ஆகிவிட்டது.

*பிறபகல் 12-50*

**திரு. போளூர் வரதன்:** நியாயவிலைக் கடைகளில் இருக்கின்ற தராசை எடை போடுகிற இடத்தில் போய்ப் பார்த்தால், ஒரு மூட்டைக்கு 3 கிலோ, 1 கிலோ குறைந்து போய்விடுகிறது. கோடவுனில் இருக்கிறவன் கொத்தி எடுத்துவிடுகிறான் என்று சொல்கிறார்கள். மக்களுக்குச் சரியான எடை போட்டுக் கொடுக்கிறார்களா என்பதை ஆய்வு செய்வதற்கு ஒரு கமிட்டி அமைத்து நீங்கள் செயல்படுத்த வேண்டும். அந்தக் கமிட்டி மூலம் எடை - measurement - சரியாக ஜனங்களுக்கு போய் கிடைப்பதற்கான வாய்ப்பை உருவாக்கித் தரவேண்டும்.

இன்னும் ஒன்று. கூட்டுறவு வங்கிகளில் மெம்பர்களை சேர்க்கும் போது—தேர்தல் வேறு வேகமாக நடத்துகிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள்; அதிலே பார்க்கும்போது—உயர்நீதிமன்றத்திலே இன்றைக்கு stay



கொடுப்பதாகக் கேள்விப்பட்டு இருக்கிறேன். இருக்கிற உறுப்பினர்களை வைத்துக்கொண்டுதான் தேர்தலை நடத்த வேண்டுமென்று சொல்கிறார்கள்; வேகமாகத் தேர்தல் நடத்துவதற்கு அம்மா அரசு முனைகிறது என்பதை நான் அறிவேன். இருக்கிற உறுப்பினர்கள் பூராவும் 'bogus'; இருக்கிற ஆட்கள் பூராவும் அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள்; ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களோ, மற்ற பொதுமக்களோ அதிலே கிடையாது. உங்கள் கணக்குப்படி 2 இலட்சத்து 35 ஆயிரம் பேர் தாழ்த்தப்பட்டவர்கள் அதில் உறுப்பினர்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். அந்த 2 இலட்சத்து 35 ஆயிரம் பேருக்கு வங்கிகளிலே கொடுத்திருக்கிற கடன் எவ்வளவு தெரியுமா? 250 ரூபாய். எத்தனை வருடத்திற்கு? 5 வருடத்திற்கு. என்ன காரணம் சொல்கிறார்கள்? வட்டி இல்லாமல் வாங்கிய கடனை மட்டும் 5 வருடங்களில் கொடுங்கள்; வருடத்திற்கு 50 ரூபாய் கட்டினால் போதும் என்கிறார்கள். எவ்வளவு பேர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள்? உறுப்பினர்களுக்கெல்லாம் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பணம் மக்களுக்குப் போய்ச் சேரவில்லை. அத்தனை பணமும் கிட்டத்தட்ட 2 கோடி ரூபாய் பினாமியாக எடுக்கப்பட்டு இருக்கிறது. S.C. மக்களுக்கு இது தெரியாது. சில இடங்களில் போய் கார்டு கேட்டார்கள்; கொடுத்துவிட்டோம் என்கிறார்கள். அதை அங்கே பதிவு பண்ணிவிட்டு, அந்த கார்டுகளின் பேரால் கடன் தரப்பட்டிருக்கிறது. மார்வாடியிடம் நகை வைத்தால் வட்டி 3 ரூபாய். கூட்டுறவு வங்கியில் வைத்தால் 16%; nationalised பேங்கில் வைத்தால் 12%; இப்படி வேறுபாடு இருக்கிறது. அப்படி வேறுபாடு இருககும்போது, இந்தக் கூட்டுறவு வங்கியிலே வட்டியின் தன்மை அதிகமாக இருப்பதாலே விவசாயிகள் உரிய நேரத்திலே இதைப் பயன்படுத்திக்கொள்ளவும் முடியவில்லை; சட்ட திட்டங்களும் கடுமையாக இருக்கின்றன. அதை relax பண்ணி விவசாயிகளுக்கு உதவிட வேண்டுகிறேன். கூட்டுறவு வங்கித் தேர்தலை நடத்துகிறபோது, நீதிமன்றம் அவர்களை வைத்தே தேர்தல் நடத்த வேண்டுமென்று சொன்னால் சரியான தேர்தலாக இருக்காது. புதிய உறுப்பினர்களை இணைத்து, சரிபார்த்து தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. இறுதியாக என்னுடைய தொகுதியைப்பற்றி ஒரு கோரிக்கை; என்னுடைய தொகுதியில் இருக்கின்ற கூட்டுறவு வங்கிகளிலே கிணறு தோண்டுவதற்கு கடன் கிடைப்பதில்லை. Block List போட்டு வைத்திருக்கிறார்கள், அந்த தொகுதி மலைப்பகுதி என்பதாலே, அங்கு இருக்கின்ற விவசாயிகள் அந்த வங்கிகளுக்குச் சென்று கடன் பெற முடியவில்லை. ஆகவே மாண்புமிகு அம்மா அவர்கள் கருணை

உள்ளத்தோடு அந்தப் பகுதியில் உள்ள 10 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் முன்னேற, குப்பநத்தம் அணையைக் கட்ட வேண்டும். அதுபற்றி ஏற்கெனவே அம்மா அவர்களிடம் நேர்டியாகச் சொல்லியிருக்கிறேன்; மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும் சொல்லியிருக்கிறேன்; இந்த நிதி ஆண்டில் குப்பநத்தம் அணைக்கு ஏற்கெனவே நிலம் வாங்குவதற்கு பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது; இன்னும் 3 கோடி ரூபாய் கொடுத்தால் நிலம் சுத்தமாகிவிடும்; இந்த ஆண்டு அந்த அணை கட்டுவதற்கு அம்மா அரசு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டு வாய்ப்பளித்த (குறுக்கீடு) நீலகிரி தொகுதியிலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, திரு. ராஜு, நீங்கள் பேசும்போது பேசுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** நான் முடித்துவிடுகிறேன்; அதாவது வங்கியில் பணியாளர்களைப் போடுவதில்லையாம்; காலியாக இருக்கிறதாம், பல இடங்களில் அந்தப் பகுதியிலே பணியாளர்களைப் போட்டு அங்கேயும் இந்தக் கூட்டுறவு வங்கி உயருவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்; நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக இந்த மானியக் கோரிக்கையில் சில கருத்துகளை முன்வைக்க விரும்புகிறேன். முதலில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தலை விரைவாக நடத்துவதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதிலே இன்னும் ஒன்று; கடந்த ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற கூட்டுறவுத் தேர்தலில் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் பல இடங்களில் அராஜகம் செய்து கூட்டுறவுச் சங்க நிர்வாகத்தைக் கைப்பற்றினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உண்மையான உறுப்பினர்கள் தேர்தலில் ஓட்டு போட்டு நிர்வாகத்தைத் தேர்ந்தெடுக்கும் நிலை உருவாக வேண்டும். கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்கப்பட்டால்தான் இதிலே யார் ஆட்சி புரிந்தாலும் தகராறு வராமல், முறையான, ஜனநாயகப் பூர்வமான தேர்தலை நாம் நடத்த முடியும் என்ற என்னுடைய கருத்தை நான் வலியுறுத்த விரும்புகிறேன். இதைச் சொல்வதற்குக் காரணம், அருமனை கூட்டுறவு வேளாண்மை வங்கி—47, கடந்த திங்கட்கிழமையன்று அந்த வங்கியில் இருக்கின்ற 2 ஊழியர்கள் ஏதோ ஓர் ஆர்ப்பாட்டத்திலே எங்கேயோ கலந்துகொள்வதற்காகச் சென்றார்கள். தனி அதிகாரி என்ன



செய்தார் என்றால், எந்த நோட்டீசும் இல்லாமல் அந்த வங்கியை இழுத்துமூடிவிட்டுச் சென்று விட்டார். 100 விவசாயிகள் பணம் கட்டுவதற்காக வந்தார்கள். ஆனால் பணம் கட்ட முடியவில்லை. இத்தகைய அதிகாரிகளை வைத்துக்கொண்டு எந்த வகையிலே நம்முடைய கூட்டுறவுத் துறையை முன்னே எடுத்துச் செல்ல முடியும், ஜனநாயகப் பூர்வமாகச் செயல்பட முடியும் என்பதை அரசினுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

*பிற்பகல் 12-55*

அதுபோன்று விளவங்கோடு தாலுகா வீட்டுவசதிச் சங்கத்தில் மோசடி 10 இலட்சம். நடவடிக்கை எல்லாம் எடுத்தார்கள்; எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து முடித்துவைத்து இருக்கிறார்கள். அந்தத் தலைவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதேபோன்று அழகம்பாறை. 103, அந்த வங்கியினுடைய நம்பர். 24 கிலோ தங்கத்தை கொள்ளை அடித்தார்கள். என்ன நடவடிக்கை மேற்கொண்டார்கள்? அதிகாரிகள் எதைச் செய்தார்கள்? இவர்கள்மீது யாராவது உரிய நடவடிக்கையை மேற்கொண்டார்களா? கையகப் படுத்தப்பட்ட தங்கத்திலிருந்து கொஞ்சம் தங்கத்தை போலீஸ் கைப்பற்றியது. உரியவர்களுக்குப் போய்ச் சேர்ந்ததா என்று கேட்டால், இல்லை. ஆக, இந்த நிலையில்தான் கொல்லங்கோடிலே இருக்கிற ஒரு வேளாண்மைக் கூட்டுறவு வங்கி. அங்கே இருக்கிற காரியதரிசி ஜி. பாக்கியம் மோசடி செய்தார். தலைவர் அது சம்பந்தமாக விசாரணை நடத்தி இடைநீக்கம் செய்தார். ஆனால் மேலே இருக்கிற அதிகாரிகள் ஜி. பாக்கியம் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிற வகையிலே மீண்டும் அவர்களைப் பணியிலே அமர்த்தினார்கள். பொதுவாகச் சொன்னால், இந்த கூட்டுறவுத் துறையிலே இருக்கிற அதிகாரிகள் சரியாக, நியாயமாக, நேர்மையாக நடந்துகொண்டால் இந்தத் துறை செவ்வனே செயல்பட முடியும். இந்தச் செய்தியை அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்தது நம்முடைய மாதிரி கூட்டுறவுச் சட்டத்தை மாநில அரசின் பங்களிப்போடு விரைவாக அமல் நடத்திட வேண்டும். அதனுடைய முழு விளக்கங்களுக்கு நான் வரவில்லை, நேரம் இல்லை. நம்முடைய அனைத்து கூட்டுறவு ஊழியர்களுக்கும் ஓய்வூதியத் திட்டம் என்பது அமலாக்கப்படவில்லை. அதை அமலாக்க வேண்டும். காலம் காலமாக உழைத்து, உருவாக்கி இலாபத்தில் செலுத்திய கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும்

வளர்ச்சி நிதி மற்றும் கூட்டுறவு கல்வி நிதித் தொகைகள் கோடிக்கணக்கில் தமிழ்நாட்டில் கூட்டுறவு ஒன்றியங்களில் உள்ளன. இந்தத் தொகைகள் ஆண்டுதோறும் கூட்டுறவு வார விழா என்ற பெயரில் கூட்டுறவுத் துறை உயர் அதிகாரிகள் விருப்பத்திற்கு மட்டுமே செலவு செய்யப்படுகிறது. பலவேளைகளில் ஆடம்பர விளம்பரச் செலவுகளுக்கு இந்த நிதிகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த நிதியிலிருந்து 10 கோடி ரூபாய் பென்ஷன் நிதிக்கு கொடுக்கப்படுமானால் தமிழகத்திலுள்ள அனைத்து கூட்டுறவு ஊழியர்களுக்கும் அந்த பென்ஷன் திட்டத்தை ஒழுங்காக அமல்நடத்த முடியும்.

அடுத்து நம்முடைய கூட்டுறவு நிறுவனங்களிலே பணிநிரந்தர அரசாணையை அமலாக்கிட வேண்டும். ஏனென்றால் அதிகாரிகள் காலத்திலே கொஞ்சம் பேரை பணியிலே அமர்த்தினார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் கொஞ்சம் பேரை பணியிலே அமர்த்தினார்கள். நம்முடைய வேலை தேடித்தரும் ஸ்தாபனம், Employment Exchange மூலமாக கொஞ்சம் பேரை பணியில் அமர்த்தினார்கள். இப்படி 3 விதமாக நடந்திருக்கிறது. ஆனால் அவர்களுக்கு முழுமையாக பணி நிரந்தரம் செய்யப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. எனவே எல்லோரையும் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்பதை இங்கே வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்து நம்முடைய கூட்டுறவு அச்சகங்களைப் பொறுத்தவரையில் அதை மேம்படுத்துதல் குறித்து ஏற்கெனவே இங்கே கேள்வி நேரங்களில் பல்வேறு கருத்துகளையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அரசு சார்புடைய அந்த அச்சகங்கள் பூராவிலும் அரசுக்குத் தேவையான கோப்புகள் எதை அச்சடித்தாலும் சரி இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக, அரசு அச்சகங்கள் மூலமாக இதைச் செய்வதன் மூலமாகத்தான் அரசுக்கு இதிலே இலாபம் வருமே தவிர, வேறு தனியாருக்குக் கொடுப்பதால் அரசுத் துறைக்கு இலாபம் வராது. அந்த அடிப்படையிலே இந்தக் கூட்டுறவு அச்சகங்களை முறையாக மேம்படுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன். அந்த ஊழியர்களுக்கு ஏற்பட்டிருக்கிற ஊதிய ஒப்பந்தம் முடிந்து 5 ஆண்டுகளாகியும் ஒப்பந்தம் காண்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு அச்சக ஊழியர் பிரேரணை ஒப்புதலுக்காக பதிவாளருக்கு அனுப்பப்பட்டும் இதுநாள் வரையிலும் நடவடிக்கை இல்லை. எனவே ஊழியர்களின் ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஊதியத்தை வழங்க ஆணை பிறப்பிப்பதோடு, மாநிலம் முழுமைக்குமான ஒரே சீரான நிலையில் ஊதியம் சீரமைத்திடல் வேண்டும்.



அடுத்து இந்தக் கூட்டுறவுப் பண்டகசாலைகள். அதுபற்றி நான் தெளிவாகச் சொன்னால் அதை சொல்லித் தீர முடியாத விஷயங்கள் இருக்கின்றன. ஏற்கெனவே கோவை சிந்தாமணி, திருப்பூர் வளர்மதி ஆகிய பண்டகசாலைகளிலே நடக்கின்ற கொள்ளை ஒரு பக்கம். அதற்கு மேலே இப்போது ஊழியர்களுக்கு சரிவர சம்பளம் கொடுக்கப்படுவது இல்லை. அதிலே ஓய்வூதியமும் வழங்குவது இல்லை. அப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்கின்றன. ஒரு பக்கத்திலே பண மோசடி. இன்னொரு பக்கத்திலே அவர்களுக்கு ஊதியம் இல்லாத நிலை, ஓய்வூதியம் கிடைக்காத நிலை. இதைச் சீரமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே காலா காலத்திலே கடன் கிடைப்பதிலே இருக்கிற சங்கடங்கள். ஏனென்றால் விவசாயம் ஒவ்வொரு மாவட்டத்திலே ஒவ்வொரு மாதிரியாக இருக்கும். கன்னியாகுமரி மாவட்டத்திலே வருகின்றபோது எந்தக் காலகட்டத்திலே விவசாயம் செய்ய முடியுமோ அந்த நேரத்திலே அவர்களுக்கு கடனோ, தேவையான உரமோ வழங்குவதற்குண்டான நடவடிக்கை உண்டா என்று கேட்டால் மாநிலம் பூராவிலும் ஒரே நிலையைக் கையாளுகிறார்கள். இதன்மூலமாக விவசாயிகளுக்கு உரிய காலத்திலே, கடன் வழங்குவதிலே பல்வேறு சங்கடங்கள் உள்ளன என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்து பொது விநியோக முறை; பல்வேறு கருத்துகள் உண்டு. கன்னியாகுமரி மாவட்டத்திலே பொதுவாக இந்தப் பொது விநியோக முறை என்பது நான் சார்ந்திருக்கிற விளவங்கோடு தாலுகாவிலே முழுக்க முழுக்க இதைப் பயன்படுத்துகின்ற மக்கள், மலையிலிருந்து கடல் வரை எடுத்துக்கொண்டால் எல்லோரும் சாதாரண மக்கள் ஆவார்கள். சங்கரங்கடவில் ஒரு மாதிரி கடை இருக்கிறது. அந்த மாதிரி கடையிலே 1000-த்திற்கும் அதிகமாக கார்டுகள் இருக்கின்றன. கடைசியில் வரக்கூடிய ஒரு சாராருக்கு மண்ணெண்ணையோ, சர்க்கரையோ, அரிசியோ கிடைக்காது. கேட்டால் என்ன சொல்கின்றார்கள்? அரசாங்கம் இவ்வளவுதான் ஒதுக்கீடு செய்துள்ளது என்று சொல்கின்றார்கள். இதிலே என்ன நிலை என்றால் மலையோரப் பகுதியிலே முழுமையாக plantation-லே வேலை செய்கின்ற தொழிலாளர்கள், கடலோரத்திலே என்று சொன்னால் மீனவ மக்கள். இவர்களுக்கு வேறு இடத்தில் போய் அரிசி வாங்குவதற்கு வழி இல்லை. எனவே முழுமையாக மக்களுக்கு உணவுப்பொருட்கள் கிடைக்கின்ற வகையில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

*பிற்பகல் 1-00*

இன்னொன்று. கள்ளக் கார்டுகளைப்பற்றி எல்லாம் இங்கே சொல்கின்றார்கள். யார் கொடுத்தார்கள்? என்னுடைய கேள்வியே அதுதான். என்ன நாம் யாராவது போய்க் கொடுத்தோமா? இல்லை. அரசாங்க அதிகாரிகள்தான் வழங்கினார்கள். ஆகவே அந்த அரசாங்க அதிகாரிகள்மீது இதுவரையிலும் ஏதாவது நடவடிக்கை எடுத்து, இந்த மாநிலத்தில் எங்கேயாவது இந்த கள்ளக் கார்டு கொடுத்தவர்களைக் கண்டுபிடித்தார்களா, நடவடிக்கை எடுத்தார்களா என்பதை ஒரு கேள்வியாக நான் இங்கே வைக்க விரும்புகிறேன். இலஞ்சம் வாங்குகின்ற அதிகாரிகள் அதிகம் இருக்கின்றார்கள். அதில் சிலவற்றைத்தான் நான் இங்கே சுட்டிக்காட்டினேன்.

கூட்டுறவுச் சங்கத்தினுடைய ஒரு தலைவர் தவறு செய்தால் நேரே கம்பி எண்ணப் போய்விட வேண்டியதுதான். ஆனால் அதிலே இருக்கக்கூடிய ஒரு செக்ரட்டரி தவறு செய்தால் என்ன நடவடிக்கை? எந்தவொரு நடவடிக்கையும் கிடையாது. எனவே நியாயமாக, ஜனநாயகப் பூர்வமாக, இது நிறைவேற வேண்டுமென்று சொன்னால் யார் தவறு செய்தாலும் சரி, தலைவர் தவறு செய்தாலும் சரி, அதிகாரி தவறு செய்தாலும் சரி, ஊழியர்கள் தவறு செய்தாலும் சரி, உரிய நடவடிக்கையை நாம் எடுப்போமேயானால் இந்தக் கூட்டுறவுத் துறையை ஒரு முழுமையான, மக்களுக்குப் பயன்படுகிற, விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பயன்படுகின்ற, ஒரு துறையாக நாம் மாற்றிக் கொள்ள முடியும். அந்தவகையிலேதான் இங்கே வைத்திருக்கின்ற என்னுடைய முதல் கோரிக்கை என்பது, விரைவிலே ஒரு தேர்தலை நடத்துவதற்கு ஓர் ஆணையம் வேண்டும். புகைப்படத்துடன் அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும். அப்போதுதான் கள்ளக் கார்டு என்பதற்கு இடம் தராத வகையில் நம்முடைய கூட்டுறவுத் துறை சரியாகச் செயல்பட முடியும். (மணியடிக்கப்பெற்றது)

ஆக நான் இங்கே எடுத்து வைத்த, முன்னர் சொன்ன சில விவரங்களை ஆய்வு செய்து கூட்டுறவுத் துறையில் இருக்கிற அதிகாரிகள் செய்த தவறுகளினாலும் ஊழியர்கள் செய்த தவறுகளினாலும் நாட்டிலே இருக்கக்கூடிய சாமானிய மக்களுக்கும், ஏழை எளிய மக்களுக்கும் அரசு எந்தவிதமான புதிய திட்டங்களைக் கொண்டு வந்தாலும், அடிமட்டத்தில் இருக்கின்ற சாதாரண மக்களுக்கு எந்தவித பயனும் சென்று அடையாது. ஆகவே தவறு செய்கின்ற அதிகாரிகள்மீது உரிய நடவடிக்கை



மேற்கொண்டு, இந்தத் தேர்தலை மிக விரைவில் நடத்தி முடிக்க வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் மானியக் கோரிக்கைமீது எனக்குப்பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கூட்டுறவு அமைப்பு என்பது மிகச் சிறந்த ஜனநாயகத் தன்மையைக் கொண்ட அமைப்பாகும்; விவசாயிகள், சாதாரண மக்களது உயர்வுக்கு பணியாற்றும் மிகச் சிறந்த சாதனமாகும்.

பொதுத் துறையும், கூட்டுறவுத் துறையும் நாட்டின் இரு கண்கள் போன்றவை. ஆகையால் நஷ்டத்தில் இயங்கும் கூட்டுறவு நிறுவனங்களை தனியார்மயமாக்கல் என்ற தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையில் அறிவித்துள்ளதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசால் 1993ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட மாதிரி கூட்டுறவுச் சட்டம், தற்போது ஆந்திரம், கர்நாடகம், ஒரிசா, மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் அமல்படுத்தப்பட்டுள்ளது.

கூட்டுறவுத் தேர்தலை நடத்துவதற்கு முன்பாக மாதிரி கூட்டுறவுச் சட்டத்தை அமல்படுத்தவும், உறுப்பினர்களுக்கு புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டை வழங்கவும் அரசு முன்வர வேண்டும். இதனால் அரசுக்கு நிதி இழப்பு இல்லை எனச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மேலும் பலவகையான கூட்டுறவுச் சங்கங்களில் போலி உறுப்பினர்களை நீக்கவும், பயனீட்டாளர்கள் மட்டும் வாக்கு அளிக்க வேண்டும் என்ற அடிப்படையில் தேவையான நடவடிக்கையை மேற்கொள்ள தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஜனநாயக முறையில் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு தனி தேர்தல் ஆணையம் உருவாக்க, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் தமிழக அரசு ரேஷன் விநியோகத் திட்டத்தை கூட்டுறவு அமைப்புகளிடம் ஒப்படைத்து உள்ளது. ரேஷன் பொருள்கள் விநியோகத்திற்காக அரசு அனுமதிக்கும் இலாப விகிதம் கூட்டுறவு அமைப்புகளின் செலவுகளுக்கு ஈடுகட்டப் போதுமானதாக இல்லை. இதனால் அந்தக் கூட்டுறவு அமைப்புகளின் நஷ்டம் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டே வருகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-05*

மேலும் ரேஷன் விநியோகத்தில் ஈடுபட்டுள்ள கூட்டுறவு அமைப்புகளுக்கு, கார்டுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, ரேஷன் விநியோகச் செலவை முழுமையாக ஈடுகட்ட அரசு மானியம் வழங்க வேண்டுமென்பதைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

கூட்டுறவு வங்கிகளில் விவசாயக் கடன்கள் வழங்குவதில் அதிக வட்டி விகிதம் நிர்ணயிக்கப்படுகிறது. விவசாயிகள் இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்படும்போது, வாங்கிய கடனைத் திரும்பச் செலுத்த முடியாத நிலை உருவாகின்றது. உலக வங்கி ஏற்றுக்கொண்டபடி 7 சதவிகித வட்டி நிர்ணயம் செய்யப்படவும், அபராத வட்டியை முழுமையாகத் தள்ளுபடி செய்யவும் அரசைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும் 1991ஆம் ஆண்டு மத்திய அரசு ரூ.10,000/- வரை விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்தபோது, அனைத்து தொடக்கக் கூட்டுறவு வங்கிகளும் வட்டி நஷ்டத்தை அடைந்தன.. ரிசர்வ் வங்கியின் ஆணையின்படி அமைக்கப்பட்ட ஜே.என்.எல். ஸ்ரீவத்சவா குழு ரூ.6,700 கோடி வரை வட்டி நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்றும், அதை ஈடு செய்ய வேண்டும் என்றும் பரிந்துரை செய்தது. அதன் அடிப்படையிலே 1998-ஆம் ஆண்டு ஜூலை மாதம் நாடாளுமன்றத்தில் அன்றைய விவசாயம் மற்றும் கூட்டுறவு அமைச்சர் திரு. சோம்பால் அவர்கள் தொடக்கக் கூட்டுறவு வங்கிகளிலே மறு முதலீட்டு நிதியாக ரூ.6,700 கோடி வரை மத்திய அரசு வழங்கும் என்று அறிவித்தார். இது சம்பந்தமாக மத்திய அரசை வலியுறுத்தி தமிழக அரசு கோரிக்கையை முன்வைக்க வேண்டுகிறேன். அதன் காரணமாக தமிழக அரசுக்கு குறைந்தபட்சம் ரூ.500 கோடி வரை மறு முதலீட்டு நிதி உதவி கிடைக்க வாய்ப்புள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழகத்திலே உள்ள பல்வேறு தொடக்க நிலைக் கூட்டுறவு வங்கிகளிலே 480 நாட்களுக்கு மேல் பணிபுரியும் ஊழியர்களை நிரந்தப்படுத்த வேண்டுமென்று அரசாணை எண் 86, நாள் 12-3-2001-ன் படி தமிழக அரசு உத்தரவிட்டது. ஆனால், 480 நாட்களுக்கு மேல் பணியாற்றிய ஊழியர்களை நிரந்தரம் செய்வதற்குப் பதிலாக, பணிநீக்கம் செய்ய உத்தாவிடப்பட்டுள்ளது. எனவே உடனடியாக அந்த ஊழியர்களை நிரந்தரப்படுத்தி ஆணை பிறப்பிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் தமிழகத்திலே உள்ள அனைத்து மத்தியக் கூட்டுறவு வங்கிகளிலும் அவர்களுடைய ஊதிய உயர்வு கோரிக்கையைச் சமர்ப்பித்து



18 மாதங்களுக்கு மேலாகிறது. அவர்களுடைய ஊதிய உயர்வு கோரிக்கையைப் பரிசீலனை செய்து ஊதிய உயர்வு வழங்க வேண்டுமென்று இந்தத் தருணத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதைப்போல, 1995 ஆம் ஆண்டு ஓய்வூதியத் திட்டம் அரசின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டு, 1997 ஆம் ஆண்டு தமிழக அரசால் பரிசீலிக்கப்பட்டு, 2000 ஆண்டு ஓய்வூதியத் திட்டம் அமல்படுத்தப்படும் என்று சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. எனவே, மத்தியக் கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கு ஓய்வூதியத் திட்டத்தை அறிவிக்க வேண்டும் என தமிழக அரசைக் கேட்டுக்கொள்வதுடன், படிப்படியாக அனைத்து கூட்டுறவு நிறுவனங்களுக்கும் செயல்படுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களின் மாநிலப் பதிவாளர் அவர்கள் தொடக்க வேளாண்மை வங்கிகளிலே ரூ.25 இலட்சம் வரை சொந்த நிதி பெற்றிருந்தாலொழிய வைப்பு நிதி பெற்றுக் கொள்ளக்கூடாது என்றும் 22-11-2001 ஆம் தேதிய சுற்றறிக்கையின்படி உத்தரவு பிறப்பித்துள்ளார். இதனால் கிராமப்புற மக்கள் தங்களது உபரி நிதிகளைப் பாதுகாப்பதற்காக நகர்ப்புறங்களைத் தேடி வெகுதூரம் செல்ல வேண்டியுள்ளது. வைப்பு நிதிகள் பெறுவது தடுத்து நிறுத்தப்பட்டால், விவசாயிகளுக்குக் கடன் அளிப்பதற்குத் தேவையான நிதி ஆதாரம் குறைந்துவிடும். விவசாயிகள் நலன் கருதி வங்கிகளின் விதி தளர்த்தப்பட வேண்டுமென்று இந்தத் தருணத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோல் நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் தமிழ்நாட்டில் 128 செயல்பட்டு வருகின்றன. இந்த வங்கிகளுக்கு என தனியாக மாநில அளவில் மாநில தலைமை வங்கி ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோல் நகர கூட்டுறவு வங்கிகளில் வழங்கப்படும் நகைக் கடன் கால அளவு 6 மாதங்களாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதை மாற்றி மீண்டும் ஒரு வருட கால அவகாசம் என உத்தரவிட வேண்டுகிறேன்.

தமிழகம் முழுவதும் உள்ள ரேஷன் கடைகளில் வழங்கப்படும் மண்ணெண்ணெய் அளவு குறைக்கப்பட்டுள்ளது. பழையபடி அளவை அதிகப்படுத்தி வழங்க அரசை இத்தருணத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

[திரு. சோ. இராசேந்திரன்] [2002 ஏப்ரல் 18

அடுத்தபடியாக எனது தொகுதியைப் பற்றி ஒரு சிறிய கோரிக்கையை வைக்கக் கடமைப்பட்டுள்ளேன். எட்டயபுரம் கூட்டுறவு நூற்பாலைகளில் தொழிலாளர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட கடன் தொகையை, கடந்த பிப்ரவரி 2001 முதல் சுமார் ரூ. 26 இலட்சம் பிடித்தம் செய்த தொகையை, சம்பந்தப்பட்ட பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன நாணயச் சங்கத்திற்குச் செலுத்தாததால், தொழிலாளர்கள் மீண்டும் கடன் பெறும் வாய்ப்பை இழக்கிறார்கள். இதேபோல், பலதுறைகளில் பிடித்தம் செய்யப்பட்ட தொகைகளை அந்தந்தத் துறைகள் செலுத்தாத சூழ்நிலை உள்ளது என்பதை இந்தத் தருணத்திலே மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கடந்த காலத்தில் கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட கடனிற்கான வட்டி, அபராத வட்டியை ரூ.311 கோடி அளவிற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தள்ளுபடி செய்தது. அந்தச் சமயத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக அதை நாங்கள் வரவேற்றோம். அதேசமயம் இதுவரை அரசால் வழங்கப்பட்ட ரூபாய் 226 கோடி சலுகை போக, மீதித் தொகை ரூ.82 கோடியை விவசாயிகளுக்குப் பயன் அளிக்கும்படி அரசு அறிவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஒரே தவணையில் கடனைத் தீர்க்கும் சலுகைத் திட்டம், one time settlement scheme என்ற திட்டத்தின் மூலமாக ரூபாய் 110 கோடி செலவாகும் என அரசு அறிவித்துள்ளது. அரசுக்கு எவ்வித நிதியிழப்பும், பங்கீடுமில்லை என்பதையும் இத்தருணத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன். இச்செலவை கூட்டுறவு வங்கிகள் ஏற்க ஒப்புக்கொண்டுள்ளது என்பது நலிவடைந்துள்ள கூட்டுறவு வங்கிகளை மேலும் மேலும் நஷ்டமடையச் செய்யும் என்பதைச் சுட்டிக்காட்டி (மணியடிக்கப்பட்டது) ஒருசில தொகுதிப் பிரச்சினைகளை மட்டும் பேசி அமையலாம் என்று கருதுகிறேன்.

பிற்பகல் 1-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, தொகுதிப் பிரச்சினைகளைத் தனியாக வைத்துக்கொள்வோம்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.



2002 ஏப்ரல் 18]

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் என்னுடைய குலதெய்வத்தை வணங்குகின்றேன். இந்த உணவு மற்றும் கூட்டுறவுத் துறை மானியத்தின்மீது ஏழு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் மேலான கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கருத்துகளுக்கு முதலிலே பதில் சொல்வதற்கு முன்பாக நான் எங்களுடைய அரசியல் கருத்துகள் சிலவற்றில் ஒன்றே ஒன்றை மட்டும் இந்த அவையிலே பதிய வைக்க விரும்புகிறேன்.

இந்த அவையிலே ஏறக்குறைய கடந்த 10, 15 நாட்களுக்கு மேலாக தாழ்த்தப்பட்ட மக்களுடைய பிரச்சினைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் அவர்களுக்கெல்லாம் ஒன்றே ஒன்றை மட்டும் என்னுடைய பதிலாக இந்த நேரத்திலே பதியவைக்க விரும்புகிறேன். இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்களுடைய பாதுகாவலனாக தமிழகத்திலே நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. வரலாற்றிலே கக்கனுக்குப் பிறகு இந்த அமைச்சரவையிலே இவ்வளவு பொறுப்பு மிகுந்த பதவியை தாழ்த்தப்பட்ட பெருமக்களுக்கு யாரும் கொடுத்ததில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் நான் வணங்குகிற எங்களுடைய தெய்வம், சாதாரண ஒரு தாழ்த்தப்பட்ட குடும்பத்திலே பிறந்த என்னிடத்திலே இவ்வளவு பொறுப்பு மிகுந்த இரண்டு துறைகளைக் கொடுத்து, நிருவகிக்கிற வாய்ப்பைக் கொடுத்து இருப்பதன் மூலமாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தமிழ்நாட்டிலே ஒரு கலங்கரை விளக்காகவும், தாழ்த்தப்பட்ட மக்களைப் பாதுகாக்கிற வாழும் அம்பேத்கராகவும், அதைவிட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரு தாயாகவும் இருந்து, இந்தத் தமிழகத்தை எங்கள் தாய் காத்துக்கொண்டிருக்கிறார் என்பதனை இந்த மன்றத்திலே நான் பணிவோடு பதிவுசெய்வதன் மூலமாக தாழ்த்தப்பட்ட மக்கள் அத்தனைபேரும் என்றென்றைக்கும் எங்களுடைய தாயின்மீது விசுவாசமாக இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதனையும், (மேசையைத் தட்டும் ஒலி) தாழ்த்தப்பட்ட மக்களையும் எங்களுடைய தாயையும் இனி பிரிப்பதற்கு தமிழ்நாட்டிலே ஒரு சக்தியும் இல்லை என்பதனையும் இந்த நேரத்திலே மாமன்றத்திலே நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கடுத்தபடியாக நான் ஒன்றை இந்த மன்றத்திலே பதிவுசெய்வது என்னுடைய கடமை என்றே கருதுகிறேன். 1972-லே புரட்சித் தலைவர் அவர்கள் இந்த இயக்கத்தைக் கண்டார்கள். இந்த இயக்கத்தைக் கண்டதற்குப் பின்னாலே, இந்த மாமன்றத்திலே அவர் வந்து எதிர்க் கட்சித் தலைவராக உட்கார்ந்து பேச ஆரம்பித்தார். பேச ஆரம்பித்த

[திரு. ப. தனபால்] [2002 ஏப்ரல் 18

நேரத்திலே அவரைப் பேச விடாமல் மிகவும் அவமரியாதையாக இந்த மாமன்றத்திலே அன்றைக்கிருந்த ஆட்சியாளர்கள் செய்தார்கள். ஆனால் அன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்கள் இந்த மாமன்றத்தை விட்டு வெளியேறுகிறபோது இந்தச் சட்டமன்றம் சரியாக நடைபெறவில்லை. இது செத்துவிட்டது, நான் மீண்டும் மக்களுடைய அன்பைப் பெற்று, எங்களுடைய இயக்கத்தின் சார்பாக தமிழ்நாட்டு மக்கள் அத்தனை பேருடைய அன்பையும் பெற்று இந்த மாமன்றத்திற்கு நான் மீண்டும் வருகிறபோது முதலமைச்சராக வருவேன் என்று சபதம் ஏற்றுப் போனார். அதேபோல 1977-லே முதலமைச்சராக மீண்டும் மக்களுடைய அன்பைப் பெற்று அவருடைய சபதத்தை நிறைவேற்றுகிற வகையிலே இந்த மாமன்றத்திலே வந்து முதலமைச்சராக உட்கார்ந்தார்.

அதேபோல எங்களுடைய இயக்கம் இரண்டாகப் பிளவுபட்டதற்குப் பின்னாலே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இயக்கத்தை நடத்தியபோது, இந்த மாமன்றத்திலே சட்டமன்ற உறுப்பினராக எதிர்க்கட்சித் தலைவராக வந்து உட்கார்ந்து, நாட்டு மக்களுக்கு கருத்துகளைச் சொல்ல ஆரம்பித்த நேரத்திலே, 1989 மார்ச் 25 ஆம் நாள் ஒரு கருப்பு நாளாக இந்த மாமன்றம் அன்றைக்கு மாறியது. அந்தக் கருப்பு நாளிலே என் தாய்க்கு அநீதி இழைக்கப்பட்டது. அநீதி இழைக்கப்பட்ட எங்களுடைய தாய் இந்த மாமன்றத்தைவிட்டு வெளியே போகிற நேரத்திலே புரட்சித் தலைவர் வழியிலே சொன்னார். சட்டமன்றம் சரியாகச் செயல்படவில்லை. நான் எனக்கு இழைக்கப்பட்ட அநீதியை நாட்டு மக்களிடத்திலே எடுத்துச் சொல்லுவேன். நாட்டு மக்களிடத்திலே அன்பையும் ஆதரவையும் பெற்று, மீண்டும் இந்தச் சட்டமன்றத்திற்குள்ளே நான் ஒரு முதலமைச்சராகத்தான் வருவேன் என்று (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய தாய் அன்றைக்கு ஆணையிட்டார்கள்; அன்றைக்கு சபதம் ஏற்றார்கள். ஏற்ற சபதத்தை 1991-லே நாட்டு மக்களிடத்திலே அன்பினைப் பெற்று முதலமைச்சராக சிங்கத் தலைவியாக வந்து இங்கே அமர்ந்தார்கள்.

*பிற்பகல் 1-15*

அதுமட்டுமல்ல. அதற்குப் பின்னாலே ஆட்சியிலே இருக்க முடியாத ஆட்சியிலே இருந்து இருக்க முடியாத சூழ்நிலை வந்தது. அவர்மீது பல வழக்குகள் ** போட்டார்கள். ஆனாலும் தனி ஒரு நபராக என்னுடைய தாய் கலங்காமல்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்பதைத் திருத்திக் கொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது



2002 ஏப்ரல் 18]

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மன்னிக்கவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** அன்றைக்கு இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாளர்கள் வழக்குகள் போட்டார்கள். அவற்றையெல்லாம் என்னுடைய தாய் நாட்டு மக்களிடத்திலே எடுத்துச் சொல்லுவேன் என்று சொல்லி ஐந்தாண்டு காலம் தன்னந்தனியாகப் போராடி இந்த இயக்கத்தையும் ஆட்சிக்குக் கொண்டுவந்தார். அவரும் இன்றைக்கு ஆட்சியிலே வந்து அமர்ந்திருக்கிறார். ஆனால் 2001-லே ஆட்சியிலே வந்து அமர்ந்த என்னுடைய தாயை- முறையாக மக்களிடத்திலே அன்பினைப் பெற்று - ஒரு ஜனநாயக நாட்டிலே மக்களிடத்திலே அன்பைப் பெற்று ஆட்சிக்கு வந்த என்னுடைய தாயை, ஆட்சி செய்யவிடாமல் சட்டத்தின் சந்துபொந்துகளிலே புகுந்தார்கள். ஆனாலும் என்னுடைய தாய் கலங்கவில்லை. மீண்டும் அந்தச் சட்டத்தைச் சந்திப்பேன், நீதியைச் சந்திப்பேன், நீதியின் மூலமே மீண்டும் முதலமைச்சராக வருவேன் என்று சபதம் போட்டார்கள். அதுபோலவே, சந்தித்தார், வென்றார். ஆனாலும்கூட ஒரு மாதம் பொறுத்திருந்தார். எதற்காக? நாட்டு மக்களிடத்திலே நான் அன்பினைப் பெற்றுத்தான் மீண்டும் இந்த மன்றத்திலே வந்து உட்காருவேன் என்று என் தாய் சபதம் போட்டார். ஆண்டிப்பட்டி மக்களைச் சந்தித்தார். இன்றைக்கு ஆண்டிப்பட்டி அரசியாக என்னுடைய தலைவி மீண்டும் தன்னுடைய சபதத்தை நிறைவேற்றி (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்திலே முதலமைச்சராக உட்கார்ந்திருக்கிறார். உட்கார்ந்த உடனேயே என்னுடைய தாய் தெளிவாக இந்த நாட்டுக்குச் சொன்னார். இந்த நாட்டினுடைய முதலமைச்சராக நான் வந்திருக்கிறேன். பல்வேறு இடையூறுகளுக்குப் பின்னாலே நான் முதலமைச்சராக வந்திருக்கிறேன். ஆகவே வீழ்ந்து கிடக்கிற இந்தத் தமிழகத்தைத் தூக்கி நிறுத்தி, இந்திய துணைக் கண்டத்திலேயே தமிழ்நாட்டை முதல் மாநிலமாக மாற்றிக் காட்டுவேன் என்ற சபதத்தை (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்றுவிட்டுத்தான் என்னுடைய தாய் இங்கே முதலமைச்சராக உட்கார்ந்திருக்கிறார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் போட்ட சபதத்தை நிறைவேற்றியதைப் போல அவருடைய வாரிசாக வந்திருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களும் தன்னுடைய சபதத்தை ஒவ்வொன்றாக நிறைவேற்றிக் காட்டி அமர்ந்திருக்கிறார்கள்.

அதேபோல இப்போது இந்திய துணைக் கண்டத்திலேயே தமிழ்நாட்டை முதல் மாநிலமாக மாற்றிக் காட்டுவேன் என்கிற சபதத்தை என்னுடைய தாய் போட்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த

சபதத்தை நிச்சயமாக நாட்டு மக்களுடைய அன்போடு நாட்டு மக்களுடைய ஒத்துழைப்போடு நிறைவேற்றி, இந்திய துணைக் கண்டத்திலேயே தமிழ்நாட்டை முதல் மாநிலமாக மாற்றிக் காட்டுவார் என்பதற்கு அடையாளமாகத்தான் இந்த மாமன்றத்திலே இரண்டு நாட்களுக்கு முன்னதாக ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார். யாருக்கும் வராத தைரியம் என்னுடைய தாய்க்கு வந்திருக்கிற காரணத்தினாலே அவர் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். தீவிரவாதத்தை உலகத்தில் இருக்கிற எந்தத் தலைவரும் யோசித்து எதிர்க்கிற நேரத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய தாய் எதற்கும் யோசிக்காமல் தீவிரவாதத்தை ஒழித்துக் கட்டுவேன் என்று சொல்லி ஒரு சபதத்தை நிறைவேற்றுகிற வகையிலே ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து இன்றைக்கு உலகத்திலே இருக்கிற அத்தனை தலைவர்களுக்கும் வழிகாட்டுகிற வகையில் தீவிரவாதத்தை எதிர்க்கிற முதல் தலைவியாக எங்களுடைய தலைவி இன்றைக்கு இங்கே இருக்கிறார் என்பதை மகிழ்ச்சியோடு நாங்கள் எண்ணிப்பார்த்து அந்தத் தாய்க்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். அப்படிப்பட்ட தாய் போட்டிருக்கிற சபதத்தின் அடிப்படையிலேதான் தமிழகத்தை முன்னுக்குக் கொண்டு வர வேண்டும். முதல் மாநிலமாகக் கொண்டு வர வேண்டும் என்று போட்டிருக்கிற அந்தச் சபதத்தின் ஒரு கூறாக நான் பொறுப்பேற்றிருக்கிற கூட்டுறவுத் துறையிலும் உணவுத் துறையிலும், அந்தத் தாய் இந்த 11 மாத காலத்திலே இந்த இரண்டு துறைகளிலேயும் ஆற்றியிருக்கிற வீர வரலாறுகளை, செய்திருக்கிற சாதனைகளை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பது என்னுடைய கடமையென்று நான் நிச்சயமாகக் கருதுகிறேன்.

11 மாதங்களில் எவ்வளவு சாதனைகளை இந்தத் துறைக்குச் செய்ய முடியுமோ அவ்வளவு சாதனைகளை இந்தத் துறையிலே செய்திருக்கிறார்கள். இங்கே மாமன்ற உறுப்பினர்கள் எல்லாம் பேசினார்கள். எங்கள் தாய் ஆட்சிக்கு வந்தவுடனேயே விவசாயி களுடைய கடனை நீக்குவதற்கு, வட்டியையும், அபராத வட்டியையும் நீக்குவதற்கு 311 கோடி ரூபாயை வாரி வழங்கினார்கள் என்று சொன்னார்கள். நான் உங்களுடைய நினைவுகளை எல்லாம் பின்னோக்கிப் பார்க்கும்படி இங்கே இருக்கிற மாமன்ற உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்வேன். இதில் பழைய மாமன்ற உறுப்பினர் பலபேர் இருக்கிறார்கள். பழனிசாமி இருக்கிறார்; சிவபுண்ணியம் இருக்கிறார்; ஹேமச்சந்திரன் இருக்கிறார்; எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்களும் இங்கே இருந்தார்கள். அத்தனை பேரும் இப்படி விவசாயிகள் கடனுக்கு ஏற்பட்டிருக்கிற வட்டியையும், அபராத வட்டியையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று இதே மாமன்றத்திலே



எத்தனை முறை குரல் எழுப்பினார்கள். கேட்ட குரலுக்கு அன்றைக்கிருந்த ஆட்சியாளர்கள் எவ்வளவு மமதையோடு பதிலைச் சொன்னார்கள் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கம்யூனிஸ்ட் நண்பர்ளைப் பார்த்துக் கேட்டார்கள்; வெஸ்ட் பெங்காலிலே கடனுக்கு வட்டியும், அபராத வட்டியும் தள்ளுபடி செய்திருக்கிறார்களா? இல்லை இந்தியாவிலே வேறு எங்கேயாவது செய்திருக்கிறார்களா என்று கேட்டார்கள், அன்றைக்கு ஆட்சியிலே இருந்தவர்கள்.

பிற்பகல் 1-20

அதுமட்டுமல்ல. எங்களுடைய தாய்மீது அபாண்டமாக. ஒரு தவறான தகவலை, உண்மைக்குப் புறம்பான தகவலை இந்த மாமன்றத்திலே சொன்னார்கள். அவர்களுடைய சுயநலத்திற்காக, எங்களுடைய தாயை தவறாக அவர் போடாத ஒப்பந்தத்தை நபார்டுக்கு அம்மா அவர்கள் எழுதிக் கொடுத்துவிட்டார்கள் என்று தவறான தகவலை இந்த மாமன்றத்திலே சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு உறுப்பினராக இருக்கிற அவர் வந்து திருப்பி அதேபோல ஒரு தவறான தகவலை இந்த அவையிலே இப்போது அவர் சொல்வார் என்று சொன்னால் எங்களுக்கு அதைவிட வேறு ஒன்றுமே வேண்டாம். உரிமைக் குழுவிற்குத் தாராளமாகக் கொண்டுபோய் அவரை நாங்கள் சந்திக்க வேண்டிய இடத்திலே சந்திப்போம் என்பதையும் இந்த நேரத்திலே நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். சொல்கிற துணிவு இருக்கிறதா? அன்றைக்கு தவறான தகவலை இந்த அவைக்குத் தந்தாரே, இன்றைக்கு இந்த அவை உறுப்பினர்தானே, அவர் வந்து இந்த அவையிலே அதுபோன்ற ஒரு தகவலைத் தர முடியுமா? தவறான தகவலைக் கொடுத்து தன்னுடைய சுயநலத்திற்காக இந்த அவையைப் பயன்படுத்திய அந்த முன்னாள் முதலமைச்சரை நான் வன்மையாக இந்த நேரத்திலே இந்தத் துறையினுடைய அமைச்சர் என்ற முறையிலே கண்டிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல. அன்றைக்குக் கேட்டதற்குச் சொன்னார்கள். என்னுடைய தாய் இப்போது மட்டுமல்ல, 1991-லே ஆட்சியிலே இருந்தபோது 1992-வது ஆண்டிலேயே, இதுபோன்ற ஒரு திட்டத்தை விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குகின்ற அந்தத் திட்டத்தை அன்றைக்கு என்னுடைய தாய் அறிவித்தார்கள். அறிவித்ததனுடைய விளைவாக அன்றைக்கு 4.48 இலட்சம் விவசாயிகள் பயன் பெறக்கூடிய அளவிற்கு ரூ.55.73 (குறுக்கீடு) கோடி. இந்தத் திட்டத்திலே 4.48 இலட்சம் விவசாயிகள் பலன் அடையக்கூடிய அளவிற்கு ரூ.55.73 கோடி அளவிற்கு நிவாரணம்

வழங்குகிற அந்தத் திட்டத்தை அன்றைக்கு 1992ஆம் ஆண்டிலேயே புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்து நடத்திக் காட்டினார்கள். நபார்டைச் சொன்னார்கள். ஆனால் என்னுடைய தாய் ஆட்சிக்கு வந்த 15-வது நாளிலே, 311 கோடி ரூபாய்க்கு வட்டி, அபராத வட்டி தள்ளுபடி திட்டத்தை அறிவித்தார்கள். எப்படி அவருக்குத் துணிச்சல் வந்தது? எப்படி அவருக்கு வாய்ப்பு வந்தது? மனம் இருந்தது, மார்க்கம் கிடைத்தது, என்னுடைய தாய்க்கு. விவசாயிகளுக்குச் செய்ய வேண்டும் என்று என்னுடைய தாய் நினைத்தார்கள். உடனே அதற்கான திட்டங்களை வகுத்தார்கள். நிவாரணத் திட்டத்தைக் கொடுத்தார்கள். கொடுத்ததினுடைய விளைவாக இன்றைக்கு 6 இலட்சத்து 11 ஆயிரத்து 193 விவசாயிகள் ரூ.226.56 கோடி அளவிற்குப் பலனைப் பெறுகின்ற அளவிற்கு மாபெரும் திட்டத்தை வகுத்தார்கள். கேட்டார்களே, இந்தியாவிலே மேற்கு வங்கத்திலே இருந்ததா என்று. இந்தியாவிலே எங்கேயும் இது நடக்கவில்லை. எந்த மாநிலத்திலேயும் இல்லை.

எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்திய துணைக் கண்டத்திலே ஒரு சிறப்புத் திட்டமாக, மற்ற மாநிலங்களும், பார்த்து வியக்கிற திட்டமாக இந்தத் திட்டத்தை இந்த நாட்டு மக்களுக்குக் கொடுத்து விவசாயிகளுக்கு நன்மையைச் செய்திருக்கிறார்கள். இவ்வளவு காரியங்களைச் செய்திருக்கிறார்கள் என்று சொன்னாலும் கடுமையான நிதி நெருக்கடி நம்முடைய மாநிலத்திற்கு இருக்கிறது. இருந்தாலும்கூட நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 226.56 கோடி ரூபாயைக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால், அவருக்கு விவசாயிகளுக்குச் செய்ய வேண்டும் என்கிற மனம் இருந்தது. அதனாலே மார்க்கத்தைக் கண்டுபிடித்து இன்றைக்கு எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்தத் திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்திலே சில பேர் கேட்டார்கள், நகர வங்கியிலே இருப்பவர்கள், நாங்கள் பயன்பெற முடியவில்லை. குறுகிய காலக் கடனுக்குத்தான் இந்தச் சலுகை கிடைத்திருக்கிறது, நீண்ட காலக் கடனுக்கு வாய்ப்பு இல்லையே, ஆகவே அந்தத் திட்டங்களுக்கும் கொடுங்கள் என்று கேட்ட உடனேயே புரட்சித் தலைவி மீண்டும் இன்றைக்கு புதிய திட்டத்தை இந்த நிதிநிலை அறிக்கையிலே கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திட்டம்தான் one time settlement ஒரே நேரத்திலே தங்களுடைய கடனைத் தீர்வு செய்தால் வட்டி, அபராத வட்டியை 1998 வரை இருக்கிற கால கட்டத்திற்கு நீக்கி அதற்குப் பின்னாலே 1998-லிருந்து இந்த 4 ஆண்டு காலத்திற்கு வட்டி முழுவதையும் தள்ளுபடி செய்கிற இந்த one time settlement-ஐ புரட்சித் தலைவி அம்மா அவர்க்ள் இன்றைக்கு அறிவித்ததினுடைய விளைவாக



அதிலே ஏறக்குறைய 4.5 இலட்சம் விவசாயிகள் பலன் பெறுவார்கள். அதன் மூலம் இந்த அரசுக்கு 110 கோடி ரூபாய் அளவிற்குச் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்படிப்பட்ட நல்ல திட்டங்களை எல்லாம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடர்ந்து இந்த நாட்டுக்கு அளித்துக்கொண்டிருக்கிறார்கள்.

*பிற்பகல் 1-25*

அதேபோலத்தான் கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே இந்த மானியக் கோரிக்கை விவாதத்திலே நான் பேசுகிறபோது திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்தபோது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளையும் கூட்டுறவு நிறுவனங்களையும் தங்களுடைய சொந்த நலன்களுக்காக சூறையாடிவிட்டுப் போனதையும், அதிலே அவர்கள் போட்ட முறையற்ற நியமனங்களையும் உங்களுக்கு நான் எடுத்துச் சொன்னேன். அந்த முறையற்ற நியமனங்களையெல்லாம் நீக்க வேண்டுமென்கிற அடிப்படையிலேதான் இந்த அரசாங்கம் கடந்த 10, 11 மாத காலத்திலே விரைவாகச் செயல்பட்டு, நியமிக்கப்பட்ட 9998 நியமனங்களிலே 4673 நியமனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த நடவடிக்கைகளிலே விரைந்து மீதியிருக்கின்ற நபர்கள் மீதும் நடவடிக்கை எடுப்பதற்குள்ளாக சிலர் நீதிமன்றங்களுக்குச் சென்றிருக்கிறார்கள். அந்த நீதிமன்றத் தடையாணைகளையும் நீக்கிவிட்டு, விரைவாக அப்படிப்பட்ட முறையற்ற நியமனங்களை இந்த அரசு எந்தவித தயவு தாட்சண்யமுமின்றி நீக்கும் என்பதனை இந்த நேரத்திலே மாமன்ற உறுப்பினர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டும் நின்றுவிடவில்லை. முறையற்ற முறையிலே நியமனம் செய்த அந்த குழுக்கள்—திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகப் பணியாற்றிய அத்தனை நிறுவனத் தலைவர்களையும்—யார் யார் எல்லாம் தவறு செய்தார்களோ அவர்கள் மீது தக்க நடவடிக்கையை விரைந்து இந்த அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது. அதனுடைய அடிப்படையிலேதான் 81-வது விதியின்படி 414 சங்கங்கள்மீது விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதிலே விதி 82-ன்படி மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையிலே 468 சங்கங்கள் விரைந்து நடவடிக்கைக்குள்ளாகி இருக்கின்றன. இதன்மூலம் தண்டத் தீர்வை வழக்குகளாக 607 வழக்குகளை இந்த அரசு இப்போது போட்டிருக்கிறது என்பதனையும், அதிலே குற்றவியல் வழக்குகளாக, criminal வழக்குகளாக,

162 வழக்குகளை நீதிமன்றத்திற்கு இந்த அரசு அனுப்பி தக்க நடவடிக்கைகளுக்குள்ளாகியிருக்கிறது என்பதனையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோலத்தான் போன முறை என்னுடைய மானியக் கோரிக்கையிலே பேசுகிறபோது பல்வேறு ஊழல்களை திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்கள் செய்தார்கள் என்று அடுக்கடுக்காகச் சொன்னேன். அதிலே ஒன்றுதான் கொப்பரைத் தேங்காய் ஊழல். அந்தக் கொப்பரைத் தேங்காய் ஊழலைப்பற்றி இப்போது பேசிய நம்முடைய போளூர் வாதன் அவர்களும் மற்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் கேட்டுக்கொண்டார்கள். அந்த ஊழல் உண்மையிலேயே நடந்து இருக்கிறது என்பதனை தெளிவாக்கி உண்மையான குற்றவாளிகளைக் கண்டறிய D.V.A.C. enquiry-யை அம்மா அவர்கள் போட்டிருக்கிறார்கள். அந்த D.V.A.C. enquiry-யிலே யார் யார் எல்லாம் தவறு செய்தார்களோ அவர்களைச் சட்டத்தின் முன்னாலே கொண்டு போய் இந்த அரசு நிறுத்தும் என்பதனையும் இந்த நேரத்திலே அதற்கான விரைவான பணிகள், விசாரணைகள் நடந்துகொண்டிருக்கின்றன என்பதனையும் சுட்டிக்காட்டுகிற அதே நேரத்திலே, கடந்த ஆட்சியிலே நடந்தது போன்ற அப்படிப்பட்ட ஊழல் நடந்துவிடக் கூடாது என்பதிலே எச்சரிக்கையாக இருக்கிற எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சில நெறிமுறைகளை இந்த முறை கொப்பரை கொள்முதல் செய்வதிலே ஜாக்கிரதையாக இருந்து, சரியான விதிமுறைகளைப் பயன்படுத்தி, தவறே நடக்காத அளவுக்கு உண்மையான விவசாயிகள் அந்தப் பலனை அனுபவிக்கிற அளவுக்குச் செய்ய வேண்டுமென்று விதிமுறைகளை வகுத்துக் கொடுத்ததினுடைய அடிப்படையிலே, இந்த ஆண்டு 2939.30 டன் அளவுக்கு இந்த அரசு கொள்முதலைச் செய்திருக்கிறது. இந்த மாமன்ற உறுப்பினர்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன். இவ்வளவு சரியான முறையிலே கொப்பரைத் தேங்காய் கொள்முதல் செய்ததனாலே இந்த மாநிலத்திலே இந்த வருடம் நாம் பெற்றிருக்கிற கொப்பரைத் தேங்காயினுடைய அளவு 2939 டன்தான். ஆனால், கடந்த ஆட்சியிலே, கடைசியிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியிலே இதே கொப்பரைக் கொள்முதல் நடந்திருக்கிறது. எவ்வளவு தெரியுமா? ஒரு இலட்சத்து 12 ஆயிரம் டன் கொப்பரைகளைக் கொள்முதல் செயதிருக்கிறார்கள் என்று சொன்னால், எண்ணிப்பாருங்கள். நாம் ஏறக்குறைய 3 ஆயிரம் டன்தான் இப்போது பெற்றிருக்கிறோம். ஆனால் அவர்கள் கொள்முதல் செய்தது ஒரு இலட்சத்து 12 ஆயிரம் டன். ஆகவேதான் சொன்னேன். ஒரு கிலோவுக்கு 10 ரூபாய் என்று சொன்னால்



எவ்வளவு? 112 கோடி ரூபாய் மக்களுடைய பணத்தை, அரசாங்கத்தினுடைய பணத்தை யாரோ கொள்ளையடித்துக்கொண்டு போயிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதனை சுட்டிக்காட்டியதற்குக் காரணம், இந்த ஆண்டு நடந்திருக்கிற நியாயமான கொள்முதலிலே ஏற்பட்டிருக்கிற, இந்த உண்மையான கொள்முதலிலேயிருந்து கடந்த ஆண்டு நடந்தது எவ்வளவு பெரிய தவறு என்பதனை இந்த மாமன்ற உறுப்பினர்கள் மிக நன்றாகப் புரிந்துகொள்வார்கள் என்பதனை இந்தப் புள்ளிவிவரங்கள் மூலமாக நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் முன் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** அதேபோல நிருவாகத்தை மேம்படுத்த வேண்டும் என்பதற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த உடனேயே கூட்டுறவுத் துறையிலே இருக்கிற டெபாசிட் பணத்தை வீணாக வைத்திருக்கக்கூடாது என்பதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தங்களுடைய நிருவாகத் திறமையினாலே அவர்கள் கொடுத்த ஒரு புதிய திட்டம்தான் கூட்டுறவுத் துறைக்கு கருவூல நிதி மேம்பாட்டுத் திட்டம். இந்தத் திட்டத்தின் மூலமாக டெபாசிட்டாக வங்கிகளிலே இருக்கிற, சும்மாயிருக்கிற அந்தப் பணத்தை கருவூல நிதி என்று சொல்லக்கூடிய டெபாசிட்டை மற்ற இடங்களிலும் ரிசர்வ் வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் மூலமாக முதலீடு செய்ததில் கூட்டுறவு வங்கிகள் இந்த ஆண்டு 50 கோடி ரூபாயை லாபமாக ஈட்டி, அந்த 50 கோடி ரூபாயும் நாட்டு மக்களுடைய பணமாக இன்றைக்கு மாறி, அந்தக் கூட்டுறவுத் துறை லாபமாக ஈட்டியிருக்கிறது என்பதனையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல்தான் இந்த 11 மாத காலத்திலே இந்த மாமன்றத்தில் இதற்கு முன்னாலே எவ்வளவோ பேசியிருக்கிறார்கள். ஊட்டி தேயிலை விவசாயிகளைப் பற்றி யாராவது நினைத்துப் பார்த்தது உண்டா? அன்றைக்கு இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாளர்களிடத்திலே கேட்டபோது ஊட்டி தேயிலைபற்றி நினைத்தது உண்டா? அவர்களுடைய துயரங்களை எண்ணிப் பார்த்தது உண்டா? இன்றைக்கு மனித உரிமைகள் கமிஷனுக்குப் போய் பெட்டிஷன்களைப் போட்டுக் கொண்டு நிற்கிறார்களே, அவர்கள் அன்றைக்கு ஊட்டி தேயிலை விவசாயிகள்

[திரு. ப. தனபால்] [2002 ஏப்ரல் 18

போராடியபோது, நடு ரோட்டிலே ஜட்டியோடு அடித்து அவர்களைத் துன்புறுத்தினார்களே, அவர்கள் மனித உரிமைகள் கமிஷனுக்குப் போனபோது அவர்களுக்கு நஷ்ட ஈடு 41 லட்ச ரூபாய் கொடுக்க வேண்டுமென்று அன்றைக்கு இருந்த அரசாங்கத்தின்மீது அந்த மனித உரிமைகள் கமிஷன் பரிந்துரைத்ததையாவது நிறைவேற்றினார்களா? இல்லையே! அப்படியே விட்டுவிட்டுப் போனார்கள். ஆனால், எங்களுடைய தாய்.....

*திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊட்டியிலே தேயிலைத் தொழிலாளர்கள் பிரச்சினையில் தி.மு.க. அரசு இருந்தபோது அந்தத் தேயிலைப் பிரச்சினையைப்பற்றி என்ன செய்தீர்கள் என்று கேட்கிறார். 15 ரூபாய் விற்ற தேயிலை, தி.மு.க. ஆட்சியிலே 8 ரூபாய்க்கு வந்தது. ஆனால் மத்திய அரசிடத்திலே வாதாடி 2 ரூபாய் பெற்று 10 ரூபாயாக அந்த விவசாயிகளுக்கு நாங்கள் கொடுத்தோம். இப்போது 4 ரூபாய்க்குக் கூட தேயிலை வாங்குவோர் இல்லை. இரண்டாவதாக கிலோ 4 ரூபாய்க்குத் தான் விற்கிறதாம். ஆனால் நீங்கள் ஏதாவது இதுவரையில் மத்திய அரசிடத்திலே வாதாடி பணம் கொடுத்திருக்கிறீர்களா? மூன்று, இதுவரையிலே இந்த ஆட்சியிலே எவ்வளவு பணம் கொடுத்திருக்கிறார்கள்? நான் 2,3 தினங்களுக்கு முன்னால்தான் கேள்விப்பட்டேன். ஏதோ, தரப்போவதாகச் சொல்லியிருக்கிறார்களே தவிர இன்னும் தரவில்லையென்று சொன்னார்கள். பிறகு இந்தத் தேயிலைப் பிரச்சினை குறித்து இந்த மாமன்றத்தில் விவாதிக்க வேண்டுமென்ற பிரச்சினை வந்தபோது அன்றைக்கு Adjournment Motion-ஐ allow செய்து, எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களும் அதன்மீது பேசினார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜூ அவர்கள் எழுந்து அந்தத் தேயிலைப் பிரச்சினையை அன்றைக்குப் பேசுவதற்கு முற்பட்டு, பேசிப் பேசிப் பார்த்து முடியாமல் அவரே வெளிநடப்புச் செய்கிற ஒரு நிலைமை உருவானது. ஆகவே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன். ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் அதுபற்றிய விளக்கங்களை அன்றைக்கே கொடுத்துவிட்டார்கள்.

**திரு. துரைமுருகன்:** இல்லை, இல்லை, அதைச் சொல்லவில்லை. அந்த மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு எம்.எல்.ஏ.கூட அதுபற்றிப் பேசுவதற்கு வாய்ப்பு இல்லை. ஆனால் தி.மு.க. ஆட்சியிலே அதைப்பற்றி விவாதிப்பதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசிடத்திலே வாதாடி 2 ரூபாய் வாங்கித் தரப்பட்டிருக்கிறது என்ற செய்தியை இந்த மன்றத்திற்குத் தெரிவிக்கிறேன்.



2002 ஏப்ரல் 18]

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்திலே தேயிலை 15 ரூபாய்க்கு விற்றது என்று எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். 18 ரூபாய், 19 ரூபாய்க்கு விற்றது. இன்னும் சொல்லப்போனால், ரேஷனிலே 20 ரூபாய்க்கு விற்றார்கள். அதற்குக் காரணம் அந்த நேரம் தேயிலை ஏற்றுமதி ஆயிற்று. ரஷ்யாவுக்கு ஏற்றுமதி ஆயிற்று. Rupee Debt Payment-ன்கீழே அது ஏற்றுமதி ஆயிற்று. விலை குறைவதற்குக் காரணம் அந்த ரஷ்ய ஏற்றுமதியில் Priority category-ல் இருந்து அந்தத் தேயிலையை எடுத்துவிட்டார்கள். வேறு பண்டங்கள் அதற்குப் பதிலாக அந்த Rupee Debt Payment-ல் ஏற்றுமதி ஆகின்றன. இப்போது சமீபத்திலே, ஏற்றுமதி, இறக்குமதிக் கொள்கையை மத்திய அரசு அறிவித்தது. அறிவித்தபோது எந்தெந்தப் பொருட்கள், எந்தெந்த பண்டங்கள் அந்த Rupee Debt Payment-ல் வருகின்றன என்று சொன்னதிலே தேயிலை இல்லை. அதை முழுவதும் நான் கேட்டுவிட்டேன். எந்தப் பத்திரிகையிலும் தேயிலை இருப்பதாக, இன்றைக்கு முன்னுரிமை உண்டு என்று வரவில்லை. இன்றைக்கு விலை 4 ரூபாய்தான், 5 ரூபாய்தான். அவர்கள் காலத்திலே 5 ரூபாய்க்குத்தான் விற்றது, 4 ரூபாய்க்குத்தான் விற்றது. நானே போராடியிருக்கிறேன். ஆக அதேதான் விலை. ஆனால் மத்திய அரசாங்கம் அந்த 2 ரூபாய் கொடுத்ததை நிறுத்திவிட்டது. அதற்கு என்ன காரணம்? மத்திய அரசாங்கத்தோடு எல்லோரும் சேர்ந்துதான் போராடினோம். விவசாயிகளுடைய வயிற்றிலே அடிக்கிறார்கள். அதுதான் உண்மை. நீலகிரி மாவட்ட விவசாயிகளுக்கு இன்றையதினம் 4 ரூபாய், 4¼, 5 ரூபாய்தான் கிடைக்கிறது என்று சொன்னால், அதற்குக் காரணம் மத்திய அரசாங்கம் தேயிலை ஏற்றுமதி செய்ய முனைப்பு காட்டவில்லை என்பதுதான் உண்மை.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொல்ல வந்தேன். அந்தப் பொறுப்பை வகிக்கிறவர் முரசொலி மாறன், வர்த்தக அமைச்சர். அவர் நினைத்திருந்தால், அதைச் சரியாகப் பண்ணியிருக்கலாம், அவருடைய மாமன்தான் இங்கே முதலமைச்சராக இருந்தார். இரண்டு பேரும் சேர்ந்து ஊட்டி விவசாயிகளை நடுத்தெருவிலே விட்டுவிட்டார்களே என்பதைத்தான் நான் சொல்ல வந்தேன். (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 1-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) புகழேந்தி, (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) அவர்களுக்குள் இருக்கிற உறவைத்தானே சொன்னேன். அதிலே ஒன்றும் தப்பு இல்லையே? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** ஆனால் எங்களுடைய தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆட்சியிலே உட்கார்ந்த உடனேயே அந்த ஊட்டி விவசாயிகளுடைய துயரைத் துடைக்கிற அளவிற்கு (குறுக்கீடுகள்) இன்கோசர்வ் மூலமாக விற்பனை ஆகிற..... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை மரபை மீறிய சொல் ஒன்றும் அல்ல. (குறுக்கீடுகள்) அவை மரபை மீறிய சொல் ஒன்றும் அல்ல.

**திரு. இ. புகழேந்தி:** தவறான வார்த்தை, கொச்சையான வார்த்தையை அவர் பயன்படுத்தியிருக்கிறார். அவருடைய மாமன் என்று சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** உற்பத்தி ஆகின்ற அந்தத் தேயிலைக்கு, ஊட்டி தேயிலை என்று பெயரினைக் சூட்டி, அந்த ஊட்டி தேயிலையை அழகான பாக்கெட்டுகளாக மாற்றி..... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** அந்த ஊட்டி தேயிலையை....

**திரு. துரைமுருகன்:** என்ன கேட்கிறார்கள் என்று சொன்னால் மத்தியிலே மாறன் அமைச்சராக இருக்கிறார். இங்கே கலைஞர் இருந்தார் என்று சொல்வதிலே ஒன்றும் இல்லை. ஏதோ ஒரு ஏளனத்தைப் போல மாமன், மச்சான் என்று சொல்லியிருப்பதை ஒரு sarcastic-ஆகச் சொல்கிறாரே என்றுதான் மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்கிறார்கள். அந்த அவைக் குறிப்பிலிருந்து எடுத்து விட்டுப் போங்களேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது ஒன்றும் அவை மரபை மீறிய சொல் அல்ல. மாமன்.........

**திரு. துரைமுருகன்:** இல்லை, அப்படிச் சொன்னால், நான் விட்டுவிட்டுப் போகிறேன். எங்களுக்கு ஒன்றும் இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாமன் என்பது அவை மரபை மீறிய சொல் அல்ல.

**திரு. துரைமுருகன்:** அதுமட்டுமல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் சொல்வது, அவர் அங்கே அமைச்சராக இருக்கிறார். அவருடைய மாமாதான் இங்கே முதலமைச்சராக இருக்கிறார் என்கிறார்.

**திரு. துரைமுருகன்:** அது அல்ல இங்கே பிரச்சினை. மாமன், மச்சான் பிரச்சினை அல்ல இந்தப் பிரச்சினை. மத்தியில் இருக்கிற ஆட்சி செய்யவில்லை என்று சொல்வதற்கு, மாண்புமிகு அமைச்சருக்கு உரிமை உண்டு. அதிலே நான் குறுக்கிடவில்லை. அது அவர் உரிமை. அதேபோன்று, நாங்கள் என்ன செய்தோம் என்று சொல்வதற்கு எங்களுக்கும் உரிமை உண்டு. சொல்கிறோம். அதுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது ஒன்றும்.... (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** இங்கே தேயிலை பயிரிடுகின்றவர்களுக்கு நீங்கள் அதிகமாகச் செய்தால் அதை வரவேற்பதற்கு நானும் கடமைப் பட்டிருக்கிறேன். ஆனால் அதை விட்டுவிட்டு, ஏதோ போகிற போக்கிலே மாமன், மச்சான் உறவு என்றால், திருப்பி அப்படிச் சொன்னால், தாங்குகிற சக்தி வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போகிற போக்கிலே எல்லாம் இல்லை.

**திரு. துரைமுருகன்:** அது அல்ல. நான் சபாநாயகரைக் கேட்கிறேன். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன் உட்காருங்கள். அதாவது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொல்வது, அதாவது உண்மையான ஓர் உறவு முறையைத்தான் அவர் குறிப்பிட்டுச் சொல்கிறார். அதிலே ஒன்றும் தவறு இல்லை. முரசொலி மாறனுக்கு கலைஞர் என்ன அண்ணனா? (மேசையைத் தட்டும் ஒலி) மாமாதானே?

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** அதைத்தானே சொல்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முறையைத்தானே குறிப்பிட்டுச் சொல்கிறார். அதிலே ஒன்றும் தவறு இல்லை.

**டாக்டர் க. பொன்முடி:** சபாநாயகர் அவர்களே, இது ரொம்பத் தவறு,

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) துரைமுருகன், இதிலே ஒன்றும் ஆத்திரப்பட வேண்டியதில்லை. (குறுக்கீடுகள்) மாமன் என்பது அவை மரபை மீறிய சொல் அல்ல. துரைமுருகன் அவர்களே, அவைக் குறிப்பிலே இடம் பெறாத சொற்கள் என்று சில சொற்களே இருக்கின்றன. (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** சபாநாயகர் அவர்களிடத்திலேயிருந்து நாங்கள் இதை எதிர்பார்க்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அதைச் சொல்லவில்லை.

**திரு. துரைமுருகன்:** என்ன என்று கேட்டால், கிண்டலாக....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வது, உண்மையான உறவு முறையைத்தான் அவர் குறிப்பிட்டுச் சொல்கிறார். (குறுக்கீடு) நானும் கிண்டலாகச் சொல்லவில்லை. துரைமுருகன் அவர்களே, நான் கிண்டலுக்காகவோ, கேலிக்காகவோ, சொல்லவில்லை. அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவது, ஓர் உண்மையான உறவு முறையைச் சுட்டிக்காட்டிச் சொல்கிறார். அப்போது அவர் அங்கே அமைச்சராக இருக்கிறார். அவருடைய மாமாதானே இங்கே முதலமைச்சராக இருந்தார் என்கின்ற வகையிலே அவர் குறிப்பிட்டுச் சொல்கிறாரே தவிர, இது கிண்டலுக்காகவோ, கேலிக்காகவோ சொல்லப்படவில்லை. (குறுக்கீடுகள்) இல்லை, துரைமுருகன், உட்காருங்கள். துரைமுருகன் அவர்களே, நான் கேட்பது, மாமன் என்பது அவை மரபை மீறிய சொல்லா? அவைக் குறிப்பிலே ஏறக்கூடாத சொல்லா? தாங்கள் விளக்கம் அளிக்க வேண்டும் என்று நான் உங்களைக் கேட்கிறேன். இப்போது.

**திரு. துரைமுருகன்:** அதுதான். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன ஒரு கருத்து சரியில்லை என்று சொல்லி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடத்திலே நாங்கள் முறையிட்டோம். ஆனால் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டக்கூத்தன் பாட்டிற்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்பதைப் போல நீங்களும் உறவு முறையைச் சொல்லி, அதைக் கேலி செய்வதை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேலியாகச் சொல்லவில்லை.



**திரு. துரைமுருகன்:** No. நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. சபாநாயகர் அவர்கள் சொல்வதைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன் அவர்களே, கொஞ்சம் உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) துரைமுருகன் அவர்களே, கொஞ்சம் உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இலட்சுமணன், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. இலட்சுமணன், சொல்லுங்கள். திரு. இலட்சுமணன் அவர்கள் பேசுவார்கள், சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. இலட்சுமணன் சொல்லுங்கள்.

பிற்பகல் 1-40

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தேயிலை விவசாயிகள், சிறு விவசாயிகள், பச்சைத் தேயிலை விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டபோது மைய அரசு, வாஜ்பாய் அரசு அந்த விவசாயிகளைக் காப்பாற்றுவதற்காக கிலோ ஒன்றுக்கு இரண்டு ரூபாய் மானியம் கொடுத்தார்கள் என்பது உண்மை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இலட்சுமணன் மைய அரசுக்காக வாதிடுகிறார்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு தேயிலை விவசாயிகளுக்கு இரண்டு ரூபாய் மானியம் கொடுத்து வந்தது. பிறகு மத்திய அரசு அதை நிறுத்திவிட்டது என்பதுதான் உண்மை. அதன் பிறகு நான் மீண்டும் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது, கடந்த ஆண்டு நான் முதன்முதலாக பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்தபோது, தேயிலை விவசாயிகளுக்குக் கொடுத்துக் கொண்டுவந்த அந்த நிறுத்தப்பட்ட இரண்டு ரூபாய் சப்சிடியை மீண்டும் வழங்க வேண்டுமென்று திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். இன்றுவரை மத்திய அரசு மீண்டும் அதை வழங்கவில்லை என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல 19 ரூபாய்க்கு தேயிலை விற்றதற்குக் காரணம் முன்னுரிமை இருந்தது. ரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்வதிலே தேயிலைக்கு முன்னுரிமை கொடுத்து, ரூபாய்க் கணக்கில் அவற்றை வரவு வைத்துக் கொள்வதற்கு ஏற்பாடு செய்த காரணத்தால்தான். ஏற்றுமதி ஆயிற்று, விலையும் கிடைத்தது. அந்த முன்னுரிமையை மாற்றி அமைத்தது, இந்த பி.ஜே.பி. அரசாங்கம், வாஜ்பாய் அரசாங்கம்தான் மாற்றி அமைத்தது. முன்னுரிமை கொடுத்து ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஏற்றுமதி செய்தது. அதை மாற்றி அமைத்து, பி.ஜே.பி. அரசாங்கம் அந்த முன்னுரிமையை இரத்து செய்த காரணத்தால்தான் விலை குறைந்து 5 ரூபாய்க்கு, 4 ரூபாய்க்கு வந்த பிறகு, இப்போது புதிய ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கையிலேகூட, மத்திய அரசாங்கம் கொஞ்சம்கூட கரிசனம் காட்டி, தேயிலையை ரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்ய ஏற்பாடு செய்யாததோடு, அந்த இரண்டு ரூபாய் மானியத்தையும் நிறுத்திவிட்டது. அதனால்தான் இன்றையதினம் விவசாயிகள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகி இருக்கிறார்கள். ஒருவேளை மத்திய அரசாங்கம் அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று நினைத் தால் மீண்டும் மானியம் கொடுக்கட்டும். மானியம் கொடுப்பதோடு மட்டுமல்ல, ரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கு ஏற்பாடு செய்யட்டும். இரண்டு, அவர்கள் பாதுகாப்புத் துறைக்கு முழுமையாக நீலகிரி தேயிலையை வாங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேயிலை விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்காமல் இருப்பதற்கு மைய அரசு வேறு ஒரு தவறையும் தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறது. குறிப்பாக, தமிழகத்தைப் பொறுத்தவரையில் குன்னூரிலே தேயிலை கொள்முதல் செய்வதற்கான ஒரு கழகமும், அதேபோல கோயம்புத்தூரிலே ஓர் அமைப்பும் இருக்கின்றன. அந்த இரண்டு அமைப்புகளும் Tea Board-லே மெம்பர்களாக இருக்கின்றன. தேயிலையை ஏலத்தில் விடுகிறபோது, அந்தத் தேயிலையை ஏலத்தில் விடுகிற அந்தக் கழகங்கள், அங்கு தேயிலை உற்பத்தி செய்கின்ற விவசாயிகளை உறுப்பினர்களாக அதில் சேர்த்துக் கொள்ளவில்லை. Traders are members, brokers are members but the farming community are not members. மைய அரசினுடைய கட்டுப்பாட்டில் இருக்கிற Tea Board ஏலம் விடுகிற அந்த நிலையத்திலே உழவர்களை மெம்பர்களாக அதிலே இடம்பெற வழி வகுக்காத காரணத்தால் Syndicate form செய்து அந்த



டிரேடர்களும், புரோக்கர்களும் ஒன்றாகச் சேர்ந்துகொண்டு மிகக் குறைந்த விலைக்குத் தேயிலையை வாங்குகிற ஓர் அநியாயம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மைய அரசு இதுகுறித்து நடவடிக்கை எடுக்காத காரணத்தால்தான் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் தேயிலைத் தொழிலாளர்கள், தேயிலை விவசாயிகளுடைய நலனைக் காக்க வேண்டுமென்ற நோக்கோடு புதிதாக ஓர் அமைப்பை, புதிதாக ஓர் ஏல அமைப்பை தற்போது தமிழகத்தில் உருவாக்க இருக்கிறார்கள், கோவை பகுதியிலே, ஊட்டி பகுதியிலே. அதிலே பெரும்பாலும் விவசாயிகளை அங்கத்தினர்களாகக் கொண்டு, அரசு அதிகாரிகளையும் அங்கத்தினர்களாகக் கொண்டு, வரக்கூடிய அந்த ஏலக் கழகத்தின் மூலமாக உழவர்களுடைய நலன் காக்க, தேயிலை விவசாயிகளுடைய நலன் காக்க, நல்ல விலை கிடைக்க முதன் முறையாக புரட்சித் தலைவி அவர்கள்தான் அந்த நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதை அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் சொன்னேன். கடந்த ஆட்சியாளர்கள் அந்த ஊட்டி விவசாயிகளுடைய துயரைத் துடைக்க மறந்தார்கள். ஆனால் எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆட்சிக்கு வந்த உடனேயே அந்த ஊட்டி இன்கோசர்வ் மூலமாகத் தயாரிக்கப்படுகின்ற அந்த டீ-க்கு, ஊட்டி டீ என்று பெயரிட்டு அதை நியாய விலைக் கடைகளிலே 100 கிராம் பாக்கெட் ஒன்று 9 ரூபாய் என்று விற்கின்ற அந்தப் பணியின் மூலமாக மாதம் ஒன்றுக்கு 300 டன் அளவுக்கு விற்பனை செய்து, அவர்களுடைய துயரைத் துடைக்கிற முயற்சிகளை மேற்கொள்ள புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டு அதை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி அமைந்த உடனே கூட்டுறவு பட்டயப் பயிற்சிக்கு—இதற்கு முன்னாலே இருந்த ஆட்சியாளர்கள் செய்த அலங்கோலங்கள்பற்றி உங்கள் அத்தனை பேருக்கும் தெரியும். மாணவர்கள் தங்களுக்கு இடம் கிடைக்க வேண்டுமென்பதற்காக எப்படியெல்லாம் அல்லல்பட்டார்கள் என்பது தெரியும். ஆனால் அப்படிப்பட்ட துயரம் மாணவ நண்பர்களுக்கு வரக்கூடாது என்பதற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி அமைந்த உடனேயே பட்டயப் பயிற்சிக்கு—விண்ணப்பித்திருந்த

தகுதியுடைய 13,838 மாணவர்களையும் 19 பயிற்சிப் பள்ளிகளிலே சேர்த்து, அவர்கள் எந்தவிதமான இடையூறும் இன்றி, யாரிடத்திலேயும் recommendation-க்கு அலையாத ஒரு சூழ்நிலையை மாணவ நண்பர்களுக்கு இந்தத் துறையின் மூலமாக ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள் என்பதனையும், 10 மாத காலத்திற்குள்தான் இந்தக் காரியம் நடந்திருக்கிறது என்பதனையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 1-45

அதேபோல இங்கே இருக்கிற மாமன்ற உறுப்பினர்களெல்லாம் பேசும்போது பல குறைகளைச் சொன்னார்கள். அப்படிச் சொல்கிறபோது பெரிய குறையாகச் சொன்னது, கூட்டுறவுச் சங்கங்களிலே இருக்கிற செயலாளர்கள் செய்கிற அத்தனை பணிகளிலும் முறையான நிருவாகம் அங்கே நடத்தப்படாமல் இருப்பதற்கான பணியைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற விவரத்தைச் சொன்னார்கள். அதை உணர்ந்த காரணத்தினாலேதான், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, இந்த ஆண்டு அவர்களுக்குத் தனியாக, நிதியை எப்படிப் பயன்படுத்த வேண்டும், எந்த அளவிற்கு மக்களிடத்திலே பழக வேண்டுமென்பதைப் பற்றியெல்லாம் பயிற்சி கொடுப்பதற்கு 4,595 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் செயலாளர்களையும் அழைத்து, அவர்களுக்கு உரிய பயிற்சியை இந்த ஆண்டு முழுவதும் வழங்கவிருக்கிறது என்பதனையும் இந்த நேரத்திலே நான் உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல, மாநிலத்திலே செயல்பட்டு வருகிற 119 விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களில் 42 சங்கங்கள் மட்டுமே இலாபத்திலே இயங்கி வந்தன. ஆனால், இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு முறையான செயல்பாட்டினைக் கொண்டுவந்த காரணத்தினாலே அந்த 42 சங்கங்களிலேயிருந்து—அந்த 119 சங்கங்களிலே—83 சங்கங்கள் இலாபத்தை ஈட்டக்கூடிய அளவுக்கு இன்றைக்கு சூழ்நிலை உருவாகி அதன் மூலமாக ரூ.21.37 கோடி அளவுக்கு இலாபத்தை இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் ஈட்டியிருக்கின்றன என்பதனையும் (மேசையைத் தட்டும் ஒலி), இது புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, நலிவுற்றிருக்கிற சங்கங்களெல்லாம் உயிர்பெற்று வருகின்றன என்பதற்கு இந்தச் சங்கங்கள் ஒரு சாட்சியாக நின்று கொண்டிருக்கின்றன என்பதனையும் உங்களுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கூட்டுறவுத் துறையைப்போல, உணவுத் துறையிலேயும் மிகப் பெரிய மாற்றத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க



நிகழ்ச்சிகளையெல்லாம் செய்து காட்டியிருக்கிறார்கள். அதிலே முதல் காரியமாகத்தான், யார், யார் எல்லாமோ எதிர்பார்த்தார்கள் அரிசி விலை அங்கே ஏறப் போகிறது, இங்கே ஏறப் போகிறது என்று. ஆனால் என்னுடைய தாய் தெளிவாக நாட்டு மக்களுக்கு இந்த மாமன்றத்திலேயே சொன்னார்கள், 3 ரூபாய் 50 காசுகளுக்கு மேலே ஒரு பைசாகூட, ஏழை மக்கள் வாங்கிப் பயன்படுத்துகிற அந்த ரேஷன் அரிசிக்கு ஏற்றமாட்டேன் என்று தெளிவான ஒரு கொள்கையை, இந்த மாமன்றத்திலே, நாட்டு மக்களுடைய மத்தியிலே அரிசி வாங்கிப் பயன்படுத்துகிற மக்களுடைய வயிற்றிலே பாலை வார்க்கிற மாதிரி ஓர் அற்புதமான, மகிழ்ச்சியான செய்தியை இந்த நாட்டு மக்களுக்கு அளித்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தெளிவாக எங்களுக்குக் கொடுத்திருக்கிற கட்டளையே, ரேஷன் அரிசி என்று சொன்னால், அது ரேஷன் அரிசி என்று சொல்லக்கூடிய புறக்கணிக்கப்படுகிற அரிசியாக இருக்கக்கூடாது. கறுப்பு அரிசியாக இருக்கக்கூடாது. அது சாப்பிடுவதற்கு உகந்ததாக இருக்க வேண்டும். அதுமட்டுமல்ல, வெள்ளை வெளேரென்று, பார்ப்பதற்குத் தகுதியான அரிசியை வழங்க வேண்டும், ஒரு தரமான அரிசியை வழங்க வேண்டுமென்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டதனுடைய விளைவாக, நாங்கள் எடுத்துள்ள நடவடிக்கைகள் காரணமாக, இன்றைக்கு ரேஷன் கடைகளிலே தரமான அரிசி வழங்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. 27 ஆயிரத்து 886 நியாய விலைக் கடைகளிலே தரமான அரிசியை வழங்குவதற்கு இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன் மூலமாக, இந்த ஆட்சி அமைந்த நேரத்திலேயே இந்த 27 ஆயிரம் கடைகளிலே கொள்முதல், அதாவது consume செய்யப்பட்ட அரிசியின் அளவு, நுகர்வு செய்யப்பட்ட அரிசியின் அளவு, Off-take-ன் அளவு 1.68 இலட்சம் டன் மட்டுமே நடந்தது. ஆனால், அது படிப்படியாக உயர்ந்து 2.5 இலட்சம் டன் அளவாக இன்றைக்கு உயர்ந்திருக்கிறது என்று சொன்னால், அது மக்களின் வாங்குகிற சக்தியைப் பொறுத்தது மட்டுமல்ல, தற்போது விருப்பப்பட்டு மக்கள் ரேஷன் கடைகளிலே அரிசி வாங்கியதனுடைய விளைவாக இந்த Off-take உயர்ந்து 2.5 இலட்சம் டன்னாக இப்போது உயர்ந்திருக்கிறது என்பதனையும், இது இந்த 10 மாத காலத்திலே புரட்சித் தலைவி அவர்களுடைய திறமையான அறிவுரையாலே இந்தத் துறையிலே நிகழ்ந்திருக்கிறது என்பதனையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல தரமான அரிசியை வழங்குகிற அதே நேரத்திலே நியாயமான எடைகளிலே வழங்க வேண்டும். தவறுகள் அந்தக் கடைகளிலே நடக்கக்கூடாது என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டதனுடைய விளைவாக அதிகாரிகளை அனுப்பி, கடுமையான சோதனைகளுக்கு உட்படுத்தியதனுடைய விளைவாக மொத்தம் இதுவரை இந்த மாநிலத்திலே 14-5-2001-லேயிருந்து இந்த ஆட்சி அமைக்கப்பட்ட அந்த நாளிலேயிருந்து 10-4-2002 வரை, இந்த மாதம் 10 ஆம் தேதி வரையில் மொத்தம் 4,263 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அதிலே தவறு செய்தவர்கள் என்று 814 நபர்கள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். பொது விநியோகத் திட்ட அரிசி, கைப்பற்றிய அந்த அரிசியினுடைய மதிப்பு மட்டும்—seizure என்கின்ற முறையிலே 1 கோடியே 9 இலட்சத்து 56 ஆயிரத்து 664 ரூபாய் அளவிற்கான அரிசியை கைப்பற்றி இருக்கிறோம். அதுமட்டுமல்ல. கைப்பற்றப்பட்ட வாகனங்கள்—கடத்தப்பட்ட 228 வாகனங்களைக் கைப்பற்றி நீதிமன்றங்களுக்கு அனுப்பியிருக்கிறோம். அதுமட்டுமல்ல. இதுபோன்றவர்கள் தவறு செய்யக்கூடாது என்பதற்காக தடுப்புக் காவல் சட்டத்தில் 37 பேரைக் கைது செய்து சிறைக் கூண்டிற்கு இந்த அரசு அனுப்பி, தக்க நடவடிக்கை எடுத்திருக்கிறது.

*பிற்பகல் 1-50*

அதுமட்டுமல்ல. நியாய விலைக் கடைகளிலே தவறு செய்தவர்கள் 41 பேர்மீது கிரிமினல் வழக்குகளையும் இந்த அரசு போட்டிருக்கிறது. நேர்மையான நிர்வாகத்தை நாட்டு மக்களுக்குக் கொடுத்திருக்கிறது என்பதைச் சொல்வதிலே நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

அதுமட்டுமல்ல. 25 ஆண்டு கால வரலாற்றை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாற்றிக் காட்டியிருக்கிறார்கள். லெவி என்கின்ற வகையிலே இந்த மாநிலத்திலே எவ்வளவு பெரிய கொடுமை இதற்கு முன்னாலே நடந்தது என்பது அதற்குண்டானவர்களுக்குத் தெரியும். அந்த லெவியிலே மத்திய அரசாங்கமும் மற்றவர்களும் நம்மை வற்புறுத்தி வந்தார்கள். ஒரே Food Zone-லே இந்த அரசும் வர வேண்டும் என்று கேட்டார்கள். ஆனால் அதை எதிர்க்கிற தைரியம், Check-post-களை remove செய்கிற தைரியம் எந்த அரசுக்கும் வந்தது இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிங்கநிகர் தலைவி அமர்ந்தவுடனேயே தேவையற்ற இந்த Check-post-களையெல்லாம் remove செய்து 100 சதவிகிதம் நீங்கள் லெவியைக் கொடுத்துத்தான் எடுத்துக் கொண்டு வெளியே போக வேண்டும் என்கின்ற சூழ்நிலையை மாற்றி,



எவ்வளவு அரிசியை வேண்டுமானாலும், எங்கு வேண்டுமானாலும் மாநிலத்திலே எடுத்துக் கொண்டு போகலாம், வெளி மாநிலத்திற்கும் எடுத்துக்கொண்டு போகலாம் என்ற நிலையை உருவாக்கியிருக்கிறார்கள்.

குறிப்பாக, டி.கே.எம். 9 என்ற அரிசியை எங்கே வேண்டுமானாலும் எடுத்துக்கொண்டு போகலாம், வெளி மாநிலத்திற்குக் கொண்டுபோகலாம் என்கின்ற உத்தரவினை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அளித்தார்கள். இதை எதற்காக அளித்தார்கள் என்று சொன்னால், விவசாயிகள், தாங்கள் உற்பத்தி செய்கிற அந்த நெல்லுக்கு மற்றவர்களிடத்திலே, மற்ற வியாபாரிகளிடத்திலே விற்று அதிக இலாபம் பெற வேண்டும் என்கிற நோக்கத்தில், லெவி என்கின்ற முறையிலே அரசாங்கம் மட்டும் கொள்முதல் செய்துகொண்டிருந்தால், அவர்களுக்கு சரியான உற்பத்திப் பணம் கிடைக்காது என்பதனால் இப்படிப்பட்ட தைரியம் மிகுந்த, யாரும் எண்ணித் துணியாத அந்தக் காரியத்தை விவசாயிகளுடைய நன்மைக்காகத்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த Check post-களை remove செய்து 100 சதவிகிதம் லெவியை நீக்கி விவசாயிகள் தாங்கள் வைத்திருக்கிற இருப்புகளை இரண்டு மடங்காக உயர்த்திக்கொள்ள அனுமதி கொடுத்து, இவ்வளவு நன்மைகளும் இந்த அரசு துணிவாக, விவசாயப் பெருமக்கள், வேளாண் பெருமக்கள் நன்மை பெற வேண்டும் என்பதற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த 11 மாத காலத்திலே செய்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல அரவைத் திறனை இன்றைக்குக் கூட்டியிருக்கிறார்கள். இதற்கு முன்னாலேயிருந்த அரவையாளர்கள் செய்த கொள்ளைகளையெல்லாம் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே கொள்ளையடித்தார்கள்? அரசினுடைய அரவையாளர்கள் எவ்வளவு கொண்டுபோய் எப்படி blend செய்து நெல்லை வாங்கிக் கொண்டுபோய் எப்படி blend செய்து வெளிமாநிலத்திற்கு அனுப்பி வைத்தார்கள் என்ற விவரங்களை எல்லாம் தெரிவித்தேன். —அதற்கொரு நீதி விசாரணைக்கு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிற காரணத்தினாலே அது நீதி விசாரணையிலே இருக்கிறது. அதற்குரிய தண்டனையாளர்கள் விரைவிலே தண்டனை பெறுகிற அளவிற்கு அம்மா அவர்களின் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும். ஆனால் இன்றைக்கு இந்த அரசு அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுத்ததன் விளைவாக மற்ற அரவையின் தரத்தையும் உயர்த்தியிருக்கிறது. 23 அரிசி அரவை நிறுவனங்களின் தரத்தை உயர்த்தி வரலாற்றிலே எப்போதும் இல்லாத அளவிற்கு இப்போது 18.67 இலட்சம் டன் அரிசியை இந்த ஓராண்டிலே மட்டும் அரவை செய்து இப்போது இறுதியாக

சம்பாவிலே நாம் கொள்முதல் செய்தோமே, அந்த நெல்லை நாம்
அரைக்கிற அளவிற்கு இன்றைக்கு வந்திருக்கிறோம் என்று சொன்னால்
அவற்றை உடனுக்குடன் இருப்பு வைக்காமல்—அதிகப்படியாக 3 மாதம்,
4 மாதம் என்று இருப்பு வைத்தால் ரேஷன் கடையிலே கொடுக்கிறபோது
தரம் இல்லாத அரிசியாக மாறிவிடும் என்கிற காரணத்தினாலே,
உடனுக்குடன்—அரைத்து 1 மாத காலத்திற்குள் ரேஷன் கடைகளுக்குக்
கொண்டுபோக வேண்டும் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள்
உத்தரவிட்டதன் விளைவாக நடப்பு சம்பா பருவத்திலே உற்பத்தி செய்த
நெல்லை அரைக்கிற அளவிற்கு இன்றைக்கு அரவைத் திறன் இந்த
அரசாலே உயர்த்தப்பட்டு இருக்கிறது. 10 மாத காலத்திற்குத் தேவையான
அரிசியை அம்மா அவர்கள் தமிழக மக்களுடைய நலன் கருதி தாராளமாக
உயர்த்தி இருக்கிறார்கள். அரிசியினுடைய நலன் பாதுகாக்கப்பட்டிருக்கிறது.
அதற்கும் மேலாக இன்றைக்கு ஒரு புரட்சிகரமான திட்டத்தை புரட்சித்
தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள்.

*பிற்பகல் 1-55*

அத்தனை மாமன்ற உறுப்பினர்களும் கேட்டீர்கள், போலி ரேஷன்
கார்டுகளை ஒழிப்பதற்கு என்ன திட்டம் என்று. அதையும்தான் புரட்சித்
தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு கூப்பன் மூலமாகக்
கொண்டுவந்திருக்கிறார். இந்தக் கூப்பன் திட்டத்தின் மூலமாக அம்மா
அவர்கள் கொண்டு வந்திருப்பது, யார் யார் எல்லாம் அரிசி வாங்குகிற
கார்டை வைத்திருக்கிறார்களோ அவர்கள் இப்போது இந்தத் திட்டத்தின்
மூலமாக ரேஷன் கடைகளுக்கு அருகிலே இருக்கிற திருமண மண்டபமோ,
இல்லை பள்ளிக்கூடமோ, இல்லை பொது இடங்களிலோ, தக்க
அதிகாரிகள் அந்த அட்டை வைத்திருக்கிற நபர்கள் வருகிறபோது
அவர்களிடத்திலே கையெழுத்து பெற்றுக் கொண்டு அந்த அட்டை உள்ள
நபர்களுக்கு மட்டும் கூப்பனை வழங்குவார்கள். அந்தக் கூப்பனிலே ஒரு
மாதத்திற்கு வேண்டிய அரிசியைப் பெற்றுக் கொள்வதற்கு, அரிசியை
ஒரு தடவையோ, இரு தடவைகளாகவோ பெற்றுக்கொள்கிற வசதிக்கு, 2
கூப்பனாகக்கூட ஒரு மாதத்திலே பெற்றுக்கொள்கிற அளவுக்கு, 20 கிலோ
என்று சொன்னால், ஒருவர் இரண்டு தடவைகளாக வாங்குவதற்குத்தான்
எனக்கு வசதி இருக்கிறது என்று சொன்னால், அவர் 10, 10 கிலோவாக
வாங்கிக் கொள்வதற்கும் கூப்பன் தயாரிக்கப்படுகிறது. கையெழுத்தைப்
பெற்று அந்தக் கூப்பன் புத்தகம் வழங்கப்படும். வழங்கப்படுகிற அந்த
ரேஷன் அட்டை உரிமையாளர், யார் அந்த அட்டையை
வைத்திருக்கிறாரோ, அவர் அந்த ரேஷன் கார்டையும், அந்தக்



கூப்பனையும் ரேஷன் கடையிலே காட்டினால்தான் அரிசி
கொடுக்கப்படும். அதன் மூலமாகத்தான் போலி கார்டுகளை, போலி
நபர்களை ஒழிக்க முடியும் என்பதை திடமாக புரட்சித் தலைவி அம்மா
அவர்கள் தெரிவித்து, அப்படிப்பட்ட பணியைச் சிறப்பாகச் செய்ய
வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதன் மூலமாக, கூப்பன்
மூலமாக, இருக்கிற போலி கார்டுகளையெல்லாம் ஒழிக்கிற அந்தப்
பணியில் இந்த அரசு விரைந்து செயல்படும்; அதிலே எந்தவிதமான
குழப்பமுமின்றி, மக்கள் பயன்பெறுகிற அளவிற்கு, நிச்சயமாக இந்த அரசு
செயல்படும். அம்மாவினுடைய இலட்சியமே நாம் கொடுக்கிற சலுகை,
அரசாங்கம் கொடுக்கிற சலுகை முறையாக வறியவர்களுக்கு,
ஏழைகளுக்குப் போய்ச் சேர வேண்டும்; இடையிலே இருக்கிற
இடைத்தரகர்கள் யாரும் அனுபவித்துவிடக்கூடாது என்பதற்காகத்தான்
இந்தத் திட்டத்தினை இப்போது உருவாக்கியிருக்கிறார்கள். ஆகவே,
தமிழகத்து மக்கள் அம்மாவினுடைய இந்த புரட்சிகரமான திட்டத்திற்கு
நல்ல ஆதரவு கொடுத்து, அரசாங்கத்திற்கு உறுதுணையாக இருப்பார்கள்
என்பதனை நான் நிச்சயம் நம்புகின்றேன்.

அதைப்போல அம்மா அவர்கள் விரிவாக, ஏற்கெனவே இந்த
அரசாங்கத்தினுடைய நெல் கொள்முதல் விஷயத்தை தெளிவாகச்
சொல்லியிருக்கிறார்கள். அதற்கு மேலும் நான் அதைச் சொல்ல வேண்டிய
அவசியம் இல்லை. இருந்தாலும் ஒரேயொரு புள்ளிவிவரத்தை மட்டும்
சொல்வது மாமன்ற உறுப்பினர்களுக்கு உதவியாக இருக்கும் என்கிற
காரணத்தினாலே அதை நான் சொல்கிறேன். இந்த நெல் கொள்முதலைப்
பொறுத்தவரையில் இந்த அரசாங்கம் தெளிவான கொள்கை
வைத்திருக்கிறது: அது என்ன கொள்கை என்று சொன்னால், தரமான
அரிசியை ரேஷன் கடைகளிலே விநியோகிக்க வேண்டும். அதேபோல
தரமான நெல்லைத்தான் கொள்முதல் செய்ய வேண்டும் என்பதிலே
அம்மா அவர்கள் மிகுந்த அக்கறையோடு இருக்கிறார்கள், ஆர்வத்தோடு
இருக்கிறார்கள். இந்த நெல் கொள்முதல் பற்றிச் சொன்னார்கள். இந்த
அரசாங்கம் விவசாயிகள் உற்பத்தி செய்கிற நெல்லையெல்லாம்
வாங்காமலேயே விட்டுவிட்டார்கள், நடுத் தெருவிலே கிடக்கிறது
என்றெல்லாம் சொன்னார்கள். உண்மை அதுவல்ல. நான் ஒரு
புள்ளிவிவரத்தைச் சொல்கிறேன். அதைப் பார்த்துக் கொள்ளுங்கள்.
1996-97, அது எங்களுடைய ஆட்சி அல்ல. திராவிட முன்னேற்றக்
கழகத்தினுடைய ஆட்சி. அப்போது சம்பா பருவத்திலே நடைபெற்ற
கொள்முதல் அளவு 9.77 இலட்சம் டன். 1997-98-லே 11.37 இலட்சம் டன்

அளவுக்குத்தான் கொள்முதல் நடந்திருக்கிறது. 1998-99-லே 10.50 இலட்சம் டன் அளவுக்குதான், 10-1/2 இலட்சம் டன்தான் கொள்முதல் நடந்திருக்கிறது. 1999-2000-லே 11.66 இலட்சம் டன்தான் கொள்முதல் நடந்திருக்கிறது. நாங்கள், இப்போது இந்த ஆண்டு 10-1/2 இலட்சம் டன் நெல் கொள்முதலைச் செய்திருக்கிறோம். இதிலே எங்கே நாங்கள் விவசாயிகள் உற்பத்தி செய்த நெல்லை கொள்முதல் செய்யாமல், வாங்காமல் விட்டுவிட்டோம்? எப்போதும் வழக்கமாக ஆகிற கொள்முதல்தான் இந்த வருடமும் நடந்திருக்கிறது. இடையிலே நடந்தது என்ன? ஓர் ஆண்டை நான் உங்களுக்குச் சொல்லாமல் விட்டிருக்கிறேன். அந்த ஆண்டு 2000-2001. திராவிட முன்னேற்றக் கழகம், கடைசியாக விட்டுப்போன ஆண்டு. அந்த ஆண்டிலே மட்டும் நெல் கொள்முதல் எவ்வளவு நடந்திருக்கிறது தெரியுமா? 19.74 இலட்சம் டன் நெல் கொள்முதல் ஆகியிருக்கிறது. எந்த வருடத்திலும் இல்லாத அளவிற்கு அந்த வருடம் எப்படிக் கொள்முதல் ஆனது? ஆந்திராவிலேயிருந்த நெல் தமிழ்நாடு நெல் கொள்முதல் நிலையங்களுக்கு வந்தது. வேறு மாநிலங்களிலிருந்தும் வந்தது. வியாபாரிகள் கொண்டுவந்த நெல்லைத்தான் தி.மு.க. வாங்கியதால், அதனாலே தரமில்லாத நெல் கொண்டு வரப்பட்டது. தரமில்லாத நெல் கொண்டுவரப்பட்டதனாலே இந்த அரசாங்கத்திற்கு எவ்வளவு நஷ்டம் தெரியுமா? ஒரு இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்தால், 60 கோடி ரூபாய் செலவாகிறது. இவர்கள் கொள்முதல் செய்த 19 இலட்சம் டன்னிலே 12 இலட்சம் டன் நியாயமாக வைத்துக் கொள்வோம். 7 இலட்சம் டன் அநியாயமாக வியாபாரிகளிடத்திலேயும் அவர்களுக்கு வேண்டியவர்களிடத்திலேயும், யார் யார் எல்லாம் அவர்களைப் பார்த்தார்களோ, அவர்களிடத்திலேயிருந்து நெல்லை வாங்கியதனுடைய விளைவாக—7 இலட்சம் டன் வாங்கியிருக்கிறார்கள் என்று சொன்னால், 60 x 7 = 420 கோடி ரூபாயை, நாட்டு மக்களுடைய பணத்தை, மக்களுடைய வரிப் பணத்தை வீணாக்கியிருக்கிறார்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) பகிரங்கமாக நான் குற்றம் சாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 2-00*

நாட்டு மக்களுக்கும் விவசாயிகளுக்கும் உதவி செய்யாமல், விவசாயிகளினுடைய போர்வையிலே அவர்கள் வியாபாரிகளுக்கு டி.பி.சி.-களைத் திறந்துவிட்டதனுடைய விளைவாக மக்களுடைய வரிப் பணம் 420 கோடி ரூபாய் சூறையாடப்பட்டிருக்கிறது, கொள்ளையடிக்கப் பட்டிருக்கிறது. நாட்டு மக்கள் இதை நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.



ஆகவே இந்த அரசாங்கம், தெளிவான கொள்கையை வகுத்து விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதிலே அம்மாவைவிட வேறு எந்த முதலமைச்சரும் இந்திய துணைக் கண்டத்திலே இல்லை. அதனாலே, வர வேண்டிய அளவிற்கு, நியாயமாக விவசாயிகளிடத்திலேயிருந்து பெற வேண்டிய அளவிற்கு 10½ இலட்சம் டன் கொள்முதலை இந்த அரசு செய்திருக்கிறது என்பதனை இந்த நேரத்திலே நான் அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். விவசாயிகளுக்கு எங்களை விட்டால் யார் நண்பர்கள். நாங்கள்தான் விவசாயிகளின் நண்பர்கள் என்று சொல்கிறார்கள். விவசாயிகளுக்கு இப்படிப்பட்ட துரோகத்தைச் செய்துவிட்டு, விவசாயிகளினுடைய நண்பன் என்று சொல்கிறார்கள். வரலாற்றைப் புரட்டிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1972-லே, இந்த மாநிலத்திலே நடந்தது என்ன? அன்றைக்கு முதலமைச்சராக இருந்த கருணாநிதி, விவசாயிகளுக்கு எவ்வளவு நன்மைகளைச் செய்தார்? ஒரு பைசா மின் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்று கேட்டதற்காக எத்தனை விவசாயிகளைச் சுட்டுக் கொன்றார்? கோவை மாவட்டத்திலே பெருமாநல்லூரிலே எத்தனை பேரைச் சுட்டுக் கொன்றார்? சேலம் மாவட்டத்திலே பெத்தநாயக்கன்பாளையத்திலே எத்தனை உயிர்கள் பலி போயின? விவசாயிகளினுடைய நண்பன் என்று சொல்வதற்கு இவர்களுக்கு என்ன தகுதி இருக்கிறது என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு பைசாவைத்தான் குறைக்கச் சொல்லிக் கேட்டார்கள். அதற்கு எத்தனை உயிர்களை புலி வாங்கினார்கள்? கொக்கரித்தார்கள். விவசாயிகளின் போராட்டத்தை இரும்புக்கரம் கொண்டு அடக்குவேன் என்று சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு எங்களுடைய தாய், இந்திய துணைக் கண்டத்திலே எந்த மாநில முதலமைச்சரும் செய்ய முடியாத காரியத்தை, விவசாயிகளுக்காக இவ்வளவு காரியங்களைச் செய்திருக்கிறார்கள். இன்னும் சொல்வேன். கம்யூனிஸ்ட் நண்பர்களே அன்றைக்கு நீங்கள் போராடினீர்கள், 1970-லே. நிலம்-நீச்சுப் போராட்டம் என்று சொன்னீர்கள். தரிசாக உள்ள நிலங்களையெல்லாம் ஏழைகளுக்கும் ஏழை விவசாயிகளுக்கும் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று தரிசு நிலப் போராட்டத்தை நீங்கள் நடத்தினீர்கள். நிலம்-நீச்சுப் போராட்டம் என்று நடத்தினீர்கள். பல்லாயிரக்கணக்கான விவசாயிகளை சிறைக் கொட்டில்களிலே அடைத்து, இரும்புக்கரம் கொண்டு அந்தப் போராட்டத்தை அடக்கியவர்

யார்? விவசாயிகளின் நண்பன், முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி என்பதனை உங்களுக்கு நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் எங்களுடைய தாய் அம்மா அவர்கள் முதலமைச்சராக உட்கார்ந்த உடனேயே அப்படிப்பட்ட கோரிக்கையை ஏற்று, இன்றைக்குத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைக் கொண்டு வந்து, அந்த விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, அவர்கள் நலம் பெறுவதற்காக பல நல்ல பணிகளைச் செய்திருக்கிறார்கள் என்பதனையும், உண்மையிலேயே இந்திய துணைக் கண்டத்திலே அம்மா அவர்களுடைய இப்படிப்பட்ட ஆட்சியைத் தவிர விவசாயிகளுக்குப் பாதுகாப்பான ஆட்சி வேறு எந்த ஆட்சியும் இல்லை என்பதனை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, இதற்கு மேலாக இந்தத் துறை மேலும் சிறப்பிப்பதற்கு சில அறிவிப்புகளை, அம்மா அவர்கள் செய்ய வேண்டும் என்று எனக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த உத்தரவின் அடிப்படையிலே நீங்கள் வைத்த கோரிக்கைகளையெல்லாம் அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு போய், அவர் எனக்கு ஏற்கெனவே உத்தரவாகக் கொடுத்து, இன்றைக்கு அறிவிக்கச் சொல்லியிருக்கிறார்கள்.

புதிய அறிவிப்புகளாக இன்றைக்கு அறிவிக்கச் சொல்லியிருப்பதுதான் விவசாயிகளின் குறுகிய கால கடன்களுக்கு வட்டிவிகிதம் குறைப்பு. ஏற்கெனவே விவசாயிகளுக்குக் கொடுத்த கடன்களிலே, சிறு விவசாயிகளுக்குக் கொடுத்த கடன்களிலே 25,000/- ரூபாய் வரை இருப்பதற்கு 12% வரை வட்டி வசூலிக்கப்படுகிறது. அது அப்படியே தொடர்ந்து நீடிக்கும். அதேபோல 25,000/- ரூபாயிலிருந்து 50,000/- ரூபாய் வரை வாங்குகிற விவசாயிகளுக்கு தற்போது 15% வட்டி வசூலிக்கப்படுகிறது. அதை மாற்றி புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த 15% வட்டியிலிருந்து 2% குறைத்து 13%ஆக வாங்குவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு மேலாக 50,000/-க்கு மேலே கடன் பெறுகிற அந்த விவசாயிகளுக்கு 16% வட்டி இப்பொழுது வசூலிக்கப்படுகிறது. அதிலேயும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2% குறைத்து 14%ஆக வாங்க வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல மகளிர் விவசாயிகளுக்கு விவசாயச் சங்கங்களிலே Prior-ity Sector Loan என்று கொடுக்கிற Loan-க்கு, மற்ற எல்லா Loan-களுக்கும் கொடுக்கிற வட்டி 12% என்று சொன்னால், மகளிர் விவசாயிகள் வந்து கடனைப் பெறுவார்கள் என்று சொன்னால், அவர்களுக்கு 1% குறைக்கச் சொல்லி உத்தரவிட்டிருக்கிறார். 12% என்பது 11% ஆகும், 13% என்பது 12%



ஆகும், 14% என்பது 13% ஆக தாய்மார்களுக்காக, பெண்களுக்காக 1%-ஐக் குறைத்து வாங்க வேண்டும் என்று அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் பெருமையோடு சொன்னார். சிறு விவசாயிகளுக்குக் கடன் திட்டத்தை மகளிருக்காக நாங்கள் கொண்டுவந்தோம் என்று. நீங்கள் கொண்டுவந்த திட்டத்தாலே யாரும் பலன் அடையவில்லை. ஆனால், கடந்த ஆண்டிலே நாங்கள் வந்து அதை மாற்றி அமைத்ததன் விளைவாக இன்றைக்கு மகளிர் பெருமளவிலே அதிக பலன் பெற்று, புரட்சித் தலைவியினுடைய அரசிலே பூ விற்கிறவர்கள், டீக்கடை வைத்திருப்பவர்கள், பழம் விற்கிறவர் என்று இப்போது மகளிர் அத்தனை பேரும் பயன் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். 18% என்று இருந்த அந்த வட்டியை கடந்த ஆண்டே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 15% ஆகக் குறைத்து ஆணையிட்டார்கள். அதனுடைய விளைவால்தான் இவ்வளவு முன்னேற்றம் இன்றைக்கு மகளிருக்கு ஏற்பட்டிருக்கிறது. அதிலேயும்கூட இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு மாறுதலைச் செய்யச் சொல்லி உத்தரவிட்டிருக்கிறார்கள். 15% வாங்குகிற அந்த Micro Loan-க்கு இனிமேல் 12% வாங்க வேண்டுமென்று அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-05

அதுமட்டுமல்ல. புரட்சிகரமான திட்டம்; இந்தியாவிலே வேறு எங்கேயும் இல்லாத கடன் வழங்குகிற ஒரு புதிய திட்டம். தாய்மார்கள், பேறுகாலத்திலே—சில ஆண்கள் அவர்களைச் சரியாக கவனிக்காத சூழ்நிலை இருக்கிற காரணத்தாலே-பேறுகாலத்திலே அவர்கள் சரியான நேரத்திலே மருத்துவமனை செல்வதற்கோ, மருத்துவ வசதி பெறுவதற்கோ வாய்ப்பில்லாத நிலையில், அந்தத் தாய்மார்களைப் பாதுகாக்க வேண்டுமென்பதற்காக, இப்போது பேறுகாலக் கடனை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கச் சொல்லி உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 2,000 ரூபாயை அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த 2,000 ரூபாயும், மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாகக் கொண்டுவருகிற அந்தப் பெண்களுக்கு, எட்டாவது மாதக் காலத்திலேயும் தவணை முறையில் வாங்கிக்கொள்ளலாம் அல்லது பத்தாவது மாதத்திலேயும் ஒரே முறையாக வாங்கிக்கொள்ளலாம் என்கின்ற அளவிற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மகப்பேறு கடனை இந்திய துணைக் கண்டத்திலேயே அறிவிக்கின்ற முதல் மாநிலமாக நம்முடைய மாநிலத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

அதேபோல, பொது மக்களுடைய வசதிக்காக சென்னை, காஞ்சிபுரம், மதுரை மற்றும் திருச்சி மாவட்டங்களிலேயிருக்கிற மத்தியக் கூட்டுறவு வங்கிகளிலே 10 புதிய வங்கிகளைத் திறக்க ஆணையிட்டிருக்கிறார்கள். அதேபோல Nationalised Bank-லே இருப்பதைப்போல, தானியங்கி பணம் வழங்கும் இயந்திரங்கள், automatic-க்காக பணம் கிடைக்கிற அந்த வசதியை முதலில் 5 கிளைகளிலே, சென்னையிலே உருவாக்குவதற்கு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

இங்கே பல பேர் கேட்டார்கள். தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளிலே விவசாயத்திற்கு மட்டுமே கடன் கொடுக்கிறார்கள். மற்றவற்றிற்காக நீங்கள் கடன் கொடுப்பதில்லை, கிராமங்களிலே அதனாலே பாதிப்பு இருக்கிறது என்று சொன்னார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மருந்துக்கடை வைக்க, மளிகைக் கடை வைக்க, சமூகக் கூடங்கள் நிறுவிட, வணிகக் கூடங்கள் நடத்துவதற்கும், வீடு கட்டுவதற்கும், மத்தியக் கூட்டுறவு வங்கிகளிலே கடன் கொடுப்பதற்கும் இன்றைக்கு அம்மா அவர்கள் ஆதரவு கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல. இப்போது நகைக் கடன்களுக்கு ஒவ்வொரு வங்கியிலும் வெவ்வேறு விதமாக வட்டி வசூலிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். ஆனால் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு ஓர் அறிவுரையை வழங்கியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் இருக்கிற அத்தனை கூட்டுறவு வங்கிகளிலும் ஒரே அளவிலே, 14 சதவிகிதத்திலேயே நகைக் கடன்களுக்கு வட்டி வசூலிக்கப்பட வேண்டும் என்ற சூழ்நிலையை அந்த நிறுவனங்களுக்குச் சொல்லி, அந்த நிறுவனங்கள் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. தஞ்சை, திருவாரூர், பெரம்பலூர் மற்றும் திருச்சி போன்ற மாவட்டங்களிலே ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தை இந்த அரசு இப்போது நிறைவேற்ற இருக்கிறது. அதன் மூலமாக மொத்தமாக, ரூ.4,478.32 இலட்சம் அளவிற்கு 4 ஆண்டுகளிலே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். மாநில அரசாங்கத்தினுடைய உதவியாக மட்டும் 422.19 இலட்சம் ரூபாய் அளவிற்கு இதற்கு அம்மா அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள்.



அதுமட்டுமல்ல. பெருமையோடு இன்றைக்குச் சொல்லக்கூடிய அளவிற்கு, கூட்டுறவிலே கூட்டுறவு. கூட்டுறவுத் துறைகளிலே உருவாகிற அந்தப் பொருட்களை—ஏற்கெனவே இன்கோசர்-விலே இருக்கிற டீ-யை நாம் கூட்டுறவுக் கடைகளிலே விற்றுக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு புரட்சித் தலைவி மேலும் ஒருபடி போய், கதர்த் துறையின் மூலமாக உற்பத்தி செய்கிற அந்தக் குளியல் சோப், சலவை சோப் போன்ற மற்ற பொருட்களை எல்லாம், நியாய விலைக் கடைகளிலே வைத்து விற்க வேண்டுமென்று எனக்குக் கடுமையான உத்தரவைக் கொடுத்து (மேசையைத் தட்டும் ஒலி) அதை இந்த மாதத்திலேயிருந்து தொடங்கி நடத்துவதற்கு இந்தத் துறை முனைப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதையும் உங்களுக்கு நான் அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல கூட்டுறவு இயக்கங்கள் எல்லாம் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்பதற்காக ஆவின் பால் அட்டைகளைப் பெறுவதற்கு நெடுந்தூரம் நீங்கள் நடக்க வேண்டாம், இனி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், மத்திய வங்கிகள், நகர வங்கிகளிலேயே இதுபோன்ற கூப்பன் சிஸ்டங்களை வழங்குகிற அந்தத் திட்டத்திற்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனுமதி தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல நுகர்வோர் குறை தீர்க்கிற அந்த மன்றங்களுக்கு திருவள்ளூர், திருவாரூர், கரூர், நாமக்கல், தேனி போன்ற இடங்களிலே அறைகலன் மற்றும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்காக 20.00 இலட்சம் ரூபாய்க்கு அம்மா அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள். அதேபோல, செங்கற்பட்டிலே செயல்பட்டுவரும் காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக ரூ.18.70 இலட்சம் அளவிற்கு ஒதுக்கீடு செய்து உத்தரவை வழங்கியிருக்கிறார்கள்.

அதுபோல நவீன அரிசி ஆலைகளை நவீனமயமாக்க, 150 ஆலைகளுக்கு உத்தரவு கொடுத்திருக்கிறார்கள். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக டி.பி.சி.-களிலே நெல்லைப் பாதுகாப்பதற்கு காவிரிப் பாசன மாவட்டங்களில், எருப்பூர், திருவாரூர், நீடாமங்கலம், பூனக்குளம் ஆகிய இடங்களில் 50,000 டன் கொள்ளளவு கொண்ட நெல் சேமிப்பு நிலையங்களை 130 இலட்சம் ரூபாய் அளவிலே கட்டுவதற்கு உத்தரவு

வழங்கியிருக்கிறார்கள். 19 வட்டக் கிடங்குகளில் அறைகளையும், அங்கே வேலை செய்கிற Gangmen தங்குவதற்காக ஓய்வு இடங்கள் கட்டுவதற்காக 60.00 இலட்சம் ரூபாயை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனுமதித்திருக்கிறார்கள்.

*பிற்பகல் 2-10*

அதுமட்டுமல்ல. சென்னை, அண்ணா நகர், தங்கசாலை, கோபாலபுரம், திருச்சி போன்ற இடங்களிலே இருக்கிற நவீன அரிசி ஆலை குடோன்களுக்கு நெல்லை சிந்தாமல் கொண்டுபோவதற்கும், உணவுப் பொருள்கள் சிந்தாமல் இருப்பதற்காகவும் கான்கிரீட் போக்குவரத்து வசதியை அந்த Godown-களுக்குள்ளே அமைக்க வேண்டும் என்ற உத்தாவினையும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இட்டிருக்கிறார்கள். அந்த அளவிலே இந்தத் துறை சீரோடும் சிறப்போடும் செயல்பட புரட்சித் தலைவி அவர்கள் எடுத்திருக்கிற அந்த இலட்சியப் பயணத்திலே முன்னதாக திரு. மணி அவர்கள் ஒரு குற்றச்சாட்டை இங்கே சொல்லியிருக்கிறார். அவர் சொன்ன அந்தக் குற்றச்சாட்டு கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெற்ற ஊழலில் ஈடுபட்டவர்கள்மீது என்ன நடவடிக்கை என்று கேட்டிருக்கிறார். இதிலே ஒரு கூடுதல் பதிவாளர், மூன்று இணைப் பதிவாளர்கள், மூன்று துணைப் பதிவாளர்கள் உட்பட பலர் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள் என்பதனையும், தவறு எந்த மட்டத்திலே நடந்தாலும் அதைப் புரட்சித் தலைவி அரசு பார்த்துக்கொண்டு இருக்காது, கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) இது ஓர் உதாரணமாக இருக்கிறது என்பதை திரு. மணி அவர்களுக்குப் பதிலாகச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே இந்த இரு துறைகளும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேற்கொண்டிருக்கிற இலட்சியப் பயணத்திலே, தமிழ்நாட்டை முதல் மாநிலமாக ஆக்குகிற அந்தப் புதிய பயணத்திலே எங்களுடைய துறையும் இணைந்து, இராமருக்கு அந்தக் காலத்திலே அணில் உதவி செய்து, கூடவே இருந்ததைப்போல, எங்களுடைய துறையும் அம்மா அவர்களுக்குத் துணையாக, அம்மாவிற்குப் பின்னாலே நாங்கள் நடைபோடுவோம். இந்தத் துறையின் மூலமாக அம்மாவினுடைய இலட்சிய முயற்சியை வெற்றி முயற்சியாக ஆக்குகிற முயற்சியில் இந்தத் துறையும் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளும் என்பதை எடுத்துச் சொல்லி ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இராமருக்கு அணில் மாதிரி அல்ல, அனுமதேயர் மாதிரி.



**மாண்புமிகு திரு. ப. தனபால்:** ஆக, பல வெட்டுத் தீர்மானங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறீர்கள். கூட்டுறவுத் துறையிலே 154 வெட்டுத் தீர்மானங்களை 48 உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறீர்கள். அதேபோல 34 உறுப்பினர்கள் உணவுத் துறையிலே 98 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறீர்கள். அந்த வெட்டுத் தீர்மானங்களெல்லாம் எங்களுடைய தீவிர பரிசீலனையிலே இருக்கின்றன. அவற்றை அம்மாவினுடைய இந்த அரசு முழுமையாகப் பரிசீலிக்கும் என்பதையும் எடுத்துச் சொல்லி வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிற மாமன்ற உறுப்பினர்கள், அந்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படிக் கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. (குறுக்கீடு) திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொப்பரைக் கொள்முதல் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். சென்ற ஆண்டு மிக அதிகமாக கொள்முதல் செய்யப்பட்டது. இந்த ஆண்டு குறைவாக, 2,939 டன்தான் கொள்முதல் செய்திருக்கிறோம் என்று சொன்னார்கள். அதற்குக் காரணங்கள் இரண்டு. ஒன்று, மிகவும் காலதாமதமாகக் கொள்முதல் செய்யத் தொடங்கினார்கள். இப்போது நிறுத்திவிட்டார்கள். இரண்டாவது, வாங்குவதிலே இந்த முறை அதிகமாகக் கெடுபிடி காட்டப்பட்டது. வாங்குவதில் அக்கறையே காட்டவில்லை. விவசாயிகள் அங்கே கொப்பரையைக் கொண்டுபோய் பல நாட்கள் வைத்துவிட்டு, திருப்பிக் கொண்டுவர வேண்டிய நிலை ஏற்பட்டது. இப்பொழுது கடந்த 15 நாட்களாக, 18 நாட்களாக கொள்முதல் முழுவதுமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு மிகவும் ஒரு துயரமான, ஒரு சோகமான, ஒரு கஷ்டமான சூழ்நிலை இதனால் ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகளிடம் இருக்கிற கொப்பரையைக் கொள்முதல் செய்ய வேண்டும் நீங்கள். கொள்முதல் செய்ய ஆரம்பித்த உடனே, வெளிச் சந்தையிலே விலை கொஞ்சம் உயர்ந்தது. இப்பொழுது முழுவதுமாக விலை குறைந்துபோய், 21 ரூபாய், 22 ரூபாய் என்று கிலோவிற்குக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். தேங்காயினுடைய விலை மிகவும் குறைந்துவிட்டது. அந்த நிலைமையை மாற்றியமைப்பதற்காக மீண்டும் கொள்முதலைக் கண்டிப்பாகச் செய்ய வேண்டுமென்று நான்

அன்போடு இந்த அரசைக் கேட்டுக்கொண்டு, அதற்கு அமைச்சரிடத்திலே விளக்கம் கேட்கிறேன்.

இன்னொன்று, நெல் கொள்முதல்பற்றி பலரும் இங்கே பேசியிருக்கிறார்கள். நானும் இங்கே பேசியிருக்கிறேன். கடைமடைப் பகுதிகளிலே இப்பொழுதுதான் அறுவடை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் நெல் அறுவடை ஆகிக் கொண்டிருக்கிறது; வந்துகொண்டிருக்கிறது. நாங்கள் நேரடிக் கொள்முதல் நிலையங்களைத் திறக்க வேண்டுமென்று சொன்னோம். அதைத் திறக்காவிட்டாலும்கூட, இருக்கிற தாலுகா கொள்முதல் நிலையங்களிலாவது, இன்னும் குறைந்தபட்சம், 10, 15 நாட்களுக்காவது நீங்கள் கொள்முதல் செய்ய வேண்டும். அந்த நெல்லை வாங்கிக்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, நான் கேட்ட இந்த இரண்டு விளக்கங்களுக்கும் அமைச்சர் நல்ல முறையிலே விளக்கம் கொடுத்து, கொப்பரைக் கொள்முதல் செய்வோம்; நெல்லும் கொள்முதல் செய்வோம் என்கிற உறுதிமொழியை அமைச்சரிடத்திலேயிருந்து நான் எதிர்பார்க்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழனிசாமி, நெல் கொள்முதல்தானே, திரு. எஸ்.ஆர்.பி. சொல்லிவிட்டார்.

*பிற்பகல் 2-15*

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உணவுதானியத்திலே சீரமைக்க வேண்டும் என்பதற்காக ஒரு குழுவை அமைத்து, அனைத்துக் கட்சிகளும் அதிலே இடம்பெறும் வகையிலே, பல மாநிலங்களுக்குச் சென்று பார்த்து, தரமான அரிசி கிடைக்க வேண்டுமென்பதை நாம் மறுப்பதற்கில்லை. நல்ல அரிசியும் இப்பொழுது கிடைக்கிறது—நேரடி, பொது விநியோகக் கடையிலே கொடுக்கிற மோசமான அரிசியை எல்லாம் நீக்கிவிட்டு, அதுமாதிரி இருந்த ஸ்டாக் அரிசியையெல்லாம் எடுத்துவிட்டு, புதிய அரிசியைக் கொடுத்து தரமான அரிசி கிடைக்கச்செய்வது என்பது உண்மையிலேயே பாராட்டிற்குரியது. அமைச்சர் அதிலே முழுமையாகக் கவனம் செலுத்துகிறார். அதேநேரத்திலே நாகை, திருவாரூர் மற்றும் அந்தக் காவிரிப் படுகைகளிலே வெளியிலேயிருந்து நெல்லைக் கொண்டுவந்து விற்பனை செய்கிறார்கள் என்ற ஒரு தகவல் இருந்தது. அது தற்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய விவசாயிகள் மீண்டும் அதை உற்பத்தி செய்திருக்கிறார்கள். மாண்புமிகு



உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் சொன்னதைப் போன்று இந்த மே மாதம் இறுதி வரையிலும், இன்னும் கொஞ்சம் கொஞ்சமாக அறுவடையாகி இருக்கக்கூடிய அந்த நெல்லையும் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஒரு சிறப்பு நேர்வாக இந்த மே மாதம் 30-ஆம் தேதி வரையிலும் கொள்முதல் செய்ய வேண்டும். அதுகூட மிக அதிகமான நெல் கிடையாது. குறைந்த அளவு நெல்தான் இருக்கிறது. 15 மூட்டைகள், 20 மூட்டைகள்தான் நெல் வைத்திருக்கிறார்கள். அந்த விவசாயிகள் விற்க முடியாமல் இருக்கிறார்கள். நேரடி விவசாயிகள் உற்பத்தி செய்திருக்கிற அந்த நெல்லை மீண்டும் அரசு பரிசீலனை செய்து அதையும் கொள்முதல் செய்ய ஒரு சிறப்புத் திட்டமாகத் தாங்கள் அறிவிக்க வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

**திரு. லா. சந்தானம்:** பேரவைத் தலைவர் அவர்களே, . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை போதும். (குறுக்கீடு) அமைச்சரவர்கள் இதற்கு மட்டும் பதில் சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு) சந்தானம், நீங்கள் பிறகு அமைச்சரிடம் கேட்டுக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கொப்பரைக் கொள்முதலைப் பொறுத்தவரையில் மத்திய அரசாங்கத்தினுடைய NAFED நிறுவனமும், நம்முடைய அரசாங்கத்தினுடைய TANFED நிறுவனமும் இணைந்துதான் கொள்முதல் செய்கிறோம். NAFED நிறுவனம் பணம் கொடுத்தால்தான் நாம் இங்கே கொள்முதல் செய்ய முடியும். அவர்கள் லேட்டாகத்தான் கொடுத்தார்கள். கொடுத்த அடுத்த நாளே நாம் கொள்முதலைத் தொடங்கிவிட்டோம். நம்மீது அதிலே எந்தக் குறையும் இல்லை. அதேபோல போன மார்ச் 28-ஆம் தேதியோடு நிறுத்த வேண்டுமென்று NAFED-லிருந்து உத்தரவு வந்திருக்கிறது. அதனாலேதான் நிறுத்தியிருக்கிறோம். மீண்டும் அதைத் தொடங்க வேண்டுமென்ற வற்புறுத்தலை இந்த அரசு, புரட்சித் தலைவியினுடைய அரசு NAFED நிறுவனத்திற்கு முறையாகத் தெரிவிக்கும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல நெல் கொள்முதலைப் பொறுத்தவரையில் தெளிவான கொள்கைகளை ஏற்கெனவே அம்மா அவர்கள் இந்த மாமன்றத்திலேச் சொல்லி விட்டார்கள். ஆகவே திரும்பத் திரும்ப இதைப் பேசுவதிலே ஒன்றும் இலாபம் இல்லை. கொள்முதலைப் பொறுத்தவரையில் நிச்சயமாக இந்த அரசு ஒரு தனிக் கவனத்தைச் செலுத்தி, தீவிரமாக தவறு இல்லாத அளவிற்கு ஒரு கொள்முதல் கொள்கையை உருவாக்குவதிலே புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தீவிரமாக

சிந்தித்துக்கொண்டிருக்கிறது. அம்மா அவர்கள் அதற்குரிய உத்தரவினை விரைவில் வழங்குவார்கள். புதிய கொள்முதல் கொள்கையை தமிழ்நாட்டிலே அறிமுகப்படுத்துவதற்குத் தாய் தயாராக இருக்கிறார்கள் என்பதனைச் சொல்லி இந்த அளவோடு இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** உட்காருங்கள், உட்காருங்கள், நாளை பேசிக்கொள்ளலாம். விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

மானியக் கோரிக்கை எண் 12, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஆர். சக்கரபாணி, இருக்கையில் இல்லை. திரு. ஆர். சக்கரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். ராம்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.



**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம்.ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ், இருக்கையில் இல்லை.

திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாரமலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.



திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. கு. பிச்சாண்டி, இருக்கையில் இல்லை. திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கே.என். சேகரன், இருக்கையில் இல்லை. திரு. கே.என். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ்.ஏ.எம். உசேன், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.ஏ.எம். உசேன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. துரை. கி. சரவணன், இருக்கையில் இல்லை. திரு. துரை. கி. சரவணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.எஸ். கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பி.எஸ். உலகரட்சகன், இருக்கையில் இல்லை.

திரு. பி.எஸ். உலகரட்சகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. மீ.அ. வைதியலிங்கம், இருக்கையில் இல்லை. திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. அ. அசோகன், இருக்கையில் இல்லை. திரு. அ. அசோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். மகேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. ஜெ. அன்பழகன், இருக்கையில் இல்லை. திரு. ஜெ. அன்பழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. அன்பில் பெரியசாமி.

திரு. அன்பில் பெரியசாமி, இருக்கையில் இல்லை. திரு. அன்பில் பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. மு.பெ. சாமிநாதன், இருக்கையில் இல்லை. திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. இரா. திருமாவளவன், இருக்கையில் இல்லை. திரு. இரா. திருமாவளவன், அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எ.வ. வேலு, இருக்கையில் இல்லை. திரு. எ.வ. வேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கை எண் 12-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.16,06,78,84,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.10,64,24,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்னும் மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (19-4-2002) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-18 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

126. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தருமபுரி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

127. 2000-2001 ஆம் ஆண்டிற்கான திருவாரூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை.[1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

128. 2000-2001 ஆம் ஆண்டிற்கான கரூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

129. 2000-2001 ஆம் ஆண்டிற்கான வேலூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

130. 2000-2001 ஆம் ஆண்டிற்கான விருதுநகர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

122. மதிப்பீட்டுக் குழுவின் ஒன்றாவது அறிக்கை. (2001-2002)

123. மதிப்பீட்டுக் குழுவின் இரண்டாவது அறிக்கை. (2001-2002)

124. மதிப்பீட்டுக் குழுவின் மூன்றாவது அறிக்கை. (2001-2002)

125. மதிப்பீட்டுக் குழுவின் நான்காவது அறிக்கை. (2001-2002)

126. மதிப்பீட்டுக் குழுவின் ஐந்தாவது அறிக்கை. (2001-2002)

*127.* உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஏழாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

*128.* மானியக் கோரிக்கை எண் 12 - கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003. (தமிழ், ஆங்கிலம்)

*129.* மானியக் கோரிக்கை எண் 12 - 2002-2003 ஆம் ஆண்டிற்கான கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் விரிவான மானியக் கோரிக்கை.





## இணைப்பு

*(126ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## கோரிக்கை எண் 12

## கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003

### முன்னுரை

தமிழ்நாட்டை ஒவ்வொரு துறையிலும் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக விளங்கச் செய்ய தான் உறுதி பூண்டிருப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். "அனைவருக்கும் ஆரோக்கியமான, வளமான வாழ்வு அமைவதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தித் தருவதே" இவ்வரசின் இலக்கு ஆகும். இத்தொலை நோக்கினை முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள பதினைந்து அம்சத் திட்டத்தினைச் செயல்படுத்துவதன் வாயிலாக நாம் அடைய முடியும். ஆண், பெண் மற்றும் குழந்தைகள் அனைவருக்கும் சரிவிகித உணவு கிடைப்பதற்கான பொருளாதார, சமூக வழிமுறைகளை உருவாக்குதல் என்பது முதலமைச்சரின் பதினைந்து அம்சத் திட்டத்தின் சிறப்பியல்புகளில் ஒன்றாகும். இம்மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் பொருளாதார மற்றும் சமூக ரீதியாக அத்தியாவசியப் பொருட்களைப் பெற வழிவகுக்கும் பொது விநியோகத் திட்டத்தை உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயல்படுத்தி வருகிறது. இந்த சீரிய முயற்சியில், மாநிலம் முழுவதும் செயல்படும் நியாய விலைக் கடைகள் வழியாக வறியோரும் அத்தியாவசியப் பொருட்களைப் பெறுவதற்கு வகை செய்யும் உன்னத பணியை கூட்டுறவுத் துறை மேற்கொண்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதினைந்து அம்சத் திட்டத்தின் முதல் கூறான தொடர் பசுமைப் புரட்சித் திட்டத்தின்கீழ், மாநிலம் முழுவதும் பரவலாக உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் வழியாக வேளாண்மைக் கடன் அளிப்பது மட்டுமின்றி, உரங்கள், பூச்சிக் கொல்லிகள் மற்ற வேளாண்மை இடுபொருட்களை உரிய நேரத்தில் அளித்தல் போன்ற பணிகளில் கூட்டுறவுத் துறை சிறந்து நிற்கின்றது.

தமிழ்நாட்டினை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக ஆக்குவதற்கு இவ்வரசு மேற்கொண்டு வரும் தளராத முயற்சியில், உணவு, நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மற்றும் கூட்டுறவுத் துறைகளின் ஆக்கபூர்வமானப் பங்கினைக் காட்டும் வண்ணம் இத்துறைகளின் செயல்பாடுகள் பின்வரும் பக்கங்களில் விரிவாக விளக்கப்படுகின்றன.

[2002 ஏப்ரல் 18

## அத்தியாயம் 1

## கூட்டுறவு ஒரு கண்ணோட்டம்

உலகெங்கிலுமுள்ள கூட்டுறவுகள் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் செயலாக்கமிக்க, ஆற்றல் வாய்ந்த கருவிகளாக உருவெடுத்துள்ளன. தமிழகக் கூட்டுறவு இயக்கம் கடந்த பத்தாண்டுகளில், பொருளாதாரத்தின் பல்வேறு வகைப்பட்ட பகுதிகளில் கணிசமான வளர்ச்சியைக் கண்டுள்ளது. பொருளாதார நடவடிக்கையில் கூட்டுறவுகள் தொடாத முக்கியத் துறை எதுவுமில்லை. வேளாண் கடன், சந்தைத் தலையீடு, வேளாண்மைப் பொருட்களுக்கான ஆதரவு விலை மற்றும் பொது விநியோகம் போன்ற பல முக்கிய கொள்கைகளைச் செயற்படுத்துவதற்கான கருவியாகக் கூட்டுறவுகள் கருதப்படுகின்றன.

சிறிய தொடக்கத்திலிருந்து தமிழகக் கூட்டுறவு இயக்கம் கடந்த ஆண்டுகளில் பலத்துடன் வளர்ந்துள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில் 1904 ஆம் ஆண்டு திரூர் கிராமத்தில் தொடங்கப்பட்ட கிராமக் கூட்டுறவுச் சங்கம் தமிழகத்தில் கூட்டுறவு இயக்கத்தின் தொடக்கத்தை அறிவித்து, மாநிலத்தில், குறிப்பாக வேளாண்மைக் குடும்பங்களின் சேவையில் ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்துள்ளது. தொடக்க வங்கிகளிலிருந்து விற்பனைச் சங்கம் மற்றும் நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலை வரை பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளில் மக்களுக்குக் கூட்டுறவுகள் சேவை புரிகின்றன. 1.47 கோடி குடும்ப அட்டைதாரர்களை உள்ளடக்கி, கூட்டுறவுகள் நடத்தும் நியாய விலைக் கடைகள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்துடன் சேர்ந்து மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் அத்தியாவசியப் பண்டங்களை விநியோகிக்கின்றன.

### 2. சாதனை மற்றும் திட்டம்:

கூட்டுறவுத் துறையின் முதன்மையான பணிகள் வேளாண் கடன், விளை பொருட்களின் விற்பனை, உரம் மற்றும் நுகர்பொருள்களின் விநியோகம் போன்றவை ஆகும். இப்பணிகளில் 2001-2002 ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறியீடுகள், 2001-2002 ஆம் ஆண்டில் 31-1-2002 வரை எய்திய முன்னேற்றம் மற்றும் 2002-2003 ஆம்



2002 ஏப்ரல் 18]

ஆண்டிற்கான உத்தேசத் திட்டம் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| வ. எண் | விவரம் | அலகு | 2000-2001 ஆம் ஆண்டுக் கான திட்டக் குறியீடு | 2001-2002 ஆம் ஆண்டில் ஜனவரி 2002 வரை அடைந்த முன்னேற்றம் | 2002-2003 ஆம் ஆண்டுக் கான உத்தேச திட்டம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | குறுகிய கால வேளாண்மைக் கடன் வழங்குதல் | ரூபாய் கோடியில் | 1200.00 | 878.26 | 1300.00 |
| 2 | அ. நடுத்தரக் கால வேளாண்மைக் கடன் வழங்குதல் | .. | 110.00 | 34.95 | 115.00 |
| | ஆ. நகையீட்டுக் கடன் வழங்குதல் | .. | 5000.00 | 3386.26 | 5200.00 |
| | இ. சிறு மற்றும் குடிசைத் தொழில்கள் போன்ற பண்ணை சாராப் பிரிவு கடன் வழங்குதல். | .. | 200.00 | 179.90 | 230.00 |
| | ஈ. வேளாண் விளை பொருள் ஈட்டுக் கடன் | .. | 35.00 | 11.41 | 35.00 |
| 3. | நீண்டகால வேளாண்மைக் கடன் வழங்குதல் | .. | 250.00 | 70.06 | 250.00 |
| 4. | தொழில் புரிவோர்களுக்குக் கூட்டுறவு வங்கிகள் வழங்கிய கடன்கள் | .. | 140.00 | 37.05 | 65.00 |

[2002 ஏப்ரல் 18

| வ. எண் | விவரம் | அலகு | 2000-2001 ஆம் ஆண்டுக் கான திட்டக் குறியீடு | 2001-2002 ஆம் ஆண்டில் ஜனவரி 2002 வரை அடைந்த முன்னேற் றம் | 2002-2003 ஆம் ஆண்டுக் கான உத்தேச திட்டம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 5. | வீடு கட்ட கடன் வழங்குதல் | ரூபாய் கோடியில் | 125.00 | 87.80 | 135.00 |
| 6. | இரசாயன உரங்கள் வழங்குதல் | .. | 290.00 | 197.95 | 300.00 |
| 7. | வேளாண் விளை பொருட்கள் விற்பனை | .. | 675.00 | 317.20 | 725.00 |
| 8. | நுகர்பொருள்கள் சில்லறை விற்பனை செயதல் | .. | 2360.00 | 1812.10 | 2460.00 |
| 9. | கூட்டுறவு அச்சகம் மூலம் அச்சுப்பணி செய்தல் | .. | 26.00 | 18.30 | 27.00 |
| 10. | அ. விற்பனையுடன் இணைந்த கடன் வசதி | .. .. | 2.00 | 1.07 | 2.20 |
| | ஆ. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுடன் இணைந்த கடன் வசதி | .. | 10.00 | 11.59 | 11.00 |
| 11. | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பழங்குடியினர்களுக்கு நிதியுதவி அளித்தல் (லாம்ப்ஸ்) | .. | 20.20 | 8.92 | 22.22 |
| 12. | கிடங்கு கொள்திறன் வசதியைப் பயன் படுத்துதல் | இலட்சம் மெ. டன்னில் | 6.00 | 5.99 | 6.25 |



2002 ஏப்ரல் 18]

**3. வளர்ச்சித் திட்டங்களுக்கான செலவு:**

கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 2000-2001 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவுகள், 2001-2002 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடு மற்றும் 2001-2002 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு மற்றும் 2002-2003 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டிற்கான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

*(ரூபாய் கோடியில்)*

| திட்டத்தின் விவரங்கள் | 2000-2001 ஆம் ஆண்டின் மொத்த செலவுகள் | 2001-2002 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2001-2002ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு | 2002-2003ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|
| **அ. மாநிலத் திட்டப் பணிகள்** | | | | |
| 1. நெறிப்படுத்துதலும் நிர்வாகமும் | 0.0441 | 0.0465 | 0.0425 | .. |
| 2. கடன் கூட்டுறவுச் சங்கங்கள் (பயிர் பாதுகாப்பு நிதி மற்றும் வேளாண்மை நிதியுதவி நிறுவனங் களில் முதலீடு உட்பட) | 26.6122 | 1.5938 | 89.7729 | 155.8513 |
| 3. ஏனைய கூட்டுறவுச் சங்கங்கள் | 0.2188 | 0.2661 | 0.2661 | — |
| 4. பழங்குடியினர் துணைத் திட்டம் | 0.9000 | 0.9000 | 0.9000 | 0.9000 |
| 5. சிறப்புக் கூறுகள் திட்டம் | 0.2500 | 0.2500 | 0.2500 | 0.2500 |
| மொத்தம் | **28.0251** | **3.0564** | **91.2314** | **157.0013** |

[2002 ஏப்ரல் 18

(ரூபாய் கோடியில்)

| திட்டத்தின் விவரங்கள் | 2000-2001 ஆம் ஆண்டின் மொத்த செலவுகள் | 2001-2002 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2001-2002ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு | 2002-2003ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|
| ஆ. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் மற்றும் மத்திய அரசும் மாநில அரசும் சமமாக பங்கேற்கும் திட்டங்கள் | 0.2286 | 0.1008 | 0.6021 | 0.0010 |
| இ. தன்னாட்சி நிறுவனங்கள் நிதியுதவி பெறும் திட்டங்கள் | 6.4162 | 3.8423 | 3.8426 | 0.7792 |
| ஈ. திட்டத்தில் சேராதது | 51.5192 | 172.00.59 | 59.18.55 | 63.5599 |
| ஆக மொத்தம் | 86.1891 | 179.0054 | 154.8616 | 221.3414 |



2002 ஏப்ரல் 18]

## அத்தியாயம் – 2

## கூட்டுறவுக் கடன்

### அ. குறுகிய கால மற்றும் நடுத்தர காலக் கடன்

### 1. கடன் கட்டமைப்பு

மாநில அளவில் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி, மாவட்ட அளவில் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் (வேளாண்மை அல்லாத பிற திட்டங்களுக்குக் கடன் வழங்கும் சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி நீங்கலாக), கிராம அளவில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றின் மூலம் குறுகிய கால மற்றும் மத்திய காலக் கூட்டுறவுக் கடன் கட்டமைப்பு மூன்றடுக்கு முறையில் செயல்பட்டு வருகின்றது.

### 2. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி

மாவட்ட அளவில் இயங்கும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் கூட்டமைப்பான தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியானது 1905 ஆம் ஆண்டு முதல் அதன் உறுப்பினர் சங்கங்களின் வாயிலாக வேளாண் மற்றும் வேளாண்சாராக் கடன்களை வழங்கி வருகிறது. இது தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி வழங்கும் நிதியை வேளாண்மைக்காக குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடனாக வழங்கி வருவதுடன், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு அவற்றின் உறுப்பினர் சங்கங்களுக்கு நிதியுதவி வழங்குவதற்கு தனது சொந்த நிதியிலிருந்து காசுக்கடன் வழங்குகிறது.

இந்த வங்கி, மாநிலத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலை/சர்க்கரை ஆலைகளுக்கு காலக்கடன் நிதியுதவியும், ஏனைய தலைமைக் கூட்டுறவு அமைப்புகளுக்கு நேரடி நிதியுதவியும் அளித்து வருகிறது.

மாநிலத்திலுள்ள தொடக்க கூட்டுறவுச் சங்கங்களை வலுப்படுத்த "தொடக்கக் கூட்டுறவு மேம்பாட்டு நிதி" ஒன்றினை தலைமை வங்கி பராமரித்து வருகிறது. 31-1-2002 அன்றைய நிலவரப்படி இந்நிதியில் 228.53 இலட்சம் ரூபாய் இருப்பில் உள்ளது.

31-1-2002 ஆம் தேதியில் தலைமை வங்கியின் பங்கு மூலதனம் அரசின் பங்குத் தொகையான ரூ.0.26 கோடியுடன் சேர்த்து 31.44 கோடி ரூபாயாகவும், ஒதுக்கீடுகள் ரூ.193.23 கோடியாகவும், வங்கியின் வைப்புத்

[2002 ஏப்ரல் 18

தொகை 2612.57 கோடி ரூபாயாகவும் உள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் 31-1-2002 வரை இவ்வங்கி 1969.43 கோடி ரூபாய் அளவிற்குக் கடன்கள் வழங்கியுள்ளது. இவ்வங்கி 2000-2001 ஆம் ஆண்டில் 40.22 கோடி ரூபாய் நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

**3. மத்தியக் கூட்டுறவு வங்கிகள்**

மாநிலத்தில் 23 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் கிளைகள் பெரும்பாலும் ஊரகப் பகுதிகளில் ஊரக மக்களுக்கு உதவும் வகையில் அமைந்துள்ளன. இவை கூட்டுறவுகளுக்கும் கிராம மக்களுக்கும் பெரும் பணியாற்றி வருகின்றன. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் அவற்றின் சொந்த நிதி ஆதாரங்களிலிருந்தும், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து கடன் பெற்றும், வேளாண் தேவைகளுக்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு கடன் வழங்குகின்றன. தேசிய வேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கியிடம் நிதியுதவி பெற்று, தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அவை உதவுகின்றன.

மத்தியக் கூட்டுறவு வங்கிகள், வேளாண் சாரா தொழில்களுக்கும், லாரிகள், பேருந்துகள், கணினிகள், மண்வாரும் இயந்திரங்கள் வாங்கவும், வீடுகட்டவும், மருத்துவர்கள் சொந்த மருத்துவமனை அமைக்கவும், பொறியாளர்கள் சேவை மையங்கள் அமைக்கவும், உறுப்பினர்களின் குழந்தைகள் மருத்துவம், பொறியியல், தொழிற் கல்வி பயிலவும்கூட கடன் உதவி அளித்து வருகின்றன.

31-1-2002 ஆம் நாளன்று மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், அரசு பங்குத் தொகையான ரூ.63.81 கோடியையும் சேர்த்து ரூ.347.70 கோடியளவிற்கு பங்குத் தொகை கொண்டுள்ளன. மேலும் இவ்வங்கிகளில் ஒதுக்கீடுகள் ரூ.537.93 கோடியாகவும், வைப்புத் தொகைகள் ரூ.6573.00 கோடியாகவும் உள்ளன. இவற்றின் நடைமுறை மூலதனம் ரூ.9962.52 கோடி அளவை எட்டியுள்ளது.

**4. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்**

மாநிலம் தழுவிய அளவில் 4595 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. பயிர் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு 15 மாதங்களில் திருப்பிச் செலுத்தக் கூடிய குறுகிய காலக் கடன்களையும், 3 முதல் 5 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டிய, பால் பண்ணை அமைத்தல், ஆடு வளர்த்தல், கோழிப்



2002 ஏப்ரல் 18]

பண்ணை அமைத்தல் முதலான வேளாண் சார்ந்த துணைத் தொழில்களை மேற்கொள்ள நடுத்தர காலக் கடன்களையும் இவை வழங்கி வருகின்றன. 10 ஏக்கர் வரை சொந்த ஜாமீன்பேரில் பதிவு செய்யப்பட்ட கரும்பு மற்றும் இதர பயிர்களுக்கு கடனளவுகளுக்கு ஏற்ப பயிர்க் கடன் ரூ.50,000/- வரை வழங்கப்படுகிறது. நெல், பருத்தி, நிலக்கடலை, மஞ்சள், எள், காய்கறி வகைகள், பூச்செடிகள் முதலான இதர பயிர்களுக்கும் நபர் ஜாமீன்பேரில் கடன்கள் வழங்கப்படுகின்றன. பதிவு செய்யப்பட்ட கரும்பு பயிருக்கு 20 ஏக்கரும் அதற்கு மேலும் பயிரிடுவதற்காக வழங்கும் கடன், கடன்களுக்கேற்ப நில அடமானத்தின் பேரிலும், பிற பயிர்களுக்கு ரூ.70,000/- வரையில் நில அடமானத்தின் பேரிலும் வழங்கப்படுகிறது.

வைப்புத்தொகை திரட்டும் பணியினை மேற்கொண்டு, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், 31-12-2001 வரை 3373.61 கோடி ரூபாய் அளவிற்கு வைப்புத்தொகை திரட்டியுள்ளன.

1-4-1998 முதல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பெறப்பட்டுள்ள வைப்புத்தொகை குறித்த விவரங்கள் பின்வருமாறு:

| நாள் | வைப்புத்தொகை (ரூபாய் கோடியில்) | வளர்ச்சி விகிதம் |
|---|---|---|
| 31-3-1998 | 1645.85 | 39% |
| 31-3-1999 | 2045.47 | 24% |
| 31-3-2000 | 2764.46 | 35% |
| 31-3-2001 | 3196.99 | 16% |
| 31-12-2001 | 3373.61 | 5% |

இவ்வங்கிகள், வேளாண் தொழில்களுக்கு மட்டும் அல்லாது, வேளாண் நிலம் வாங்கவும், டிராக்டர்கள், பவர் டில்லர்கள் மற்றும் இதர வேளாண் உபகரணங்கள் வாங்கவும் கடன் வசதி அளிக்கின்றன. இவ்வங்கிகள், வீட்டு வசதிப்பொருட்கள், பேருந்துகள், கார்கள், ஜீப்புகள், இரு சக்கர வாகனங்கள், டிரக்குகள், வீட்டுமனைகள் வாங்கவும், வீடுகளைப் பழுதுபார்க்கவும், மருத்துவர், பொறியாளர்களுக்கு சேவை மையங்கள் தொடங்கவும் தமது வைப்புத்தொகைகளைப் பயன்படுத்தி கடன் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

[2002 ஏப்ரல் 18

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி 106 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு 2001-2002 ஆம் ஆண்டின் நடைமுறை மூலதனத்துக்காக 45.12 இலட்சம் ரூபாய் கடனாக வழங்கியுள்ளது.

**5. கடன் வழங்கு பணிகள் முன்னேற்றம்**

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் குறுகிய மற்றும் நடுத்தர காலக் கடன்கள் வழங்கும் பணியில் எய்திய முன்னேற்றம் பின்வருமாறு:

| ஆண்டு | குறுகிய கால பயிர்/சாகுபடிக் கடன்கள் | | துணைத் தொழில் களுக்கான நடுத்தர வேளாண்மைக் கடன்கள் | | வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள் (குறுகிய மற்றும் நடுத்தர) |
|---|---|---|---|---|---|
| | குறியீடு | சாதனை | குறியீடு | சாதனை | |
| | (ரூபாய் கோடியில்) | | | | |
| 1997-1998 | 800.00 | 697.99 | 70.00 | 100.74 | 798.73 |
| 1998-1999 | 925.00 | 732.12 | 100.00 | 117.13 | 949.25 |
| 1999-2000 | 1050.00 | 879.04 | 100.00 | 111.73 | 990.77 |
| 2000-2001 | 1200.00 | 1049.26 | 110.00 | 69.06 | 1118.32 |
| 2001-2002 (ஜனவரி 2002 வரை) | 1200.00 | 878.26 | 110.00 | 34.95 | 913.21 |

மேற்கண்ட ஆண்டுகளில் வேளாண்மை மேம்பாட்டிற்காக வழங்கப்பட்டு வந்துள்ள கடன் தொகையின் அளவு சீராக அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று பண்ணைசாரா நோக்கங்கள் மற்றும் சிறு தொழில்களுக்காக, ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வழங்கப்பட்ட கடன் விவரம் பின்வருமாறு:



2002 ஏப்ரல் 18]

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | பண்ணைசாராக் கடன்கள் வழங்குதல் | |
|---|---|---|
| | மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் |
| 1997-1998 | 20.60 | 6.60 |
| 1998-1999 | 25.48 | 33.49 |
| 1999-2000 | 48.17 | 67.88 |
| 2000-2001 | 84.74 | 57.02 |
| 2001-2002 (ஜனவரி 2002 வரை) | 32.48 | 38.02 |

**6. நலிந்த பிரிவினர்களுக்குக் கடன் வழங்குதல்**

மாநிலத்திலுள்ள நலிவுற்ற பிரிவினர்களின் கடன் தேவைகளை நிறைவு செய்வதில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் சிறப்புக் கவனம் செலுத்தி வருகின்றன. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் நெறிமுறைகளின்படி வழங்கப்படும் குறுகிய காலக் கடன்களில் 20 விழுக்காடு அளவிற்கு நலிந்த பிரிவினரான சிறு விவசாயிகளுக்கு, அதாவது ஐந்து ஏக்கர் அல்லது அதற்கும் குறைந்த அளவு நன்செய் அல்லது புன்செய் நிலத்தின் சொந்தக்காரர்கள்/ பயிரிடுபவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். இருப்பினும் குறுகிய காலக் கடனில் 60 விழுக்காடு அளவிற்கும் நடுத்தர காலக் கடனில் 75 விழுக்காடு அளவிற்கும் நலிந்த பிரிவினர்களுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

[2002 ஏப்ரல் 18

கடந்த 5 ஆண்டுகளில் நலிந்த பிரிவினர்களுக்கு வழங்கப்பட்ட குறுகிய கால மற்றும் நடுத்தர காலக் கடன்களின் அளவு பின்வருமாறு:

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | விவரங்கள | ஆண்டு | குறியீடு (விழுக் காடு) | சாதனை நலிந்த பிரிவின ருக்கு வழங்கப் பட்ட கடன் தொகை | சாதனை வழங்கப் பட்ட மொத்த கடனின் விழுக்காடு |
|---|---|---|---|---|---|
| 1. | குறுகிய காலக் கடன் | 1997-1998 | 67 | 429.47 | 61.5 |
| | | 1998-1999 | 67 | 461.13 | 63.0 |
| | | 1999-2000 | 67 | 554.14 | 63.0 |
| | | 2000-2001 | 67 | 652.01 | 62.1 |
| | | 2001-2002 (டிசம்பர் 2001 வரை) | 67 | 496.77 | 60.3 |
| 2. | நடுத்தர காலக் கடன் | 1997-1998 | 9.5 | 89.97 | 89.3 |
| | | 1998-1999 | 9.5 | 99.52 | 85.0 |
| | | 1999-2000 | 9.5 | 90.48 | 81.0 |
| | | 2000-2001 | 9.5 | 54.37 | 78.7 |
| | | 2001-2002 (டிசம்பர் 2001 வரை) | 9.5 | 24.80 | 76.9 |

2001-2002 ஆம் ஆண்டில் குறுகிய காலக் கடனில் 14 விழுக்காடும் நடுத்தர காலக் கடனில் 30 விழுக்காடும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வழங்கிட திட்டமிடப்பட்டது. 2001 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரையில் இக்கடன்கள் முறையே 9.05 விழுக்காடு



2002 ஏப்ரல் 18]

அளவிற்கும் 21.28 விழுக்காடு அளவிற்கும் வழங்கப்பட்டுள்ளன. 2002-2003ஆம் ஆண்டில் குறுகிய காலக் கடனில் 14 விழுக்காடும், மத்திய காலக் கடனில் 30 விழுக்காடும் இப்பிரிவினருக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**7. விவசாயி கடன் அட்டை திட்டம்**

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியால் உருவாக்கப்பட்ட விவசாயி கடன் அட்டை திட்டம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. 31-1-2002 வரை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் 9,46,919 விவசாயிகளுக்கு கடன் அட்டைகளை வழங்கி அவற்றிற்கு 2,07,486.87 இலட்சம் ரூபாய் அளவிற்கு கடன் வழங்கியுள்ளன.

**8. ஆதிதிராவிடர்களை உறுப்பினர்களாகச் சேர்த்தல்**

(அ) பயிர் சாகுபடிச் செலவிற்கென குறுகிய காலக் கடனும், வேளாண்மை சார்ந்த துணைத் தொழில்களுக்கான நடுத்தர காலக் கடன் வசதி பெற்று தமது பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்ள, ஒவ்வோர் ஆதிதிராவிடர் குடும்பத்திலிருந்தும் குறைந்தபட்சம் ஒருவரையேனும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினராக்கும் திட்டம் 1981-82 ஆம் ஆண்டிலிருந்தே செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பங்கு மூலதனம் செலுத்துவதற்காக, ஒவ்வொரு நபருக்கும் அரசு 100 ரூபாய் மானியமாக வழங்கி வருகிறது. இவ்வாறாக அரசு அளித்து வந்த 110.00 இலட்சம் ரூபாய் அளவிலான மானிய உதவியுடன், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 1,10,000 ஆதிதிராவிடர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தை 1988-89 முதல் மைய அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. 1998-99ஆம் ஆண்டு வரையில் 1,25,092 பேர்களை உறுப்பினர்களாகச் சேர்ப்பதற்கு ரூ.125.92 இலட்சம் மானியமாக மத்திய அரசு வழங்கியுள்ளது. இதுவரை 2,35,092 ஆதிதிராவிடர்களுக்கு மாநில, மத்திய அரசுகளால் உதவி வழங்கப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் மத்திய மற்றும் மாநில அரசுகள் இரண்டாலும் சேர்ந்து செயல்படுத்தப்பட்டு, 11,100 பேர்களுக்கு நபரொருவருக்கு 200 ரூபாய் என்ற விகிதத்தில் 22.20 இலட்சம் ரூபாய் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் 5,000 பேர்களுக்கு 10 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

[2002 ஏப்ரல் 18

**(ஆ) அரசின் உதவியுடன் செயல்படுத்தப்படும் சிறப்புத் திட்டம்**

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உள்ள ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த உறுப்பினர்களின் கடன் பெறும் சக்தியை அதிகரிக்கும் வகையில் தெரிவு செய்யப்பட்ட ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் வட்டியில்லாக் கடனாக ரூ.250 வழங்கப்படுகிறது. இக்கடன் 5 ஆண்டுகாலத்தில் சம தவணைகளில் வசூலிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 1992-93ஆம் ஆண்டிலிருந்து 2000-2001 ஆம் ஆண்டு வரை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் உறுப்பினர்களில் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த 80,000 நபர்களுக்கு 2 கோடி ரூபாய் பங்கு மூலதனக் கடனாக வழங்கப்பட்டது.

**9. கூட்டுறவுக் கடன் அமைப்பினை வலுப்படுத்த வளர்ச்சித் திட்டங்களின் செயலாக்கம்**

ஊரகப் பகுதிகளின் வளர்ச்சிக்கு போதிய நிதி உதவி அளிக்கப்பட வேண்டிய உயரிய நோக்கத்தின் அடிப்படையில், குறுகிய கால மற்றும் நீண்ட காலக் கடனமைப்புகளை வலுப்படுத்த வகுக்கப்பட்டுள்ள மைய அரசின் கொள்கை முடிவின்படி, குறிப்பிட்ட கால வரையறைக்குள் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கென வழிகாட்டி நெறிமுறைகளை தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி அறிவித்திருக்கிறது. அதன் அடிப்படையில் கிராமப்புற அளவில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளால் வளர்ச்சித் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. இத்திட்டங்கள், குறுகிய காலக் கடனமைப்பைப் பொறுத்தவரையில், 1994-95 ஆம் ஆண்டு முதல் 1998-99 ஆம் ஆண்டு வரையிலும் நீண்டகாலக் கடனமைப்பைப் பொறுத்தமட்டில் 1994-95 முதல் 1997-98 ஆம் ஆண்டு வரையிலும் செயல்படுத்தப்படும் வகையில் வகுக்கப்பட்டுள்ளன.

வளர்ச்சி செயல் திட்டங்களை முழு அளவில் செயல்படுத்திடவும், கூட்டுறவுகளுக்கு நிதி மற்றும் பிற ஆதரவுகளைத் தொடர்ந்து அளிப்பதற்கு வகை செய்யவும், மாநில அரசு, மாநில தலைமைக் கூட்டுறவு வங்கிகளுடன் சேர்ந்து, தனித்தனியே தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியுடன் 2000-2001-லிருந்து 2002-2003 ஆம் ஆண்டு வரைக்கான ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் வளர்ச்சி செயல் திட்டங்களைத் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாநில அளவில் திட்டங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.



2002 ஏப்ரல் 18]

அனைத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளையும், நிலைத்திருக்கக் கூடியவையாகச் செய்வதுமே இவ்வொப்பந்தத்தின் நோக்கமாகும்.

1994-95-ல் வளர்ச்சி நடவடிக்கைகள் தொடங்கப் பெற்றபின், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் பங்கு மூலதனத்தை வலுப்படுத்த அரசு நிதி உதவி அளித்து வருகிறது. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் நீண்டகால இயக்க நிதியிலிருந்து நிதி உதவி பெற்று, பங்குத் தொகையில் முதலீடு செய்யப்பட்ட தொகை குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| | மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் | | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் | | தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் | |
|---|---|---|---|---|---|---|
| ஆண்டு | நிறுவனங்களின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்) | நிறுவனங்களின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்) | நிறுவனங்களின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்) |
| 1994-1995 | 8 | 4.71 | 705 | 4.76 | - | - |
| 1995-1996 | 5 | 2.65 | 1640 | 15.25 | 79 | 3.96 |
| 1996-1997 | 16 | 8.23 | 851 | 3.27 | 51 | 3.33 |
| 1997-1998 | 5 | 3.61 | 922 | 3.52 | 52 | 4.02 |
| 1998-1999 | 10 | 7.91 | 973 | 4.27 | 20 | 1.81 |
| 1999-2000 | - | - | - | - | - | - |
| 2000-2001 | - | - | 42 | 0.19 | - | - |

**10. நகைக் கடன்**

கிராமப்பகுதிகளில் வாழ்ந்துவரும் நலிவுற்ற பிரிவினர் தமது அவசரத் தேவைகளுக்காக அதிக வட்டிக்கு அடகு வணிகர்களிடம் கடன் பெற்று அவதியுறும் நிலையைக் களையும் நோக்கத்தில், அவர்கட்கு கூட்டுறவுச் சங்கங்கள் நகைக் கடன்களை வழங்கி வருகின்றன. 2001-2002 ஆம் ஆண்டில் 5,000.00 கோடி ரூபாய் அளவிற்கு நகையீட்டுக் கடன்கள் வழங்க திட்டமிடப்பட்டு, 31-1-2002 வரையில் 3386.26 கோடி ரூபாய் அளவிற்கு நகையீட்டுக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

**11. கடன் வசூல் பணி**

எந்த ஒரு கூட்டுறவு கடன் நிறுவனமும், தாம் வழங்கிய கடன்களை தவணை தேதிக்குள் வசூல் செய்வதைத் தலையாய கடமையாகக் கொள்ள வேண்டும். கூட்டுறவுக் கடன் நிறுவனங்களின் நிதிநிலைத் தன்மை, கடன்களை தவணை தவறுவதற்கு முன்பாக வசூல் செய்வதைப் பொறுத்துத்தான் அமையும். கடன் வழங்குத் திட்டங்களில் ஓரளவிற்கு தவணை தவறிய கடன்கள் இருப்பது தவிர்க்க இயலாதது என்ற போதிலும், எந்த ஒரு கடன் வழங்கு நிறுவனமும், அதிக அளவு தவணை தவறிய கடன் நிலுவையைத் தாங்க இயலாது. தவணை தவறிய கடன் அளவினை கட்டுப்பாட்டுக்குள் வைக்காவிடில், கூட்டுறவுகள் தொடர்ந்து நிதி சுழற்சி செய்ய இயலாத நிலை ஏற்பட்டு, அதனால் அவற்றின் செயல்பாடுகள் முடங்கிவிடும் சூழ்நிலை உருவாகக் கூடும். அத்துடன் அவற்றின் வியாபாரத்தை மேம்படுத்த இயலாத நிலையும் ஏற்பட்டுவிடும். தாம் பெற்ற கடனை தவணை தேதிக்குள் திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற எண்ணம் கடன் பெற்றவர்களின் மனதில் ஏற்பட வேண்டும். அவ்வாறு ஏற்பட்டால்தான் அவர்களால் பருவகால வேளாண்மைத் தேவைகளுக்கு தொடர்ந்து மேலும் கடன்வசதி பெற இயலும். தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து முழு அளவில் மறுநிதியுதவி பெற ஏதுவாக வசூல் பணியைத் தீவிரப்படுத்தவும், தவணை தவறிய கடன்களின் அளவைக் குறைப்பதற்கும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் முயற்சி செய்து வருகின்றன.

கடந்த ஐந்து ஆண்டுகளில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில், தவணை தவறிய கடன்களின் நிலுவை பற்றிய விவரங்கள் பின்வருமாறு:



(ரூபாய் கோடியில்)

| தேதியன்று | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அளவில் | | |
|---|---|---|---|
| | நிலுவைத் தொகை | தவணை தவறிய நிலுவைத் தொகை | கேட்பில தவணை தவறிய நிலுவையின் சதவீதம் |
| 30-6-1997 | 2236.74 | 653.69 | 28.7 |
| 30-6-1998 | 2982.01 | 835.83 | 32.4 |
| 30-6-1999 | 3382.94 | 905.77 | 32.2 |
| 30-6-2000 | 3985.15 | 974.99 | 28.8 |
| 30-6-2001 | 4443.05 | 1157.70 | 31.4 |

**12. விவசாயிகளுக்கு 2001ஆம் ஆண்டின் வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடித் திட்டம்**

1992-ல் இதே அரசு பொறுப்பேற்றிருந்தபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகள் பயன்பெறும்பொருட்டு ஒரு போனஸ் திட்டத்தை அறிவித்தார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் 2001-ல் பொறுப்பேற்றவுடன் 1992-ல் அறிவிக்கப்பட்ட இத்திட்டத்தின் அடிப்படையிலேயே "வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடித் திட்டம், 2001" என்ற புதிய திட்டத்தை அறிவித்தார்கள். இத்திட்டத்தின்படி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்ற விவசாயிகளுக்கு அரசு கீழ்க்கண்ட நிவாரணத் திட்டத்தை அறிவித்துள்ளது:

கூட்டுறவு வங்கிகளில் வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த குறுகிய கால, மத்திய கால மாற்றுக் கடன்களின் 30-6-2000 அன்றுள்ளபடியான தவணை தவறிய அசலையும் மற்றும் 1-7-2000 முதல் 31-8-2001 வரையில் ஏற்படும் தவணைத் தொகைகளையும் 30-9-2001-க்குள் முழுவதுமாகவோ அல்லது ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர், 2001 ஆகிய மூன்று மாதத் தவணைகளில் திருப்பிச் செலுத்தும் கடன்தாரர்களுக்கு

30-6-2000 அன்றுள்ளபடியான வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி செய்யப்படும். இத்திட்டம் பின்னர் 30-11-2001 வரை நீட்டிக்கப்பட்டது.

இத்திட்டத்தின்படி 6,11,193 விவசாயிகளுக்கு 226.56 கோடி ரூபாய் அளவில் வட்டி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதற்காக அரசு 2001-2002 ஆம் ஆண்டில் 80 கோடி ரூபாய் வழங்கியுள்ளது. இவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்ட வட்டி மற்றும் அபராத வட்டித் தொகையில், ஏற்கெனவே வழங்கியதுபோக எஞ்சிய தொகையைக் கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்குவதற்காக 2002-2003 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.146 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற திட்டம் இந்திய துணைக் கண்டத்தில் வேறு எந்த மாநிலத்திலும் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. இது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்புத் திட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலே குறிப்பிட்டுள்ள திட்டத்தின்கீழ் வராத விவசாயப் பெருமக்களுக்கும், கடன்பெற்ற ஏனையோருக்கும் நிவாரணம் அளிக்க வேண்டுமென பல கோரிக்கைகள் அரசுக்கு வந்துள்ளன. நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் கூட்டுறவுத் துறைமூலம் கடன்பெற்றவர்களுக்கு நிவாரணம் அளிக்கவும், அதன்மூலம் நீண்டகாலமாக உள்ள நிலுவைத் தொகைகளை வசூலிக்க வழிவகுத்திடவும் “ஒரே தவணையில் கடனைத் தீர்க்கும் சலுகைத் திட்டம்” (One time settlement scheme) என்ற திட்டத்தை அரசு இவ்வாண்டு அறிவித்துள்ளது. அபராத வட்டியைத் தள்ளுபடி செய்வதோடு, 31-3-1998 அன்றைய நிலவரப்படி வட்டி உட்பட்ட நிலுவைத் தொகையை அடிப்படையாகக் கொண்டு கணக்குகள் தீர்வு செய்யப்படும். இவ்வாறு கணக்கிடப்படும் தொகை ஒரே தவணையிலோ அல்லது அதிகபட்சமாக 3 மாத கால அளவிலோ வசூலிக்கப்படும். இத்திட்டத்தின்படி சுமார் 4.5 இலட்சம் கடனாளிகள் பயன்பெறுவர் என்றும், இதற்காக ரூ.110 கோடி செலவாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இச்செலவை கூட்டுறவு வங்கிகள் ஏற்க ஒப்புக்கொண்டுள்ளன. இத்திட்டம் உடனடியாக நடைமுறைக்கு வாத்தொடங்கி, 30-6-2002 வரை செயலில் இருக்கும்.

**13. சீரமைக்கப்பட்ட சேமிப்புடன் இணைந்த மகளிர் சிறு வணிகக் கடன் திட்டம்**

நமது மாநிலத்தில் செயல்பட்டுவரும் கூட்டுறவு வங்கிகளும் மற்றும் பல்வேறு வணிக வங்கிகளும் வேளாண் மற்றும் வேளாண்மை சார்ந்த





தொழில்களுக்கும், சிறு தொழில்களுக்கும் கடன் அளித்து வருகின்றன. ஆயினும் நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறத்தில் வாழும் ஏழை எளிய மக்களுக்கு, சிறு வியாபாரம் செய்து அதன் வாயிலாக தமது வருமானத்தைப் பெருக்கிட போதுமான கடன் வசதிகள் இன்னும் முழுமையாக அவர்களைச் சென்றடையவில்லை. எனவே அரசு 1-1-1999 முதல் “சேமிப்புடன் இணைந்த மகளிர் சிறு வணிகக் கடன் திட்டம்” என்ற திட்டத்தைத் தொடங்கி சிறு வணிகத்தில் ஈடுபட்டுள்ள மகளிர் அவர்களது வாழ்க்கைத் திறனை உயர்த்திக்கொள்ளவும், அதேநேரத்தில் சேமிக்கும் பழக்கத்தை அவர்களிடம் உருவாக்கவும் வழி செய்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ் பூக்கள், காய்கறிகள், பழங்கள் முதலியனவற்றை சிறிய அளவில் வியாபாரம் செய்வோர் மற்றும் பெட்டிக்கடை நடத்தும் மகளிரும், தேவைக்கேற்ப ரூ.100, ரூ.200, ரூ.500, ரூ.1,500 என்ற அளவில் அதிகபட்சம் ரூ.5,000 வரை கடன் வசதி பெறலாம். பயனாளிகளின் தேவைக்கேற்ப தினசரி காலை அல்லது மாலை நேரத்தில் கடன் வழங்கப்படும். நூறு ரூபாய் கடனுக்கு அவர்கள் தினசரி ஒரு ரூபாய் மட்டுமே செலுத்த வேண்டி வரும். இந்த ஒரு ரூபாயிலும் 85 காசுகள் அவர்களது சேமிப்புக் கணக்கில் வரவு வைக்கப்படும். மீதமுள்ள 15 காசுகளில் 10 காசுகள் சேவைக்கட்டணமாகவும், 5 காசுகள் வட்டிக்காகவும், வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும். சேவைக் கட்டணமான 10 காசுகளை வசூலிப்பது தற்போது இத்திட்டத்தினைச் செயல்படுத்தும் வங்கிகளின் முடிவுக்கே விடப்பட்டுள்ளது. வங்கிகள் சேவைக் கட்டணம் வசூலிக்க வேண்டாம் என முடிவு செய்தால், இந்த 10 காசும் பயனாளிகளின் சேமிப்புக் கணக்கில் வரவு வைக்கப்படும். ஆறு மாதங்களுக்குப் பிறகு பயனாளிகள் அவர்கள் சேமிப்புக் கணக்கில் உள்ள தொகையை வட்டியுடன் பெற்றுக்கொள்ளலாம்.

இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் பயனாளிகள் ஒருவருக்கொருவர் கடனைத் திருப்பிச் செலுத்த பொறுப்பேற்று பிணை நிற்கலாம். பயனாளிகள் தமது வசதிக்கேற்ப அவர்களே நேரில் வந்து கடன் தொகையை வங்கியில் திருப்பிச் செலுத்தலாம் அல்லது அவர்கள் வியாபாரம் செய்யும் இடத்திலேயே வங்கி அலுவலரிடம் தொகை செலுத்தலாம்.

சீரமைக்கப்பட்ட சிறு வணிகக் கடன் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் உள்ள நகராட்சி, மாநகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் 28-2-2002 வரையில் 15,191 நபர்களுக்கு 358.34 கோடி ரூபாய் அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. தேசிய ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து

மறுநிதி பெற்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து, ஊரகப் பகுதிகளில், சுய உதவிக் குழுக்களுக்கு சிறு வணிகக் கடன் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. சுய உதவிக் குழுக்களைத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளது. இதுவரை இவ்வங்கிகளில் 23,932 சுய உதவிக் குழுக்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு, 4,375 சுய உதவிக் குழுக்களுக்கு 1,518.20 இலட்சம் ரூபாய் அளவிற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

செப்டம்பர் 2001-ல் இத்திட்டம் மேலும் பெரும்பாலான மகளிர் பயன்பெறும் வகையில் சீரமைக்கப்பட்டுள்ளது. அதன்படி அரசு மகளிர் சிறு வணிகக் கடன் திட்டத்திற்கான விதிமுறைகளைக் கீழ்க்கண்டவாறு மாற்றியமைத்துள்ளது:

* இத்திட்டத்தின்கீழ் வசூலிக்கப்படும் சேவைக் கட்டணத்தை கைவிடலாம்.
* வட்டி விகிதத்தை 18 சதவிகிதத்திலிருந்து 15 சதவிகிதமாகக் குறைக்கலாம்.
* பயனாளி திரும்பச் செலுத்தும் தொகையைச் சேமிப்புக் கணக்கில் வரவு வைப்பதைவிட அவருடைய கடன் கணக்கில் வரவு வைக்கலாம்.
* குறைந்துவரும் நிலுவை முறைப்படி (Reducing Balance) வட்டியைக் கணக்கிடலாம்.
* பயனாளிகள் பயன்பெறும்பொருட்டு வங்கிக்கு தினந்தோறும் தொகையைச் செலுத்துவதைவிட அவர்கள் விரும்பினால் வாரத்தில் ஒருமுறை செலுத்தலாம்.
* வாங்கிய கடனைச் செலுத்தும் காலத்தினை தற்போதுள்ள 118 நாட்களிலிருந்து 147 நாட்களாக நீட்டிக்கலாம்.
* சீரமைக்கப்பட்ட இத்திட்டத்தின்மூலம் பயனாளிக்கு வழங்கப்படும் ஒவ்வொரு 1,000 ரூபாய் கடனுக்கு பயனாளிகளின் நிகர சேமிப்பு ரூ.146.80 ஆக இருக்கும்.

**14. மகளிர் வளர்ச்சிப் பிரிவு**

மகளிருக்கு பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவி புரிந்திட ஒவ்வொரு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியிலும் மகளிர் வளர்ச்சிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.



**15. மகளிர் தொழில் முனைவோர் கடன் திட்டம்**

மகளிர் தொழில் முனைவோர் கடன் திட்டத்தின்கீழ் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளும், நகரக் கூட்டுறவு வங்கிகளும் ரூ.5.00 இலட்சம் வரையில் 60 சம தவணைகளில் திரும்பச் செலுத்தும் வகையில் 15 சதவிகித வட்டியில் சிறு தொழில்கள் மற்றும் சேவை மையங்கள் தொடங்கவும் கடன் வழங்கப்பட்டு வருகிறது.

இந்தப் புதிய மகளிர் தொழில் முனைவோர் கடன் திட்டம் 19-10-2001 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இக்கடன் திட்டத்தின்கீழ் 28-2-2002 வரை ரூ.40.55 இலட்சம் 67 மகளிர் தொழில் முனைவோருக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

**16. மாத வருமானம் பெறும் மகளிருக்கான கடன் திட்டம்**

மாத வருமானம் பெறும் மகளிருக்கான கடன் திட்டத்தின்கீழ் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளாலும், நகரக் கூட்டுறவு வங்கிகளாலும் ரூ.20,000 வரை கடனாக மாதச் சம்பளம் பெறும் மகளிருக்கு வழங்கப்பட்டு வருகிறது. கடன் பெறும் மகளிர் கடன் பெறவுள்ள வங்கியில் மூன்று ஆண்டிற்கு ஒரு தொடர் வைப்புக் (Recurring Deposit) கணக்கு தொடங்க வேண்டும். மேற்கண்ட கடன் 36 மாத தவணைகளிலும், 15 சதவிகித வட்டியிலும் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் 28-2-2002 வரையில் ரூ.40.32 இலட்சங்கள் 267 மகளிர் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**17. கருவூல வேளாண்மைப் பிரிவு**

உபரி நிதி முதலீட்டினை நிர்வகிக்கும்பொருட்டு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளிலும், நகரக் கூட்டுறவு வங்கிகளிலும் கருவூல மேலாண்மைப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கூட்டுறவு வங்கிகள் தனது உபரி நிதியினை அரசு கடனீட்டுப் பத்திரங்களிலும், கருவூலப் பட்டியல்களிலும் முதலீடு செய்ததில் ரூ.122.28 இலட்சம் அளவிற்கு வருமானம் ஈட்டியுள்ளன.

**18. தேசிய வேளாண்மை பயிர் காப்பீட்டுத் திட்டம்**

இந்திய அரசு "தேசிய வேளாண்மை பயிர் காப்பீட்டுத் திட்டம்" என்ற புதிய திட்டத்தை ராபி 1999-2000 முதல் அறிமுகப்படுத்தியுள்ளது. இருப்பினும், தமிழ்நாட்டில் இத்திட்டம் காரிஃப் 2000 முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் புதிய திட்டத்தின்கீழ் நெல்,

[2002 ஏப்ரல் 18

கேழ்வரகு, சோளம் போன்ற உணவுப் பயிர்களுக்கும், மணிலா, எள் போன்ற எண்ணெய் வித்துப் பயிர்களுக்கும் பருத்தி மற்றும் உருளை போன்ற வணிகப் பயிர்களுக்கும் காப்பீடு செய்யப்படுகிறது. சாதாரணமாக காப்பீடு செய்யும் தொகை உத்தரவாத மகசூலுக்கு 100 சதவிகிதமும் கூடுதல் காப்பீடாக 150 சதவிகிதம் வரை செய்யப்படுகிறது. மேலும் கடன்பெறும் விவசாயிகளோடு கடன் பெறாத விவசாயிகளுக்கும் இத்திட்டத்தின்கீழ் காப்பீடு செய்யப்படுகிறது.

ஒவ்வோர் ஆண்டும் எந்தெந்தப் பயிர் வகைகள் எந்தெந்த வட்டாரங்களில் காப்பீடு செய்யப்படும் என்பது மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழுவினால் முடிவு செய்யப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் மாநில அரசு, அரசு பங்கான பிரிமியம் மானியமாக 38.78 இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளது.

சிறு மற்றும் குறு விவசாயிகள் தங்களின் பயிர்களைக் காப்பீடு செய்யும்போது காப்பீட்டு நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய பிரிமியத் தொகையில் 50 சதவிகிதம் மானியமாக அளிக்கப்படுகிறது. மேற்படி மானியத் தொகையை 1:1 என்ற விகிதத்தில் மத்திய அரசும் மாநில அரசும் ஏற்றுக்கொள்கின்றன.

## (ஆ) நீண்ட காலக் கடன் வழங்கும் அமைப்பு

தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி மாநில அளவில் தலைமை வங்கியாகவும், 181 தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் வட்டம்/வட்டார அளவிலும் செயல்படுகின்றன. இவை தமது உறுப்பினர்களுக்கு வேளாண்மை காரியங்களுக்காகவும், சிறுபாசனத் திட்டம், தோட்டப் பயிர் மற்றும் மலைப் பயிர் வளர்த்தல், கோழி வளர்த்தல், பால் பண்ணை, ஆடு வளர்த்தல், டயர் வண்டி வாங்குதல், பட்டுப்பூச்சி வளர்த்தல் போன்ற வேளாண் சார்ந்த காரியங்களுக்காகவும் திட்ட அடிப்படையில் கடன்கள் வழங்குகின்றன. மேலும் சாதாரணக் கடன் திட்டத்தின்கீழ் கிணறுகளைப் பழுதுபார்த்தல், பாசனத்திற்கு நீர்க் குழாய்கள் அமைத்தல், டிராக்டர் மற்றும் விசை உழவுச் சாதனங்கள் வாங்குதல், கால்நடை தொழுவம் மற்றும் பண்ணை வீடு கட்டுதல் போன்ற காரியங்களுக்கும் நீண்ட காலக் கடன்கள் வழங்குகின்றன. இத்தகைய கடன்களைத் திரும்பச் செலுத்தும் காலம் 5 ஆண்டுகள் முதல் 15 ஆண்டுகள் வரையாகும்.



2002 ஏப்ரல் 18]

**1. தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி**

தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி கடன்கள் வழங்குவதற்குத் தேவைப்படும் நிதியை சாதாரண மற்றும் சிறப்புக் கடனீட்டுப் பத்திரங்களை வெளியிடுவதன்மூலம் திரட்டுகிறது. மாநில மற்றும் மைய அரசுகள், ஆயுள் காப்பீட்டுக் கழகம், பாரத ஸ்டேட் வங்கி மற்றும் அதன் பிரிவுகள், வணிக வங்கிகள், தமிழ்நாடு தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் பிற மாநிலக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் சாதாரண கடனீட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்கின்றன. தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, மாநில மற்றும் மத்திய அரசுகள் சிறப்புக் கடனீட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்கின்றன.

1995-96 முதல் 10 இலட்சம் ரூபாய் வரை அனுமதிக்கப்பட்ட மறுநிதி வசதியின் அளவு, தேசிய ஊரக வளர்ச்சி வங்கியால் 15 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. எனவே15 இலட்சம் ரூபாய்க்கு மேல் மறுநிதி பெறும் திட்டங்களுக்கும், புதிதாக அறிமுகப்படுத்தப்படும் திட்டங்களுக்கும் மட்டுமே தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் ஒப்புதல் தேவைப்படும். தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியால் தயாரிக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் தேசிய ஊரக வளர்ச்சி வங்கியால் அனுமதிக்கப்பட்ட திட்டங்கள் பற்றிய விவரம் பின்வருமாறு:

| வ. எண் | வருடம் | பரிந்துரைக் கப்பட்ட திட்டங் கள் | கேட்கப் பட்ட தொகை (ரூ. கோடி யில்) | தேசிய வங்கி யால் அனுமதிக் கப்பட்ட திட்டங் கள் | வழங்கப் பட்ட தொகை (ரூ. கோடி யில்) |
|---|---|---|---|---|---|
| 1. | 1997-1998 | 6 | 0.83 | 3 | 0.40 |
| 2. | 1998-1999 | 14 | 4.37 | 13 | 4.33 |
| 3. | 1999-2000 | 6 | 0.71 | 4 | 0.64 |
| 4. | 2000-2001 | 3 | 0.70 | 2 | 0.24 |
| 5. | 2001-2002 (31-1-2002 வரை) | 22 | 130.99 | 22 | 122.10 |

[2002 ஏப்ரல் 18

31-1-2002 வரை சாதாரண மற்றும் சிறப்புக் கடனீட்டு ஆவணங்கள் முறையே 2.00 கோடி ரூபாயும், 205.05 கோடி ரூபாயும் திருப்பி வழங்கப்பட வேண்டும்.

31-1-2002 அன்றைய நிலவரப்படி வங்கியின் சொந்த நிதி ஆதாரம் 253.12 கோடி ரூபாய் அளவில் இருந்தது. இதன் விவரம் பின்வருமாறு:

| | | (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. | பங்கு மூலதனம் | 39.34 |
| 2. | சட்டரீதியான காப்பீடு | 6.71 |
| 3. | மற்ற காப்பீடுகள் (தவணை கடந்த கடனுக்காக காப்பீடு உட்பட) | 207.07 |
| | மொத்தம் | 253.12 |

சாதாரண கடனீட்டுப் பத்திரங்கள் முதிர்வடையும்போது, அவற்றை மீட்க ஏதுவாக, இவ்வங்கி 'கடனீட்டுப்பத்திர மீட்பு நிதி' ஒன்றினைப் பராமரித்து வருகிறது. அந்நிதியில் 31-1-2002 அன்றைய தேதியில் ரூ.27.43 கோடி நிலுவை உள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியில் செயல்படும் கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வுப் பிரிவு, பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதில் எதிர்கொள்ளப்படும் சிக்கல்கள் குறித்தும், திட்டங்களினால் விவசாயிகளுக்குக் கிடைக்கப் பெற்ற பலன்கள் குறித்தும் ஆய்வு செய்கிறது. 31-1-2002 வரையில் 465 கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

## 2. கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள்

கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கு நீண்ட காலக் கடன்கள் வழங்க தேவைப்படும் நிதி ஆதாரத்தை தலைமை வங்கியான தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி அளிக்கிறது.

கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் ஒன்பதாவது திட்டக் காலத்தில் அளித்துள்ள நீண்ட காலக் கடன்கள் குறித்த விவரம் கீழே தரப்பட்டுள்ளது:—



2002 ஏப்ரல் 18]

| ஆண்டு (1) | குறியீடு (ரூ. கோடியில்) (2) | சாதனை (ரூ. கோடியில்) (3) |
|---|---|---|
| 1997-1998 | 226.00 | 191.60 |
| 1998-1999 | 248.60 | 212.51 |
| 1999-2000 | 273.46 | 202.17 |
| 2000-2001 | 300.80 | 202.17 |
| 2001-2002 (31-1-2002 வரையில்) | 250.00 | 70.06 |

நிதி நிறுவனங்கள் கடன் வழங்குவதில் ஏற்பட்டுள்ள மாறிவரும் சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிற துறைகளிலும் கடன் வழங்க, தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது:—

### (i) பண்ணைசாரா துறைகளில் நிதி வசதி அளித்தல்:

கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், கிராம கைவினைஞர், கைத்தொழில் வல்லுனர்கள் மற்றும் சிறுதொழில் செய்வோருக்குப் பண்ணைசாராக் கடன்கள் வழங்கும் திட்டம், 1990-91 முதல் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தினால் கிராம மக்கள் வேலைவாய்ப்பு பெறுவதுடன், தமது வருமானத்தையும் பெருக்கி பயன்பெற முடியும். தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் கடன் பெறுவதற்கான தகுதிகளைப் பொருட்படுத்தாமல், தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, 100 சதவிகிதம் மறுநிதியளிக்கிறது. இத்திட்டத்தின்கீழ் 2.00 இலட்சம் ரூபாய் வரை கூட்டுக் கடனாகவும், 15.00 இலட்சம் ரூபாய் வரை ஒருங்கிணைந்த கடனாகவும் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் கடந்த நான்கு வருடங்களிலும், 2001-2002 ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் வரையும், கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளால் வழங்கப்பட்டுள்ள பண்ணைசாராக் கடன்கள் குறித்த விவரம் கீழே தரப்பட்டுள்ளன:—

[2002 ஏப்ரல் 18

| வருடம் | கடன் அளித்த விவரம் (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1997-1998 | 75.54 |
| 1998-1999 | 83.07 |
| 1999-2000 | 75.57 |
| 2000-2001 | 61.09 |
| 2001-2002 (31-1-2002 வரை) | 14.10 |

**(ii) கிராமப்புறங்களில் சிறிய போக்குவரத்து வாகனங்கள் இயக்குபவர்களுக்கு கடன் வழங்குதல்**

கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், தனியாருக்கும், தனியாரைக் கொண்ட குழுக்களுக்கும், கூட்டுறவு நிறுவனங்களுக்கும், 16.2 டன்னுக்குமேல் எடை இல்லாத சரக்குப் பேருந்து, வேன், கார், ஆட்டோ ரிக்ஷா முதலான வாகனங்கள் வாங்குவதற்கு கிராமப்புறங்களில் கடன் வழங்குகின்றன. இத்திட்டத்தின்படி வாகன மதிப்பில் 85 சதவிகிதம் கடனாக வழங்கப்படும்.

**3. சமுதாயத்திலுள்ள நலிந்த பிரிவினருக்கான கடன் வசதி**

நலிந்த பிரிவினருக்கு 9-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வழங்கப்பட்ட கடன் விவரம் கீழே தரப்பட்டுள்ளது:—

| வருடம் | வழங்கப்பட்ட மொத்த கடன் (ரூ. கோடியில்) | நலிவுற்ற பிரிவினருக்கு வழங்கிய கடன் | வழங்கப்பட்ட மொத்த கடன தொகையில் நலிவுற்ற பிரிவினருக்கு வழங்கிய கடனின் விழுக்காடு |
|---|---|---|---|
| 1997-1998 | 191.60 | 36.83 | 19.2 |
| 1998-1999 | 212.51 | 41.83 | 19.7 |
| 1999-2000 | 202.17 | 48.44 | 24.0 |
| 2000-2001 | 202.17 | 49.86 | 25.0 |
| 2001-2002 (2002 ஜனவரி வரை) | 70.06 | 10.86 | 15.5 |



2002 ஏப்ரல் 18]

**4. கடன் வசூல்**

கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் கடன் வழங்கும் தகுதி, அவற்றின் கடன் வசூலைப் பொறுத்தே அமைகின்றது. கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், ஜூன் திங்கள் 30ஆம் நாளுடன் முடிவடையும் ஆண்டிற்குள், கடன் தவணையில் குறைந்தது 65 விழுக்காட்டிற்கும் குறையாமல் வசூல் செய்யாவிடில், அவை வரையறையற்ற கடன் வழங்கும் தகுதியைப் பெற வாய்ப்பு இல்லை. தேசிய ஊரக வளர்ச்சி வங்கி, கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், வரையறையற்ற மறுநிதி பெற நிர்ணயித்துள்ள வசூல் சதவிகித வரம்பை 70 சதவிகிதமாக 2001-2002 ஆம் ஆண்டு உயர்த்தியுள்ளது.

அதிக அளவு கடன் வசூல் எய்துவதே கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் இலாபத்துடன் இயங்குவதற்கு மிகவும் இன்றியமையாததாகும். இருப்பினும், வறட்சி மற்றும் வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களினால், வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு கடன் பெற்றவர்கள் முன்வராத நிலை போன்றவற்றால் தவணை தவறிய கடன் தொகை கூடுதலாக ஆகின்றன. எனவே இவ்வங்கிகள் கடன்தாரர்களை அடிக்கடி நேரில் சந்தித்து அவர்கள் கடனைத் திருப்பி செலுத்த ஊக்கப்படுத்தி கடன் வசூல் செய்ய வேண்டியது இன்றியமையாதது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் கடன் வசூல் அளவில் ஏற்பட்ட முன்னேற்றம் பின்வருமாறு:

| தேதியளவில் | கடன் நிலுவைத் தொகை (ரூ. கோடியில்) | தவணை கடந்த நிலுவைத் தொகை (ரூ. கோடியில்) | நிலுவை கேட்பில் தவணை கடந்த தொகையின் விழுக்காடு |
|---|---|---|---|
| 1997 ஜூன் 30 | 694.43 | 150.51 | 53.0 |
| 1998 ஜூன் 30 | 786.05 | 201.65 | 56.5 |
| 1999 ஜூன் 30 | 907.31 | 233.46 | 53.0 |
| 2000 ஜூன் 30 | 998.34 | 278.63 | 53.1 |
| 2001 ஜூன் 30 | 1057.14 | 339.66 | 50.0 |

## இ. நகர்ப்புறக் கடன்

நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகள், நகர்ப்புற மற்றும் நகரைச் சார்ந்த இடங்களிலுள்ள விவசாயிகளல்லாத மற்றும் ஏழை மக்களுக்கும் கடன்கள் வழங்குகின்றன. தற்போது தமிழகத்தில் 128 நகரக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. நகரப் பகுதிகளைச் சார்ந்த சிறு வியாபாரிகள், கைவினைஞர்கள் ஆகியோருக்கும், நடுத்தரப் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு வீட்டினை விரிவுபடுத்துதல் மற்றும் பழுதுபார்த்தல் ஆகிய பணிகளுக்கும், சிறிய அளவிலான தொழில் மற்றும் குடிசைத் தொழில் அமைத்திடல் போன்றவற்றிற்கும் கடன் வழங்கி உதவி வருகின்றன. 31-1-2002 வரையில், நகர்ப்புறம் மற்றும் நகர்ப்புறத்தைச் சார்ந்த மக்களுக்கு குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடனாக ரூ.1831.52 கோடி அளவிற்கு கடன்களை இவ்வங்கிகள் வழங்கி உள்ளன. இவ்வங்கிகளின் வைப்புத்தொகை 31-3-2002 அன்றைய நிலவரப்படி ரூ.2926.38 கோடி ஆகும். இந்திய தலைமை வங்கி நிர்ணயம் செய்துள்ள நெறிமுறைகளின்படி, இவ்வங்கிகள் வழங்கும் மொத்தக் கடன் தொகையில் 60 விழுக்காட்டிற்குக் குறையாமல் முன்னுரிமை துறைகளுக்கு வழங்கிட வேண்டும். அவ்வாறு வழங்கும் முன்னுரிமைக் கடன் தொகையில், 25 விழுக்காட்டிற்குக் குறையாமல் நலிவுற்ற பிரிவினருக்கான கடனாகவும் இருந்திடல் வேண்டும்.

### 2. அரசின் உதவியுடன் செயல்படுத்தப்படும் சிறப்புத் திட்டம்

மற்ற நிதி நிறுவனங்களைப் போன்றே, நகரக் கூட்டுறவு வங்கிகளிலும் அவற்றின் மூலதனம் உறுப்பினர்கள் பெறும் கடன்களையே சார்ந்துள்ளது.

நகரக் கூட்டுறவு வங்கிகளில் உள்ள ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த உறுப்பினர்களின் கடன் பெறும் சக்தியை அதிகரிக்கும் வகையில், தெரிவுசெய்யப்பட்ட ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும், வட்டியில்லாக் கடனாக 500 ரூபாய் வழங்கப்படுகிறது. இக்கடன் ஐந்து ஆண்டு காலத்தில் சம தவணைகளில் வசூலிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 1992-93ஆம் ஆண்டிலிருந்து 2001-2002ஆம் ஆண்டு வரை, நகரக் கூட்டுறவு வங்கிகளின் உறுப்பினர்களில் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த 17,017 நபர்களுக்கு 85.00 இலட்சம் ரூபாய் பங்கு மூலதனக் கடனாக வழங்கப்பட்டது. இத்திட்டம் 2002-2003 ஆம் ஆண்டிலும் நீட்டிக்கப்படும்.



அதேபோன்று, நகரக் கூட்டுறவு வங்கிகளில் உள்ள பெண் உறுப்பினர்களின் கடன் வாங்கும் சக்தியை அதிகரிக்க, தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு பெண் உறுப்பினருக்கும் வட்டியில்லாக் கடனாக 500 ரூபாய் வழங்கப்படுகிறது. இக்கடன் ஐந்து ஆண்டு காலத்தில் சம தவணைகளில் வசூலிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக ஒவ்வோர் ஆண்டும் 5 இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 1998-1999-லிருந்து 2000-2001 ஆம் ஆண்டு வரை 3,000 பெண் உறுப்பினர்களுக்கு 15 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது.

### 3. நகர்ப்புறக் கடன்கள் மூலம் வேளாண்மை சார்பற்ற கடன்கள்

நகரக் கூட்டுறவு வங்கிகள் வேளாண்மைசாரா பிரிவினைச் சார்ந்த குடிசைத் தொழில் மற்றும் சிறு தொழில்களுக்கும் கடன் வழங்கி வருகின்றன. 2001-2002 ஆம் ஆண்டில், 31-1-2002 வரை வேளாண்மை சாரா சிறு மற்றும் குடிசைத் தொழில்களுக்கு 145.34 கோடி ரூபாய் அளவிற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 62,384 உறுப்பினர்கள் பயனடைந்துள்ளனர்.

[2002 ஏப்ரல் 18

## அத்தியாயம் 3

## தமிழ்நாட்டில் தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்

புதுடெல்லி, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக நிதி உதவியுடன், விவசாய மற்றும் தொடர்புடைய பிரதம கூட்டுறவுகளின் வணிக அளவை பன்முகப்படுத்தி பெருக்க, மாநிலத்தில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. சமுதாயத்தை அடிப்படையாகக் கொள்ளாமல், பகுதி சார்ந்த அடிப்படையிலான வளர்ச்சி காண்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மேலும், கூட்டுறவுகளின் உள்ளமைப்பு வசதிகளை செம்மைப்படுத்துவதும் இதன் நோக்கமாகும். இத்திட்டத்தின்படி கீழ்க்கண்ட முக்கியமான நோக்கங்களுக்கு உதவி அளிக்கப்படுகின்றது:

* திட்ட அறிக்கை தயாரித்தல்
* உள்ளமைப்பு வசதிகளை உருவாக்குதல்
* நடைமுறை மூலதனத்தை அதிகரிக்க வங்கிகளிலிருந்து நிதி உதவி பெற விளிம்புத் தொகை உதவி அளித்தல்
* தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் சம்பளம் பெறும் மேலாண்மையாளர்களுக்குப் பயிற்சி அளித்தல்
* உறுப்பினர் கல்வி மற்றும் விளம்பரம் செய்தல்
* கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களின் செயல் மேம்பாட்டிற்கு ஊக்கத் தொகை அளித்தல்; மற்றும்
* மின்னணு விவர வகைப்பாட்டு முறை உள்ளிட்ட கண்காணிப்பு மற்றும் திட்டச் செயலாக்கம்.

2. விருதுநகர், தென்னாற்காடு, கோயம்புத்தூர், தருமபுரி, திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்த அரசு இதுவரை ஒப்புதல் அளித்துள்ளது.



2002 ஏப்ரல் 18]

## அத்தியாயம் 4

## கூட்டுறவின் மூலம் வேளாண் இடுபொருட்கள் விநியோகம் செய்தல்

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆகிய நிறுவனங்கள், இரசாயன உரங்கள் மற்றும் இதர விவசாய இடுபொருட்களான விதைகள், பூச்சி மருந்துகள் மற்றும் விவசாய உபகரணங்களை 4,355 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் 82 மேலாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம், 5,678 சில்லறை உர விற்பனை நிலையங்கள் வழியாகத் தமிழ்நாடு முழுவதும் விநியோகம் செய்து வருகின்றன. இவ்விடு பொருட்கள், சங்க அங்கத்தினர்கள் பெறும் பயிர்க் கடனில் பொருட் பகுதியாகவும், சங்க அங்கத்தினர் மற்றும் அங்கத்தினர் அல்லாதவர்களுக்கு ரொக்க விற்பனை மூலமாகவும் விநியோகம் செய்யப்படுகின்றன.

2. 1998-99, 1999-2000, 2000-2001 மற்றும் 2001-2002 (31-1-2002 வரை) ஆண்டுகளில் விநியோகம் செய்யப்பட்ட இரசாயன உரங்கள் மற்றும் இடுபொருட்கள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

(ரூபாய் கோடியில்)

| வருடம் | இரசாயன உரங்கள் | விதைகள் | பூச்சிக் கொல்லி மருந்துகள் | விவசாய உபகரணங்கள் |
|---|---|---|---|---|
| 1998-1999 | 237.49 | 2.38 | 2.98 | 0.57 |
| 1999-2000 | 263.71 | 3.05 | 3.24 | 0.82 |
| 2000-2001 | 252.00 | 2.42 | 3.05 | 0.79 |
| 2001-2002 (31-1-2002 வரையிலான விநியோகம்) | 197.95 | 2.33 | 1.54 | 0.66 |
| 2002-2003 (குறியீடு) | 300.00 | 3.75 | 4.50 | 1.32 |

[2002 ஏப்ரல் 18

## அத்தியாயம் 5

## கூட்டுறவு விற்பனை, பதனிடல் மற்றும் பண்டகச் சேமிப்பு

### 1. கூட்டுறவு விற்பனை

தற்போது தமிழ்நாட்டில் 119 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. 1959 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தலைமைச் சங்கமான தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் இயங்கிவரும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் வாயிலாக சேவை செய்து வருகிறது. தஞ்சாவூர், திருவாரூர், மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத் தேவைகளை திருவாரூரில் உள்ள தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் நிறைவு செய்து வருகிறது.

### தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் வாயிலாக இரசாயன உரங்கள் மற்றும் பூச்சி கொல்லி மருந்துகள் ஆகியவற்றை விநியோகித்து, மொத்த விற்பனை அமைப்பாக செயல்படுகின்றது. 1970 ஆம் ஆண்டில் திருவாரூர் மாவட்டத்தில் மன்னார்குடி அருகில் பாமணி என்ற இடத்தில் இவ்விணையத்தால் நிறுவப்பட்ட உரக்கலவை ஆலை, நாளொன்றுக்கு 120 டன் என்.பி.கே. உரக்கலவையைத் தயாரித்து வருகிறது. இவ்விணையம் மாநிலத்தில் மேலும் 8 இடங்களில் உரக்கலவை மையங்களை நடத்தி வருகிறது. பருத்தி, நெல், மிளகாய், சூரியகாந்தி விதைகள், தனியா, உளுந்து போன்ற வேளாண் விளை பொருட்களுக்கு ஆதரவு விலைகளை வழங்கும் வகையில், தேசிய வேளாண்மைக் கூட்டுறவு விற்பனை இணையத்தின் முகவராக தமிழ்நாட்டில் இவ்விணையம் செயல்பட்டு வருகிறது. 27,640 மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட 36 சொந்த கிடங்குகளையும், 12,100 மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட 21 வாடகை கிடங்குகளையும், சென்னையில் பேசின் பிரிட்ஜில் 1,350 மெட்ரிக்டன் கொள்ளளவு கொண்ட ஒரு குளிர்ப்பதனக் கிடங்கினையும், சென்னைப் புறநகர் பகுதியிலுள்ள கோயம்பேட்டில் 2,500 மெட்ரிக்டன் கொள்ளளவுள்ள மற்றொரு குளிர் பதனக் கிடங்கினையும் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் நடத்தி வருகிறது.



2002 ஏப்ரல் 18]

*2001-2002 ஆம் (2002 ஜனவரி வரை) ஆண்டில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையமும், மற்ற நிறுவனங்களும் விற்பனை செய்த வேளாண் இடுபொருட்களின் விவரம் பின்வருமாறு:—*

| வ. எண் | பொருள் | கூட்டுறவு விற்பனை இணையம் | | மற்ற நிறுவனம் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அளவு (என்.பி.கே. டன்னில்) | மதிப்பு (ரூ. இலட்சத்தில்) | அளவு (என்.பி.கே. டன்னில்) | மதிப்பு (ரூ. இலட்சத்தில்) | அளவு (என்.பி.கே. டன்னில்) | மதிப்பு (ரூ. இலட்சத்தில்) |
| 1 | இரசாயன உரங்கள் | 129053 | 15663.29 | 29120.145 | 4131.88 | 158173.145 | 19795.17 |
| 2. | பாமணி உர உற்பத்தி (மெ. டன்னில்) | 10673 | 786.60 | - | - | 10673 | 786.60 |
| 3. | பாமணி உர விற்பனை 17:17:17 | 9987 | 788.97 | - | - | 9987 | 788.97 |
| 4. | பூச்சிக் கொல்லி மருந்துகள் வழங்கியது | - | 21.20 | - | 132.40 | - | 153.60 |
| 5. | விதைகள் வழங்கியது | - | 15.48 | - | 217.68 | - | 236.16 |
| 6. | வேளாண் கருவிகள் வழங்கியது. | - | 0.57 | - | 62.58 | - | 65.82 |

இந்த ஆண்டு, தேசிய வேளாண்மைக் கூட்டுறவு இணையத்திற்காக ஆதார விலைத் திட்டத்தின்படி, கொப்பரைத் தேங்காய் கொள்முதல் செய்ய, தமிழ்நாடு கூட்டுறவு இணையம் அனுமதிக்கப்பட்டது. 31-3-2002 வரை 2939.300 மெட்ரிக் டன்கள் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் செய்யப்பட்டது. அதன் மதிப்பு ரூ.969.97 இலட்சம் ஆகும்.

### அ. வேளாண்மை விளைபொருட்கள் விற்பனை

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் வேளாண் அங்கத்தினர்களுக்கு விவசாய விளைப் பொருட்களைப் பதனிடுதல், சேமித்தல் தவிர இடைத்தரகர்களின் தலையீடின்றி நல்ல விலைக்கு அவர்களது

[2002 ஏப்ரல் 18

வேளாண் விளைபொருட்களை விற்பதற்கும் உதவி புரிகின்றன. வேளாண் பொருட்களை ஏல விற்பனை மூலம் வியாபாரிகளுக்கு விற்கும் பணியிலும், விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்து நுகர்வோருக்கு விற்பனை செய்யும் பணியிலும் இச்சங்கங்கள் ஈடுபடுகின்றன. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், வேளாண் விளைபொருட்களை கூட்டுறவு விற்பனைச் சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்து, நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு அவற்றை விற்பனை செய்வதுடன், சந்தை விலை சாதகமாக அமையும்போது வியாபாரிகளுக்கும் விற்பனை செய்கிறது.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், வேளாண் விளைபொருட்களைப் பெரிய அளவில் விற்பனை செய்கிறது.

வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்வதற்கு *2001-2002* ஆம் ஆண்டில் (தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்/ தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் உட்பட) கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடு மற்றும் 2002 ஆம் ஆண்டு ஜனவரி வரை எய்திய முன்னேற்றம் பற்றிய விவரங்களும் பின்வருமாறு:—

| வ. எண் | பொருள் | 2001-2002-ஆம் ஆண்டுக் குறியீடு (ரூ. லட்சத்தில்) | 2001-2002 ஆம் ஆண்டு எய்திய முன்னேற்றம் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | நெல் மற்றும் அரிசி | 40,000.00 (1–9) | 1491.36 |
| 2. | உணவு தானியங்கள் | | 206.96 |
| 3. | பருத்தி | | 9474.02 |
| 4. | எண்ணெய் வித்துக்கள் | | 1457.75 |
| 5. | பருப்பு வகைகள் | | 485.04 |
| 6. | மிளகாய் மற்றும் புளி | | 114.14 |
| 7. | வாசனைப் பொருட்கள் | | 25.45 |
| 8. | காய்கறிகள் | | 1934.18 |
| 9. | மற்றவை | | 4988.37 |
| 10. | கரும்பு | 27,500.00 | 11543.19 |
| | மொத்தம் | 67,500.00 | 31,720.46 |



2002 ஏப்ரல் 18]

*2002-2003* ஆம் ஆண்டு வேளாண் விளைபொருட்கள் விற்பனைக்கு *725* கோடி ரூபாயைக் குறியீடாக (மற்ற பொருட்களுக்கு *425* கோடி ரூபாய் மற்றும் கரும்புக்கு *300* கோடி ரூபாய்) நிர்ணயிக்கலாமென முடிவெடுக்கப்பட்டுள்ளது.

**ஆ. விற்பனையுடன் இணைந்த கடன் திட்டம்**

இத்திட்டத்தின்படி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் கடன் பெறும் உறுப்பினர்கள், கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்படுகிறார்கள். கடன் பெற்ற உறுப்பினர்கள் கொண்டுவரும் வேளாண் விளைபொருட்களை அவர்கள், அதிக இலாபம் பெறும் வகையில் அவர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய விலைக்கு பகிரங்க ஏலம் மூலம் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விற்பனை செய்து தருகின்றன. அவ்வாறு பெறப்படும் விற்பனைத் தொகையிலிருந்து, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குச் சேரவேண்டிய கடன் தொகையைப் பிடித்தம் செய்து, அவ்வங்கிகளுக்குச் செலுத்தி விடுகின்றன. *2001-2002* ஆம் ஆண்டிற்கு குறியீடு *2.00* கோடி ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டதில், *2002* ஜனவரி வரை *1.07* கோடி ரூபாய் கடன் தொகைகள் இத்திட்டத்தின் மூலம் வசூல் செய்யப்பட்டுள்ளன. *2002-2003* ம் ஆண்டுக் குறியீடு *2.20* கோடி ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**இ. நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளுடன் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் இணைப்பு**

ஒருபுறம் உற்பத்தியாளர்களின் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்கவும், மறுபுறம் நுகர்வோருக்கு அத்தியாவசியமான பொருட்களை நியாயமான விலையில் கிடைக்கச் செய்யவும், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கும், கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலைகளுக்கும் இடையே இணைப்புப் பாலமாகச் செயல்படுகின்றன.

*2001-2002* ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடு *10.00* கோடி ரூபாய் ஆகும். ரூ.*11.60* கோடி மதிப்புள்ள வேளாண் விளைபொருட்களை நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் மூலம் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், *2002* ஜனவரி மாதம் வரை விற்பனை செய்துள்ளன. இவ்வினத்தில் *2002-2003* ஆம் ஆண்டுக்கான குறியீடு *11.00* கோடி ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

[2002 ஏப்ரல் 18

**ஈ. விளைபொருட்களை ஈடாகப் பெற்றுக் கடன் வழங்குதல்**

சந்தை விலை சாதகமாக நிலவும்போது தங்களது வேளாண் விளைபொருட்களை விற்று விவசாயிகள் நல்ல இலாபம் பெற ஏதுவாக, அதுவரை அவர்களது விளைபொருட்களை ஈடாகப் பெற்று, அவர்களுக்குத் தேவையான கடன்களைக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அளித்து வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் 2001-2002 ஆம் ஆண்டின் குறியீடான 20.00 கோடி ரூபாயில் 2002 ஜனவரி மாதம் வரை 9.39 கோடி ரூபாய் அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. 2002-2003 ஆம் ஆண்டிற்கு 24.00 கோடி ரூபாய் குறியீடாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**பதப்படுத்தும் அலகுகள்**

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் கீழ்க்காணும் பலவகைப்பட்ட பதனிடும் அலகுகள் விவசாயிகளுக்குப் பதனிடும் வசதிகளைக் குறைந்த செலவில் செய்து தருகின்றன. அவற்றுக்குப் பங்கு மூலதனமாகவும், கடனாகவும், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நிதி உதவி அளிக்கப்படுகிறது. மேலும் மாநில அரசும் நிதி உதவி அளித்து வருகிறது. 102 அலகுகளில், 56 அலகுகள் செயலற்றவையாகவும், பயனற்றனவாகவும் உள்ளன. முழுவதாகப் பயன்படுத்தப்படாத அலகுகளில் உள்ள இயந்திரச் சாதனங்களை விற்றுவிடுமாறு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

| வ. எண் | பதப்படுத்தும் அலகுகளின் பெயர் | அலகுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அரிசி அரைவை ஆலை | 34 |
| 2. | பருத்தி அரைவை ஆலை | 17 |
| 3. | கடலை உடைப்பு இயந்திரங்கள் | 11 |
| 4. | எண்ணெய் தொகுப்பு மற்றும் எண்ணெய் பிழியும் ஆலை | 14 |
| 5. | பழம் பதப்படுத்தும் அலகு | 3 |
| 6. | காப்பி அரைவை ஆலை | 3 |
| 7. | காப்பி சுத்தப்படுத்தும் ஆலை | 1 |
| 8. | மரவள்ளிக் கிழங்கு ஆலை | 1 |



2002 ஏப்ரல் 18]

| வ. எண் | பதப்படுத்தும் அலகுகளின் பெயர் | அலகுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 9. | மஞ்சள் அரைவை ஆலை | 2 |
| 10. | மாவு ஆலை | 4 |
| 11. | பருப்பு ஆலை | 2 |
| 12. | சேமியா அலகு | 2 |
| 13. | குளிர்ப்பதனக் கிடங்கு | 2 |
| 14. | புளி பதப்படுத்தும் அலகு | 1 |
| 15. | சீயக்காய் அரைவை ஆலை | 2 |
| 16. | விதை பதனிடும் அலகு | 2 |
| 17. | சோப்பு உற்பத்தி ஆலை | 1 |
| | மொத்தம் | 102 |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள இந்த ஆலைகள் 1999-2000 ம் ஆண்டில் 36,586 மெட்ரிக்டன் பொருட்களையும், 2000-2001 ஆம் ஆண்டில் 36,510 மெட்ரிக் டன் பொருட்களையும், 2001-2002 ஆம் ஆண்டில் (31-1-2002 வரை) 25,341 மெட்ரிக் டன் பொருட்களையும் பதப்படுத்தியுள்ளன.

**3. பண்டக சேமிப்பு கிராமிய மற்றும் விற்பனைக் கிடங்குகள்**

தற்போதுள்ள கிடங்குகளின் எண்ணிக்கையும் கொள்ளளவும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| எண்ணிக்கை | கிடங்குகளின் எண்ணிக்கை | கொள்ளளவு இலட்சம் மெட்ன்னில் |
|---|---|---|
| அ. ஊரகக் கிடங்குகள் | 5055 | 5.75 |
| ஆ. விற்பனைக் கிடங்குகள் | 261 | 1.33 |
| இ. நுகர்வோர் கிடங்குகள் | 50 | 0.31 |
| மொத்தம் | 5366 | 7.39 |

[2002 ஏப்ரல் 18

## அத்தியாயம்-6

## நுகர்வோர் கூட்டுறவு

**அமைப்பு**

தமிழ்நாட்டில் நுகர்வோர் கூட்டுறவு கட்டமைப்பானது, தலைமை நிலையில் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தையும், மாவட்ட அளவில் 35 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலைகளையும், தொடக்க நிலையில் 2,955 மாணவர் கூட்டுறவு பண்டகசாலைகள் உள்ளிட்ட 3,550 தொடக்க கூட்டுறவு பண்டக சாலைகளையும் கொண்ட மூன்றடுக்கு அமைப்பாக இயங்கி வருகிறது.

**தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம்**

தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் தனது முக்கிய நோக்கத்திற்கு இணங்க, அண்மையில் இதர மாநிலங்களிலிருந்து வேளாண் விளைபொருட்களை, அதன் உற்பத்தியாகும் இடத்திலேயே கொள்முதல் செய்திட தன்னை ஈடுபடுத்திக்கொண்டுள்ளது. இவ்விணையம் மொத்த மற்றும் தொடக்க நிலையிலான பண்டக சாலைகளுக்குப் பெரிய அளவில் பட்டாசு கொள்முதலுக்கு ஏற்பாடு செய்வதுடன் காகித கொள்முதல் மற்றும் வழங்கும் பணியையும் செய்து வருகிறது. மாநிலத்திலுள்ள கூட்டுறவு அச்சகத்தின் காகித கொள்முதலானது ஒருங்கிணைக்கப்பட்டு, இவ்வியாபாரத்தில் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் ஒருங்கிணைப்பு முகமையாகச் செயல்பட்டு வருகிறது.

**கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள்**

கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் கட்டுப்பாட்டுப் பொருட்களை விற்பனை செய்வதுடன், கட்டுப்பாடற்ற பொருட்களையும் வாங்கி விற்பனை செய்து வருகின்றன.

சில கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள், நிதிப் பற்றாக்குறையினால் நலிவடைந்துள்ளன. அவற்றைப் புனரமைக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புனரமைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக, தன் விருப்ப ஓய்வுத் திட்டமும் செயல்படுத்தப்படுகிறது.



2002 ஏப்ரல் 18]

**நுகர்பொருள் சில்லறை விற்பனை**

நுகர்பொருள்களைப் பொதுமக்களுக்கு விற்பனை செய்வது இத் துறையின் பெரும் நோக்கங்களில் ஒன்றாகும். 2001-2002 ஆம் ஆண்டில் (31-01-2002 வரை) 1812.10 கோடி ரூபாய் அளவிற்கு நுகர்பொருள்கள் விற்பனை மேற்கொள்ளப்பட்டது.

**மதுபான விற்பனை**

நுகர்வோர் கூட்டுறவு எதிர்கொள்ளும் சிக்கல்கள் மிகவும் கூடுதலாகிக்கொண்டே வருகின்றன. அதன் நோக்கம், நுகர்வோர் தேவையை நிறைவேற்றுவதே என்பதால், மது அருந்தும் நுகர்வோர்களுக்கு அது மறுக்கப்படவில்லை. கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் மற்றும் தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகளால் மதுபானக் கடைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த இலாபகரமான வர்த்தகமானது நட்டமடைந்த சில பண்டகசாலைகள் இலாபம் ஈட்ட உதவியது. அதே சமயம், தரமான மது கிடைக்கவும் உதவி செய்தது. 'டாஸ்மாக்' அளித்திடும் மதுவகைகளை மட்டும் விற்பதன் மூலமாக கூட்டுறவும், ஆயத்தீர்வை மூலமாக அரசுக்கு வருமானத்தை உயர்த்த தன்னளவில் உதவியது. 31-01-2002 வரை கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் 107 மதுபானக் கடைகள் மூலம் ரூ.5146.87 இலட்சம் அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## அத்தியாயம்-7

## தனிவகைச் சங்கங்கள்

### கூட்டுறவு அச்சகங்கள்

தமிழ்நாட்டில் மொத்தம் 26 கூட்டுறவு அச்சகங்கள் இயங்கி வருகின்றன. இவை அனைத்தும் கூட்டுறவு நிறுவனங்களின் அச்சுப் பணிகளையும், அரசு அலுவலகங்கள் மற்றும் உள்ளாட்சித் துறை அலுவலகங்கள் (ஊராட்சி ஒன்றியம், நகராட்சி முதலியன) ஆகியவற்றின் அச்சுப் பணிகளையும் மேற்கொள்கின்றன.

31-03-2001 தேதிய நிலவரப்படி, கூட்டுறவு அச்சகங்களில் மொத்தம் 12,817 உறுப்பினர்கள் இருந்தனர். செலுத்தப்பட்ட பங்குத்தொகை ரூ.168.35 இலட்சம் ஆகும். 2001-2002 ஆம் ஆண்டிற்கு வியாபார இலக்கு ரூ.26.00 கோடியாக நிர்ணயிக்கப்பட்டது. அதில் 2002 ஜனவரி வரையில் ரூ.18.30 கோடி எய்தப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டிற்கு வியாபார இலக்கு ரூ.27.00 கோடியாக நிர்ணயிக்கப்படவுள்ளது.

### உப்புத் தொழிலாளர்கள் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கங்கள்

உப்பு உற்பத்தியாளர்களின் ஏழ்மை நிலையைப் போக்கி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் உயர்வான நோக்கத்துடன், உப்பு உற்பத்தியாளர்கள் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. இம்மாநிலத்தில் இயங்கிவரும் 10 உப்பு உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் 5 சங்கங்கள் தனியாக ஆதி திராவிட மக்களுக்காக மட்டுமே அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வகை உப்பு உற்பத்தியாளர் சங்கத்தின் மூலம் அயோடின் கலந்த உப்பினை உற்பத்தி செய்ய தாட்கோ திட்டத்தின்கீழ் அரசால் நிதி உதவி அளிக்கப்படுகிறது. வேறு பல திட்டங்களுக்கும் உதவிகள் அளிக்கப்படுகின்றன.

### தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்

தற்போது இம்மாநிலத்தில் 214 தொழிலாளர் தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அதில் 40 சதவிகித சங்கங்கள் தருமபுரி, சேலம், திருச்சி மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் உள்ளன. 40 தொழிலாளர் தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்,





ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்காக மட்டுமே இயங்கி வருகின்றன. ஒப்பந்த அடிப்படையில் வேலைவாய்ப்பினை அளித்து, அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் உயரிய பணியில் இவை ஈடுபட்டுள்ளன. இச்சங்கங்களுக்குத் தேவையான பங்கு மூலதனம், நடைமுறை மூலதனம் மற்றும் விளிம்புத் தொகை அளித்தல் முதலான பல்வேறு இனங்களுக்கு மைய அரசு நிதி உதவி வழங்கி வருகிறது.

### இதர தனி வகைச் சங்கங்கள்

சமூகத்தில் முடிதிருத்துதல் மற்றும் சலவைத் தொழில்களைச் செய்யும் நலிவுற்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு, முடிதிருத்துவோர் மற்றும் சலவையாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டன..

### மலைவாழ் பழங்குடியினர் மேம்பாடு

பழங்குடியினர் மக்களின் நலம் காத்திட, தற்போது தமிழ்நாட்டில் 19 மலைவாழ் மக்கள் பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களில், அப்பகுதிவாழ் பழங்குடியினத்தைச் சேர்ந்த 8,383 பேர்களும், பழங்குடியினரல்லாத 6,547 பேர்களும் உறுப்பினர்களாக உள்ளனர். பழங்குடியின மக்களின் மிகவும் பின்தங்கிய பொருளாதார நிலையினைக் கருத்திற்கொண்டு, அரசு இச்சங்கங்களுக்குப் பழங்குடியினர் துணைத் திட்டத்தின்படி தொடர்ந்து நிதி உதவியினை வழங்கி வருகின்றது. இச்சங்கங்கள் விவசாயம் மற்றும் பிற உற்பத்தி காரியங்களுக்காக வட்டியில்லாக் கடன்களை அளிக்கின்றன. இச்சங்கங்களின் மூலம் பழங்குடியின மக்கள் பயனடையும் வகையில், இச்சங்க உறுப்பினர்களுக்கு பங்கு மூலதன மானியம், வட்டி மானியம், போக்குவரத்து மானியம், வாகன ஓட்டுநர் ஊதியம் மற்றும் வாகனப் பராமரிப்பு மானியம் ஆகிய இனங்களுக்கு அரசு தொடர்ந்து நிதி உதவி வழங்கி வருகிறது. இச்சங்கங்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் ஒவ்வோர் ஆண்டும் சில புதிய திட்டங்களுக்கும் அரசு மானிய உதவி வழங்கி வருகிறது.

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்காக, 1997-98-ல் ரூ.84.64 இலட்சம் வழங்கப்பட்டது. அதன்பின் ஒவ்வோர் ஆண்டும் ரூ.90.00 இலட்சம் வழங்கப்படுகிறது.

[2002 ஏப்ரல் 18

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மலைவாழ் மக்கள் பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடு மற்றும் பல்வேறு நடவடிக்கைகளில் எய்திய முன்னேற்றம் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:—

| ஆண்டு. | கடன் வழங்கியது. | வேளாண் விளை பொருள் கொள்முதல். (ரூ. இலட்சத்தில்.) | வேளாண் இடு பொருள் வழங்கியது. | சிறுவனப் பொருள் சேகரம். | நுகர் பொருள் விநியோகம். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1997-1998 | 734.52 | 123.77 | 110.08 | 46.08 | 427.01 |
| 1998-1999 | 580.82 | 61.43 | 115.00 | 64.96 | 511.52 |
| 1999-2000 | 535.28 | 94.89 | 113.46 | 85.29 | 643.57 |
| 2000-2001 | 478.18 | 85.06 | 116.30 | 65.46 | 765.92 |
| 2001-2002 (31-01-2002 வரை.) | 372.97 | 72.64 | 120.31 | 43.12 | 616.98 |



2002 ஏப்ரல் 18]

## அத்தியாயம்-8

## கூட்டுறவுக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி.

### மக்கள் தொடர்பு மற்றும் விளம்பரப் பணிகள்

கூட்டுறவு இயக்கம் செம்மையான முறையில் வளர்ச்சியடைந்து வருவதைக் கண்காணிக்கவும், பல்வேறு துறைகளின் கட்டுப்பாட்டில் உள்ள சங்கங்களின் உறுப்பினர்களுக்கும், அலுவலர் அல்லாதவர்களுக்கும் கூட்டுறவுக் கல்வி மற்றும் பயிற்சி அளிக்கவும், கூட்டுறவு பற்றிய விளம்பரங்கள் ஆகிய பணிகளைச் செய்திடவும், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் 1914 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியமும், மாவட்டங்களில் உள்ள 29 மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களும், கூட்டுறவுக் கல்வி, பயிற்சி, விளம்பரம் ஆகியவற்றில் உறுப்பினர்களுக்கு மட்டுமல்லாது பொதுமக்களுக்கும் பயிற்சியளிக்கின்றன.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் (1) கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி (2) கூட்டுறவுக் கல்வி நிதி எனும் இரு நிதிகளைப் பராமரித்து வருகிறது.

அனைத்து மாநில தலைமைக் கூட்டுறவுச் சங்கங்களும், மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களும் மற்றும் கூட்டுறவுப் பயிற்சி நிறுவனங்களும், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் அங்கத்தினர்களாக உள்ளன. இவ்வங்கத்தினர் சங்கத்திடமிருந்து வசூலிக்கும் தொகையான வருடாந்திர சந்தா, கூட்டுறவு வெளியீடுகள் மூலம் கிடைக்கும் வருமானம், கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதிகளுக்கு பிற சங்கங்களிலிருந்து வசூலிக்கப்படும் நிதிகளையும் கொண்டு தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் தனது பல்வேறு திட்டங்களுக்குத் தேவையான நிதி ஆதாரத்தைத் திரட்டுகிறது.

கூட்டுறவினால் ஏற்படும் நன்மைகள் மற்றும் பயன்கள் குறித்து மக்கள் தெளிவுற அறிந்திட புத்தக வெளியீடுகள், கண்காட்சிகள், விளம்பரச் சுவரொட்டிகள், திரை அரங்குகளில் ஸ்லைடுகள், திரைக் காட்சிகள் முதலான வசதிகளைப் பயன்படுத்தி, கூட்டுறவுக் கொள்கைகளைப் பரப்பும் நடவடிக்கைகளை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் மேற்கொள்கின்றது. மேலும், உறுப்பினர் கல்வி நிகழ்ச்சிகளையும், மாணவர்களுக்கான சிறப்பு நிகழச்சிகளையும் கூட்டுறவு ஒன்றியம் வானொலி மற்றும் தொலைக்காட்சிகள் வழியாக நடத்தி வருகின்றது.

அனைத்துத் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர்களுக்கு, கூட்டுறவுக் கொள்கைச் சிறப்பு பற்றியும், கூட்டுறவுகளின் செயல்பாடு பற்றியும், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் மூலம் விளக்கப் பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், இம்மாநிலத்தில் உள்ள பல்கலைக்கழகங்களில் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டப் படிப்புகளில் கூட்டுறவைப் பாடமாகப் படித்து சிறந்து விளங்கும் மாணவ மாணவியர்களுக்கு, தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை வழங்குவதன் மூலம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், கல்லூரி அளவில் கூட்டுறவுக் கல்வியின் வளர்ச்சியை பெரிதும் ஊக்குவிக்கிறது.

**2. கூட்டுறவுப் பயிற்சி**

இளநிலை அலுவலர்களுக்கு, கூட்டுறவுப் பயிற்சி அளிக்க மாநிலத்தில் 19 கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இக்கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள், கூட்டுறவு தொடர்பாக பல்வேறு பயிற்சிகளை நடத்தி வருகின்றன. கூட்டுறவுத் துறையைச் சார்ந்த பணியாளர்களுக்கும் மற்றும் மாணவர்களுக்கும் கூட்டுறவுப் பாடத்தில் பட்டயப் பயிற்சியும், கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு அஞ்சல் வழி கல்வி மூலம் கூட்டுறவுப் பட்டயப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகின்றன. கூட்டுறவுத் துறை அலுவலர்களுக்கு நடேசன் கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையத்திலும், மதுரை கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையத்திலும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

சென்னையை அடுத்துள்ள மாதவரத்தில், விவசாயக் கூட்டுறவுப் பணியாளர் பயிற்சி நிலையம் ஒன்று, தமிழ்நாடு தலைமைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றது. இது கூட்டுறவுக் கடன், சங்க அலுவலர்களுக்குத் தேவையான முழுநேரப் பயிற்சிகளையும், குறுகிய கால கூட்டுறவுப் பயிற்சிகளையும் அளித்து வருகிறது.

படித்து வேலையற்றிருக்கும் இளைஞர்களை உற்சாகப்படுத்தும் முகத்தான், அவர்கள் சுய வேலைவாய்ப்பு தேடிக்கொள்ளும் வகையில், ஏற்ற தொழில் பயிற்சியினை அளிக்கும் நோக்கத்துடன், தருமபுரி மாவட்டத்தில் பர்கூரிலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டையிலும், தொழில் பயிற்சிப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. 01-04-1997 முதல், இத்தொழில் பயிற்சிப் பள்ளிகளை நடத்தி வரும் கல்வி மற்றும் தொழில் கூட்டுறவுப் பயிற்சி சங்கம், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்துடன் இணைக்கப்பட்டுவிட்டது.



*2001-2002* ஆம் ஆண்டில் கூட்டுறவுப் பட்டயப் பயிற்சிக்கு விண்ணப்பித்த தகுதிவாய்ந்த அனைவருக்கும் எந்த எதிர்பார்ப்பும், குறுக்கீடும் இன்றி இடம் அளிக்கப்பட்டது. இவ்வாறு 13,838 மாணவர்களுக்கு 19 கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டில்தான் தகுதியுடன் விண்ணப்பித்த அனைவருக்குமே பயிற்சியில் சேர அனுமதி வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## அத்தியாயம்-9

## பொது விநியோகத் திட்டம்

தமிழ்நாட்டிலுள்ள பொது விநியோகத் திட்டம் ஒரு தன்னிகரில்லாத திட்டமாக நடைபெற்று வருகிறது. பொதுமக்களின் வருவாயைப் பிரதானமாகக்கொள்ளாமல், தேவைப்படும் அனைத்துக் குடும்பங்களுக்கும் மத்திய அரசு வழங்கும் விலைக்கும் கொள்முதலுக்கு ஆகும் செலவுக்கும் குறைவாக ஒரேமாதிரியான குறைந்த விலையில் அரிசி விநியோகிக்கப்பட்டு வருகிறது. அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு இருந்த சமயத்தில் பின்பற்றப்பட்ட அனைவருக்கும் பகிர்ந்தளிக்கும் முறை தற்போதும் பின்பற்றப்பட்டு வருகிறது. காலங்கள் செல்லச் செல்ல மக்களின் சமூக மற்றும் பொருளாதார வசதிகள் பெருகி வந்துள்ளன. மண்ணெண்ணெய் போன்ற ஒரு சில பொருட்களைத் தவிர மற்ற அத்தியாவசியப் பொருட்கள் தற்போது தாராளமாகக் கிடைக்கின்றன. மக்களின் வருமானம் பெரிதும் கூடியுள்ளது. இருந்தும் இதற்கேற்றாற்போல் பொது விநியோகத் திட்டத்தில் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்த்தப்படவில்லை. இது ஆண்டுக்காண்டு உணவு மானியத்தை அதிகமாக்குவதுடன் பொது விநியோகப் பொருட்கள் வெளி அங்காடிகளுக்கு அதிக அளவில் கடத்தப்படவும் வழிவகுத்துள்ளது. மத்திய அரசின் தற்போதைய உணவுக் கொள்கைப்படி, அத்தியாவசியப் பொருட்கள் கட்டுப்பாடின்றி விற்கப்படுவதுடன் உணவு மானியம் வறியவர்களை மட்டுமே சென்றடைய வேண்டும். இந்தக் கொள்கையைக் கருத்தில் கொண்டு மத்திய அரசு பல அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கான தடையினை ரத்து செய்ததுடன் அவற்றின் மீதிருந்த கட்டுப்பாட்டையும் அகற்றியுள்ளது. அத்துடன் 1997ஆம் ஆண்டு மத்திய அரசு வறியோர் நலன் காக்கும் பொது விநியோகத் திட்டத்தினைப் புகுத்தியுள்ளதுடன், குடும்பங்களை வறுமைக் கோட்டிற்கு மேல் மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்கள் எனப் பிரித்து அவற்றிற்கு வெவ்வேறு விலைகளில் அத்தியாவசியப் பொருட்களை வழங்கலாமென முடிவெடுத்துள்ளது. இந்த மாறுதல்களைப் பொறுத்து மாநிலத்திலுள்ள பொது விநியோகத் திட்டத்தினை மாற்றியமைக்க வேண்டியுள்ளது.

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழக முதல்வராகப் பதவியேற்ற பின்னர், அவர்களது சீரிய தலைமையில் இயங்கிவரும் இந்த அரசு, அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பு கிடைக்க வேண்டுமென்பதில் முழுக் கவனம் செலுத்தி வருகிறது. அனைவரும் வாங்கக்கூடிய ஒரே





மாதிரியான விலையில் அத்தியாவசியப் பொருட்களை வழங்குவது இந்த அரசின் பொறுப்பாகும். அனைத்து அத்தியாவசியப் பொருட்களுக்கும் நியாயமான விலையை நிர்ணயிப்பதாலும், கொள்முதலைச் சீரமைப்பதாலும் அரசு இதனைச் செய்யலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் பொது விநியோக அரிசி விலை கிலோ ஒன்றுக்கு 3.50 ரூபாயாகவே தொடருமென்று அறிவித்தார்கள். 27-3-2002 அன்று சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்ட 2002-2003 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் உணவு மானியமாக ரூ. 1240 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதே சமயத்தில் அரசு வழங்கும் உதவிகள் தேவைப்படுபவர்களுக்கு மட்டும் சென்றடைய வேண்டுமென்பதைக் கருத்தில் கொண்டு அரசு பொது விநியோகத் திட்டத்தைச் சீரமைக்க வேண்டுமென்று கருதியுள்ளது. இந்த பொது விநியோகத் திட்டத்தில் செலவிடப்படும் அரசு மானியம் வீணாவதற்கு முதற்காரணமான போலி குடும்ப அட்டைகளைக் களைய முதல் முயற்சியாக, அரசு, இந்த வரவு-செலவுத் திட்டத்தில் கூப்பன் முறை ஒன்றை அறிவித்துள்ளது. இந்தக் கூப்பன் முறையில் கூப்பன் புத்தகம் ஒவ்வொரு குடும்ப அட்டைதாரருக்கும் அச்சிட்டு இலவசமாக வழங்கப்படும். ஒரு கூப்பன் புத்தகத்தில் 12 உள்தாள்களும், ஒவ்வொரு உள்தாளிலும் இரண்டு கூப்பன்களும் இருக்கும். நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், ஒவ்வொரு குடும்ப அட்டைதாரருக்கும் மாதந்தோறும் 4 கிலோ அரிசி வழக்கமான அளவைவிடக் கூடுதலாக வழங்கப்படுவதால் கூப்பன் புத்தகத்தில் ஒவ்வொரு உள்தாளிலும் மூன்று கூப்பன்கள் இருக்கும். குடும்ப அட்டைதாரர்கள் ஒரு மாதத்திற்கான அரிசியை ஒரே தவணையிலோ அல்லது இரண்டு தவணைகளிலோ நியாயவிலைக் கடைகளில் கூப்பன்களைக் கொடுத்து அரிசியைப் பெற்றுக்கொள்ளலாம். கூப்பன் புத்தகங்கள் குடும்ப அட்டையில் அச்சிடப்பட்டுள்ள புகைப்படத்திற்குரிய நபரிடம்தான் வழங்கப்படுமேயல்லாமல் வேறு எவரிடமும் வழங்கப்படமாட்டாது. ஒவ்வொரு அரிசி அட்டைதாரரும் தாமே நேரடியாக நியாயவிலைக் கடைகளுக்குச் சென்று அரிசி அட்டையைக் காண்பித்து அரிசிக் கூப்பன்களைக் கொடுத்து அரிசி பெற்றுக்கொள்ள வேண்டும். அரிசிக்கான விலையை, கடைகளிலிருந்து அரிசியை வாங்கும்போது நியாயவிலைக் கடையில் கொடுக்க வேண்டும். இத்திட்டம் 01-07-2002 முதல் அமலுக்கு வரும். இந்தக் கூப்பன் புத்தகங்கள் வழங்குவது ஜூன் மாதம் தொடங்கப்பட்டு, 30-06-2002-க்குள் முடிக்கப்பட்டுவிடும். இம்முறை, தற்போது புழக்கத்திலுள்ள போலி குடும்ப அட்டைகள் Bogus Cards அனைத்தையும் அகற்றிவிட உதவும் என நம்பப்படுகிறது.

## குடும்ப அட்டைகள் விநியோகம்

[2002 ஏப்ரல் 18

*01-06-1997* அன்று நாடு முழுவதும் மத்திய அரசால் கொண்டுவரப்பட்ட வறியோர் நலன் காக்கும் பொது விநியோகத் திட்டம் நாட்டிலுள்ள குடும்பங்களை வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள குடும்பங்களென்றும், வறுமைக் கோட்டிற்குக் மேலுள்ள குடும்பங்களென்றும் பிரிக்கிறது. இம்முறை, மற்ற மாநிலங்களிலும் பின்பற்றப்பட்டு வருகிறது. ஆனால் முந்தைய அரசு வருவாயினைக் கருத்தில் கொள்ளாமல் குடும்பங்களின் விருப்பத்திற்கேற்ப குடும்ப அட்டைகள் வழங்கலாமென கொள்கை முடிவு எடுத்தது. அதற்கிணங்க, பொது விநியோகத் திட்டத்தில் அரிசி பெற விருப்பம் தெரிவித்த குடும்பங்களுக்கு இளம் சிவப்பு நிற அட்டையும், அரிசிக்குப் பதில் கூடுதலாக 3 கிலோ சர்க்கரை அல்லது 5 லிட்டர் மண்ணெண்ணெய் பெற விருப்பம் தெரிவித்த குடும்பங்களுக்கு மஞ்சள் நிற அட்டையும் வழங்கப்பட்டன.

*28-02-2002* அன்றைய நிலவரப்படி, தமிழ்நாட்டில் புழக்கத்திலிருந்த குடும்ப அட்டைகளின் விவரம் பின்வருமாறு:—

| வரிசை எண் | விவரம் | குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | இளம் சிவப்பு அட்டைகள் (அரிசி அட்டைகள்) | 1,36,48,799 |
| 2. | மஞ்சள் அட்டைகள் (மண்ணெண்ணெய் அட்டைகள்) | 13,12,320 |
| 3. | மஞ்சள் அட்டைகள் (சர்க்கரை அட்டைகள்) | 11,27,022 |
| 4. | காக்கி அட்டைகள் (காவலர் அட்டைகள் மண்ணெண்ணெய் மட்டும்) | 26,414 |
| | **மொத்தம்** | **1,61,14,555** |

தகுதியுள்ள குடும்பங்களுக்கு குடும்ப அட்டை வழங்குவது ஒரு தொடர் நடவடிக்கை என்பதால், இதுகுறித்து, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளருக்கு தேவையான அறிவுரைகள் அரசால் வழங்கப்பட்டுள்ளன. அதே சமயத்தில், போலி குடும்ப அட்டைகளும் களையப்பட்டு வருகின்றன.



2002 ஏப்ரல் 18]

*31-5-2001* வரை, குடும்ப அட்டைகள் அச்சிடும் பணி 'எல்காட்' நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. *1-6-2001* முதல் இப்பணி, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் அலுவலகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விசாரணைக்குப்பின், தகுதியுள்ள குடும்பங்கள் என்று கண்டறியப்பட்ட குடும்பங்களுக்கு குடும்ப அட்டை வழங்குவதில் ஏற்படும் தாமதத்தை இது வெகுவாகக் குறைக்கிறது.

## நியாயவிலைக் கடைகள்

இம்மாநிலத்தில் நியாயவிலைக் கடைகள் கூட்டுறவுச் சங்கங்களாலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தாலும் மட்டுமே நடத்தப்பட்டு வருகின்றன. தனியார் எவரும் நியாவிலைக் கடைகளை நடத்த அனுமதிக்கப்படுவதில்லை. *28-02-2002* அன்றைய நிலவரப்படி, மாநிலத்தில் இயங்கிவரும் நியாயவிலைக் கடைகளின் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | நிறுவனங்கள் | முழு நேரக் கடைகள் | பகுதி நேரக் கடைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் | 1,092 | 54 | 1,146 |
| 2. | கூட்டுறவுகள் (கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கீழ்) | 21,743 | 4,478 | 26,221 |
| 3. | பிற கூட்டுறவுகள் (மீன், மலைப் பயிர் போன்றவை) | 147 | 7 | 154 |
| 4. | பெண்களால் நடத்தப்படும் கடைகள் | 203 | 126 | 329 |
| 5. | கூட்டுறவுகளால் நடத்தப் படுகின்ற நடமாடும் நியாய விலைக் கடைகள் | 36 | — | 36 |
| | **மொத்தம்** | **23,221** | **4,665** | **27,886** |

[2002 ஏப்ரல் 18

ஒவ்வொரு 'வருவாய்க் கிராமத்திலும் ஒரு நியாயவிலைக் கடையாவது இயங்க வேண்டுமென்பது அரசின் நோக்கமாகும். அரசு அளித்துள்ள வழிமுறைகளின்படி, நியாயவிலைக் கடைகளைத் திறக்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எந்த ஒரு குடும்ப அட்டைதாரரும் அத்தியாவசியப் பொருட்களைப் பெறுவதற்கு 2 கிலோ மீட்டருக்கு மேல் நடக்கக்கூடாது என்பதும், நகர்ப் புறங்களிலுள்ள நியாயவிலைக் கடைகளில் 800 குடும்ப அட்டைகளுக்கு மேல் இணைக்கப்படக் கூடாது என்பதும், கிராமப் பகுதிகளிலுள்ள நியாயவிலைக் கடைகளில் 500 குடும்ப அட்டைகளுக்கு மேல் இணைக்கப்படக் கூடாது என்பதும் அரசின் நோக்கங்களாகும். எனினும், எளிதில் சென்றடைய முடியாத மற்றும் வெகுதூரத்திலுள்ள— பகுதிகளிலுள்ள குடும்ப அட்டைதாரர்கள் அனைவரும் அத்தியாவசியப் பொருட்களைப் பெறும் வகையில் 800 குடும்ப அட்டைகளுக்கும் குறைவாக இணைக்கப்பட்டுள்ள 20,000 நியாயவிலைக் கடைகள் மாநிலத்தில் இயங்கி வருகின்றன.

**பெண்கள் குழுக்களால் நடத்தப்படும் கடைகள்**

அத்தியாவசியப் பொருட்களை வாங்க, மக்கள் 2 கிலோ மீட்டருக்கு மேல் செல்ல வேண்டிய இடங்களிலும், அதிக அளவில் குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ள கடைகள் உள்ள பகுதிகளிலும் மகளிர் குழுக்களால் நடத்தப்படும் நியாவிலைக் கடைகள் தொடங்கப்படுகின்றன. இவ்வாறு மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு நியாயவிலைக் கடைகளை ஒப்படைப்பதற்குத் தேவையான விதிமுறைகள் ஏற்கெனவே அரசால் வெளியிடப்பட்டுள்ளன. இத்தகைய பொது நலச் செயல்களில் மகளிர் காட்டி வரும் ஆர்வத்தைக் கருத்தில் கொண்டும், மக்கள் நலத் தொண்டுகளில் மகளிரை ஈடுபடுத்த வேண்டும் என்ற எண்ணத்தைக் கருத்தில் கொண்டும் இந்த அரசு, மகளிர் குழுக்களால் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கத் தேவையான நடவடிக்கைகளை முனைந்து எடுக்க வேண்டுமென ஆணையிட்டுள்ளது.

கிராமப் பஞ்சாயத்துக்களும் நியாயவிலைக் கடைகளை நடத்த, தேவையான அனுமதிகள் வழங்கப்பட்டு இதற்கான வழிமுறைகள் ஊரக வளர்ச்சித் துறையால் வெளியிடப்பட்டுள்ளன.

நமது மாநிலத்திலுள்ள பொது விநியோகத் திட்டத்தினைச் சீரமைக்கும் பொருட்டு தனது கருத்துரையினை அளிக்கும்படி நமது



2002 ஏப்ரல் 18]

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றினை அமைக்க ஆணையிட்டார்கள். அக்குழு, கேரள மாநிலத்திற்கும் மற்றும் ஆந்திர மாநிலத்திற்கும் சென்று அங்குள்ள பொது விநியோகத் திட்டத்தினை ஆராய்ந்து நமது மாநிலத்திலுள்ள சில மாவட்டங்களைப் பார்வையிட்ட பிறகு தனது அறிக்கையினை அரசுக்குக் கொடுத்துள்ளது. கர்நாடக மாநிலத்திலுள்ள பொது விநியோகத் திட்டத்தினை ஆராய்ந்த அலுவலர்கள் குழுவும் தனது அறிக்கையினை அரசுக்குக் அளித்துள்ளது. அந்த அறிக்கைகள் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளன. அப்பரிந்துரைகளின் அடிப்படையில் தக்க ஆணைகள் விரைவில் பிறப்பிக்கப்படும்.

**அரிசி**

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வருடாந்திரத் தேவைக்கான அரிசி கீழ்க்கண்ட முறைகளில் பெறப்படுகிறது:—

(1) மத்திய அரசின் ஒதுக்கீடு

(2) மாநிலத்தில் நெல் கொள்முதல் செய்தல்

**(1) மத்திய அரசின் அரிசி ஒதுக்கீடு**

வறியோர் நலன் காக்கும் பொது விநியோகத் திட்டத்தை (Targeted Public Distribution System) மத்திய அரசு 1-6-1997ஆம் நாளிலிருந்து கொண்டு வந்தது. அதன்படி, குடும்பங்களை வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்கள் என்று பாகுபடுத்த வேண்டும். மத்திய அரசு, 2001ஆம் ஆண்டில் வறுமையிலும் வறுமையாக உள்ள குடும்பங்களுக்காக "**அந்தியோதயா அன்னயோஜனா**" என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு, நமது மாநிலத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்கள் 48.63 இலட்சம் என மதிப்பிட்டு, அக்குடும்பங்களில் வறுமையிலும் வறுமையாக உள்ள 7.45 இலட்சம் குடும்பங்களை அத்திட்டப் பயனாளிகளாக ஒதுக்கீடு செய்து அரிசி வழங்கி வருகிறது. மத்திய அரசால் வெளியிடப்பட்டுள்ள பொது விநியோகத் திட்ட கட்டுப்பாடு ஆணை, 2001-ன்படி, குடும்பங்களை வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்கள்/வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்கள் மற்றும் "அந்தியோதயா அன்னயோஜனா" குடும்பங்கள் என்று மாநில

[2002 ஏப்ரல் 18

அரசு பாகுபடுத்தி அவர்களைப் பிரித்தறியும் வண்ணம் தனிப்பட்ட குடும்ப அட்டைகளை வழங்கி ஒவ்வொரு பிரிவினருக்கும் தனித்தனி விலையில் அத்தியாவசியப் பொருட்களை வழங்க வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள மைய அரசின் ஆணையை இம்மாநிலத்தில் இதுவரை அமல்படுத்தவில்லை. இம்மாநிலத்தைப் பொறுத்தமட்டில், குடும்ப அட்டைகள் வருமானத்தின் அடிப்படையிலில்லாமல் குடும்பதாரர்களின் விருப்பத்தின் அடிப்படையில் பொருட்களைப் பெறும் வகையில் வழங்கப்பட்டுள்ளன. அதாவது அரிசிக்குப் பதிலாக கூடுதல் சர்க்கரை மற்றும் மண்ணெண்ணெய் பெற விருப்பம் தெரிவித்த குடும்பங்கள் அவ்வாறே பெறலாம்.

தற்பொழுது குடும்ப அட்டைதாரர்களுக்கு கீழ்க்கண்ட அளவுகோலின்படி அரிசி வழங்கப்பட்டு வருகிறது:—

| குடும்ப அட்டைகளில் இடம் பெறும் உறுப்பினர்களின் எண்ணிக்கை | வழங்கப்படும் அரிசியின் அளவு |
|---|---|
| வயது வந்த ஒருவருக்கு (ஒரு யூனிட்) | 12 கிலோ |
| வயது வந்த ஒருவர் + ஒரு குழந்தை (1 + 1/2 யூனிட்) | 14 கிலோ |
| வயது வந்த இருவர் அல்லது வயது வந்த ஒருவர் மற்றும் இரு குழந்தைகள் (இரண்டு யூனிட்) | 16 கிலோ |
| வயது வந்த இருவர் மற்றும் ஒரு குழந்தை அல்லது வயது வந்த ஒருவர் மற்றும் மூன்று குழந்தைகள் (2 + 1/2 யூனிட்) | 18 கிலோ |
| வயது வந்த மூவர் மற்றும் அதற்கு மேற்பட்டவர்களுக்கு (3 யூனிட் மற்றும் அதற்கு அதிகமாக) | 20 கிலோ |

நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் மேற்கண்ட அளவுகளுடன் மாதந்தோறும் கூடுதலாக ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் 4 கிலோ அரிசி வழங்கப்பட்டு வருகிறது.



2002 ஏப்ரல் 18]

வறுமைக் கோட்டிற்கு மேல்/வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் அரிசியின் விலையினை மத்திய அரசு அவ்வப்போது மாற்றி அமைத்த போதிலும், மாநில அரசு, 1-1-2000 முதல் பொது விநியோகத் திட்டத்தில் கிலோ ஒன்றுக்கு ரூ. 3.50 என்ற விலையில் அரிசி வழங்கிவருகிறது. குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் அரிசியின் அடக்கவிலைக்கும் விநியோக விலைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை மாநில அரசு ஏற்றுக்கொண்டு மானியமாக வழங்கிவருகிறது. இந்த நிதி ஆண்டிற்கு ரூ. 1,240 கோடி மானியமாக ஒதுக்கியுள்ளது.

மத்திய அரசின் மாதாந்திர அரிசி ஒதுக்கீடு மற்றும் அதன் விலை விவரங்கள்:—

| வறியோர் நலன் காக்கும் பொது விநியோகத் திட்டம் | மெட்ரிக் டன்களில் | விலை கிலோ ஒன்றுக்கு |
|---|---|---|
| | | ரூ. |
| வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களுக்கு | 1,08,518 | 5.65/25-07-2000 |
| அந்தியோதயா அன்ன யோஜனா குடும்பங்களுக்கு | 13,052 | 3.00/01-01-2001 |
| வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்களுக்கு | 38,440 | 7.30/01-04-2002 |
| **இதர திட்டங்கள்** | | |
| தாழ்த்தப்பட்டோர்/பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் விடுதிகள் | 1,451 | 5.65 |
| ஓய்வூதியம் பெறும் முதியோர்கள் (அன்னபூரணா) | 720 | இலவசம் |
| தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவுத் திட்டம் | 11,601 | இலவசம் |
| **மொத்தம்** | 1,73,782 | |

[2002 ஏப்ரல் 18

**(2) மாநிலத்தில் நெல் கொள்முதல்:**

பொது விநியோகத் திட்டம் மற்றும் இதர நலத் திட்டங்களுக்கு சராசரியாகத் தேவைப்படும் அரிசி மாதம் ஒன்றுக்கு 2.25 இலட்சம் மெட்ரிக் டன்களாகும். மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 1.74 இலட்சம் மெட்ரிக் டன் அரிசியை வைத்து மாநிலத்தின் அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியாது. மாதாந்திர பற்றாக்குறையான 0.51 இலட்சம் மெட்ரிக் டன்களை (வருடாந்திர பற்றாக்குறை 6.12 இலட்சம் மெட்ரிக் டன்கள்) ஈடுசெய்வதற்காக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் குறுவை மற்றும் சம்பா பருவங்களில் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது.

மாநிலத்தில், இவ்வரசு நெல் கொள்முதல் செய்வதில் இரு வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

1. ஏகபோகக் கொள்முதல்
2. இணைக் கொள்முதல்

ஏகபோகக் கொள்முதல் முறையில் விவசாயிகள் தங்கள் நெல்லினை அரசால் நிர்ணயிக்கப்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் மட்டுமே விற்கலாம். இத்திட்டம் காவிரிப் பாசனப் பகுதிகளில் மட்டுமே அமலில் இருக்கும். ஆனால் இத்திட்டத்தினை அமல்படுத்த மத்திய அரசின் அனுமதி வேண்டும்.

இணைக் கொள்முதல் திட்டத்தின்கீழ் விவசாயிகள் தங்கள் நெல்லை தங்களது விருப்பம் போல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடமோ அல்லது தனியார் வியாபாரிகளிடமோ தங்களுக்கு அனுகூலமான விலையில் விற்கலாம். பொதுவாக, மத்திய அரசு ஒவ்வொரு வருடத்திலும் செப்டம்பர் மாதத்தில் நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலையினை நிர்ணயம் செய்கிறது. மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட 2001-2002-க்கான நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலை பின்வருமாறு:

| ரகம் | ரூபாய் குவிண்டால் ஒன்றுக்கு |
|---|---|
| கிரேடு 'ஏ' | 560 |
| சாதாரண ரகம் | 530 |



2002 ஏப்ரல் 18]

மாநில அரசு, இந்த ஆதார விலையுடன் கூடுதலாக வேறு பல சலுகைகளையும் விவசாயிகளுக்கு வழங்கி நெல் கொள்முதல் செய்கிறது.

**இவ்வரசு பதவியேற்றதும், தற்போதுள்ள பொது விநியோகத் திட்டத்தினை தீவிரமாகப் பரிசீலனை செய்து விவசாயிகளின் நலன் கருதி கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டது:**

i. வெளி மாநிலத்திற்கு அரிசி/நெல் கொண்டு செல்வதற்குத் தற்போதுள்ள 100 விழுக்காடு லெவியினை டி.கே.எம் 9 ரக நெல் மற்றும் அரிசிக்கு 31-7-2001 முதல் நீக்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

ii. அனைத்து வகை நெல்/அரிசியை வெளி மாநிலத்திற்கு எடுத்துச் செல்வதற்கு ஏதுவாக 100 விழுக்காடு லெவி செலுத்துவதிலிருந்து 11-9-2001 முதல் விலக்களித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

iii. அரிசி ஆலை உரிமையாளர்கள், சில்லறை மற்றும் மொத்த விற்பனையாளர்கள் இருப்பு வைத்துக்கொள்ளும் நெல்/அரிசியின் உச்சவரம்பை 2 மடங்காக உயர்த்தியது.

மேற்கூறிய அரசின் நடவடிக்கைகள் யாவும் விவசாயிகள் அரசைச் சார்ந்திராமல் தங்களுடைய நெல்லினை வெளிச் சந்தையில் விற்று நியாயமான விலை பெற வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டவை ஆகும். பொது விநியோகத் திட்டங்களுக்கும் இதர நலத் திட்டங்களுக்கும் அரசு 8 இலட்சம் மெட்ரிக் டன்கள் நெல் கொள்முதல் செய்தால் டிசம்பர் 2002 வரை போதுமானதாக இருக்கும். 2001-2002 ஆம் ஆண்டில் அரசு, நிதி நெருக்கடி இருந்தபோதிலும், விவசாயிகளின் நலன் கருதி, ஏறத்தாழ 13 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்தது. மத்திய அரசு நிர்ணயித்துள்ள குறைந்த பட்ச ஆதார விலையுடன் இடைநிகழ்ச் செலவாக குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 40 விவசாயிகளுக்குக் கூடுதலாக வழங்கப்பட்டது. மேலும், காவிரிப் பாசனப் பகுதிகளில் பிப்ரவரி மாதம் பருவம் தவறிப் பெய்த பெரும் மழையின் காரணத்தால் 2002-ல் சம்பா நெல் பயிர்கள் பாதிக்கப்பட்டதைக் கருத்தில் கொண்டு இந்திய உணவுக் கழகத்தின் விதிமுறைகளின்படி, 18 சதவிகிதம் ஈரப்பதம் உள்ள தரம் 1 ரக நெல்லை மட்டும் கொள்முதல் செய்வதற்குப் பதிலாக 22 சதவிகிதம் ஈரப்பதம் உள்ள தரம் 3 ரக நெல் கொள்முதல் செய்யப்பட்டது. அதிகமான ஈரப்பதத்தால் ஏற்படுகின்ற இழப்பிற்கான தொகை ஏதும் பிடித்தம் செய்யவில்லை. தர வித்தியாசத்தால் ஏற்படும் உண்மையான இழப்பினைப் பிடித்தம் செய்வதற்குப் பதிலாக சிறுதொகை மட்டும்

பிடித்தம் செய்யப்பட்டது. 15-3-2002 வரை நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் தேவைக்கு அதிகமாக நெல் கொள்முதல் செய்யப்பட்டபோதிலும், விவசாயிகளின் நலன் கருதி காவிரிப் பாசனப் பகுதிகளில் தொடர்ந்து கொள்முதல் செய்யப்பட்டுவரும் 39 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக வட்டக் கிட்டங்கிகளுடன் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் 28 சேமிப்புக் கிட்டங்கிகளிலும் 15-4-2002 வரை கொள்முதல் ஆதார விலைக்குக் கூடுதலாக குவிண்டால் ஒன்றுக்கு போக்குவரத்துச் செலவாக ரூ. 15 அளித்து நெல் கொள்முதல் செய்ய அரசு ஆணையிட்டுள்ளது. விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலை, இடைநிகழ்ச் செலவு, ஊக்கத்தொகை மற்றும் இதர விவரங்கள் இணைப்பு 3-ல் தரப்பட்டுள்ளன.

## சர்க்கரை

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மாதந்தோறும் ஒரு நபருக்கு 500 கிராம் என்ற அளவில், ஒரு குடும்ப அட்டைக்கு உயரளவாக 2 கிலோ சர்க்கரை வழங்கப்படுகிறது. 1-3-2001 முதல் வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்கள் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் சர்க்கரை பெற தகுதியற்றவர்கள் என மைய அரசு நீக்கியபோதிலும், மாநில அரசு வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்கள் உட்பட அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் தொடர்ந்து சர்க்கரை வழங்கி வருவதற்குக் காரணம், வருமானத்தின் அடிப்படையில் குடும்பங்களைப் பாகுபாடு செய்யாமையே ஆகும். அரிசிக்குப் பதிலாக கூடுதலாக சர்க்கரை பெற விருப்பம் தெரிவித்த குடும்ப அட்டைதாரர்கள் வழக்கமான அளவோடு கூடுதலாக 3 கிலோ சர்க்கரை மாதந்தோறும் பெற்று வருகின்றனர். 28-02-2002 அன்றைய நிலவரப்படி சர்க்கரை பெற விருப்பம் தெரிவித்துள்ள குடும்ப அட்டைகளின் மொத்த எண்ணிக்கை 11,27,022. இம்மாநிலம் முழுமைக்கும் மாதந்தோறும் தேவைப்படும் சர்க்கரையின் அளவு சுமார் 25,500 மெட்ரிக் டன்கள் என்றாலும், மைய அரசின் தற்போதைய ஒதுக்கீடு 10,820 மெட்ரிக் டன்கள் மட்டுமே. மாதந்தோறும் பற்றாக்குறையாக உள்ள 14,680 மெட்ரிக் டன்கள் சர்க்கரையை மாநில அரசு, தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையத்திடமிருந்து லெவி அல்லாத சர்க்கரையை வாங்கி ஈடுசெய்கின்றது. இவ்வாறு வாங்குவதால், ஏற்படும் விலை வித்தியாசத்தினால், மாநில அரசுக்கு மாதந்தோறும் சுமார் 3 கோடி ரூபாய் அளவிற்கு மானியச் செலவு ஏற்படுகிறது. லெவி சர்க்கரையின் சில்லறை விற்பனை விலையை மைய அரசு மாற்றம்



செய்ததன் அடிப்படையில், பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விற்பனை செய்யப்படும் சர்க்கரையின் சில்லறை விற்பனை விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 13.50 என 9-3-2002 முதல் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## கோதுமை மற்றும் கோதுமைப் பொருட்கள்

வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்களுக்கு வழங்கப்படும் விலையில் முழுவதும் அரிசியாக எடுத்துக்கொள்ள மாநில அரசு விருப்பம் தெரிவித்ததால் 1-4-2000 முதல் திருத்தியமைக்கப்பட்ட வறியோர் நலன் காக்கும் பொது விநியோகத் திட்ட வழிமுறைகளின்படி, இம்மாநிலத்திற்கு வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களுக்கான விலையிலோ/வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்களுக்கான விலையிலோ கோதுமை ஒதுக்கீடு ஏதும் மைய அரசால் செய்யப்படவில்லை. இந்திய உணவுக் கழகத்திடமிருந்து வெளிச் சந்தை கோதுமையை வாங்கி, கோதுமையை மட்டும் நியாயவிலைக் கடைகளில் விற்பனை செய்ய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது, கோதுமையின் சில்லறை விற்பனை விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 8.00 ஆகும். இருப்பினும், தற்பொழுது வெளிச் சந்தையில் கோதுமை மற்றும் கோதுமைப் பொருட்களின் விலைக்கும் பொது விநியோகத் திட்டத்தில் விற்பனை செய்யப்படும் இப்பொருட்களின் விலைக்கும் கணிசமான வித்தியாசம் இல்லாததால், பொது விநியோகத்தில் இப்பொருட்களுக்கு அதிக வரவேற்பில்லை. 01-04-2002 முதல் மத்திய அரசு வறுமைக் கோட்டிற்கு மேலுள்ள குடும்பங்களுக்கான ஒதுக்கீடு செய்யும் கோதுமையின் விலையை கிலோ ஒன்றுக்கு ரூ.5.10 என விலை நிர்ணயம் செய்துள்ளதால் நியாயவிலைக் கடைகளில் மலிவு விலையில் கோதுமை வழங்கும் பொருட்டு, இந்த விலைக்கு மாநில அரசுக்கு கோதுமை வழங்குமாறு மத்திய அரசிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## மண்ணெண்ணெய்

இம்மாநிலம் முழுவதற்கும் வழங்கப்பட்டுள்ள எரிவாயு இணைப்புகளை மதிப்பீடு செய்து, மைய அரசு, மாநிலத்திற்கான மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டை 1-4-2001 முதல் 77,108 கிலோ லிட்டரிலிருந்து 67,876 கிலோ லிட்டராகக் குறைத்துள்ளது.

[2002 ஏப்ரல் 18

குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படும் மண்ணெண்ணெய் அளவு (மாதம் ஒன்றுக்கு)

| வ. எண் | இடங்கள் | எரிவாயு உருளை இணைப்பு இல்லாத குடும்பங்கள் | ஒரு எரிவாயு உருளை இணைப்பு உள்ள குடும்பங்கள் (லிட்டரில்) | இரண்டு எரிவாயு உருளை இணைப்பு உள்ள குடும்பங்கள் |
|---|---|---|---|---|
| 1. | சென்னை மாநகரம் மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகள், மாவட்டத் தலை நகரங்கள், காரைக்குடி, ஓசூர், கும்பகோணம் மற்றும் பழநி நகராட்சிப் பகுதிகள் | 10 | 3 | — |
| 2. | ஏனைய நகராட்சிகள் | 6 | 3 | — |
| 3. | நகரியம் மற்றும் பேரூராட்சிகள் | 5 | 3 | — |
| 4. | ஊரகப் பகுதிகள் | 3 | 3 | — |
| | **நீலகிரி மாவட்டம்** | | | |
| 5. | மாவட்டத் தலைநகரம் | 15 | 3 | — |
| 6. | ஏனைய நகராட்சிகள் | 15 | 3 | — |
| 7. | நகரியம் மற்றும் பேரூராட்சிகள் | 10 | 3 | — |
| 8. | கிராமப் பகுதிகள் | 5 | 3 | — |

அரிசிக்குப் பதிலாக மண்ணெண்ணெய் வேண்டியுள்ள குடும்ப அட்டைகளுக்கு (13,12,320) கூடுதலாக 5 லிட்டர் மண்ணெண்ணெய் மாதந்தோறும் வழங்கப்படுகிறது.

மத்திய அரசு மண்ணெண்ணெயின் விலையை 01-03-2002 முதல் உயர்த்தியதன் காரணமாக, நியாயவிலைக் கடைகளில்



2002 ஏப்ரல் 18]

மண்ணெண்ணெய் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 9.00 முதல் ரூ.9.60 வரை விற்கப்பட வேண்டும். ஆனால் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளியோர் பயன்பெறும் வகையில் மண்ணெண்ணெய் லிட்டர் ஒன்றுக்கு ரூ8.40 முதல் 9.00 வரை விற்க ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி 09-03-2002 முதல் பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெய் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 8.40 முதல் 9.00 வரை மானிய விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

பொதுமக்களுக்கு மண்ணெண்ணெயை அளவு குறைவின்றி வழங்கவும், அதை வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கவும், அதே நேரத்தில் நியாயவிலைக் கடைகளில் சேமித்து வைப்பதில் உள்ள சிரமத்தைத் தடுக்கும் வகையிலும், மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் (Kerosene Bunks), பெட்ரோல் வழங்கும் நிலையங்களைப் போல கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் மாநிலம் முழுவதும், இதுவரை 280 இடங்களில் நிறுவப்பட்டு, செயல்பட்டு வருகின்றன.

நுகர்வு செய்யப்பட்ட இன்றியமையாப் பொருட்கள் குறித்த விவரங்கள் இணைப்பு 4-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## அயோடின் கலந்த உப்பு

நம் மாநிலத்தில் சில மாவட்டங்களில், நிலவிவரும் முன் கழுத்துக்கழலை நோயினை நீக்கும் வகையில், நியாயவிலைக் கடைகள் மூலம் பொட்டலமிடப்பட்ட அயோடின் கலந்த உப்பு கிலோ ஒன்றுக்கு ரூ. 2.50 என்ற விலையில் வழங்கப்பட்டு வருகிறது.

## "ஊட்டி-டீ"

ஊட்டி சிறு தேயிலை விவசாயிகளின் துயர் துடைக்க அங்கு விளையும் தேயிலைக்கு தொடர்ந்து நல்ல விற்பனை விலை கிடைக்கும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த சிறப்புத் திட்டத்தின் மூலம் இண்ட்கோசர்வ் நிறுவனம் தயாரிக்கும் "ஊட்டி-டீ" மாநிலம் முழுவதும் பொது விநியோகத் திட்ட நியாயவிலைக் கடைகளில் மாதந்தோறும் சுமார் 300 மெட்ரிக் டன் அளவில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் ஊட்டி சிறு விவசாயிகளின் துயர் துடைக்கப்பட்டுள்ளது. 100 கிராம் கொண்ட ஒரு பாக்கெட் தேயிலை மலிவு விலையில் ரூ. 9.00 என்று விற்கப்பட்டு வருகின்றது.

[2002 ஏப்ரல் 18

**அத்தியாயம்-10**

## கட்டுப்பாட்டு ஆணைகளைச் செயல்படுத்துதல்

ஒரு சில இன்றியமையாப் பொருட்களை பொதுமக்களுக்கு நியாயவிலையில் கிடைக்கச் செய்யவும், பதுக்கல், கள்ளச்சந்தை போன்றவற்றைத் தடுக்கவும், மைய அரசு 1955ஆம் ஆண்டில் இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தை இயற்றியது.

1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ் மாநில அரசு பல்வேறு கட்டுப்பாட்டு ஆணைகளைப் பிறப்பித்துள்ளது. தற்போது நடைமுறையில் உள்ள உணவுத் துறை தொடர்பான கட்டுப்பாட்டு ஆணைகள் பின்வருமாறு:

1. 1973ஆம் ஆண்டு தமிழ்நாடு மண்ணெண்ணெய் (வர்த்தகத்தை முறைப்படுத்தல்) ஆணை.
2. 1977ஆம் ஆண்டு பயறுவகைகள், சமையல் எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெய் (சேமிப்பு மற்றும் கட்டுப்பாடு) ஆணை.
3. 1977ஆம் ஆண்டு தமிழ்நாடு இன்றியமையாப் பொருட்கள் (இருப்பு, விலைகளைக் காட்டி வைத்தல் மற்றும் கணக்குகளைப் பராமரித்தல்) ஆணை.
4. 1977ஆம் ஆண்டு தமிழ்நாடு அட்டவணைப்படுத்தப்பட்ட பொருட்கள் (தரம் நிர்ணயம்) ஆணை.
5. 1981ஆம் ஆண்டு தமிழ்நாடு சர்க்கரை (வணிகத்தை முறைப்படுத்தல்) ஆணை.
6. 1982ஆம் ஆண்டு தமிழ்நாடு நெல் (எடுத்துச் செல்வதில் கட்டுப்பாடு) ஆணை.
7. 1982ஆம் ஆண்டு தமிழ்நாடு அட்டவணைப்படுத்தப்பட்ட பொருட்கள் (குடும்ப அட்டை மூலம் விநியோகத்தை முறைப்படுத்தல்) ஆணை.
8. 1984ஆம் ஆண்டு தமிழ்நாடு நெல், அரிசி கொள்முதல் (லெவி) ஆணை.



2002 ஏப்ரல் 18]

9. 1984ஆம் ஆண்டு தமிழ்நாடு இன்றியமையாப் பொருட்கள் (வணிகத்தை முறைப்படுத்தல்) ஆணை.
10. 1993ஆம் ஆண்டு சமையல் எரிவாயு (வழங்கல் மற்றும் விநியோகத்தை முறைப்படுத்தல்) ஆணை.
11. 1993ஆம் ஆண்டு மண்ணெண்ணெய் (பயன்படுத்துவதில் கட்டுப்பாடு மற்றும் உச்சநிலை நிர்ணயம்) ஆணை.
12. 1998ஆம் ஆண்டு மோட்டார் ஸ்பிரிட் மற்றும் அதிவேக டீசல் (வழங்குதல் மற்றும் விநியோகத்தை முறைப்படுத்தல் மற்றும் முறைகேடுகளைத் தடுத்தல்) ஆணை.
13. 1998ஆம் ஆண்டு சமையல் எண்ணெய் உறையிடுதல் (ஒழுங்குமுறை) ஆணை. (31-12-2002 வரை விலக்களிக்கப்பட்டுள்ளது)
14. 2000ஆம் ஆண்டு நாப்தா (கையகப்படுத்தல், விற்பனை, சேமித்து வைத்தல் மற்றும் உந்தூர்திகளில் பயன்படுத்துவதைத் தடுத்தல்) ஆணை.
15. 2000ஆம் ஆண்டு சால்வென்ட், ரேபினேட் மற்றும் சிலாப் (கையகப்படுத்தல், விற்பனை, சேமித்து வைத்தல் மற்றும் உந்தூர்திகளில் பயன்படுத்துவதைத் தடுத்தல்) ஆணை.

உணவுப் பொருள் வழங்கல் துறை மற்றும் குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவு அலுவலர்கள் மேற்குறிப்பிட்ட கட்டுப்பாட்டு ஆணைகளைச் செயல்படுத்தி வருகின்றனர். கள்ளத்தனமான வியாபாரிகள், கடத்தல்காரர்கள் மற்றும் சமூக விரோதிகள் இன்றியமையாப் பொருட்களைப் பதுக்குவதிலிருந்து தடுப்பதற்காக, இன்றியமையாப் பொருட்கள் சட்டம் மற்றும் அரசால் வெளியிடப்படும் பலதரப்பட்ட கட்டுப்பாட்டு ஆணைகள், குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் குற்றப் புலனாய்வுத் துறையால், கடுமையாகச் செயல்படுத்தப்படுகின்றன.

மத்திய அரசு, குறிப்பிட்ட உணவுப் பொருட்களின் விற்பனை உரிமம், இருப்பு, உச்சவரம்பு மற்றும் எடுத்துச் செல்வதற்கான தடை நீக்க ஆணை, 2002 என்ற ஓர் ஆணையை, 15-2-2002 அன்று பிறப்பித்துள்ளது. அதன்படி, நெல்/அரிசி, கோதுமை போன்ற உணவுப் பொருட்கள், சர்க்கரை, சமையல் எண்ணெய் வித்துக்கள், சமையல் எண்ணெய் ஆகியவற்றை வியாபாரிகள், எந்த அளவிலும் வாங்கவும்,

இருப்பு வைக்கவும், விற்கவும், எந்த இடத்திற்கும் எடுத்துச் செல்லவும் அனுமதி/உரிமம் ஏதும் தேவையில்லை. எனவே இதுகுறித்து உரிய மாநில கட்டுப்பாட்டு ஆணைகளை அரசு மறு ஆய்வு செய்து வருகின்றது.

இன்றியமையாப் பொருட்கள் சட்டம் மற்றும் கட்டுப்பாட்டு ஆணைகளின்கீழ் குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைப்பற்றப்பட்ட மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் குறித்த விவரங்கள் இணைப்புகள் 5 மற்றும் 6-ல் கொடுக்கப்பட்டுள்ளன.





## அத்தியாயம்-11

## நுகர்வோர் நல நடவடிக்கைகள்

நுகர்வோர் இயக்கம் இன்று மிக வேகமாக வளர்ந்து வருகிறது. பொதுமக்களிடையே நுகர்வோர் பற்றிய விழிப்புணர்வு அதிகரித்து வருவதால், நுகர்வோர் பாதுகாப்பு கோரும் மக்கள் அதிக அளவில் பயன்பெற அரசு போதிய ஊக்கமளித்து வருகிறது. உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேட்டில் தற்போது 147 அங்கீகரிக்கப்பட்ட தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மாநிலத்திலுள்ள பொதுத் துறை நிறுவனங்களிலும், வேறு பல துறைகளிலும் நுகர்வோருக்கு உள்ள குறைகளைக் களைய, தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளின் கூட்டம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அலுவலகத்தில் நடத்தப்பட்டு வருகிறது. நுகர்வோர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நுகர்வோர் கல்வி குறித்து மாநில அளவில் கருத்தரங்கம் நடத்தவும், தேசிய சேவைத் திட்ட தொண்டர்களுக்குப் பயிற்சி அளிக்கவும், சிறு கையேடுகள் அச்சிடவும் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வியக்கத்தில் சீரிய பணியாற்றுவோருக்கு அரசு ஒவ்வோர் ஆண்டும் மாநில விருதுகள் வழங்கி வருகின்றது. நுகர்வோர் பாதுகாப்பு குறித்து "நுகர்வோர் நலன்" என்ற இதழை உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை வெளியிட்டு வருகிறது.

ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 15 ஆம் நாள் "உலக நுகர்வோர் உரிமைகள் தினம்" கொண்டாடப்பட்டு வருகிறது. 15-03-2002 அன்று நீலகிரி மாவட்டத்தில் 'உலக நுகர்வோர் உரிமைகள் தினம்' கொண்டாட மாநில அரசு ரூ. 1.50 இலட்சம் வழங்கியுள்ளது.

**நுகர்வோர் குறை தீர்க்கும் அமைப்புகள்:**

1986 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தேசிய, மாநில மற்றும் மாவட்ட அளவில் செயல்படும் மூன்றடுக்கு முறை கொண்ட நீதிமுறைச் சார்புடைய அரசு அமைப்புகள் தோற்றுவிக்கப் பட்டுள்ளன. அவையாவன:-

1. தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம்.
2. மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம்.
3. மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம்.

[2002 ஏப்ரல் 18

மேற்குறிப்பிட்ட சட்டத்தின்படி, சென்னை உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரைத் தலைவராகக் கொண்ட மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தை மாநில அரசு சென்னையில் அமைத்துள்ளது. இது தவிர, மாவட்ட தலைநகர் ஒவ்வொன்றிலும் ஒரு நுகர்வோர் குறைதீர் மன்றம் செயல்பட்டு வருகிறது. சென்னை தெற்குப் பகுதிக்கு ஒரு மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் மற்றும் சென்னை வடக்குப் பகுதிக்கு ஒரு மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் ஆக இரு நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் சென்னையில் செயல்பட்டு வருகின்றன. தமிழகத்தில் தற்போது 30 மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் உள்ளன. இவற்றில் ஒரு தலைவர் மற்றும் இரு உறுப்பினர்களைக் கொண்ட தனித்தியங்கும் 18 மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களும், அருகருகே அமைந்திருக்கும் இரு மாவட்டங்களுக்கு ஒரு தலைவர் என்ற அடிப்படையில் சேர்ந்தியங்கும் 6 நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் 12 மாவட்டங்களிலும் கீழ்க்கண்டவாறு தற்போது செயல்பட்டு வருகின்றன:-

**தனித்தியங்கும் குறைதீர் மன்றங்கள்**

01. சென்னை-தெற்கு
02. சென்னை-வடக்கு
03. திருச்சிராப்பள்ளி
04. ஈரோடு
05. மதுரை
06. விருதுநகர் (இருப்பிடம்) ஸ்ரீவில்லிப்புத்தூர்
07. கன்னியாகுமரி (இருப்பிடம்) நாகர்கோவில்
08. கோயம்புத்தூர்
09. நீலகிரி
10. கடலூர்
11. தஞ்சாவூர்
12. நாகப்பட்டினம்
13. தேனி
14. திருவள்ளூர்
15. பெரம்பலூர்
16. கரூர்
17. திருவாரூர்
18. நாமக்கல்



2002 ஏப்ரல் 18]

**சேர்ந்தியங்கும் குறைதீர் மன்றங்கள்**

01. வேலூர் மற்றும் திருவண்ணாமலை
02. சேலம் மற்றும் தருமபுரி
03. காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம்
04. திண்டுக்கல் மற்றும் புதுக்கோட்டை
05. சிவகங்கை மற்றும் இராமநாதபுரம்
06. திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி

புதிதாக அமைக்கப்பட்ட திருவள்ளூர், திருவாரூர், கரூர், நாமக்கல், தேனி மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள நுகர்வோர் குறைதீர் மன்றங்களுக்கும், இராமநாதபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் செயல்பட்டு வரும் நுகர்வோர் குறைதீர் மன்றங்களுக்கும் அறைகலன் மற்றும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் செய்வதற்காக அரசு 20 இலட்சம் ரூபாய் ஒப்பளிப்பு செய்துள்ளது. மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்குத் தேவையான தகுந்த இடங்களைக் கண்டறியும் பணியில் மாநில அரசும் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையமும் முனைப்புடன் செயல்பட்டு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றன. இதுகுறித்து அரசு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளது. தற்போது, செங்கற்பட்டில் இயங்கிவரும் நுகர்வோர் குறைதீர் மன்றத்திற்கென்று இடம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. செங்கற்பட்டில் செயல்பட்டுவரும் காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்திற்கென்று சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக 2002-2003 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் அரசு ரூ. 18.70 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் மற்றும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களில் 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் பிப்ரவரி 2002 வரை தொடுக்கப்பட்ட மற்றும் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்கின் எண்ணிக்கை விவரங்கள் இணைப்புகள் 7 மற்றும் 8-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## அத்தியாயம்-12

## தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், மாநில அரசின் சார்பாக, உணவு தானியங்கள், உணவுப் பொருட்கள் மற்றும் பிற இன்றியமையாப் பொருட்கள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்தும், வாங்கியும், கிடங்குகளில் பாதுகாத்தும், பதப்படுத்தியும், பொதுமக்களுக்கு வழங்குவது என்ற அரசின் தீர்க்கமான கொள்கை முடிவினைச் செயற்படுத்த ஏற்படுத்தப்பட்டது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் கொள்முதல் செய்யப்படும் நெல், இக்கழகத்தின் கிடங்குகளுக்குக் கொண்டு செல்லப்பட்டு அதன் பின் இக்கழகத்தின் நவீன அரிசி அரைவை ஆலைகள் வாயிலாகப் பதப்படுத்தப்பட்டு அரைவை செய்யப்படுகிறது. மாநில அரசின் மொத்த முகவராகச் செயல்படும் இந்நிறுவனம், மைய அரசினால் ஒதுக்கீடு செய்யப்படும் அரிசி, கோதுமை, சர்க்கரை மற்றும் பாமாலின் எண்ணெய் ஆகியவற்றை எடுத்து, நியாயவிலைக் கடைகள் வாயிலாக குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குவதற்கு ஏதுவாக, அவற்றைக் கூட்டுறவு முதன்மைச் சங்கங்களுக்கு விநியோகம் செய்து வருகிறது.

நிர்வாக வசதியை முன்னிட்டு இக்கழகம், ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் ஒரு மண்டலம் என 30 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு மண்டலமும் முதுநிலை மண்டல மேலாளர்/மண்டல மேலாளர் ஆகியோரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. இக்கழகத்தில் தற்போது 12,228 நிரந்தரப் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் முக்கியமான பணிகள் பின்வருமாறு:

(அ) ஏகபோகக் கொள்முதல்/இணைக் கொள்முதல் கொள்கை மூலம் நேரடிக் கொள்முதல் நிலையங்கள் வாயிலாக விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்து விவசாயிகள் குறைந்த விலையில் தங்கள் நெல்லை விற்பதைத் தடுப்பது.

(ஆ) கொள்முதல் செய்த நெல்லினை 23 நவீன அரிசி அரைவை ஆலைகள் மற்றும் அவ்வப்போது நியமிக்கப்படும் சுமார் 300 தனியார் அரைவை முகவர்கள் வாயிலாகப் பதப்படுத்தி அரைவை செய்தல்.



(இ) மைய அரசினால் ஒதுக்கீடு செய்யப்படும் அரிசி, கோதுமை, சர்க்கரை மற்றும் பாமாலின் எண்ணெய் ஆகியவற்றை முறையே இந்திய உணவுக் கழகம்/சர்க்கரை ஆலைகள்/மாநில வர்த்தகக் கழகம் ஆகிய நிறுவனங்களிடமிருந்து எடுத்தல்.

(ஈ) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், முதியோர் ஓய்வூதியத் திட்டம், பிற்படுத்தப்பட்டோர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் துறை விடுதிகள், இலங்கை அகதிகள், காவல், தீயணைப்பு மற்றும் சிறைத் துறை அலுவலர்களுக்கு பொது விநியோக முறையின்கீழ் பொருட்கள் வழங்குதல், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் நடத்தப்படும் அமுதம் அங்காடிகளில் விற்பது போன்ற பல்வேறு திட்டங்களுக்கான, பொது விநியோகத் திட்டத்தில் சேராத, பருப்பு போன்ற பொருட்களை ஒப்பந்தப்புள்ளி மூலம் வாங்கி விநியோகம் செய்தல்.

(உ) இந்தப் பொருட்களை கழகத்தின் சொந்த/வாடகைக் கிடங்குகளுக்கு எடுத்துச் செல்லுதல்.

(ஊ) 1,145 நியாயவிலைக் கடைகளை நடத்துதல்.

(எ) பொது விநியோகத் திட்டப் பொருட்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடத்தப்படும் சில்லறைக் கடைகளுக்கு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்குவதற்கும், அரசின் நலத் திட்டங்களுக்கும், கழகத்தின் அமுதம் அங்காடிகளில் விற்கவும் பொது விநியோகத் திட்டத்தில் சேராத பொருட்களையும் வழங்குதல்.

**கொள்முதல்:**

காவிரிப் பாசனப் பகுதிகளான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், கடலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் ஒவ்வோர் ஆண்டும் சம்பா மற்றும் குறுவைப் பருவங்களில் விவசாயிகளிடமிருந்து நெல்லினைக் கொள்முதல் செய்வதற்காக அனுமதிக்கப்பட்ட ஒரே நிறுவனம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மட்டுமே. ஒவ்வோர் ஆண்டும் அரசின் முடிவிற்கு ஏற்ப ஏகபோகக் கொள்முதல் அல்லது இணைக் கொள்முதல் முறை பின்பற்றப்படுகிறது. கொள்முதல் பகுதிகளில் ஒவ்வொரு கிராம அளவிலும் நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. 2001 குறுவைப் பருவத்தில் 2,23,275

[2002 ஏப்ரல் 18

மெட்ரிக் டன்கள் நெல்லும், நடப்பு சம்பா 2002 பருவத்தில் 10-04-2002 வரையில் 10,13,608 மெட்ரிக் டன்கள் நெல்லும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

**பதப்படுத்துதல்:**

கொள்முதல் செய்யப்பட்ட நெல் பல மாவட்டங்களில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் 23 நவீன அரிசி ஆலைகள் மற்றும் சில விதிமுறைகள் மற்றும் வரையறைகளுக்கு உட்பட்டு நியமிக்கப்படும் தனியார் அரைவை முகவர்களின் அரிசி ஆலைகளிலும் அரைத்து அரிசியாக்கப்படுகிறது. கடந்த ஆண்டில் 18,67,299 டன் நெல் அரைவை செய்யப்பட்டது ஒரு சாதனையாகும். இது கடந்த 20 ஆண்டுகளில் அரைவை செய்த நெல்லின் அளவைவிட உயர்ந்ததாகும்.

**அமுதம் பல்பொருள் அங்காடிகள்:**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 30 அமுதம் பல்பொருள் அங்காடிகளை, சென்னை மற்றும் கடலூர் பகுதிகளில் நடத்தி வருகிறது. அரிசி, மளிகை, எண்ணெய், அழகுச் சாதனங்கள் போன்றவை இந்தப் பல்பொருள் அங்காடிகளில் விற்கப்படுகின்றன. 2002-2003 ஆம் ஆண்டில் இவ்வங்காடிகளின் விற்பனை 24 கோடி ரூபாய்க்கு மேல் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**கட்டுமானப் பிரிவு:**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் கட்டுமானப் பிரிவு ஒன்று இயங்கி வருகிறது. இப்பிரிவு செயற் பொறியாளர் தலைமையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ்நிலை அலுவலர்களின் உதவியுடன் இயங்கி வருகிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இதுவரை 135 வட்டங்களில் 168 விஞ்ஞான முறை சேமிப்புக் கிடங்குகளைக் கட்டியுள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சொந்தக் கிடங்குகள், அவற்றின் கொள்ளளவு மற்றும் பயன்பாட்டளவு ஆகிய விவரங்கள் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| சேமிப்புக் கிடங்குகளின் எண்ணிக்கை | | 168 |
| கொள்ளளவு | .. | 6,32,345 மெட்ரிக் டன்கள் |
| பயன்பாட்டளவு | .. | 4,90,600 மெட்ரிக் டன்கள் |



2002 ஏப்ரல் 18]

காவிரிப் பாசன மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இதுவரை 100 மெட்ரிக் டன்கள் கொள்ளளவுள்ள கிடங்கு, உலர்களம், சரக்கு கொட்டகை மற்றும் அலுவலக அறை ஆகிய அடிப்படை வசதிகளுடன் கூடிய 195 நேரடிக் கொள்முதல் நிலையங்களைக் கட்டியுள்ளது. இன்னும் இரண்டு கொள்முதல் நிலையங்கள் கட்டுமானத்தில் உள்ளன.

**நிதி:**

இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.35 கோடியாகும். செலுத்தப்படும் பங்கு மூலதனம் ரூ.32.71 கோடியாகும். 1972-73 ஆம் ஆண்டில் ரூ.12 கோடியாக இருந்த இந்நிறுவனத்தின் வியாபார அளவு தற்போது ரூ.27.19 கோடியை எட்டியுள்ளது.

[2002 ஏப்ரல் 18

**அத்தியாயம்-13**

## தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம், 1956 ஆம் ஆண்டைய வேளாண் உற்பத்தி (வளர்ச்சி மற்றும் சேமிப்பு) சட்டத்தின்கீழ் 1957-ல் தோற்றுவிக்கப்பட்டது. மேற்படி சட்டம் 1962 ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்கு நிறுவனச் சட்டம் என மாற்றப்பட்டது.

02-05-1958-லிருந்து இயங்கிவரும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம், உணவு தானியங்கள் மற்றும் பிற அறிவிப்பு செய்யப்பட்ட பொருட்களை அறிவியல் முறையில் சேமித்து வைக்க வசதிகள் செய்தல், முறையான விற்பனைக்கு ஏற்பாடு செய்தல், சேமிப்புக் கிடங்கு மற்றும் சீட்டு அடமானத்தின் பேரில் கடன் வசதி செய்து கொடுத்தல் போன்ற பணிகளைச் செய்கிறது.

**நடவடிக்கைகள்:**

1. இக்கழகம் மாநிலம் முழுவதும் 66 இடங்களில் சேமிப்புக் கிடங்குகள் நிறுவியுள்ளது.

2. இக்கழகம் இழப்பைத் தவிர்க்கும் பொருட்டு சந்தை ஆய்வு செய்து வளர்ச்சி வாய்ப்புள்ள இடங்களில் நிலத்தைத் தேர்ந்தெடுத்து, விஞ்ஞான முறையில் சேமிப்புக் கிடங்குகளைக் கட்டுகிறது.

3. வங்கிகளில் கடன் பெறும் வகையில், விவசாயிகள், வியாபாரிகள் மற்றும் பிறருக்கும் உதவக்கூடிய சேமிப்புக் கிடங்கு ரசீதுகளை வழங்குகிறது.

4. இக்கழகம் சரக்கை எடுக்கவும், ஏற்றுதல்/இறக்குதல் மற்றும் சரக்கு வைத்திருப்பவரின் வசதிக்கேற்ப அவற்றைக் கொண்டு செல்லுதல் ஆகியவற்றைக் கவனிக்கத் தனியாக ஒப்பந்தக்காரர்களை நியமிக்கிறது.

5. இக்கழகம் பூச்சி தொற்றுதலைத் தவிர்க்கும் சேவையும் மேற்கொள்கிறது.

6. சேமிப்புக் கிடங்குகளை நிர்வகிக்கவும், கையாளவும் பயிற்சி அளிக்கிறது.



2002 ஏப்ரல் 18]

**நிர்வாக அமைப்பு:**

இக்கழகம் ஒரு தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இக்கழகத்தின் தலைமையகம் சென்னையில்—கிண்டியில் உள்ளது. மாவட்டங்களில் கடலூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், மேட்டுப்பாளையம், சேலம், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய ஏழு மண்டலங்களில் மண்டல மேலாளர்/முதுநிலை மண்டல மேலாளர்களின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது.

**சேமிப்பு இட வசதி மற்றும் அதன் உபயோகம்:**

இக்கழகத்தின் 66 இடங்களில் அமையப்பெற்றுள்ள சேமிப்புக் கிடங்குகளை விவசாயிகள், உர உற்பத்தியாளர்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், இந்திய உணவுக் கழகம், கூட்டுறவு விற்பனை இணையம், சிமெண்ட் உபயோகிக்கும் துறைகள் மற்றும் தனியார் வியாபாரிகள் ஆகியோர் உபயோகிக்கின்றனர். தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் மத்திய விவசாயக் கூட்டுறவு விற்பனை இணையத்தால் மத்திய அரசின் ஆதார விலைத் திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்யப்பட்ட கொப்பரைத் தேங்காய்கள் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் கிடங்குகளில் சேமித்து வைக்கப்படுகின்றன.

இக்கழகத்தின் வைப்பீட்டளவு மற்றும் உபயோகிப்பளவு பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| 31-12-2001 தேதி நிலவரப்படி | | அளவு மெட்ரிக் டன்னில் |
|---|---|---|
| சொந்த சேமிப்பு வசதி | | 5,98,210 |
| வாடகை சேமிப்பு வசதி | | 73,512 |
| | மொத்தம் | 6,71,722 |
| சராசரி உபயோகிப்பளவு (ஏப்ரல் 2001 முதல் டிசம்பர் 2001 வரை) | | 93% |

தேசிய உர நிறுவனம் என்னும் இந்திய அரசு நிறுவனம் (தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் புதிய சரக்கு வைப்பாளர்) இந்நிறுவனத்தின் சேமிப்பு வசதியை நான்கு சேமிப்புக் கிடங்குகளில்,

சுமார் 6,600 மெட்ரிக் டன் அளவிற்கு ஜனவரி 2002 முதல் பயன்படுத்தத் தொடங்கியுள்ளது.

**இதர நடவடிக்கைகள்:**

இந்நிறுவனம், அறிவியல் முறையில் சேமிப்புக் கிடங்குகள் கட்டுவதுடன், உணவகம், திரையரங்கம், தனியார் கிடங்குகள், மருத்துவமனைகள், அரசு அலுவலகங்கள் போன்ற பொது இடங்களில் பூச்சி தொற்றுதலைத் தவிர்க்கும் பணியும் இந்நிறுவனத்தின் பூச்சி தொற்றுதலைக் கட்டுப்படுத்தும் பிரிவின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பிரிவு, கட்டுமானப் பணிகள் தொடங்கும் முன்பும், பின்பும் எலித் தொல்லை, கரையான் தொல்லை ஆகியவற்றைக் கட்டுப்படுத்துதல், மேலும் கொசுத் தடுப்பு மற்றும் பொதுவான பூச்சித் தொற்றுதலைத் தடுக்கும் பணி ஆகிய பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்கிறது. மேலும், இக்கழகம் விஞ்ஞான முறை சேமிப்பு மற்றும் சரக்குகளைப் பாதுகாத்தல் பற்றிய பயிற்சியை இந்நிறுவனத்தின் மற்றும் பிற நிறுவனங்களின் ஊழியர்களுக்கு வழங்குகிறது.

**நிதி:**

இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.800 இலட்சமாகும். செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.761 இலட்சமாகும். இந்நிறுவனத்திற்கு மாநில அரசும், மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனமும் 50:50 என்ற விகிதத்தில் பங்கு மூலதனம் அளித்துள்ளன. இந்நிறுவனம் 2000-2001ஆம் ஆண்டின் நிகர இலாபமாக ரூ.455.31 இலட்சம் ஈட்டியுள்ளது. இந்நிறுவனத்தின் இயக்குநர்கள் குழுமம், பங்குதாரர்களுக்குச் செலுத்தப்பட்டப் பங்கு மூலதனமான ரூ.761 இலட்சத்தில் 8% ஆதாயப் பங்கு அளிப்பதென பரிந்துரை செய்துள்ளது.

**நிறைவுரை :**

உணவு, நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவுத் துறைகள் சாதாரண மனிதனின் நலம் பேணுவதில் நேரடியாக ஈடுபட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சரின் ஆக்க பூர்வமான தலைமையின் கீழும் தமிழ்நாட்டு மக்களின் ஆதரவோடும், இவ்விரு துறைகளும் பொதுமக்கள் நலம் காக்க தாம் ஆற்றும் பணிகளில் இன்னும் கூடுதலான ஆர்வத்தோடு, விடாது பாடுபடும் என்று இப்பேரவையில் அரசு உறுதியளிக்க விரும்புகிறது. எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல்கள் நடத்த அரசு எண்ணங்கொண்டுள்ளது.





## இணைப்பு-1

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரது கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| வ.எண் | சங்கங்களின் வகைகள் | சங்கங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தலைமைக் கூட்டுறவு நிறுவனங்கள் | 6 |
| 2. | மத்திய கூட்டுறவு வங்கிகள் | 23 |
| 3. | மாவட்ட கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் | 35 |
| 4. | தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் | 1 |
| 5. | மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள் | 29 |
| 6. | கூட்டுறவு அச்சகங்கள் | 26 |
| 7. | கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் | 19 |
| 8. | தொடக்கக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் | 119 |
| 9. | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் (விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட) | 4,595 |
| 10. | பெரும் பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் | 19 |
| 11. | தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் | 181 |
| 12. | கூட்டுறவு நகர வங்கிகள் | 128 |
| 13. | பணியாளர்கள் கூட்டுறவு கடன் சங்கங்கள் | 1,892 |
| 14. | தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகள் (மாணவர் கூட்டுறவு பண்டகசாலைகள் உட்பட) | 3,550 |
| 15. | தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் | 214 |
| 16. | ஊரக மின்சார கூட்டுறவுச் சங்கங்கள் | 3 |
| 17. | இதர வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் | 319 |
| | **மொத்தம்** .. | **11,159** |

## இணைப்பு-2

31-3-2001 அன்றைய நிலவரப்படி பலவகையான கூட்டுறவுச் சங்கங்களில் அரசு முதலீடு செய்துள்ள பங்கு மூலதனம் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | 31-3-2001-ல் பங்கு மூலதனம் (ரூபாயில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி | 15,78,68,500 |
| 2. | தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி | 26,00,000 |
| 3. | தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் | 1,82,11,000 |
| 4. | தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் | 1,15,35,945 |
| 5. | தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் | 10,25,000 |
| 6. | மத்திய கூட்டுறவு வங்கிகள் | 44,19,66,893 |
| 7. | நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை | 6,81,04,495 |
| 8. | பெரிய அளவிலான பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் | 59,45,123 |
| 9. | தொழிலாளர்கள் ஒப்பந்த கூட்டுறவுச் சங்கங்கள் | 11,74,114 |
| 10. | ஊரக மின்சார கூட்டுறவுச் சங்கங்கள் | 3,68,000 |
| 11. | கட்டுமான கூட்டுறவுச் சங்கங்கள் | 42,00,000 |
| 12. | பழம் பதப்படுத்துவோர் கூட்டுறவுச் சங்கங்கள் | 3,40,000 |
| 13. | உப்பு தொழிலாளர் கூட்டுறவு உற்பத்திச் சங்கங்கள் | 1,79,855 |
| 14. | உடல் ஊனமுற்றோர் கூட்டுறவுச் சங்கங்கள் | 1,10,000 |





| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | 31-3-2001-ல் பங்கு மூலதனம் (ரூபாயில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 15. | கூட்டுறவு அச்சகங்கள் | 24,53,790 |
| 16. | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் (விவசாய சேவை கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட) | 49,44,89,005 |
| 17. | தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகள் (மாணவர் கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட) | 88,60,726 |
| 18. | கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் | 9,81,90,171 |
| 19. | நகரக் கூட்டுறவு வங்கிகள் | 5,77,096 |
| 20. | தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் | 13,79,62,983 |
| 21. | காமராஜர், கடலூர், விழுப்புரம் கோயம்புத்தூர், தருமபுரி, திருவண்ணாமலை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களின் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்கள் | 28,86,89,925 |
| 22. | கால்நடைத் தீவனக் கூட்டுறவுச் சங்கம் | 40,000 |
| | **மொத்தம்** | 174,48,92,621 (அல்லது) 174.49 கோடி |

## இணைப்பு - 3

### நெல் கொள்முதல் விலை, கொள்முதல் முறை போன்ற விவரங்கள்

| வ. எண். | பருவம் | நெல் கொள்முதல் விலை (குவிண்டாலுக்கு) | | | கொள்முதல் முறை | கொள்முதல் செய்த அளவு டன்களில் | ஊக்கத்தொகை/ இடைநிகழ்வுச் செலவு கொடுக்கப்பட்டது |
|---|---|---|---|---|---|---|---|
| | | சாதாரணம் | சன்னம் | மிகச்சன்னம் | | | |
| (1) | (2) | (3) | | | (4) | (5) | (6) |
| 1. | சம்பா'1996 | 360 | 375 | 395 | இணைக் கொள்முதல் | 1,34,000 | 10 (வட்டக் கிடங்கு கொள்முதல்)<br>5 (நேரடிக் கொள்முதல் நிலையத்தால்) |
| | குறுவை'1996 | 360 | 375 | 395 | ஏகபோகக் " | 1,11,366 | 40 (*) |
| 2. | சம்பா'1997 | 380 | 395 | 415 | ஏகபோகக் " | 9,77,426 | 50 (*) |
| | குறுவை'1997 | 415 | கிரேடு - ஏ<br>445 | | இணைக் கொள்முதல் | 7,00,659 | 35 (**) |
| 3. | சம்பா'1998 | 415 | 445 | | இணைக் கொள்முதல் | 11,36,823 | 35 (**) |
| | குறுவை'1998 | 440 | 470 | | இணைக் கொள்முதல் | 44,550 | 35 (**) |
| 4. | சம்பா'1999 | 440 | 470 | | ஏகபோகக் " | 10,50,099 | 50 (*) |
| | குறுவை'1999 | 490 | 520 | | இணைக் கொள்முதல் | 1,63,180 | 35 (**) |
| 5. | சம்பா'2000 | 490 | 520 | | ஏகபோகக் "<br>(23.12.99 முதல் 20.03.2000) | 10,84,980<br>(20.03.2000 வரை) | 50 (*) காவிரிப் பாசன பகுதிகள்<br>35 (**) காவிரிப் பாசனப் பகுதி- யல்லாத இடங்கள் |
| | | | | | இணைக் கொள்முதல்<br>(21.3.2000 முதல் 30.6.2000) | 82,020<br>(21.3.2000 முதல் 15.4.2000 வரை) | 35 (**)<br>அனைத்து பகுதிகள் |
| | குறுவை'2000 | 510 | 540 | | இணைக் கொள்முதல்<br>(1.9.2000 முதல் 15.12.2000) | 5,50,000 | 35 (**)<br>அனைத்து பகுதிகள் |
| 6. | சம்பா'2001 | 510 | 540 | | இணைக் கொள்முதல்<br>(16.12.2000 முதல் 1.9.2001) | 19,74,279<br>(27.08.2001 வரை) | 40 (**)<br>அனைத்து பகுதிகள் |
| 7. | குறுவை'2001 | 530 | 560 | | இணைக் கொள்முதல்<br>(15.10.2001 முதல்) | 2,23,275<br>(15.12.2001 வரை) | 40 (**)<br>அனைத்து பகுதிகள் |
| 8. | சம்பா'2002 | 530 | 560 | | இணைக் கொள்முதல்<br>(01.01.2002) | 10,19,152<br>(11.04.2002 வரை) | 40 (**) 15 (***) |

(*) ஊக்கத்தொகை (**) இடைநிகழ்வுச் செலவு (***) வாகனச் செலவு 02.04.2002 முதல் 15.04.2002 வரை



## இணைப்பு- 4

### 2001 மற்றும் 2002-ஆம் ஆண்டு பிப்ரவரி வரையில் நுகர்வு செய்யப்பட்ட இன்றியமையாப் பொருட்களின் விவரங்கள்

| வ. எண். | மாதம் | அரிசி (டன்களில்) | | சர்க்கரை (டன்களில்) | | மண்ணெண்ணெய் (கிலோ லிட்டரில்) | | கோதுமை (டன்களில்) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2001 | 2002 | 2001 | 2002 | 2001 | 2002 | 2001 | 2002 |
| 1. | ஜனவரி | 177755 | 186993 | 23568 | 21937 | 77051 | 66487 | 2217 | 151 |
| 2. | பிப்ரவரி | 168005 | 184784 | 22536 | 21557 | 77001 | 65841 | 2255 | 140 |
| 3. | மார்ச் | 167885 | | 22948 | | 76137 | | 2080 | |
| 4. | ஏப்ரல் | 166546 | | 23546 | | 75233 | | 1850 | |
| 5. | மே | 168417 | | 24057 | | 70340 | | 1813 | |
| 6. | ஜூன் | 171019 | | 24165 | | 69162 | | 2093 | |
| 7. | ஜூலை | 180477 | | 23621 | | 67913 | | 2022 | |
| 8. | ஆகஸ்ட் | 185209 | | 23807 | | 67955 | | 1157 | |
| 9. | செப்டம்பர் | 188431 | | 23598 | | 66697 | | 667 | |
| 10. | அக்டோபர் | 191997 | | 23482 | | 66470 | | 233 | |
| 11. | நவம்பர் | 194249 | | 24220 | | 66872 | | 142 | |
| 12. | டிசம்பர் | 193438 | | 21489 | | 65744 | | 196 | |
| | மொத்தம் | 2153428 | 371777 | 281017 | 43494 | 848575 | 132328 | 18725 | 291 |

## இணைப்பு - 5

**சனவரி 2001 முதல் பிப்ரவரி 2002 வரை 1955-ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டம் மற்றும் கட்டுப்பாட்டு ஆணைகளின் கீழ் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைப்பற்றப்பட்ட பொருட்கள் குறித்த விவரங்கள்**

| மாதம் | அரிசி | | வெளிச்சந்தை அரிசி | | நெல் | | மண்ணெண்ணெய் | | இதர பொருட்கள் மதிப்பு | மொத்த மதிப்பு | சோதனைகளின் எண். | கைது செய்யப்பட்ட நபர்களின் எண். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | குவிண்டால் | மதிப்பு ரூ. | குவிண்டால் | மதிப்பு ரூ. | குவிண்டால் | மதிப்பு ரூ. | கிலோ லிட்டர் | மதிப்பு ரூ. | | | | |
| சனவரி 2001 | 989 | 1070738 | 137 | 172875 | 0 | 0 | 28728 | 387702 | 4329118 | 5839631 | 864 | 232 |
| பிப்ரவரி 2001 | 1354 | 1357907 | 1020 | 1763279 | 0 | 0 | 46466 | 661392 | 4619361 | 8401939 | 784 | 227 |
| மார்ச் 2001 | 1227 | 1331918 | 1564 | 2467926 | 0 | 0 | 22309 | 312807 | 5490178 | 9601730 | 791 | 280 |
| ஏப்ரல் 2001 | 1081 | 1180580 | 107 | 132555 | 199 | 129825 | 12755 | 165919 | 4233843 | 5852722 | 802 | 215 |
| மே 2001 | 1331 | 1513441 | 228 | 389543 | 0 | 0 | 15776 | 216506 | 6114539 | 8234029 | 739 | 197 |
| ஜுன் 2001 | 1277 | 1358724 | 92 | 143800 | 916 | 906480 | 17375 | 266985 | 2207115 | 4882284 | 737 | 207 |
| ஜுலை 2001 | 2309 | 2420999 | 418 | 574210 | 104 | 52332 | 37838 | 542250 | 4851762 | 8441553 | 776 | 198 |
| ஆகஸ்ட் 2001 | 1572 | 1803134 | | | 158 | 92400 | 26441 | 353144 | 1193536 | 3442214 | 915 | 61 |
| செப்டம்பர் 2001 | 1959 | 2064968 | 63 | 94875 | 43 | 23463 | 19064 | 243290 | 3441199 | 5867815 | 845 | 91 |
| அக்டோபர் 01 | 1386 | 1605555 | 24 | 31804 | 41 | 21875 | 19094 | 254760 | 2010649 | 3924443 | 822 | 62 |
| நவம்பர் 2001 | 963 | 1098686 | | | | | 18835 | 223784 | 3481752 | 4798222 | 784 | 36 |
| டிசம்பர் 2001 | 803 | 905250 | | | | | 25412 | 354074 | 4108882 | 5396216 | 712 | 25 |
| மொத்தம் | 16181 | 17733821 | 3853 | 5780067 | 1457 | 1226355 | 288191 | 3882413 | 46879842 | 74770798 | 9351 | 1811 |
| சனவரி 2002 | 858 | 946305 | | | | | 11526 | 155732 | 1479763 | 2581800 | 1010 | 17 |
| பிப்ரவரி 2002 | 972 | 1084095 | | | | | 13697 | 173520 | 3858354 | 5118969 | 947 | 21 |



## இணைப்பு - 6

**2001-2002-ஆம் ஆண்டில், 1955-ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டம் மற்றும் கட்டுப்பாட்டு ஆணைகளின்கீழ் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையினரால் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் குறித்த விவரங்கள்**

| மாதம் | பொ.வி.தி. அரிசி | | நெல் | | மண்ணெண்ணெய் | | இதர பொருட்கள் ரூ. | மொத்த மதிப்பு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| | குவிண்டால் | மதிப்பு ரூ. | குவிண்டால் | மதிப்பு ரூ. | கிலோ லிட்டர் | மதிப்பு ரூ. | | |
| சனவரி '2001 | 2028 | 2145440 | 364 | 295286 | 15662 | 207876 | 503299 | 3151901 |
| பிப்ரவரி'2001 | 1290 | 1348783 | 17404 | 142507 | 16092 | 189714 | 472828 | 2153832 |
| மார்ச்'2001 | 2241 | 2378443 | 229 | 134000 | 19051 | 235094 | 999007 | 3746544 |
| ஏப்ரல்'2001 | 2065 | 2653251 | 113 | 101940 | 17919 | 221859 | 3164200 | 6141250 |
| மே'2001 | 3498 | 2449685 | 102 | 98840 | 27525 | 313902 | 2253210 | 5115637 |
| ஜுன்'2001 | 1391 | 1376377 | 196 | 82694 | 19852 | 229533 | 1215883 | 2904487 |
| ஜுலை'2001 | 1216 | 1245230 | 184 | 100801 | 36052 | 539630 | 1083780 | 2969441 |
| ஆகஸ்ட்'2001 | 1740 | 1564947 | 5 | 4800 | 17865 | 136652 | 932638 | 2739037 |
| செப்டம்பர்'2001 | 1332 | 1435000 | 39 | 13814 | 17311 | 212828 | 846355 | 2507997 |
| அக்டோபர்'2001 | 1375 | 1605555 | 41 | 21875 | 19094 | 254760 | 2063185 | 3945375 |
| நவம்பர்'2001 | 2142 | 1790425 | 122 | 12200 | 27149 | 342508 | 934024 | 3079157 |
| டிசம்பர்'2001 | 1544 | 1706872 | 22 | 11755 | 23560 | 313338 | 353037 | 2385002 |
| மொத்தம் | 21862 | 21700008 | 18821 | 1020512 | 257132 | 3297694 | 14821446 | 40839660 |
| சனவரி'2002 | 1295 | 1312150 | .. | .. | 16473 | 200977 | 324235 | 1837362 |
| பிப்ரவரி'2002 | 1390 | 1571726 | 22 | 11203 | 23679 | 345773 | 1028398 | 2957100 |

## இணைப்பு – 7

மாநில நுகர்வோர் குறை தீர்க்கும் ஆணையத்தின் சனவரி 2001 முதல் பிப்ரவரி 2002 வரை தொடுக்கப்பட்ட மற்றும் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் விவரங்கள்

| மாதம் | மேல்முறையீடு மனு | | | | அசல் மனு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | நுகர்வோருக்கு | | | | நுகர்வோருக்கு | |
| | தொடுக்கப்பட்டவை | தீர்ப்பு வழங்கப்பட்டவை | சாதகம் | பாதகம் | தொடுக்கப்பட்டவை | தீர்ப்பு வழங்கப்பட்டவை | சாதகம் | பாதகம் |
| சனவரி'2001 | 33 | 44 | 15 | 29 | 15 | 12 | 5 | 7 |
| பிப்ரவரி'2001 | 77 | 52 | 20 | 32 | 10 | 9 | 4 | 5 |
| மார்ச் '2001 | 100 | 42 | 10 | 32 | 36 | 12 | 4 | 8 |
| ஏப்ரல்'2001 | 55 | 69 | 20 | 49 | 5 | 1 | 0 | 1 |
| மே'2001 | 45 | 59 | 19 | 40 | 15 | 8 | 3 | 5 |
| ஜூன்'2001 | 70 | 30 | 10 | 20 | 21 | 6 | 2 | 4 |
| ஜூலை'2001 | 50 | 38 | 13 | 25 | 14 | 7 | 3 | 4 |
| ஆகஸ்ட்'2001 | 90 | 28 | 8 | 20 | 16 | 1 | 0 | 1 |
| செப்டம்பர்'2001 | 90 | 16 | 6 | 10 | 10 | 3 | 1 | 2 |
| அக்டோபர்'2001 | 85 | 31 | 10 | 21 | 6 | 27 | 10 | 17 |
| நவம்பர்'2001 | 95 | 31 | 10 | 21 | 16 | 9 | 3 | 6 |
| டிசம்பர்'2001 | 145 | 23 | 13 | 10 | 16 | 10 | – | 10 |
| மொத்தம் | 935 | 463 | 154 | 309 | 180 | 105 | 35 | 70 |
| சனவரி'2002 | 60 | 35 | 10 | 25 | 12 | 6 | 0 | 6 |
| பிப்ரவரி'2002 | 100 | 39 | 10 | 29 | 10 | 6 | 6 | 6 |
| மொத்தம் | 160 | 74 | 20 | 54 | 22 | 12 | 0 | 12 |



## இணைப்பு – 8

மாவட்ட நுகர்வோர் குறைதீர் அமைப்புகளில் சனவரி 2001 முதல் பிப்ரவரி 2002 வரை தொடுக்கப்பட்ட மற்றும் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் விவரங்கள்

| மாதம் | தொடக்கத்தில் நிலுவையில் உள்ளவை | தொடுக்கப்பட்டவை | மொத்தம் | தீர்ப்பு வழங்கப்பட்டவை | நிலுவையில் உள்ளவை | நுகர்வோருக்கு சாதகமாக | நுகர்வோருக்கு எதிராக |
|---|---|---|---|---|---|---|---|
| சனவரி'2001 | 7060 | 330 | 7390 | 519 | 6871 | 228 | 291 |
| பிப்ரவரி'2001 | 6816 | 415 | 7231 | 530 | 6701 | 259 | 271 |
| மார்ச்'2001 | 6701 | 507 | 7208 | 478 | 6730 | 239 | 239 |
| ஏப்ரல்'2001 | 6884 | 414 | 7298 | 443 | 6855 | 186 | 257 |
| மே'2001 | 6855 | 347 | 7202 | 435 | 6767 | 201 | 234 |
| ஜூன்'2001 | 6843 | 377 | 7220 | 471 | 6749 | 233 | 238 |
| ஜூலை '2001 | 6749 | 513 | 7262 | 434 | 6828 | 234 | 200 |
| ஆகஸ்ட்'2001 | 6828 | 354 | 7182 | 338 | 6844 | 173 | 165 |
| செப்டம்பர்'2001 | 6844 | 349 | 7193 | 402 | 6791 | 208 | 194 |
| அக்டோபர்'2001 | 6791 | 240 | 7031 | 580 | 6451 | 337 | 243 |
| நவம்பர்'2001 | 6451 | 383 | 6834 | 478 | 6356 | 246 | 232 |
| டிசம்பர்'2001 | 6356 | 549 | 6905 | 499 | 6406 | 264 | 235 |
| மொத்தம் | 81178 | 4778 | 85956 | 5607 | 80349 | 2808 | 2799 |
| சனவரி'2002 | 6406 | 311 | 6717 | 320 | 6397 | 185 | 139 |
| பிப்ரவரி'2002 | 6397 | 392 | 6789 | 478 | 6311 | 305 | 173 |
| மொத்தம் | 12803 | 703 | 13506 | 798 | 12708 | 490 | 308 |

224970